யாதும் ஊரே யாவரும் கேளிர்

Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 89 | சர்வதேச மின் செய்தித்தாள் | சனவரி 15 2025




## கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின்

## 32 ஆம் ஆண்டு வீரவணக்கம்



இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி தமிழர் கடலில் வீரச்சாவைத்
தழுவிக்கொண்ட வேங்கைகளின் முப்பத்தி இரண்டாம் ஆண்டு
வீரவணக்க நினைவு நாள்– 16.01.2025

**கேணல் கிட்டு**

**கப்டன் றொசான் லெப். தூயவன் லெப். நல்லவன்**

**கப்டன் நாயகன் லெப். கேணல் குட்டிசிறி**

**கப்டன் குணசீலன் லெப். அமுதன்**

**மேஜர் மலரவன் கப்டன் ஜீவா**

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

**NISHANTHAN LAW OFFICE**

SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES

NEW LOCATION

Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com

39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

**MT CPA CA**
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING

Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

**Ideal Auto Tech** Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

**JRS AUTO TECH**
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399

| | |
|---|---|
| AC | $119.99 + |
| OIL CHANGE | $59.99 + |
| USED TIRE | $74.99 + |
| BRAKES JOB | $299.99 + |

7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

**LONGO LAWYERS**
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
**Silver Print House**
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com

TOPSTARS RE/MAX ACE
வீடு வாங்க | விற்க | முதலீடு
BUY | SELL | INVEST
THRIVE FOR YOUR LIFE LONG HAPPINESS
Arul Amirthalingam
Realtor
Dir: 647-450-2479
Office: 416-270-1111 / 3-1286 Kennedy Rd, Toronto M1P 2L5




**தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!**
**தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்**
**தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்...!**

– கவிஞர் பாரதிதாசன் –

*உறவுகள் அனைவருக்கும்*
*இனிய புத்தாண்டு, தமிழர் திருநாள் பொங்கல்*
*நல்வாழ்த்துகள். – உலகவணிகம்*


## விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203

Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

**www.sangathamil.ca**

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

சமத்துவமும் நீதியும்
மனிதாபிமானமும் தழைத்தோங்கும்
ஒரு புதிய சமுதாயமாக
தமிழீழத்தைக்
கட்டியெழுப்பவேண்டும் என்பதே,
எமது இலட்சியம். இந்தப்
புதிய இலட்சியத்துடன்
உருவாக்கம் பெறும்
ஒரு சமூக அமைப்பில்,
நேர்மையும் ஒழுக்கமும்
இல்லாத மனிதர்கள்
நிர்வாகத்துறையில்
புகுந்து சமூகத்தைச் சீரழிக்க
நாம் அனுமதிக்க
முடியாது.






சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

தொலைபேசி
437 345 4203
மின்னஞ்சல் (Email)
sangathamilcanada@gmail.com
இணையத்தளம் (Website)
www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# அலையில் கரையும் ஆத்மாவின் தவிப்பு

## லெப். கேணல் இரும்பொறை

‘களத்திலே நிதி வீழ்ந்துவிட்டானாம்.’ என்ற செய்தி வீட்டு வாயில்வரை வந்து சேர்ந்தது. அவனின் வித்துடல்கூடக் கிடைக்கவில்லை. எல்லோரும் அழுது புலம்பினார்கள். அவனின் இழப்பை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. அவனுக்கான எட்டுச்செலவும் முடிந்தது. இப்போது 31ம் நாள் நினைவுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண் டிருந்தன. ‘நிதி வீரச்சாவில்லையாம், நிதி வீரச்சாவில்லையாம்’ காற்றோடு கலந்து வந்தது அந்த இனிய செய்தி. சாவீடு அங்கே சந்தோசத்தில் துள்ளிக்கூத்தாடியது.

இரும்பொறையாய் கடற்புலிகளுக்காய் வரலாறு படைத்தவன் 1991இல் ஆனையிறவு ஆகாய கடல் வெளிச்சமரில் மடிந்தது விட்டதாக வந்த செய்தி பொய்யாகிப்போனது. கடல் எப்போதுமே அமைதியாக இருப்பதில்லை. அலைகள் எப்போதுமே எதையோ அடைவதற்காய் துடித்துக்கொண்டேயிருக்கும். அந்த அலைகளைப் போலவே கடலுக்குள் வாழ்ந்தவனின் கதையிது.

இரும்பொறை என்ற பெயரையும் அந்தப் பெயரின் இதயத் தையும் அறியாத யாரும் கடற்புலிகளில் இருந்திருக்க முடியாது. அதுபோலவே இந்த தேசத்தில் அந்த வீரனைப்பற்றி அறியாத வர்கள் இருக்கவும் கூடாது. ஏனென்றால் தேசம் மடியக்கூடாது என்பதற்காய் சாவையே மறந்து, சாதனைகளையே எதிர் பார்த்து வாழ்ந்த வரலாறுகள் மறைந்து விடக்கூடாது.

எல்லோரும் அறிந்தது தமிழீழ விடுதலைப் புலிகளென்னும் தமிழர் தேசியப் படையின் கடற்படைத்துணைத்தளபதி என்ற இரும்பொறையைத்தான். ஆனால் அதற்கு முன்பே நிதி என்ற பெயரில் அவனுக்கொரு வரலாறு இருக்கின்றது.

1990ஆம் ஆண்டு இயக்கத்தில் இணைந்த ஆரம்ப நாட்க ளொன்றில் இரும்பொறையின் தாயூரான திருகோணமலை மணியரசன் குளத்தில் பதுங்கித்தாக்குதல் ஒன்றிற்காகப் பதுங் கியிருந்த புலிகளுக்குள் இந்த முகமும் இருக்கிறது. இடுப்பிலே கைக்குண்டுடன் அல்ல, L.M.G என அழைக்கப்படும் கனரக சூட்டு ஆயுதத்தோடு தனது கன்னிச்சமருக்காகக் காத்திருக் கின்றான். சண்டை தொடங்குகின்றது. L.M.G முழங் குகின்றது. இராணுவ உடல்கள் வீழ்கின்றன. ஒரு நீண்ட அனு பவம் மிக்க கனரன ஆயுத வல்லுனனைப்போல் அந்தத் தாக்குதலில் எதிரிக்கு தலையிடி கொடுத்தவனுக்கு பின்னர் L.M.G என்னும் கனரகச் சூட்டு ஆயுதமே நிரந்தர ஆயத மாகியது.

இப்போதுபோல கனரக ஆயுதங்கள் ஏராளம் இருந்த காலப் பகுதியல்ல அது. குறைந்தளவு ஆயுதங்களுடன் கூடுதலான முன்முயல்வுகள். அதனால் திருகோணமலையில் எங்கு சண்டை நடந்தாலும் அங்கு நிதியின் G.P.M.Gயும் இருக்கும். அதுபோல் திருகோணமலைப்படையணி எந்த மாவட்டத்திற்கு சண்டைக்குச் சென்றாலும் அங்கும் நிதியின் துப்பாக்கியின் அதிர்வொலி கேட்கும்.

1993 ஆம் ஆண்டு பூநகரி இராணுவத்தளம் மீது மேற்கொள் ளப்பட்ட தவளை நடவடிக்கையிலும் தனது படையணியுடன் களமிறங்கியவன் வெற்றிகரமாய் முடிந்த அந்தச் சண்டைக் குப்பின் ஒரு கனரக சூட்டாளனாக விடுதலைப்புலிகளின் கடற்படைக்கு அறிமுகமாகின்றான்.





கடற்புலிகளின் துணைத்தளபதி லெப். கேணல் இரும்பறை

வல்லரசு நாடுகளிடம் பெற்றுக்குவிக்கும் கடற்கலங்களுக்கு நிகராக கடற்பலிகளின் பலமும் அதிகரிக்க வேண்டும் என் பதற்காக கடற்புலிகள் தயாரானபோது கடற்புலிகள் நோக்கிய இரும்பொறையின் வரவும் இருந்தது. இங்கேயும் அவனுக்கு கனரக ஆயுதப்பணியே கிடைக்கின்றது. இரும்பொறைக்கும் கனரக ஆயுதத்திற்குமான வாழ்வு இரத்தமும் சதையும் போன்றது. கனரக ஆயுதங்களை அவன் அணுவணுவாகத் தெரிந்து வைத்திருந்தான். அதனால் தான் கடற்புலிகளின் ஆயுதப்பயிற்சிக்கல்லூரி அவன் வழிநடத்தலுக்குள் கொடுக்கப் பட்டது. அதன்பின் இரும்பொறை மாஸ்ரர் இரும்பொறை மாஸ்ரர் என போராளிகள் அவனுடனயே இருந்தார்கள்.

ஒரு தாய் தன் பிள்ளையை வளர்ப்பதுபோல் அந்தப்பயிற்சி ஆசிரியன் செயற்பட்டான். தன்னிடம் பயிற்சிபெறும் ஒவ்வொரு போராளியும் கனரக ஆயுதக்கையாளுகையில் வல்லவராக வரவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டான். தமிழீழ விடுதலைப்புலிகள் என்னும் தமிழர் தேசியப்படையின் கடற்படைப் பெண் போராளிகள் இன்று ஆண்களுக்குச்சமனாக நின்று ஓங்கி வீசும் அலைகளை எதிர்த்துத் தங்கள் கனரக சூட்டு ஆயுதத்தால் எதிரியின் கலங்களை நோக்கிச் சுடும்போது அங்கு புறப்படும் ஒவ்வொரு சன்னமும் அவன்பற்றி அறிந் திருக்கும். ஏனெனில் தங்களாலும் கனரக ஆயுதங்களைக் கையாள முடியுமா என பெண் போராளிகள் சற்றுத்தயங்கிய வேளைகளில் பக்குவமாக அந்த ஆயுதங்களின் நுட்பங்களை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து அவர்களின் கரங்களும் கடல் நடுவே நிற்கும் படகில் உள்ள கனரக ஆயுதத்தின் விசை வில்லைத் துணிவாக அழுத்தி எதிரியின் கலங்களில் அவற்றின் சன்னங்கள் முட்டி வெடிக்க வைக்க முடியும் என்ற உணர்



வையும் அறிவையும் ஊட்டியவன் அவனல்லவா?.

பயிற்சிகளை வழங்குவதில் அவன் எப்படி மும்முரமாய் ஈடுபட்டானோ அதேபோலவே கடலிலும் சாதனை படைக்க வேண்டும் என்ற உணர்வு அவனுக்குள் எப்போதும் இருந்தது. அந்த உணர்வுக்குச் சந்தர்ப்பமும் கிடைத்தது. அது விடுதலைப்புலிகளின் வரலாறு மீண்டும் புதிதாய்ப் பிறப்பெடுத்த பெருஞ்சமர். ஓயாத அலைகள் ஒன்று. கடந்த காலப்படிப்பினைகளுடன் புலிகள் புதிதாய் மூட்டிய பெரும் போரில் எதிரியின் கற்பனைகளைச் சிதறடித்து அசாத்தியமான துணிச்சலுடன் எதிரியின் கடற்கலங்களுக்குச் சமனாக வலம் வந்தன கடந்புலிப் படகுகள்.

கடலை மட்டுமே துணையாய் நம்பி நின்ற எதிரி தரையிலும் கடலிலும் மூண்ட பெருஞ்சமரில் அதிசயித்து அதிர்ச்சிக்குள்ளாகினான். அதிர்வின் மீட்சிகள் எதிரிக்குக்கிடைக்கமுன் கடலையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் கடற்புலிகள். கடற்களங்களில் சமரிட்ட கடற்புலிகளின் படகொன்றின் வழிநடத்துனனாக நின்று சமரிட்டான் இரும்பொறை.

கடற்புலிகள் தோற்காத அந்தச் சண்டையின் ஒரு கட்டத்தில் சிறீலங்கா வான்படை வீசிய குண்டில் இரும்பொறையின் படகு தீப்பற்றி எரிகிறது. இரும்பொறை படகுக்குள் வீழ்கின்றான். படகினுள் கடல்நீர் உட்புகுந்து இரும்பொறையின் உடல் சிந்திய இரத்தத்துடன் சேர்ந்து செந்நிறமாகியது. ஆனாலும் அவன் உயிர் அவனது எதிர்காலப் பணிக்காய் இன்னும் இழக்கப்படாமலிருந்தது. அவனது இடதுகால் இடுப்புடன் உடைந்துபோக அவன் மருத்துவ மனைக்குள் முடங்க வேண்டி வந்தது. தன் கால் பொருந்தி மீண்டும் நடமாடக்கூடியவாறு வருவதற்கு ஒரு வருடத்தையும் கடந்து அவன் காத்திருந்தான்.

இந்த வேதனையைக் கடந்து மீண்டும் இரும்பொறை இயங்கத் தொடங்கினான். ஒரு கனரக ஆயுதப்பயிற்சி ஆசிரியன் என்ற நிலையிலிருந்து அவன் மேலும் வளர்ச்சி கண்டு கடற்புலிகளின் சாள்ஸ் படையணியை வழிநடத்தும் பொறுப்பு அவனுக்கு வழங்கப்பட்டது. எப்போதுமே போராளிகளை நன்றாக வளர்க்க வேண்டும் என்ற அவனின் எண்ணத்திற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவன் ஒரு பொறுப்பாளனாக இல்லாமல் ஒரு போராளியைப் போலவேயிருந்து தனது படையை வழிநடத்தினான். தேவையான இடங்களில் கண்டிப்புகள் அதற்கேற்ற வகையில் விட்டுக்கொடுப்புக்கள் என ஒரு வழிநடத்துனனுக்குரிய எல்லா இயல்புமே அவனிடமிருந்தது. எப்போதும் எதையுமே நேரில் நின்று பார்த்துச் சீர்திருத்தி விடவேண்டும் என்பது அவனது எண்ணம். அது தளத்தில் மட்டுமல்ல களத்திலும் தான்.

ஒரு முறை விநியோகப்பணியில் ஈடுபட்டிருந்த கடற்புலிப் படகுகள் சிங்களக் கடற்படையின் படகுகளால் வழிமறிக்கப்படுகின்றன. கடற்சமர் மூழுகின்றது. கடற்புலிகளின் சண்டைப் படகுகள் சமரிடத் தொடங்கின. கடற்புலிப் படகொன்றிலிருந்த கனரக ஆயுதமொன்று அப்போது இயங்க மறுத்துக் கொண்டிருந்தது. கரையிலிருந்து கட்டளைகளை கிரகித்துத்துக்கொண்டிருந்த இரும்பொறை நிலமையைப் புரிந்து கடற்புலிப் படகொன்றில் கடற்சமர்க் களத்திற்கு விரைகின்றான். சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த அந்தச் சூழலுக்குள் கூவிச்செல்லும் சன்னங்களுக்கும் வெடித்துச் சிதறும் 'கனொன்' ரவைகளுக்கும் இடையில் கடலில் நின்றபடி ஆயுதத்தைச் சரிசெய்துகொண்டிருந்தான் இரும்பொறை.

இப்படித்தான் எந்தச் சூழலுக்கும் முகம் கொடுக்கும் அவன் 07-10-99இல் கடலில் நடந்த சமரில் கடற்புலிகளின் துணைத் தளபதி லெப் கேணல் நிரோஜன் வீரச்சாவடைந்ததால் அந்தப் பணியை கடற்புலிகளின் சிறப்புத் தளபதியின் பணிப்புடன் ஏற்றுக்கொண்டான். கனரக ஆயுதங்களில் அவனுக்கிருந்த பட்டறிவும், கனரக ஆயுதங்களைக் கொண்டு எந்தச்சூழ்நிலையிலும் எதிரியை அழிக்கலாம் என்பதில் அவன் வைத்திருந்த



தன்னம்பிக்கை, இருப்பதை வைத்து எதையும் சாதிக்கும் திறன், இடைவிடா முயற்சி என விரிந்து செல்லும் அவனின் அற்றல்கள், எங்கள் தேசத்தின் தலைமையும், கடற்புலிகளின் சிறப்புத் தளபதியும் அவனைக் கடற்புலிகளின் துணைத் தளபதியாக்க காரணமாக அமைந்தன.

அவனின் சிறப்பியல்புகளையெல்லாம் ஒன்றுசேர வெளிப்படுத்தியது திருமலைத்துறை மீதான தாக்குதல். திருகோணமலைத் துறைமுகம் ஒரு வேவுப்புலிவீரனால் வேவுபார்க்கப்பட்டு கடற்புலிகளின் சிறப்புத் தளபதியின் கைகளுக்கு வர, அந்தத் தகவல்களோடு நேரடியாக வேவிற்கு இறங்கினான் இரும்பொறை. திருகோணமலைத்துறைமுகமே அதிர வேண்டும் என்ற உணர்வோடு பகலையும் இரவையும் ஒன்றாக்கி உழைத்தான். தாக்குகலின் ஒவ்வொரு ஆயத்தங்களிலிலும் தானே நேரில் நின்று சரிபார்த்தான். கரும்புலிப் படகுகளையும் தாக்குதல் படகுகளையும் ஓட்டிச் சரிசெய்தான். ஒவ்வொரு போராளிக்கும் சண்டை பற்றித் தெளிவூட்டினான்.

திருகோணமலைத் துறைமுகம் நோக்கி கடற்புலிகளின் கடற்சமர்ப்படகுகளும் கரும்புலிப்படகுகளும் நகர சமநேரத்தில் கரையில் விடுதலைப் புலிகளின் பீரங்கிப்படைகளும் தயாராகிக் கொண்டிருந்தன. எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து கடற்படையின் குகைக்குள் மூட்டப்போகும் பெருஞ்சமரை வழிநடத்த களத்திலிருந்தான் இரும்பொறை.

சண்டைக்கான நேரம் நெருங்க எதிரியின் துறைமுகக் கோட்டைக்குள் தன் நுட்பமான திட்டமிடலின்படி படகுகளை முன் நகர்த்தினான். ஒரு சாதகமற்ற சூழலுக்குள் சாதனைச் சிகரத்தைத் தொட்டுவிட எல்லோரும் மௌனமாய் காத்திருந்தார்கள். துறைமுகத்திலிருந்த ஆக்கிரமிப்புப் படைகளும் துருப்புக் காவிக்கலங்களும் அதன் துணைக் கடற்கலங்களும் ஆழ்ந்த உறக்கத்திலிருக்க இரும்பொறையின் தொலைத் தொடர்புக் கருவியிலிருந்து கட்டளைகள் பிறக்கின்றன. கடல் அலையின் ஓசை அதிர்வை மேவியபடி கடற்புலிகளின் மூர்க்கமான தாக்குதல் கடலிலும் தரையிலும் ஆரம்பித்தது. பீரங்கிப்படையணியின் எறிகணைக் குழல்கள் துப்பிய குண்டுகள் துறைமுககெங்கும் வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தன. திருகோணமலைத் துறைமுகத்தையும் சிங்களக் கடற் படையையும் சிங்கள அரசையும் கலங்கவைத்த அந்த வெற்றிகரத் தாக்குதலை தனித்து நின்று வழிநடத்தினான் இரும்பொறை. எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் எதையும் சாதிக்கும் தன் திறமையை தன் போராளிகளுடன் சேர்ந்து நிரூபித்துக்காட்டினான்.

இப்படித்தான் செயலால் வளர்ந்து சாதனை படைத்தாலும் கடற்புலிகளின் பாதுகாப்போடு பயணித்த விடுதலைப் போராளிகள் சிறீலங்காக் கடற்படையின் தாக்குதலுக்குள்ளாகி மடிந்ததை இரும்பொறையால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த இழப்பு அவனின் நெஞ்சத்தை குடைந்துகொண்டிருந்தது. சிறீலங்கா கடற்படை மீது கடும் சினத்தையும் ஏற்படுத்தியது. வெறும் வேதனைகள் மட்டுமே தன் இதயத்தை அமைதியாக்கி விடாதென்பதை உணர்ந்தவன் செயலில் இறங்கினான்.

திருகோணமலையிலிருந்து கடற்புலிகளை வழிநடத்திய அந்த இளம் தளபதி மீண்டும் வன்னிக்கு திரும்பினான்.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதியின் ஆலோசனையோடு சிறீலங்கா கடற்படைக்கு தக்க பதிலடிகொடுக்கப் புதிய திட்டமொன்று தீட்டப்பட்டது. கடலில் நேரடியாக நின்று கனரன ஆயுதங்களால் சூட்டுப்பயிற்சி வழங்கி படகுகளை சரிபார்த்து எதிரிக்கு பேரிடிகொடுக்க கடற்புலிச் சேனையின் துணைத் தளபதியுடன் போராளிகள் தயாராகினார்கள்.

ஒரு இராப்பொழுதில் இயற்கையும் மனிதர்களும் மௌனமாய் உறங்கிக்கொண்டிருந்த நேரத்தில் மெல்லியதாய் இரைந்து கொண்டிருந்த அலைகளுக்குள் படகுகள் இறக்கப்படுகின்றன. இருளின் வெளிச்சத்துக்கள் வானவிளிம்போடு பார்க்கும்போது



www.sangathamil.ca



கடற் சமர்ரொன்றை வழிநடத்தும் துணைத் தளபதி லெப். கேணல் இரும்பொறை

கறுத்த உறுவமாய் படகுகள் அசைந்தன.

இரும்பொறை தன் கட்டளைப் படகுக்குள் இறங்குகிறான். படகுகளின் இயந்திரங்கள் உரத்து ஒலிக்கின்றன. தரையில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி தன் தோழர்களை வழியனுப்பி விட்டுத் தன் கட்டளையகத்தில் காத்திருக்க கடற்புலிகளின் துணைத்தளபதி இரும்பொறையின் வழிநடத்தலில் மூன்று தொகுதிகளாகப் பிரிந்து கடற்களச்சமருக்கு கடற்புலிகளின் சண்டைப் படகுகளும் கரும்புலிப்படகுகளும் புறப்படுகின்றன. முல்லைத்தீவுக் கடற்பரப்பிலிருந்து தங்கள் இலக்கை எதிர் பார்த்து அதிவேகத்தில் அலைகளை ஊடறுத்து விரைந்தன படகுகள்.

இப்போது சிங்களக் கடற்படையின் கலங்களில் திருகோண மலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி தங்கள் விநியோகப் பயணத்தை ஆரம்பித்தன. கடற்புலிகளின் படகுகள் இலக்கை இனங்கண்டு மூன்று முனைகளில் எதிரிகளின் கலங்களை முற்றுகையிட்டன. கடற்சண்டையைக் கடற்புலிப்படகுகள் தொடக்கி வைத்தன. எதிர்பாராத நேரத்தில் தங்கள் கலங்களில் பட்டு வெடித்துச் சிதறும் சன்னங்களைக் கண்டு சிங்களக் கடற் படை திகைத்தது. இரும்பொறையின் கட்டளைப்படகும் அதன் துணைப்படகுகளும் எதிரியின் பாரிய கப்பலொன்றை இனங் கண்டு தாக்குதல் தொடுக்க தயாராகின. எதிரியின் கப்பலில் இருந்து 1200 மீற்றர் தூரத்தில் நின்றபடி கரும்புலிப்படகை கப்பல் மீது மோதவிட தன் தளபதியிடம் அனுமதியைக் கோரு கின்றான் இரும்பொறை. எதிரி நிதானித்து தன் பலத்தை அதிகரிப்பதற்கு முன் எதிரி திகைத்திருக்கும் அந்த நேரத்தில் 1200 படையினருடன் இருந்த அந்த ‘பிறைட் ஒவ் சவுத்’ கப்பலைச் சிதறடித்துத் தன் அதயச் சுமைகளை இறக்கி வைப் பதற்காக அவன் இதயம் துடித்துக் கொண்டிருந்தது.

ஆனால் தளபதியால் உடன் அனுமதி வழங்க முடியாத நிலை. பொது மக்கள் அந்த கப்பலில் இருப்பதாகத் தகவல். தலைவன் எப்போதும் மக்களுக்குச் சேதம் வரக்கூடாதெனச் சொல்லியது அவர் முன் சிந்தனைக் கணைகளாக வந்து மோதின. நேரம் கடந்துகொண்டிருந்தது. சிங்களக் கடற்படை தங்கள் உயிர் களைக் கையில் பிடித்தபடியிருக்க, இரும்பொறை கரும்புலிப் படகுகளை தடுத்தபடியிருக்க, கடலில் அப்போது நிலவியது ஒரு சமருடன் கூடிய அமைதி.

நேரம் கடந்ததால் எதிரியின் பலம் கடலில் இப்போது கூடியி ருந்தது. எதிரியின் டோராக் கலங்களுடன் கடற்புலிப்படகுகள் கடுஞ்சமரிட்டன. கடற்புலிகளின் ஒரு தொகுதிப்படகுகளின் தாக் குதலில் ஒரு டோரா கடலுக்குள் மூழ்கடிக்கப்பட்டது. இரும் பொறை கனரக ஆயுதம் பொருந்தியிருந்த தன் கட்டளைப் படகில் நின்றபடி சண்டையை வழிநடத்திக் கொண்டிருந்தான்.

சற்றுப் பின்நகர்ந்த இரும்பொறையின் கட்டளைப்படகு ஆவேசத்துடன் எதிரியின் டோராக் கலமொன்றை இனங் கண்டு தாக்குகின்றது. இப்போது டோராப்படகு கடலில் நின்று சுழன்று கொண்டிருந்தது. இரும்பொறை கரும்புலிப்பட கொன்றை அந்த டோராவைச் சிதைக்க விடைகொடத்தனுப் பினான். அது கடலின் அலைகளினூடே புகுந்து டோராவுடன் மோதியபோதும் வெடிக்கவில்லை. நிலமையைப்புரிந்த இரும் பொறை ஆவேசத்துடன் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் நிற்க வேண்டிய தன் கனரக ஆயுதம் பொருந்திய கட்டளைப்படகை எதிரியின் டோரா நோக்கி வேகத்துடன் முன் நகர்த்தினான்.

எப்போதும் போல, கடலில் ஏதாவது பிசகு நடந்துவிட்டால் அடுத்த கணம் இரும்பொறையின் படகு அங்கே நிற்கும். இலக்கு விலகிவிட்டதோ, வெடிமருந்து வெடிக்கவில்லையோ, என்ன பிசகோ... எங்கோ நிற்க வேண்டியவன் கரும்புலிப்படகு தாக்கிய எதிரிக்கலத்தின் அருகில் நின்றான். ஏன் இதற்குள் என அருகிலிருந்த படகில் நின்ற போராளிகள் அங்கலாய்த்தார்கள். இரும்பொறையை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்திவிட அவர்கள் துடித்துக்கொண்டிருந்தார்கள். எல்லோரும் நிதா னித்து அவனைப் பின்நகர்த்துவதற்கிடையில் ஆவேசமாய் தொலைத்தொடர்புக் கருவியில் ஒலித்துக்கொண்டிருந்த அவன் குரல் ஓய்ந்திருந்தது. அந்த வீரன் தன் கட்டளைப்படகிற்குள் இரத்தவெள்ளத்தில் மௌனமாய் கிடந்தான். ஓருறவாய் தங்க ளுடன் உண்டு படுத்து ஊட்டி வளர்த்த தளபதியைக் கடலில் பறி கொடுத்த சோகத்துடன் அவனையும் இன்னும் சில தோழர் களையும் வித்துடலாய்ச் சுமந்தபடி படகுகள் கரைதிரும்பின.

‘எனக்கு ஒண்டு நடந்தா எங்கட கடற்புலிகளையே சிறப்பாக வழிநடத்தக்கூடியவனென்டு நான் கற்பனையெல்லாம் போட்டு வச்சிருந்தன் ஆனா அது அவன்ர சாவோடை முடிஞ்சுபோச்சு’ என்று கடற்புலிகளின் சிறப்புத்தளபதி ஏங்கியது எத்தனை உண்மையானது. புறப்படும் போதே தன் இலக்கை அழிக் காமல் மீள்வதில்லை என்று புறப்பட்டவன் பின்னர் வரவே யில்லை. எந்தச்சண்டையிலும் ஏதாவது பிசகெண்டால் தன் படகுடன் அங்கே நிற்கும் ஒரு சண்டைக்காரனை நாங்கள் இழந்து போனோம்.

1991இல் நிதி என்ற பெயரின் வரலாறு முடிந்து போகாமல் இன்னும் பத்து வருடங்கள் இரும்பொறையாய் சாதனை படைத்த திருப்தி ஒருவேளை அவன் ஆத்மாவிற்கிருந்தாலும் ஒரு எதிர்கால கடற்படைத்தளபதியின் வாழ்வு இடையில் முடிந்துவிட்டதே என்ற எங்களின் நெஞ்சத்து வேதனை அவன் ஆன்மாவிற்கு எட்டுமா?

நினைவுப்பகிர்வு - ச.புரட்சிமாறன் விடுதலைப்புலிகள் இதழ் 104 ஆடி - ஆவணி






# திருகோணமலையில் தொல்லியல் துறையினருக்கு எதிராக விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

01.01.2025

திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேச பகுதியில் இன்று (2025.01.01) குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விவசாயிகளினால் தொல்லியல் துறையினருக்கு எதிரான மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

1962 ஆம் ஆண்டு தொடக்கம் 1985 வரையான காலப் பகுதிகள் வரைக்கும் திருகோணமலை மாவட்டத்தில் மிகப்பெரிய நெற்களஞ்சியசாலையாக விளங்கிய குறித்த இடத்தில் 1985 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் குச்சவெளி காவல் நிலையம் தற்காலிகமாக இயங்கி வந்தது.

கடந்த ஆண்டு குச்சவெளி காவல் நிலையம் அவ்விடத்தில் இருந்து இடம் மாற்றம் சென்றதை அடுத்து குறித்த இடம் மீண்டும் நெற்களஞ்சிய சாலையாக இயக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில், கடந்த 28. 12 .2024 ஆம் திகதி இரவு வேளையில் இலங்கை தொல்லியல் திணைக்களத்தினரால் அவ்விடம் 'தொல்லியல் திணைக்களத்திற்குரிய இடம்' என பதாதை வைக்கப்பட்டது.



ஏற்கனவே அவ்விடத்தில் தொல்லியல் துறைக்கு என அதிலிருந்து நான்கு ஏக்கர் அளவு காணி ஒதுக்கப்பட்டு இருந்த நிலையில், அதற்கு மேல் அதிகமாக அடாவடி முறையில் தொல்லியல் துறையினர் காணிகளை தம்பசப்படுத்தி இருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பெருமளவிலான காணிகள் தொல்லியல் துறையினரால் அடாவடியான முறையில் கையகப்படுத்தப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் குறித்த நடவடிக்கையை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரி குச்சவெளி பிரதேச விவசாயிகள் ஒன்று கூடி கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியதோடு உடனடியாக நடவடிக்கை எடுத்து தீர்வினை பெற்று அந்தக் காணியை மீண்டும் நெற்களஞ்சிய சாலையாக பயன்படுத்துவதற்கு அனுமதி தருமாறு கோரி குச்சவெளி பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

# இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, பயங்கரவாத தடைச்சட்டம் ஒழிக்கப்படல் வேண்டும்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

01.01.2025

நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டால் அனுர அரசாங்கம் பொருளாதார ரீதியில் அச்சப்பட வேண்டிய அவசியம் ஏற்படாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று புதன்கிழமை (01) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர்ந்துள்ள எம் உறவுகள், எம் நாட்டை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் உள்ளது. எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும். இதனை ஜனாதிபதி கருத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் 13 ஆவது திருத்தச் சட்டம், இந்திய இலங்கை ஒப்பந்தம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில், செயற்பாடுகள் அமைய வேண்டும்.

எனவே இந்த புதிய ஆண்டில் எமது கிராம மக்கள் அனைத்து விதமான வசதிகளும் உள்ளது என்று கூறக்கூடிய வகையில் இந்த அரசாங்கம் செயல்பட வேண்டும்.

அதற்காக நாங்களும் ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கிறோம். இந்த வருடத்தில் பின்தங்கிய கிராமங்கள் முழுமையாக வளர்ச்சி பெற வேண்டும். அதற்கான செயற்பாடுகளை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

பிரிந்து செயல்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். நாங்கள் ஒற்றுமையாக செயல் படவில்லை என்றால் நம் மண்ணையும் மக்களையும் உதாசீனம் செய்யும் கட்சிகளாகவே நாம் இருப்போம்.




எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்றால் தேசியக்கட்சிகள் இல்லாது போகின்ற துர்பாக்கிய நிலை காணப்படும்.

எனவே எதிர் வருகின்ற தேர்தல்களில் நாங்கள் ஒற்றுமையாக செயல்பட வில்லை என்றால் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள அனுரவின் அலை வடக்கு கிழக்கிலும் ஏற்படும். இதனால் பாதிப்புகள் எமக்கு ஏற்படுத்தும் என்பது உண்மை.

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி மல்லாவி நகரில் கையெழுத்து போராட்டம்

02.01.2025

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மல்லாவி நகரில் கையெழுத்து போராட்டம் இன்று வியாழக்கிழமை (02.01.2025) இடம் பெற்றது.



போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மல்லாவி நகரில் குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் மத தலைவர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்.

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சேகரிக்கப்படும் குறித்த



கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு மகஜராக ஜனாதிபதி அவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.







# திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலையின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல்

02.01.2025

திருகோணமலையில் 2016ம் ஆண்டு படுகொலை செய்யப்பட 05 மாணவர்களின் 19 ஆவது நினைவு நாள் இன்று (02) மாலை திருகோணமலை கடற்கரையில் இடம் பெற்றது. குறித்த நினைவேந்தலானது இராவணன் சேனா அமைப்பின் தலைவர் கு. செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.



குறித்த படுகொலை சம்பவமானது திருகோணமலை கடற்கரையில் வைத்து 02.01.2006 அன்று இடம்பெற்றது. படுகொலை செய்தவர்கள் - சிறிலங்கா இராணுவம் மற்றும் கடற்படை எனவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை டொக்யார்ட் வீதி, பெரிய கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்கு அருகாமையாக மாலைப் பொழுதில் தினமும் இளைஞர்கள் நின்று கலந்துரையாடுவது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் பலர் அவ்விடத்தில் கூடியிருந்தனர் . அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் அந்த இளைஞர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டுக் கோட்டைப் பக்கமாக சென்றதாக கூறப்படுகின்றது. கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என்பவர் காயமடைந்தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்கு சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர்.

இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து முழங்காலில் நிக்க வைத்து சுட்டுக் கொன்றதாக அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இத்தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் 05 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 05 மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் விபரம்:



லோகிதராசா ரொகான்
சண்முகராஜா சஜீந்திரன்
மனோகரன் வசீகர்,
தங்கத்துரை சிவானந்தன்
யோகராஜா கேமச்சந்திரன் ஆகியோர்கள் ஆவர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த குறித்த அமைப்பின் தலைவர் கு. செந்தூரன் அப்பாவி மாணவர்களின் படுகொலை கண்டிக்கத்தக்கது இதனை சந்ததிகளுக்கு எடுத்து செல்லவே நினைவேந்தல் இடம் பெறுகிறது. இதனால் துயருற்றிருக்கும் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் உறவுகளுடன் இணைந்து நாங்களும் பங்கெடுக்கிறோம் என்றார்..

# கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் 78,375 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளது

## ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கேப்டன் பிரபாத் நாரம்பனவ

02.01.2025

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டடில் ஈடுபட்டுவரும் ஸார்ப் நிறுவனத்தினால் எழுபத்தெட்டாயிரத்து முன்னூற்று எழுபத்தைந்து (78,375) அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தினால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 2009ம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்றதை தொடர்ந்து மக்களின் மீள்குடியேற்றம், விவசாய நடவடிக்கைகள், உட்கட்டுமான நடவடிக்கைகள் என்பவற்றை துரிதப்படுத்தும் வகையில் பல்வேறு தொண்டு நிறுவனங்களால் சர்வதேச நாடுகளின் நிதியுதவியுடன் உள்ளூர் பணியாளர்களை கொண்டு வெடி பொருட்களை அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளில் ஸார்ப் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறு இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்க நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் (SHARP) மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தச்சடம்பன், அம்பகாமம், ஒலுமடு மற்றும் மாங்குளம், கொக்காவில் பகுதிகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை, கிளாலி , இயக்கச்சி , ஆனையிறவில் மற்றும் தட்டுவன்கொட்டி ஆகிய பகுதியிலும் முப்பத்தாறு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எண்நூற்று இருபத்தொன்பது சதுரமீற்றர் பரப்பளவில் (3,657,829 SqM) இருந்து எழுபத்தெட்டாயிரத்து முன்னூற்று எழுபத்தைந்து (78375) அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கேப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.



தொடர்ந்து குறித்த நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை புதுக்குடியிருப்பு, அம்பகாமம், இமாங்குளம், கொக்காவில், தட்டுவன்கொட்டி, மற்றும் ஆனையிறவிலும் துரிதகதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை!

02.01.2025

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முன்னாள் போராளிகள் நலன்புரி சங்கம் மேற்கொள்கின்ற கையெழுத்துப் போராட்டம் நாளை மூன்றாம் திகதி மற்றும் நான்காம் திகதிகளில் கிளிநொச்சி நகரம் எங்கும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவு பெற்று கடந்த 15 ஆண்டுகளாக எந்தவிதமான மனிதாபிமானமும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யுமாறு கோரி. ஜனாதிபதிக்கு கடிதங்களை கையளிக்கும் வகையில் நடைபெறும் போராட்டத்தில் அனைவரையும் இணைய அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரத்திற்கு மூன்றாம் நான்காம் திகதிகளில் வருகை தருகின்ற அனைத்து மக்களும் பேருந்து நிலையத்திற்கு முன்பாக தங்களின் கையெழுத்து ஒன்றை இட்டு இனத்திற்காக சிறை இருக்கும் எமது பிள்ளைகளை விடுதலை செய்ய ஒத்துழைப்பு வழங்குவோம் என முன்னாள் போராளிகள் நலன்புரி சங்கம் விடுத்துள்ள அழைப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



# வவுனியாவில் நினைவுகூரப்பட்டார் மாமனிதர் குமார் பொன்னம்பலம்

05.01.2025

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25ஆவது நினைவு தினம் தமிழர் தாயக காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் இன்று ஞாயிற்றுக்கிழமை (05) காலை நினைவுகூரப்பட்டது.

அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக உள்ள கொட்டகையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப்படத்துக்கு



மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.



# மக்களது காணிகளை துறைமுக அதிகாரசபை கையகப்படுத்தியுள்ளது

## திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன்

03.01.2025

துறைமுக அதிகார சபையின் காணியை மக்கள் பிடிக்க வில்லை, மக்களின் காணிகளையே இலங்கை துறைமுக அதிகாரசபை கையகப்படுத்தியுள்ளது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை பிரதேச செயலகத்தில் இன்று வெள்ளிக் கிழமை (03) இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முத்துநகர் பகுதியில் மக்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வருவதோடு விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கிட்டத்தட்ட 1887 ஏக்கருக்கு க்கு மேற்பட்ட குடியிருப்பு காணியில் இவர்கள் வசித்து வருகின்றார்கள்.

இந்நிலையில் இலங்கை துறைமுக அதிகார சபையினர் ஒரு இரவிலேயே கல்லுப் போட்டு 5226 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்திக் கொண்டுள்ளனர்.

கிட்டத்தட்ட 1971ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே முத்துநகர் பகுதியில் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அதற்கான ஆதாரங்கள் உட்பட ஆவணங்களும் மக்களிடம் இருக்கின்றன.

எனவே அவர்களுடைய காணி விடுவிப்பு தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரொஷான் அக்மீமன மற்றும் அதிகாரிகள் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏழை மக்களின் காணிகளை அவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் யுத்தத்தால் இடம்பெயர்ந்த வெல்வெரி மக்களுடைய காணிகளையும் விடுவித்து தற்போது இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்ற மக்களையும் அங்கே மீளகுடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெல்வெரி பகுதியில் மக்கள் வாழ்ந்த வீடுகள், உடைந்த கட்டடங்கள் கிணறுகள், பலன்தரு மரங்கள் இன்னும் அங்கே இருக்கின்றன.



யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை வரவேண்டாம் என்று கூறிவிட்டு அந்த காணிகளை தனியார் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளனர்.

அதுமட்டுமல்லாம் ஏனைய காணிகளை வனவள பாதுகாப்பு திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது.

எனவே இவற்றையும் விடுவிக்க இந்த அவையினூடாக கோரிக்கை விடுப்பதாகவும் மக்ஹெய்சர் விளையாட்டரங்கு புணரைப்பு, திருகோணமலை வைத்தியசாலையின் பௌதீக வள பற்றாக்குறை மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் உரையாற்றியிருந்தார்.

# திருகோணமலை முத்துநகர் பகுதி விவசாயிகள் காணிகளை விடுவிக்கக் கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

03.01.2025



திருகோணமலை முத்துநகர் பகுதியில் இலங்கை துறைமுக அதிகார சபையினால் கையகப்படுத்தப்பட்டுள்ள விவசாய காணியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுவரும் சூரிய சக்தி மின்வலு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் குறித்த காணிகளை விவசாயிகளுக்கு மீள வழங்கக் கோரியும் முத்துநகரின் ஒன்றிணைந்த விவசாய சம்மேளனங்களின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்திற்கு முன்பாக இன்று வெள்ளிக் கிழமை (03) விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை உப்புவெளி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட முத்துநகர் கிராம சேவகர் பிரிவில் உள்ள அம்மன் குளம் விவசாய சம்மேளனம், தகரவெட்டுவான் விவசாய சம்மேளனம், முத்துநகர் விவசாய சம்மேளனம், மத்தியவெளி விவசாய சம்மேளனம் ஆகிய விவசாய சம்மேளனங்களினுடைய விவசாயிகள் குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது "வயிற்றுப் பசிக்கு சோலர் பவரா?", அழிக்காதே அழிக்காதே வாழ்வாதாரத்தை அழிக்காதே, "ஏழை விவசாயிகளை சுரண்டாதே" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.



பின்னர் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரினை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் இராஜசேகர் அவர்களிடமும், பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, பிரதேச செயலாளர் மதிவண்ணன் ஆகியோரிடம் கையளித்தனர்.

இதன்போது குறித்த காணிகளில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கும் திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு கடந்த மார்கழி மாதம் 24ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளதாகவும் உங்களுடைய காணிகளை உங்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தற்போது இணக்கப்பாட்டளவில் முடிவுகள் எட்டப்பட்டுள்ளதாகவும் விரைவில் குறித்த காணிகளை மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரொஷான் அக்மீமன மக்களிடம் உறுதியளித்தார்.

குறித்த சூரிய சக்தி மின்வலு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் அம்மன் குளம், சின்ன அம்மன் குளம், தகரவெட்டுவான் குளம், முத்துநகர் குளம், மத்தியவெளி குளம் ஆகிய ஐந்து சிறு குளங்கள் உட்பட ஏறக்குறைய 1600 ஏக்கர் விவசாய நிலங்களும், 1200 விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள் எனவும் மேலும் 50 ஏக்கர் மேட்டு நில உப உணவுப் பயிர்களும் செய்கை பண்ணப்பட்டு ஏறத்தாள 4200 தொடக்கம் 5000 பயனாளிகள் பயனடைந்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2024ஆம் ஆண்டு அரச நிதி ஒதுக்கீட்டின்கீழ் தகரவெட்டுவான் குளம் புனரமைக்கப்பட்டு 80வீத பணிகள் நிறைவுற்றிருந்த நிலையில் இலங்கை துறைமுக அதிகார சபையினர் அதனை நிறுத்தியிருந்ததோடு அன்மன் குளத்தின் திருத்தத்தை தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இதனால் குளத்தின் நீர் வீண்விரையமாகி வேளான்மை அழிவுற்று வருகின்ற நிலையில் வயல் நிலங்களை சூரிய சக்தி மின்வலு திட்டத்திற்கு வழங்கியுள்ளதோடு இவ்வருட இறுதிக்குள் அத்திட்டத்தை ஆரம்பிக்க உள்ளதாக அறியக்கிடைப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.



இதனால் ஒவ்வொரு வருடமும் பெரும்போகத்தின் மூலம் அறுவடை செய்யப்படுகின்ற 112000 புசல் நெல் உற்பத்தி பாதிக்கப்படுவதோடு விவசாயிகளின் ஜீவனோபாயமும் பாதிக்கப்படும் எனவும் எனவே இந்த வயற்காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தி வேளான்மையை தொடர்ந்து செய்கை பண்ண நிலங்களை விடுவித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.






# யாழ்ப்பாணத்தில் சுண்ணக்கல் கடத்தல்: பின்னணியில் டக்ளஸ் தேவானந்தா?

04.01.2025

வடக்கிலிருந்து சுண்ணக்கல் கடத்தலை அம்பலப்படுத்தியுள்ள நிலையில் ஜேவிபிக்கு எதிராக டக்ளஸ் தேவானந்தா தரப்பு கம்பு சுற்ற தொடங்கியுள்ளது. இன்றைய தினம் ஈபிடிபியின் ஏற்பாட்டில் ஊடக சந்திப்பு நல்லூரிலுள்ள விருந்தினர் விடுதியில் நடத்தப்பட்டுள்ளது.

சுண்ணக்கல் அகழ்விற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை காலமும் ஈபிடிபி பங்களிப்புடன் சுண்ணக்கல் கடத்தப்பட்டமை அம்பலமாகியுள்ளது.

இந்நிலையில் சுண்ணக்கல் கடத்தல் தொடர்பில் அம்பலமானதையடுத்து ஊடக சந்திப்பு தொடர்பான செய்திகளை ஈபிடிபி முகவர்கள் காவித்திரிகின்றனர்.



சட்டரீதியாகவே நாம் சுண்ணக்கல் “சல்லி” வியாபாரத்தை முன்னெடுத்து வருகின்றோம். நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனின் செயற்பாடுகள் தொழில் முயற்சியாளர்களையும் முதலீட்டாளர்களையும் யாழ்ப்பாணத்திலிருந்து அகற்றும் செயற்பாடாக இருப்பது போன்று உணர்வதாக வர்த்தகரான பிரகதீஸ்வரன் என்பவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், நேற்றுமுன்தினம் இரவு சுண்ணக்கல் ஏற்றிவந்த கனரக வாகனம் ஒன்றை மறித்து அந்த வாகனத்தை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைதிருந்தார். இந்த சம்பவம் தொடர்பில் அந்த நிறுவன உரிமையாளர் பிரகதீஷ்வரன் யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் (04.01.2025) ஊடகவியலாளர் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார்.



இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

தமது வர்த்தக நிறுவனம் சட்ட ரீதியாகவே சுண்ணக்கல் வியாபாரத்தில் ஈடுபடுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் சட்டரீதியான தரவுகளை அறியாது, உண்மையான விடயங்கள் தெரியாமல் தமது வர்த்தக நிறுவனத்துக்கு அபகீர்த்தி ஏற்படுதும் வகையில் செயற்பட்டுள்ளார். இதனால் நேரடியாக பயன்பெறும் 180 தொழிலாளர்களுடன் 68 ஆண்டுகள் பாரம்பரியத்தை கெண்டுள்ள எமது வியாபார நிறுவனத்தின் நற்பெயருக்கு திட்டமிட்ட வகையில் சேறு பூசப்பட்டுள்ளது. இதையடுத்து நாம் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.

கடந்த வியாழனன்று சாவகச்சேரி பொலிஸ் எல்லைக்குள் சுண்ணக்கல் சல்லியை திருமலைக்கு கொண்டுசென்ற தமது பார ஊர்தியை நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தனது வாகனத்தில் பின்தொடர்ந்து சென்று சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விபத்தை ஏற்படுத்தும் வகையில் குறுக்கான நிறுத்தி இடைமறித்திருந்தார்.

அத்துடன் எமது நிறுவனத்தின் வாகன சாரதியிடம் ஆவணங்களை கேட்டு மிரட்டியதுடன் கொண்டு சென்ற பொருளை மூடியிருந்த போர்வையையும் கிழித்து அடாவடித்தனம் செய்துள்ளார். ஆனால் சாரதி தம்மிடமிருந்த அனைத்து ஆவணங்களையும் காண்பித்துள்ளார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிசாரும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு கறித்த சுண்ணக்கல் சட்டடரீதியாகவெ கொண்டு செல்லப்படுகின்றது என எடுத்துக் கூறியும் நாடாளுமன்ற உறுப்பினர் அது சட்டவிரோதம் என கூறி எமது பார ஊர்தி கொண்டுசென்ற சுண்ணக் கல்லுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இதேநேரம் குறித்த வியாபாரத்தை நாம் இன்று நேற்றல்ல. பல ஆண்டுகளாக மேற்கொண்டு வருகின்றோம். அத்துடன் இந்த சுண்ணக்கல் சல்லிகளை கடந்த 14 ஆண்டுகளுக்கும் மேலாக கறித்த சிமெந்து நிறுவனத்துக்கு சட்டரீதியாக விநியோகித்தும் வருகின்றோம்

கடந்த காலங்களிலும் எமது நிறுவனத்தின் மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் யாழ்ப்பாணம் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவாரால் சுமத்தப்பட்டது.

ஆனாலும் அன்றிருந்த ஒருங்கிணைப்பு குழு நிர்வாகம் எமது வியாபார நடவடிக்கைகள் சரியானதென்று ஏற்றுக்கொண்டு அதை சட்டரீதியாக முன்னெடுக்க அனுமதி வழங்கியிருந்தது.

இதேநேரம் நாம் அகழப்படும் சுண்ணக்கல்லை நேரடியாக வியாபாரம் மேற்கொள்ளவில்லை. வலிவடக்கு மற்றும் வலிகிழக்கு பகுதியில் இராணுவக் கட்டப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலங்களை தற்போது மக்கள் மீளவும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். அத்துடன் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அந்த நிலங்களில் இந்த சுண்ணக்கல் பாறைகள் அகழப்பட வேண்டியதும் கட்டாயமாக இருக்கின்றது.





இதனால் குறித்த நிலங்களின் உரிமையாளர்கள் அனைத்து துறைசார் திணைக்களங்களிலும் அனுமதியை பெற்று கனரக வாகனங்கள் கொண்டு அனுமதியளிக்கப்பட்ட வரையறைக்கு ஏற்ப சுண்ணக் கற்களை பெரும் செலவு கொடுத்து அகழ்ந்து வருகின்றனர்.

இதேநேரம் இந்த சுண்ணக்கல் அகழ்வை அப்பகுதிகளை சேர்ந்த பல நூறு குடும்பங்கள் தமது வாழ்வாதார தொழிலாகவே காலாகாலமாக மேற்கொண்டு வருகின்றார்கள்.

அவ்வாறு அகழப்படும் சுண்ணக் கற்களை காணி உரிமையாளர்கள் விற்பனை செய்கின்றார்கள். அதை அப்பகுதியில் இருக்கும் 65 இற்கும் மேற்பட்ட கல்லுடைக்கும் ஆலை உரிமையாளர்கள் (“கிறெசர்”) தமது தொழில் நடவடிக்கைக்கான அனைத்து அனுமதிகளையும் துறைசார் தரப்பினரிடம் பெற்று தமது ஆலைகளுக்கு கொண்டு சென்று உடைத்து தரம் பிரித்து விற்பனை செய்கின்றார்கள்.

இவ்வாறு விற்பனை செய்யும் சுண்ணக்கல் சல்லிகளையே நாம் கொள்வனவு செய்து திருகோணமலையிலுள்ள சிமெந்து ஆலைக்கு விற்பனை செய்து வருகின்றோம்.

அத்துடன் குறித்த சுண்ணக்கல் சல்லியை வீதியால் கொண்டு செல்லவோ அல்லது வியாபாரம் செய்யவோ எதுவித அனுமதியும் பெற தேவையில்லை என சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு சான்றாக எமது வாகனங்கள் இரு தடவை நீதிமன்றங்கள் முன் நிறுத்தப்பட்டு அது சட்டரீதியானதென உறுதி செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டும் உள்ளது.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் விடயம் தொடர்பில் ஆராயாமால் அல்லது ஏதொவொரு காரணத்தை முன்னிறுத்தி இச்செயற்பாட்டை மேற்கொண்டுள்ளார் என உணர முடிகின்றது.

இவரது இந்த செயற்பாடானது யாழ் மாவட்டத்தில் உள்ள தொழிலதிபர்களையும் முதலீட்டாளர்களையும் அச்சுறுத்துவது போன்றும் உள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை அரசியல் தரப்பினர் கைவிட்டு முதலீடுகளையும் முதலீட்டாளர்களையும் ஊக்குவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25வது ஆண்டு நினைவேந்தல்

05.01.2025

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25வது ஆண்டு நினைவு தினம் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை யாழ் கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது .



இதன் பொழுது முதன்மை நிகழ்வாக மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வனும் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவருமான கஜேந்திர குமார் பொன்னம்பலத்தினால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.



தொடர்ந்து குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது .

அதனையடுத்து குமார் பொன்னம்பலத்தின் நினைவு உரைகள் இடம்பெற்றது.

“மக்கள் மயப்படுத்தவேண்டிய அரசியல்” எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் மேற் கொண்டார்.



குமார் பொன்னம்பலம் 2000 ஆண்டு ஜனவரி 5ம் திகதி கொழு ம்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியில் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

# வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு மாநிலமாக தீர்வு!

## ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

06.01.2025



வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு மாநிலமாக தமிழ் மக்கள் சுயாட்சியுடன் வாழக்கூடிய அரசியலமைப்பை புதிய அரசாங்கம் உருவாக்க வேண்டும். அத்துடன் மகாணசபை தேர்தலை விரைவாக நடத்தி அதற்கான அதிகாரங்களை முழுமையாக வழங்க வேண்டும் எனவும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட் டணியின் ஊடகப் பேச்சாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, கோவில்குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் நிறைவேற் றுக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த தேர்தல் தொடர்பாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் இரண்டு தடவை இணைய வழி ஊடாக பேசியுள்ளோம். இன்றைய கூட்டத்தில் வரவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர் பில் பேசினோம். அத்துடன் ஜனநாயக தமிழ் தேசியக் கூட் டணியை கிராம மட்டங்களில் பலப்படுத்தல் தொடர்பாகவும் பல்வேறுபட்ட ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

முக்கியமாக எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியாக தற்போது அங்கம் வகிக்கும் 5 கட்சிகளும் போட்டியிடும். அத்துடன் எம்முடன் இணைந்து பயணிக்கக் கூடிய ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளுடனும் பேசி அவர்களும் இணங்கும் பட்சத்தில் இணைந்து போட்டி யிடவுள்ளோம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் தேசியப் பரப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழ் கட்சிகளுடன் இது தொடர்பில் பேசுவதாகவும் தீர்மானங்களை எடுத்துள்ளோம். அத்துடன் எதிர்வரும் பெப்ரவரி முதலாவது வாரத்தில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் மாநாட்டை வவுனியாவில் நடத்த தீர் மானித்துள்ளோம். அதற்கு முன்னதாக மாவட்ட நிறைவேற் றுக் குழுக்கள் கூடி என்ன விடயங்கள் பேசப்பட வேண்டும் எனவும் தீர்மானிப்பார்கள். அதற்கான நடவடிக்கைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய ஒரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டி தேவையும் பொறுப்பும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கு இருக்கிறது. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் என்பது சரியான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும என்பதில் நாம் ஆணித்தரமான கருத்துக்களை கொண்டிருக்கின்றோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிருக்கக் கூடிய புதிய அரசாங்கம் வந்திருக்கிறது.

புதிய அரசாங்கம் ஒரு மாற்றத்தை உருவாக்கப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். நிர்வாகத்தில் மாற்றம். அரசியலில் மாற்றம். ஊழல் இல்லாத நிர்வாகத்தை ஏற்படுத்துவது. என பல விடயங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சனையை தீர்க்கக் கூடிய மாற்றங்கள் ஏற்பட வேண் டும் என்பது எம் மக்களது கருத்தாக இருக்கிறது. அந்த அடிப் படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் கூட ஒரு மாற்றம் ஏற்படும் என்பதற்காக தான் அந்த வாக்குகளும் அளிக் கப்பட்டதாக நாங்கள் கருதுகிறோம்.

ஆகவே, தமிழ் மக்கள் மத்தியில் 75 வருடமாக தேசிய இனப் பிரச்சனை புரையோடிப் போயுள்ள பிரச்சனையாக இருக்கிறது. அது தீர்க்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு புதிய அரசாங் கத்திடம் இருக்கிறதா என்ற கேள்வியும் எம்மிடம் இருக்கிறது. கடந்த 7 வருடங்களாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வில்லை. மாகாணசபை தேர்தல் என்பது இந்த வருட இறுதியில் நடத்தப்படும் என கூறுகிறார்கள். தாமதமாக நடநத்த வேண்டும் என்ற தேவை இருக்கா. அல்லது அதற்கு முன்பு நடத்தலாமா போன்ற கருத்துக்கள் எம் மத்தியில் பேசப்பட்டது.

உள்ளூராட்சி தேர்தல் நடந்து முடிந்து ஓரிரு மாதங்களில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என நாம் நம்புகின்றோம் மாகாணசபைக்கு உரித்தான 1988 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் சாசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து அதிகாரங்களும் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும. இந்த அரசாங்கம் மிக விரைவாக அந்த நடவடிக் கைகளை எடுத்தால் மாத்திரம் தான் தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்கக் கூடிய ஒரு சூழல் ஏற்படும் எனவும் நாம் கருதுகின்றோம்.

ஆகவே, அரசாங்கம் வெறுமனே பேச்சில் மாத்திம் இருக்காமல் தமிழ் மக்களது அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு ஒரு புதிய அரசியல் சாசனம் கொண்டு வரப்பட வேண்டும். அது வெறு மனே சிங்கள மக்களது பிரச்சனையை தீர்ப்பதாக இல்லாது புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களது தேசிய இனப் பிரச் சனையை தீர்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

புதிய அரசியல் சாசனத்தை உருவாக்குவது தொடர்பாக அர சாங்கம் சரியான அறவிப்புக்களை வெளியிடுமாக இருந்தால் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியானது அனைத்து தமிழ் தேசியக் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வாக வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு தமிழ் மாநிலத்தை உருவாக்கி முழுமையான சுயாட்சியை உருவாக்குவதற்கான கருத்துக்கள அல்லது அறிக்கைகளை எல்லோருடனும் இணைந்து புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் குழுவிடம் கொடுப்போம். முதலாவது இந்த அர சாங்கம் குழுவை நியமிக்க வேண்டும். அதனை இரண்டு வருடத்திலா அல்லது மூன்று வருடத்திலா அல்லது உடனடியாக நியமிப்பார்களா என்பது எங்களுக்கு தெரியாது.

புதிய அரசியல் சாசனம் உருவாக்கும் பட்சத்தில் பாராளு மன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அத்துடன் மக்கள் மத்தியில் வாக்கெடுப்புக்கும் விடப்பட வேண்டும். அவ் வாறு விடப்பட்டால் தான் அது நிறைவு பெறும். மக்கள் மத்தியில் சென்று அதற்கான ஆதரவை திரட்ட வேண்டுமாக இருந்தால் இந்த அரசங்கம் விரைவாக புதிய அரசியலமைப்பை உரு வாக்க வேண்டும். அப்போது தான் சாத்தியமாகலாம். காலம் செல்ல ஆட்சியின் மீதும், ஆட்சி அதிகாரம் மீதும் பல்வேறு குறைபாடுகள் வரும். அதற்கு முன்பாக அரசியல் சாசனம் வர வேண்டும் என விருப்புகின்றோம்.

அதில் முக்கியமாக தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சனைக்கு பாதிக்கப்பட்ட அந்த மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக தமிழ் மக்கள் இந்த மண்ணில் முழுமையான சுயாட்சியோடு வாழ் வதற்கு தேவையான விடயங்களை உள்ளடக்கிய ஒரு அரசியல் சாசனமாக இருக்க வேண்டும் என நாம் பேசியுள்ளோம். இது தொடர்பில் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் பேசுவதற்கு தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், கோ.கருணாகரம், எம்.கே.சிவாஜி லிங்கம், ந.சிறிகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் ப.வேந்தன், பவான் உட்பட முக்கிஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

**மக்களின் துன்ப துயரங்களில் பங்குகொண்டு, அவர்களின் சுமைகளை நாமும் தாங்கி, அவர்களின் கஸ்டங்களைப் போக்குவதற்கு திட்டமிட்டுச் செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல் வேலை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# மீண்டும் வடக்கில் சிறீலங்கா இராணுவ சோதனை சாவடிகள்...?

06.01.2025



நாடாளுமன்ற தேர்தலிற்கு முன்னதாக வடக்கில் அகற்றப்பட்ட சிறீலங்கா இராணுவச் சோதனைச் சாவடிகள் மீண்டும் அமைக் கப்பட்டு வருகின்றது.

இந்நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

போரின் போதும் போர் முடிவுற்ற பின்னரும் முன்னைய ஆட்சிக்காலங்களில் பல்வேறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

சிறீலங்கா இராணுவ மயமாக்கலின் சின்னமான சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந் திருந்தனர்.

இந்நிலையில் நாட்டில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற பின்னர் சோதனைச் சாவடிகள் அனைத்தும் உடனடி யாக அகற்றப்பட்டன.

எனினும், அந்தச் சோதனைச் சாவடிகள் தற்போது மீண்டும் அதே இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

சிறீலங்கா அரசின் புதிய நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் சந்தேகத் தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மக்கள் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்களை அகற்றுவதாக அநுர அரசு உறுதியளித்திருந்த போதிலும் தற்போதும் அவற்றினை நிரந்தரமாக்கும் வகையிலான காணி பிடிப்பு நடவடிக்கைகள் தொடர்வதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். மடத்தடியில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து போராட்டம்

06.01.2025

அரசியல் கைதிகளின் விடுதலை வலியுறுத்தி போராளிகள் நலன்புரிச் சங்கத்தால் முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டம் இன்றைய நாள் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மடத்தடி பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாணத்தில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளி நொச்சி, ஆறு நாட்கள் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது ஏழாவது நாளாக இன்று யாழ் மாவட்டத்தில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இக் கையெழுத்து போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம பலம், அகில இலங்கை இந்து மகா மன்றத்தின் உப தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், யாழ் பல்கலைக் கழகத்தின் கலைத்துறை பீடாதிபதி எஸ் ரகுராம், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன் ஐங்கரநேசன், யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி விஸ்வ லிங்கம் மணிவண்ணன், குரலற்றவர்களின் குரல் அமைப் பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மதத் தலைவர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்









# யாழ்ப்பாணத்தில் சுண்ணக்கல் கடத்தல்: கறுப்பு ஆடுகள் எவை?

05.01.2025

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த 14வருடங்களாக சுண்ணக்கல் கடத்தப்பட்டமை தொடர்பில் அரசியல்வாதிகள் மற்றும் கனிய வளத்திணைக்கள பின்னணிகள் பற்றி பேசப்படுகின்றது.

தென்மராட்சியில் சுண்ணக்கல்லுடன் கைப்பற்றப்பட்ட கனரக வாகனங்கள் தொடர்பில் கனிய வள திணைக்களத்தின் அறிக்கை பெறப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற் குரிய நடவடிக்கையை மேற்கொள்வோம் என காவல்துறை தெரிவித்துவருகின்றது.

சாவகச்சேரி பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங் குமரனால் சோதனையிடப்பட்டு பொலிசாரால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அதற்குரிய ஆவணங்கள், அறிக்கைகள் அனைத்தும் கனிய வளங்கள் திணைக்களத்திடம் பெற்றுக் கொண்டு விரைவில் நீதிமன்றத் தில் முற்படுத்து வதற்குரிய நடவடிக்கையை மேற் கொள்வோம் என காவல்துறை தெரி வித்துள்ளது.



இந்நிலையில் தடைகளை தாண்டி மூடப்பட்ட வாகனங்களில் சுண்ணக் கல் கடத்தப்பட்டமை தொடர்பில் முன் னாள் அமைச்சர் மற்றும் கனிய வளத்திணைக்களத்திடையே சந் தேகங்கள் எழுந்துள்ளன.

சர்ச்சைக்குரிய முருகைக்கற்கள் அகற் றப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பில் கோடிக்கணக்கில் ஊழல்கள் நடந்துள்ளமை அம்பல மாகியுள்ளது.

www.sangathamil.ca

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். பல்கலை முன்றலில் கையெழுத்து போராட்டம்

06.01.2025

நீண்டகாலமாக விசாரணையின் பேரில் சிறீலங்காவின் சிறைகளில் தமிழ் போர் கைதிகளை விடுதலை செய்யக் கோரி வடக்கு - கிழக்குத் தழுவி முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இன்றைய நாள் யாழ் பல்கலைக்கழக முன்றலில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றித் தலைவர் கு.துவாரகன் மற்றும் ஒன்றியச் செயலாளர் சி.சிவகஜன், ஆகியோரால் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட போராட்டத்தில் அனைத்துப்பீடங்களினதும் மாணவர் ஒன்றியத் தலைவர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஒப்பமிட்டு போராட்டத்திற்கு வலுச் சேர்த்தனர்.

தொடர்ந்து, அரசியற் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் "வெஞ்சிறையின் குரல்" எனும் பாடல் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தினரால் குறித்த போராட்டத்தின் நிறைவில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அக்கினிச் சிறகுகள் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட இப்பாடலானது மாணிக்கம் ஜெகன் அவர்களின் பாடல் வரிகளில், சங்கீர்த்தனனின் குரலில், சிவ.பத்மஜனால் இசையமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கையெழுத்துப் போராட்டத்திற்கு தலைமையேற்று கருத்துரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் சி.சிவகஜன், தமிழ் போர்க் கைதிகளின் கைதானது தனியே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பார்க்கப்பட கூடிதொன்றல்ல் மாறாக அனைத்துல மயமாக்கப்பட வேண்டிய தமிழினப் படுகொலையின் நீட்சியேயாகும் எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், தற்போது விடுதலையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் 10 அரசியற்கைதிகளில் எட்டு பேரின் மீதே நீதிமன்ற வழக்குகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், இருவர் எவ்வித வழக்குகளுமின்றி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இனப்படுகொலைப் போரின் நீட்சியான போர் கைதிகளின் கைதுகளை நாம் நோக்க வேண்டும். எமது சுயநிர்ணயத்திற்கான கோரிக்கையை அனைத்துலகப் படுத்துவதற்கும் அதனை வலுச் சேர்ப்பதற்கும் ஜெனீவா சமவாயம் உள்ளிட்ட பன்னாட்டு சமவாயங்களிற்கு உட்பட்டு போர்க் கைதிகள் (War Prisoners) என்ற சொற்பதமே பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் அது சிறீலங்காவின் ஆட்சிப்பரப்பிற்குட்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குட்பட்டு அரசியற் கைதிகளாக (Political Prisoners) சுருக்கப்பட்டுள்ளது.

மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிறீலங்காவின் சிங்கள - பௌத்த ஆட்சிகள் அனைத்தும் தொடர்ந்தும் பன்னாட்டுச் சமூகங்களை சமாளிப்பதற்காக வாக்குறுதிகளை வாரி வாரி இறைத்து வருகின்ற போதிலும் எங்கள் நிலையில் மட்டும் எந்த ஏற்றங்களும் நிகழ்ந்ததாகவில்லை.

Clean Sri Lanka வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் சிறீ



லங்கா அரசு முதலில் தன் மீது பதிந்துள்ள தமிழினப் படுகொலைக் கறையை சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அதில் ஒன்று தான் இனப்படுகொலையின் நீட்சியான போர்க் கைதிகளின் விடுதலை.

காலில் வடு என்றால் காலை வெட்டி எறிவதாக இல்லாமல், அந்த வடுக்களை ஆற்றுவதாக நல்லிணக்கம் அமைய வேண்டும். நல்லிக்க உரையாடல்களை தொடங்கும் அனுர அரசு உண்மை நல்லிணக்கத்தில் நம்பிக்கை இருந்தால் அதனை போர்க்கைதிகளின் விடுதலையில், இனப்படுகொலைக்குப் பொறுப்புக் கூறுவதில், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தை ஏற்று அங்கீகரிப்பதில், ஈழத்தமிழர்களின் சுயநிர்ணயத்தை அங்கீகரிப்பதில் காட்ட வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்தி நிற்கின்றோம் எனக் குறிப்பிட்டிருந்தார்.







# தேராவில் மாவீரர் துயிலுமில்லக் காணியை விடுவிக்க கோரி கையெழுத்துப் போராட்டம்

08.01.2025

விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து மாவீரர் தினத்தில் தமது பிள்ளைகளுக்கான நினைவேந்தலை சுதந்திரமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு ஜனாதிபதி அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி கையெழுத்து போராட்டம் ஒன்று இன்று புதன்கிழமை (08) முன்னெடுக்கப்பட்டது.



தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணிக் குழு உறுப்பினர்கள் மாவீரர்கள் பெற்றோர்கள் உரித்துடையவர்கள் இணைந்து குறித்த கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் காணியின் பெரும் பகுதி இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டிருக்கின்ற நிலைமையில் அந்த அபகரிக்கப்பட்ட துயிலுமில்ல காணிக்கு முன்பாக குறித்த கையெழுத்து போராட்டம் முன்னேடுக்கப்பட்டது.

நாட்டினுடைய புதிய ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க அவர்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதி வழங்கியதை போன்று தங்களுடைய பிள்ளைகளின் கல்லறைகள் இருக்கின்ற குறித்த காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து தருமாறு கோரி குறித்த கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்தவர்கள் குறித்த காணியில் இராணுவத்தினர் இருந்துகொண்டு கல்லு அறுத்து விற்கின்ற செயற்பாடுகளையே செய்கின்றார்கள் எனவும் இது ஒரு



இராணுவத்தின் தேவைக்காக சுவீகரிக்கப்பட்ட காணி அல்ல எனவும் ஆகவே இந்த காணியை விடுவித்து தமது உறவுகளை சுதந்திரமாக நினைவு கூறுவதற்கு ஏற்ற வகையிலே குறித்த காணியை விடுவித்து தருமாறும் குறித்த கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை வடக்கு மாகாண ஆளுநர் ஊடக ஜனாதிபதிக்கு அனுப்ப உள்ளதாகவும் உறவுகள் தெரிவித்தனர்.

# கிளிநொச்சி கனகாம்பிகை குளம் பகுதி குருக்கள் மீது தாக்குதல்

08.01.2025

கிளிநொச்சி கனகாம்பிகை குளம் பகுதியைச் சேர்ந்த சிவ ஸ்ரீ சிவகுமாரன் குருக்கள் (40) 9 மீது அங்கிருந்த ஒருவர் கடுமையாக தாக்கியதில், படுகாயமடைந்த குருக்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கனகாம்பிகை குளம் கிராம அலுவலர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (07) பகல் 11 மணியளவில் மீளாய்வு நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் மீளாய்வு செய்வதற்கு சென்ற போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குருக்கள் அணிந்திருந்த உருத்திராக்க மாலை மற்றும் தங்கச் சங்கிலி என்பனவும் அறுத்து வீசப்பட்டுள்ளதுடன் அவரது புனித அணிகளையும் அடாத்தாக இழுத்துப் பறித்துள்ளனர்.

பூசகரின் கையிலும் தலையிலும் காயம் ஏற்படுத்தினார்.



## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# திருகோணமலை – வெருகல் வட்டவான் சிறீலங்கா தொல்லியல் திணைக்களகத்தின் நில அபகரிப்புக்கு எதிராக மக்கள் போராட்டம்

08.01.2025

திருகோணமலை - வெருகல் பிரதேசத்தில் தொல்லியல் திணைக்களத்தின் நில அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் பொதுமக்கள் இன்று புதன்கிழமை (08) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



வெருகல் - வட்டவான் பகுதியில் திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் அருகே கடந்த திங்கட்கிழமை (06) மாலை தொல்லியல் திணைக்களத்தினால் “1 KM வட்டவான் தொல்லியல் நிலையம்” என குறிப்பிட்டு பெயர் பதாகை ஒன்று நடப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் தொல்லியல் எனும் பெயரில் பௌத்தமயமாக்கல் இடம்பெறமாட்டாது என்பதை உறுதிசெய்யுமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வட்டவானின் தொல்லியல் பதாகை போடப்பட்டிருந்த இடத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கிருந்து பிரதேச செயலகம் வரை நடைபவனியாக சென்றனர். இதன்போது “தொல்லியல் திணைக்களமே புத்தர்சிலை வைக்க மாட்டோம் என்பதை உறுதிசெய்” “அநுரவின் ஆட்சியிலும் அபகரிப்பா?”, “அடுத்தது புத்தர் சிலையா? பௌத்த விகாரையா?”, “தொல்லியல் காணியில் விகாரை கட்டப்படாத இடம் உண்டா?” போன்ற வாசகங்களை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டதோடு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண ஆளுநர் உட்பட திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மகஜரை பெற்றுக் கொண்ட பின்னர் கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் தமது பகுதியில் தொல்பொருளியல் அடையாளப்படுத்தப்பட்ட இடங்கள் இருப்பது தொடர்பில் எவ்வித அறிவித்தல்களும் ஆவணரீதியாக தெரியப்படுத்தப்படவில்லை.

தற்செயலாக முகநூல் வாயிலாகவே பெயர் பதாகை போடப்பட்ட விடயத்தை அறிந்து கொண்டேன். உடனடியாக அப்பகுதிக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தெரிவித்ததுடன் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கும், பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளருக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றேன்.

இதுதொடர்பாக சேருவில பிரதேசத்திற்கு பொறுப்பான தொல்லியல் பொறுப்பதிகாரி இன்று என்னை சந்தித்து இது தொடர்பில் முன்கூட்டியே தெரிவிக்காததையிட்டு வருத்தத்தை தெரிவித்ததுடன் பெயர் பதாகை போடப்பட்ட இடத்தில் இருந்து 1 கிலோ மீற்றர் தொலைவில் தொல்லியலுக்குரிய பகுதி இருப்பதாகவும் அதற்காகத்தான் குறித்த பதாகை போடப்பட்டதாகவும், அங்கிருக்கின்ற வயற்காணிகள் மற்றும் குடியிருப்புகள் எதற்கும் இது பாதிப்பை ஏற்படுத்தாது என உறுதியளித்ததாகவும் தெரிவித்தார்

குறித்த மகஜரில், இலங்கையின் தொல்பொருள் திணைக்களத்தினால் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தொல்பொருள் இடங்கள் என அடையாளப்படுத்தப்பட்ட பல இடங்களில் தற்போது பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு இருப்பதுடன், அதனை அண்டிய பகுதிகளில் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களும் இடம்பெற்றிருக்கின்றது.

உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்தூர் மலை சிவன் ஆலயம், நீராவியடி விநாயகர் ஆலயம் தொடக்கம் திருகோணமலை மாவட்டத்தில் கன்னியா வெந்நீர் ஊற்று, திரியாய் பகுதி, குச்சவெளி கரடிமலைப் பிள்ளையார் கோவில், செம்பிமலை ஆலயம், மூதூர் 64ம் கட்டை பகுதி மற்றும் எமது



வெருகல் கல்லடி மலை நீலியம்மன் ஆலய வளாகம் போன்றவற்றினை குறிப்பிட முடியும் எனவும் இதனால் வெருகல் பிரதேசத்தில் “1 KM வட்டவான் தொல்லியல் நிலையம்” என குறிப்பிட்டு அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு, பௌத்த மயமாக்கலுக்கான நடவடிக்கைகளை இலங்கை அரசின் உரிய கட்டமைப்பினர் மேற்கொள்ளக்கூடிய நிலை உருவாகலாம் என அஞ்சுவதாகவும், எனவே இத்தொல்லியல் இடம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பிரதேச மக்கள் மத்தியில் காண்பிக்கப்படல் வேண்டும் எனவும் தொல்லியல் இடம் என அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் புத்தர் சிலைகளோ, பௌத்த விகாரைகளோ, அமைப்பதற்கான அனுமதி வழங்கப்படக் கூடாது எனவும் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கு அருகாமையிலுள்ள மக்களுக்கான விவசாயக் காணிகள் எந்த சந்தர்பத்திலும் சட்ட ரீதியாகவோ அல்லது சட்டத்திற்கு முரணாகவோ அரச கட்டமைப்புப் பொறிமுறைத் திணைக்களங்களால் கையகப்படுத்தக் கூடாது எனவும் இவ்விடயம் தொடர்பாக எதிர்வரும் வெருகல் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பேசப்பட்டு உறுதிமொழி வழங்கப்பட வேண்டும். எனவும் கோரிக்கைகளை மக்கள் முன்வைத்துள்ளனர்.

குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வெருகல் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.







# யாழில் சுண்ணக்கல் அகழ்வதற்கு எதிராக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் மகஜர் கையளிப்பு

09.01.2025

யாழ்ப்பாணக் குடாநாடு கடலாலும், கடல் நீரேரிகளாலும் சூழப்பட்ட ஒரு தீபகற்பம். பூமி வெப்பமடைவதன் விளைவாக ஏற்பட்டு வரும் கடல்மட்ட உயர்வு குடாநாட்டைப் பெருமளவு பாதிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், கட்டுப்பாடற்ற சட்டவிரோத சுண்ணாம்பு அகழ்வு காலநிலை மாற்றத்தால் ஏற்படவுள்ள பாதகங்களை மேலும் விரைவுபடுத்தும், அதிகப்படுத்தும். இவற்றைக் கருத்திற்கொண்டு விவசாய நடவடிக்கையைப் பாதிக்காத வகையில் சுண்ணாம்புக்கல் அகழ்வை நெறிப்படுத்துவதோடு, இதில் நிலவக்கூடிய சட்டவிரோதச் செயற்பாடுகள் அனைத்தும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார். வட மாகாண ஆளுநரிடம் சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வை முடிவுறுத்தக்கோரி பொ. ஐங்கரநேசன் இன்றைய தினம் வியாழக்கிழமை மனுவொன்றைச் சமர்ப்பித்த பின்னர் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.



மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் சுண்ணாம்புக்கல் வடமேற்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்திலும் கரையோரத்தை அண்டிக் காணப்படும் ஒரு இயற்கை வளமாகும். புவிச்சரித வரலாற்றில் பல மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட மயோசின் காலத்தில் கடலின் அடித்தளப் படிவுகளாகத் தோற்றம்பெற்ற இப்பாறைகள் சீமெந்து தயாரிப்பிலும், இதர கட்டுமானங்களிலும் பிரதான மூலப் பொருளாக விளங்குகின்றது. கூடவே, சூழலியல் ரீதியாகக் கடல் நீர் நிலத்தடி நீருடன் கலப்பதைத் தடைசெய்வதிலும், நிலத்தடி நீரோட்டத்திலும் மிகவும் இன்றியமையாத பங்களிப்பையும் வழங்கி வருகிறது.

சமீப நாட்களாகச் சுண்ணாம்புக்கல் அகழ்வும் அதனை வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதும் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது.

சுண்ணாம்புக்கல் அகழ்வு பயிர்ச் செய்கைக்காக இரண்டடி ஆழம் வரையில் கிளறி எடுத்தல் என்ற நிலையில் இருந்து, இன்று சீமெந்து தயாரிப்புக்காகக் கனரக வாகனங்களைக் கொண்டு அகழ்ந்தெடுத்தல் என்ற நிலைக்கு மாறியுள்ளது.

குறிப்பாக, தென்மராட்சி சரசாலையில் அனுமதியின்றிச் சட்டவிரோதமாக அரசகாணிகளிலும், தனியார் காணிகளிலும் பாரிய அளவில் சுண்ணாம்புக்கல் அகழ்வு இரவு நேரங்களில் இடம்பெற்று வருகிறது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இயக்கப்படாதிருப்பதற்குச் சுண்ணாம்புக் கல்லைப் பெறுவதில் உள்ள இடர்பாடுகளே காரணம். கீரிமலையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஏற்பட்ட பிரமாண்ட குழிகள் இன்னமும் மூடப்படாத நிலையில் இனிமேலும் அகழ்வைத் தொடர்வது சூழல் ரீதியாகப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் கிளிங்கர்களை எடுத்து வந்து, சீமெந்துத் தொழிற்சாலையை மீள இயக்க முடியும் என்று



யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இங்கிருந்து வேறு மாவட்டங்களுக்குச் சுண்ணாம்புக்கல்லை எடுத்துச்செல்வது மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

நொறுக்கப்பட்ட சுண்ணாம்புக்கற்களை அரைத் தயாரிப்பாகவோ அல்லது முடிக்கப்பட்ட தயாரிப்புகளாகவோ கருத முடியாது என்பதால் இதனை எடுத்துச் செல்வதற்குப் போக்குவரத்து உரிமம் அவசியம் எனப் புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் யாழ். மாவட்டச் செயலருக்குத் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து சுண்ணாம்புக்கல் வெளிமாட்டங்களுக்குத் தங்கு தடையில்லாமல் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆளுநர் உடனடியாக சுண்ணக்கல் அகழ்வில் நிலவும் சட்டவிரோத செயற்பாடுகளைக் களைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# தொல்லியல் திணைக்களம் உட்பட அரச திணைக்களங்களால் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டமையும் நாட்டின் நெல் உற்பத்திக் குறைவுக்கு காரணம்!

**திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன்**

09.01.2025

தொல்லியல் திணைக்களம் உட்பட அரச திணைக்களங்களினால் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளமையும் நாட்டின் நெல் உற்பத்திக் குறைவுக்கு காரணமாக அமைகிறது என திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் இன்று (09) பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

நேற்றும், அதற்கு முந்தைய நாளிலும் நாடாளுமன்ற அமர்வில், நாட்டிலே அரிசி விலை உயர்வு குறித்து பேசப்பட்டது. இந்த அரிசி விலை உயர்வுக்கு வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்கள் மட்டுமன்றி, அரசினது அங்கங்களான பல்வேறு திணைக்களங்களும் காரணமாக உள்ளன. இதில் முதன்மை வகிப்பது தொல்பொருள் துறையாகும்.

தொல்பொருள் துறையானது தமிழ் மக்கள் சில நூற்றாண்டு கால மாக விவசாயம் செய்து வருகின்ற, விவசாய நிலங்களை தமது தொல்பொருள் இடங்களாக அறிவித்து கையகப்படுத்தி வருகிறது.

எடுத்துக்காட்டாக, இந்த ஆண்டு தொடங்கி பத்து நாட்கள் கூட முடிவடையாத நிலையில், தொல்லியல் துறையானது கடந்த 6 ஆம் திகதி மாலை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் வட்டவான் கிராமசேவகர் பிரிவில் அடங்கும் 224 விவசாயிகளுக்கு சொந்தமான 380 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிரோடு கூடிய விவசாய நிலத்தை தமது தொல்லியல் பகுதி என அறிவித்துள்ளது. அதேபோன்று குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் குச்சவெளி கிராம சேவையாளர் பிரிவில், 1985 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே விவசாயிகள் பயன்படுத்தி வந்த நெற்களஞ்சியம் மற்றும் சந்தைப் பகுதியை தொல்லியல்துறை தொல்பொருள் பகுதி என அறிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் தொல்லியல் துறையானது, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள திரியாய கிராம சேவையாளர் பிரிவில் உள்ளடங்கும் பிரித்தானியர்களால் வழங்கப்பட்ட உறுதிகளைக் கொண்ட 150 ஆண்டுகாலமாக தமிழ் மக்கள் விவசாயம் செய்து வருகின்ற, அண்ணளவாக ஆயிரம் ஏக்கர் நிலத்தினை விவசாயம் செய்யவிடாமல் எல்லைக் கற்களை போட்டு பிடித்து வைத்துள்ளது. இது மட்டுமல்லாமல் இதனை விடவும், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் தென்னைமரவாடி, புல்மோட்டை, திரியாய, குச்சவெளி, ஜாயா நகர், கும்புறுப்பிட்டி, நிலாவெளி, பெரியகுளம் முதலிய கிராம சேவை பிரிவுகளை உள்ளடக்கிய 1994 ஏக்கர் நிலத்தை எல்லைக்கற்களை இட்டுப் பிடித்து வைத்துள்ளது. இந்த செயலானது நெல் உற்பத்தியில் பாரிய குறைப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதனையும், இது நாட்டுக்கு பேரிழப்பு என்பதனையும், இந்த அவையின் மேலான கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

அது மட்டுமன்றி தொல்லியல் துறையானது, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும், இராஜவந்தான் மலை முருகன் கோயில், கூனித்தீவு மத்தளைமலை முருகன் கோயில், கிளிவெட்டி முத்துமாரியம்மன் கோயில் அதேபோன்று, சேருவில பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் திருமங்கலாய் சிவன் கோயில், ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் இலங்கைத்துறை முகத்துவாரம் பெரியசாமி கோயில் மற்றும் கல்லடி மலைநீலியம்மன் கோயில் அதேபோன்று, திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் உள்ளடங்கும் கன்னியா வெந்நீர் ஊற்று மற்றும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும், தென்னமரவாடி கந்தசாமிமலை முருகன் கோயில், குச்சவெளி செம்பிமலை சிவன் கோயில் மற்றும் வளத்தான்மலை நாகதம்பிரான் கோயில் முதலிய சைவ கோயில்களையும், அவற்றை சூழவுள்ள விவசாய நிலங்களையும் கையகப்படுத்துகின்ற முன்முயற்சிகளில் தொல்பொருள் துறை ஈடுபட்டு வருவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இதற்கு மேல், இலங்கையில் புகழ்பெற்ற கோணேஸ்வரர் கோயில் வளாகத்தில் உள்ள 453 ஏக்கர் நிலத்தையும் தொல்பொருள் துறை கையகப்படுத்தி வைத்துள்ளது. இந்தப் பகுதியில் ஒரு வாழை மரத்தை நடக்கூட தொல்லியல்துறை தடை விதிக்கின்ற அதேவேளை, இங்கு 58 சட்டவிரோத கடைகள் அமைக்கப்பட்டிருப்பது பற்றி தொல்லியல் திணைக்களம் எந்த கவலையும் கொள்ளவில்லை என்பதோடு, பல வேளைகளில் அவர்களுக்கு சாதகமாக நடந்துகொள்வதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது ஒரு இனவாத போக்கினை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

தொல்பொருள்துறை மட்டுமில்லாமல், திருகோணமலை மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், போரின்போது மக்கள் உயிர் பாதுகாப்பு கருதி இடம்பெயர்ந்த வேளையில், அரசின் மற்றுமொரு அங்கமான வனத்துறை மக்கள் விவசாயம் செய்த 41,361 ஏக்கர் நிலத்தினை தமது மனம் போன போக்கில் எல்லைக் கற்களை போட்டுப் பிடித்து வைத்துக்கொண்டு, காணியினுள் செல்லவோ அல்லது விவசாயம் செய்யவோ விடாமல் தடுத்து வருகிறது. அது மட்டுமல்லாமல் வனத்துறை எல்லைக் கற்களை இடாத பகுதிகளில் கூட மக்கள் தமது காணிகளில் விவசாயத்தில் ஈடுபட வனத்துறையிடம் ஒப்புதலை பெறமுடியாத நிலை காணப்படுகிறது.

இதேபோன்று வனவிலங்கு துறையானது கால்நடை வளர்ப்பாளர்கள் பல தலைமுறைகளாக மேய்ச்சல் தரையாக பயன்படுத்தி வந்த நிலங்களை, அவர்கள் போரின்போது இடம்பெயர்ந்த வேளையில், எல்லைக் கற்களை போட்டுப் பிடித்து வைத்துக்கொண்டு, இந்நிலங்களில் காட்டு விலங்குகள் மட்டுமே மேயலாம். வீட்டு விலங்குகள் மேய முடியாது என்று தடுத்து வருகிறது. இதனால் ஆயிரக்கணக்கான கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் போதிய உணவின்றி இன்னலுருகின்றன. எடுத்துக்காட்டாக, ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில்




உள்ள 600 கால்நடை வளர்ப்பாளர்கள் தமது 28,000 கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரையின்றி இன்னல் படுகின்றனர். இவர்கள் கால்நடை வளர்ப்பையே தமது வாழ்வாதாரமாக கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இத்தகைய சிக்கல் தம்பலகாமம், குச்சவெளி, கிண்ணியா, மூதூர் மொறவெவ முதலிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் காணப்படுகிறது.

அதேபோன்று, அரசின் இன்னும் ஓர் அங்கமான துறைமுக அதிகார சபையானது, திருகோணமலையின் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் 11 கிராம சேவை பிரிவுகளை உள்ளடக்கிய 5,572 ஏக்கர் நிலத்தினை கையப்படுத்தி வைத்திருக்கிறது. இப்பகுதிக்குள் வாழும் 763 குடும்பங்கள் தமது குடியிருப்பு காணிகளில் எதுவித செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாது இருப்பது மட்டுமின்றி, விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத சூழலும் காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசு உணவு உற்பத்தியை பெருக்குமாறு கூறுகின்ற அதேவேளை அரசின் அங்கங்களான தொல்பொருள் துறை, வனத்துறை, வனவிலங்குத்துறை, துறைமுக அதிகார சபை முதலியன விவசாய நடவடிக்கைகளை தடுப்பதன் மூலம் உணவு உற்பத்தியை குறைத்தும் வருகின்றமை நகைப்புக்குரிய விடயமாக உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் அரச திணைக்களங்கள் மட்டுமன்றி, முற்றும் துறந்த பிக்குகளும் மண்ணாசை கொண்டு குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் 2,172 ஏக்கர் நிலத்தினை பிடித்து வைத்துக்கொண்டு, மக்களை விவசாயம் செய்யவிடாமல் தடுத்தும் வருகிறார்கள்.

இந்த விடயத்தில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி தொல்பொருள்துறை, வனத்துறை வனவிலங்குத்துறை, துறைமுக அதிகார சபை, புத்தபிக்குகள் ஆகியோர் பிடித்து வைத்துள்ள மக்களுடைய காணிகளை விடுவித்து, மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவும், அதன் வழி நெல் உள்ளிட்ட உணவு உற்பத்தியினை பெருக்கவும் ஆவண செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# இந்திய இழுவைப் படகுகளால் யாழ். சுழிபுரம் பகுதியில் மீனவர்களின் வலைகள் நாசம்

09.01.2025

இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பினுள் நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமையால் யாழ்ப்பாணம் - சுழிபுரம், காட்டுப்புலம் பகுதி மீனவர் ஒருவரின் 7 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

நேற்றிரவு இந்த மீனவர் திருவடி நிலை கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப் படகுகள் அவரது வலைகளை அறுத்துள்ளன.

இதனால் அவரிடமிருந்த 32 வலைகளில் 26 வலைகள் அறுக்கப்பட்ட நிலையில் 6 வலைகளே மீதமாகின. எஞ்சிய வலைகளும் சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

இது குறித்து பாதிக்கப்பட்ட மீனவர் கருத்து தெரிவிக்கையில்,

நேற்றிரவு 10 மணியளவில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட ரோலர்கள் எமது வலையை மட்டுமல்லாமல் வேறு சங்கங் களின் வலைகளையும் அறுத்துள்ளன.

தற்போது மீன்பிடி பருவ காலம். இந்திய இழுவைப் படகுகளின் இதுபோன்ற செயற்பாடுகளால் நாங்கள் உழைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஏழு இலட்சம் ரூபா வங்கியில் கடன் பெற்றே இந்த வலை முதல்களை உருவாக்கி கடலில் தொழில் செய்தேன். எனது வலைகளை இந்திய இழுவைப் படகு அறுத்துச் சென்றதால் வாழ்வாதாரத்துக்கு என்ன செய்வேன்? வங்கிக் கடனை செலுத்த என்ன செய்வேன் என்று தெரியாமல் தவிக்கிறேன்.



புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி பல நல்ல வேலைத் திட்டங்களை செய்கிறார். அதுபோல இந்திய மீனவர்கள் பிரச்சினையையும் தீர்த்து வையுங்கள். புதிதாக வந்த அமைச்சர் இதற்கு ஒரு தீர்க்கமான முடிவெடுத்து இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

அரசாங்கம் எனக்கு இழப்பீட்டை வழங்கி, நான் மீண்டும் தொழில் செய்ய வழிவகுக்க வேண்டும் என்றார்.

www.sangathamil.ca

# ரோகிங்கியா அகதிகளை நாடு கடத்த வேண்டாம்: சர்வதேச மனித உரிமைச் சட்டங்களைப் பாதுகாக்க கோரி முல்லைத்தீவில் கவனயீர்ப்பு!

09.01.2025

முல்லைத்தீவு கடலில் தஞ்சம் அடைந்த ரோகிங்கியா அகதிகளை நாடுகடத்த வேண்டாம் என்பதை வலியுறுத்தியும் இலங்கை சர்வதேச மனித உரிமை சட்டங்களைப் பாதுகாக்க கோரியும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று வியாழக்கிழமை (9) முன்னெடுக்கப்பட்டது.

கையில் பதாதைகளை தாங்கியவாறு அமைதியான முறையில் குறித்த கவனயீர்பு போராட்டம் முன்னேற்றப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்கள்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினரால் பெண்கள் குழக்களின் பிரதிநிதிகள், மனித உரிமை பாதுகாவலர்கள் கடற்தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் இணைந்து ரோகிங்கியா அகதிகளை நாடுகடத்த வேண்டாம் என இலங்கை அரசிடம் கோரிகை விடுத்துள்ளனர்

இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கத்துவ நாடாகும் எனவே ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகளுக்கு மதிப்பளிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம் அவ்வாறே சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மனித உரிமைச்சட்டங்களை சர்வதேச வழக்காற்று சட்டங்கள் ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் கடப்பாட்டையும் கொண்டுள்ளோம்.

நாடு கடத்தப்படாமை என்பது இந்த அனைத்து சட்டங்களினதும் மையக்கொள்கையாகும் எனவே மனிதாபிமான விழுமியங்களை நிலைநிறுத்துமாறும், இந்த அகதிகளின் சொந்த







இடத்திற்கு அவர்கள் திருப்பி அனுப்பாதிருக்குமாறும் இலங்கை அரசிற்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்த அகதிகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் இரண்டு வாரங்களுக்கு மேலாக அந்த மாவட்டத்தின் சிவில் நிர்வாக கண்காணிப்பு இன்றி தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் இராணுவ மயமாக்கல் சூழலுக்குள் அகதிகளைத் தங்கவைப்பது சர்வதேச மனிதாபிமான நியமங்களுக்கும் அடிப்படை மனிதாபிமான விழுமியங்களுக்கும் மாறானதாகும்.

எனவே இந்த அகதிகளை மீரியானவில் உள்ள அகதிகள் மையத்திற்கு அல்லது வேறொரு பொருத்தமான இடத்திற்கு மாற்றுவதுடன் அப்பிரதேச சிவில் நிர்வாக கண்காணிப்புக்குள் அவர்களைக் கொண்டு வரவேண்டும்.

இலங்கை என்பது ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடு எனும் வகையில் இலங்கை சர்வதேச அகதிகளின் புகலிடமாக மாறுவதை நாம் விரும்பவில்லை தற்போதுள்ள அகதிகளை சர்வதேச அகதிகள் சட்டத்திற்கு அமைய நடத்தவேண்டும் என்பதையே அரசாங்கத்திடம் வேண்டுகின்றோம்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பினை பெறுமாறும் இந்த அகதிகளுக்கு அகதி அந்தஸ்தது வழங்கும் தகமையுடைய நாடுகளிடம் அந்த நாடுகளில் அகதி அந்தஸ்து வழங்குவது குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ளுமாறும் கோருகின்றோம் என்றும் அவர்களின் அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையினை பிரதமருக்கும், வெளிவிவகார அமைச்சருக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதிக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

# தீர்வுத் திட்டத்தில் அரசாங்கம் சிறந்த தீர்மானத்தை எடுத்தால் சிங்கள மக்களும் ஆதரவளிப்பார்கள்

## இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

10.01.2025

அனைத்து இன மக்களும் இந்த அரசாங்கத்தில் பங்குதாரர்களாக உள்ளனர். ஆகவே, அரசியல் தீர்வு விவகாரம் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். தீர்வுத் திட்டத்தில் அரசாங்கம் சிறந்த தீர்மானத்தை எடுத்தால் சிங்கள மக்களும் ஆதரவளிப்பார்கள். ஏனெனில், சிங்கள மக்களும் தற்போது நேர்மனப்பான்மையில் உள்ளார்கள் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (9) நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கான நலன்புரி திட்டங்கள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். தகுதிவாய்ந்த தரப்பினருக்கு நலன்புரி கொடுப்பனவுகள் கிடைக்கப்பதில்லை. கிளிநொச்சி மாவட்டம் உட்பட பெரும்பாலான மாவட்டங்களில் இவ்வாறான நிலையே காணப்படுகிறது. இதனால் நலன்புரி கொடுப்பனவை பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

நலன்புரி கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்றவர்களாக உள்ள செல்வந்தர்களுக்கு கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறுகின்றன. ஆகவே நலன்புரி திட்டம் மறுபரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ளவர்களுக்கு நிவாரண கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

மீன் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் கடந்த காலங்களில் முறையாக கிடைக்கப் பெறவில்லை. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 8 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு 1 முதல் 3 இலட்சம் ரூபா வரையில் மீள்குடியேற்ற தொகை ஆரம்பத்தில் வழங்கப்பட்டது. இருப்பினும் ஒருசிலருக்கு இந்த நிதி இன்று வரை கிடைக்கப் பெறவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் 38 ஆயிரம் தமிழர்கள் மீன் குடியமர்த்தப்பட்ட நிலையில் அவர்களில் 11,790 பேருக்கு மீள்குடியேற்ற தொகை வழங்கப்பட்டது. மிகுதி 26,209 பேருக்கு இன்றும் அந்த தொகை வழங்கப்படவில்லை. மட்டக்களப்பு - வாகரை, வவுனியா - வடக்கு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மடு, யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மீள்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு இன்றுவரை இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை.

மீன் குடியமர்த்தப்பட்ட மக்கள் இந்த தொகையை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்ப படிவங்களை நிரப்பியே அதிகளவில் நிதியை செலவு செய்துள்ளார்கள். ஆகவே இந்த அரசாங்கம் இவ்விடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டும். கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக இந்த நிதியை பெற்றுக்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளமை கவனத்திற்குரியது. இந்த அரசாங்கத்துக்கு பெரும்பான்மை பலம் உள்ளது. அனைத்து இன மக்களும் இந்த அரசாங்கத்தில் பங்குதாரர்களாக உள்ளனர். ஆகவே அரசியல் தீர்வு விவகாரம் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். தீர்வு திட்டத்தில் அரசாங்கம் சிறந்த தீர்மானத்தை எடுத்தால் சிங்கள மக்களும் ஆதரவளிப்பார்கள் ஏனெனில் சிங்கள மக்களும் தற்போது நேர்மனப்பான்மையில் உள்ளார்கள்.

அரசாங்கம் சிறந்த முறையில் செயற்பட்டாலும் ஒருசில துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடளிக்க சென்ற பெண் மிக கொடூரமான முறையில் பொலிசாரினால் தாக்கப்பட்டுள்ளார். இந்த நாட்டில் என்ன நடக்கிறது. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.



யாழ்ப்பாணத்தில் தமக்கு காணிகள் வேண்டும் என்று பாணந்துறை, கொழும்பு பகுதிகளில் வாழும் சிங்களவர்கள் குறிப்பிட்டுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளன. லண்டனில் உள்ள ஒருவர் தன்னை தேசிய மக்கள் சக்தியின் ஊடக இணைப்பாளர் என்று குறிப்பிட்டுக் கொண்டு புத்தளம், நீர்கொழும்பு, சிலாபம், கொழும்பு, வத்தளை, வெள்ளவத்தை மற்றும் கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளில் வாழும் தமிழர்கள் அப்பகுதிகளுக்கு குடியமர்த்தப்பட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி முதலில் இந்த நபருக்கு வரலாற்றை கற்றுக்கொடுக்க வேண்டும். புத்தளம், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் தமிழர்கள் பூர்வீக குடிகளாகவே வாழ்ந்தனர். அதேபோல் கொழும்பு கறுவாத்தோட்டம், கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளில் தமிழர்கள் பூர்வீக குடிகளாகவே வாழ்ந்தனர். பிற்பட்ட காலத்தில் நீர்கொழும்பு பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் சிங்களவர்களாக மாற்றம் பெற்றார்கள். இதுதான் உண்மை.

1970, 1983 மற்றும் 1985 ஆகிய காலப்பகுதிகளில் அநுராதபுரம் பகுதியில் வாழ்ந்த 22 ஆயிரம் தமிழர்கள் ஒரே இரவில் சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். அதேபோல் 1983 ஆம் ஆண்டு மலையகத்தில் இருந்து 2000 எம் சகோதரர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் இன்று சொந்த இடங்கள் ஏதும் இல்லாமல் பல்வேறு இடங்களில் வாழ்கிறார்கள். அவர்களையும் மீள்குடியேற்றம் செய்யுங்கள் என்றார்.

**புவியில் ரீதியாக தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப்போயுள்ளது. எனவே கடற்பரப்பிலும் நாம் பலம் பொருந்தியவர்களாகி, எனமது கடலில் எதிரி வைத்திருக்கும் கடலாதிக்கத்தைத் தகர்த்து. எமது கடலில் நாம் பலம் பெறும்போதுதான் விடுவிக்கப்படும் நிலப்பகுதியை நிரந்தரமாக நிலைநிறுத்திக் கொள்ளுவதுடன், தமிழீழத்தின் நிலப்பகுதிகளில் இருக்கும் எதிரிப் படையையும் விரட்டியடிக்க முடியும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# ஊடகவியலாளர் தாக்கப்பட்டு கடந்த முற்பட்ட சம்பவம் விரைவான பாரபட்சமற்ற விசாரணையை மேற்கொள்ளுங்கள்!

## CPJ திட்ட இயக்குநர் Carlos Martinez de la Serna

10.01.2025

இலங்கை தமிழ் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச்செல்வன் தாக்கப்பட்டு கடத்த முற்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை அதிகாரிகள் பாரபட்சமற்ற விரைவான விசாரணையை நடாத்த வேண்டும் என அமெரிக்காவின் நியூயோர்க்கை தளமாக கொண்டு இயங்குகின்ற பத்திரிகையாளர்களை பாதுகாக்கின்ற குழுவின் (CPJ) திட்ட இயக்குநர் Carlos Martinez de la Serna வியாழக்கிழமை அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வன் டிசம்பர் 26 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் வைத்து தாக்கப்பட்டு கடத்த முயற்சிக்கப் பட்டுள்ளார். இருப்பினும் இவர் அதிலிருந்து தப்பியிருக்கின்றார். பின்னர் அவர் நெஞ்சு, கழுத்து, முதுகில் தாக்குதல் காரண மாக ஏற்பட்ட வலி காரணமாக சிகிச்சை பெற்றுள்ளார்.

அவர் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தின் படி டிசம்பர் 27 ஆம் திகதி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு 30 ஆம் திகதி நீதிமன்றில் சந்தேக நபர்கள் தமிழ்செல்வனால் அடையாளம் காட்டப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றம் அவர்களை பிணையில் விடுவித்துள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சரத் சமரவிக்ரசிங்கவை தொடர்பு கொண்டு வினவிய போது அவர் உடனடியாக பதில் கூற முடியாது என தெரிவித்துவிட்டார்.

உள்ளூர் நாளிதழ்களில் போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத மணல் அகழ்வுகள் தொடர்பில் தொடர்ச்சியாக எழுதி வருவதன் காரணமாக தான் தாக்கப்பட்டிருக்கலாம் என எம் மிடம் தமிழ்செல்வன் சந்தேகம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ்பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் களுக்கு தண்டனைகள் கிடைக்காமை தொடர்பில் CPJ ஆவணப்படுத்தியிருக்கிறது. 1983 தொடக்கம் 2009 வரை யான காலப்பகுதிகளில் உள்நாட்டு போர் காரணமாக கொல்லப் பட்ட அதிகளவான பத்திரிகையாளர் தமிழ் பத்திரிகையாளர்கள்.



எனவே புதிதாக பொறுப்பேற்ற அரசு தமிழ் பத்திரிகையாளர்கள் மீதான் தாக்குதல், துன்புறுத்தல்கள் மற்றும் தணடனை விலக் களிப்பு என்பவற்றை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் எனவும் பத்திரிகையாளர்களை பாதுகாக்கின்ற குழுவின் (CPJ) திட்ட இயக்குநர் Carlos Martinez de la Serna கோரியுள்ளார்.

# ஜேவிபி வரவு செலவு திட்டத்திற்கான வரைவில் பாதுகாப்பு அமைச்சுக்கு ரூபா 442 பில்லியன்

10.01.2025

ஜேவிபி வரவு செலவு திட்டத்திற்கான Appropriation bill 2025 ஐ பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கின்றது. இதில் பாதுகாப்பு அமைச்சுக்கு ரூபா 442 பில்லியன் ஒதுக்கீடப் பட்டுள்ளது. அதே போல உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சுக்கு ரூபா 175 பில்லியன் ஒதுக்கீடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சுக்கு ரூபா 271 பில்லியன் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. சுகாதார மற்றும் ஊடக அமைச்சுக்கும் இணைத்து ரூபா 507 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
விவசாய அமைச்சுக்கு ரூபா 207 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடற்தொழில் அமைச்சுக்கு ரூபா 11.4 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விஞ்சான தொழில்நுட்ப அமைச்சுக்கு ரூபா 5 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புத்தசான மற்றும் கலாச்சார அமைச்சுக்கு ரூபா 13.7 பில்லியன் ஒதுக்கீடப்பட்டுள்ளது. இதில் புத்தசாசன திணைக்களத்திற்கு ரூபா 1970 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

தொல்லியல் திணைக்களத்திற்கு ரூபா 2520 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.



# வடக்கு கிழக்கில் மீண்டும் பௌத்தமயமாக்கல் மற்றும் சிங்களமயப்படுத்தல் திட்டங்களை ஜே.வி.பி துரிதப்படுத்தத் தொடங்கியிருக்கின்றது

10.01.2025

ஜேவிபியின் புத்தசாசன அமைச்சர் திரு ஹினிதும சுனில் செனவி அவர்கள் சட்டவிரோத குருந்தூர்மலை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி நாயக்க தேரரை இன்று நேரில் சந்தித்து பேசி இருக்கின்றார். இச் சந்திப்பின் போது திரு ஹினிதும சுனில் செனவி அவர்கள் வடக்கின் புராதன பௌத்த தளங்களை (?) பாதுகாக்க விசேட திட்டங்கள் ஊடக நடவடிக்கை எடுப்பதாக சொல்லி இருப்பதோடு விரைவில் குருந்தூர்மலை உட்பட்ட தளங்களுக்கு நேரில் வர இருப்பதாக அறிவித்திருக்கின்றார்.

இச் சந்திப்பில் கலந்து கொண்ட கல்கமுவ சாந்தபோதி நாயக்க தேரரின் கட்டுப்பாட்டின் கீழ் தான் சட்டவிரோத வவுனியா சபுமல்கஸ்கட விகாரையும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மேற்படி தேரரின் அத்துமீறல்கள் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்கள் தோறும் முன்வைக்கப்பட்டுள்ள போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. மறுபுறம் கிழக்கு மாகாணத்தில் பௌத்த மறுமலர்ச்சியை உருவாக் குவோம் என்கின்ற தலைப்பில் சர்ச்சைக்குரிய பாணமுரே திலகவம்ச தேரர் தலைமையில் 11 ஆம் திகதி முதல் திருகோணமலையில் நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பௌத்த ஆக்கிரமிப்புகளுக்கு தலைமை தாங்கும் இந்த தேரருக்கு அமைச்சரவை பாதுகாப்பும் வழங்கப் பட்டுள்ளது. இது போதாதென்று திருகோணமலை வெருகல் வட்டவன் கிராத்தில் இன்று புதிதாக தொல்லியல் நிலையம் ஒன்றை அடையாள படுத்திருக்கின்றார்கள்.

இது தவிர யாழ்ப்பாணத்தில் சிங்கள குடியேற்றங்கள் குறித்து கவனம் செலுத்த தொடங்கி இருக்கின்றார்கள். காங்கேசன் துறை, பலாலி, நயினாதீவு, நாவற்குழி, நெடுந்தீவு, தையிட்டி, வல்லிபுரம், ஊர்காவத்துறை, வலிகாமம், மட்டுவில், நிலா வரை, சுன்னாகம், உடுவில், புலோலி கந்தரோடை உட்பட்ட யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் பௌத்த மத அடையா ளங்கள் காணப்படுவதாக தொல்லியல் திணைக்களம் உரிமை கோரி வருகின்றது.

அதே போல் இப் பகுதியில் சிங்கள மக்கள் பெரும் எண்ணிக்கை யில் வாழ்ந்து வந்தாக தொல்லியல் திணைக்கள ஆலோசகர் எல்லாவல மேதானந்த தேரர் உரிமை கோருகின்றார். குறிப் பாக தொல்லியல் திணைக்களத்திற்கு மேலதிகமாக யாழ்ப் பாணத்தில் 17 இடங்களில் சிங்களவர்கள் வாழ்ந்ததாக எல்லா வல்ல மேதானந்த தேரர் அடையாளப்படுத்துகின்றனர்.

Medhananda discovered evidence of a vibrant Buddhist civilization in the north and east of Sri Lanka. (Reference: The Sinhala Buddhist Heritage in the East and North of Sri Lanka)

இதன் தொடர்ச்சியாக நாவற்குழி சிங்கள குடியேற்றம் தவிர்ந்த வேறு குடியேற்றங்கள் எதுவும் நடைபெறாத நிலையில் ஜேவிபி யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி பரந்தளவிலான குடியேற்ற திட்டங்களுக்கு தயாராகின்றது.

இயற்கைக்கு இசைவான மீள் குடியேற்றங்கள், குடி பரம்பல்கள் குறித்து யாரும் கேள்விகளை முன்வைக்க முடியாது. ஆனால் இயற்கைக்கு மாறாக அரச நிதி உதவிகளுடன் இனப்பரம்பலை



மாற்றியமைக்கும் நோக்குடன் சிங்கள குடும்பங்களை குடி யேற்ற ஜேவிபி திட்டமிடுவது ஆபத்தானது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத் தினருக்கு காணிகளை பெற்று கொடுத்து அவர்களின் குடும் பங்களை குடியேற்ற திட்டமிடப்படுவதாக சொல்லுகின்றார்கள். ஏற்கனவே சிங்களமயமாகி வரும் உயர் கல்வி நிறுவனமான யாழ்ப்பாண பல்கலைகழகம் எங்கள் அறிஞர் பெருமக்களின் உதவியுடன் அடுத்துவரும் ஒரு சில வருடங்களில் முழுமை யாக சிங்களமயமாகி விடும் என்கின்ற நிலையில் ஜேவிபி அடுத்த கட்டம் நோக்கி நகருகின்றது.

# தமிழாராட்சி மாநாட்டு படுகொலையின் 51 ஆம் ஆண்டு நினைவேந்தல்

10.01.2025

நான்காவது அனைத்துலக தமிழாராட்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 51ஆவது நினைவு தினம் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.





யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நான்காவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவு தூபிக்கு முன்பாக காலை 10 மணிக்கு நினைவு வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10ஆம் திகதி, சிறீலங்கா பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில், பதினொரு பேர் படுகொலை செய்யப்பட்டனர்.







# மலையக தியாகிகள் தினம் மற்றும் தமிழாராச்சி மாநாட்டு படுகொலையின் 51ஆவது ஆண்டு நினைவேந்தல்கள்

11.01.2025








தேயிலைச் செடிகளின் நடுவே உழைப்புச் சுரண்டல்களுக்கும் அடிப்படை உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கி அடிமைப்படுத்தப் பட்ட மலையக தமிழ் மக்களினுடைய சமூக அரசியல் விடு தலைக்கான பயணத்தில் தம்முயிர் தந்த எம்மவர்களை நினை வேந்தும் மலையக தியாகிகள் தினம் - சனவரி 10.

1974 ஆம் ஆண்டு நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சிறீலங்கா அரச காவல்துறையால் அரங்கேற்றப்பட்ட படுகொலைகளால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட கொடூரம் நிகழ்ந்து 2025 ஆம் ஆண்டுடன் ஆண்டுகள் 51. இன்றுவரையில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான நீதி என்பது மறுக்கப்பட்டதொன்றாகவே நீள்கின்றது.

மலையக தியாகிகள் தினம் மற்றும் 4வது உலகத்தமிழாராச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் 10.01.2024 (வெள்ளிக்கிழமை) பல்கலைக்கழக பொதுத் தூபியில் மாணவர்களினால் உணர்வெழுச்சியுடன் முன் னெடுக்கப்பட்டது.













# கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தை யார் கட்டுப்படுத்துவது: முட்டி மோதல்?

11.01.2025

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்பதற்காக மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பக தரப்புகள் முனைந்தபோது இந்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் நினைவேந்தலுக்காக 2016ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் பிரதான சுடரினை ஏற்றி, மாவீரர் குடும்பங்களும் சுடரேற்றியதையடுத்து வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிலையில், அங்கு தொடர்ந்து 9 ஆண்டுகளாக நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு நினைவு வணக்கம் செலுத்தும் இந்த மாவீரர் துயிலும் இல்லம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கடந்த வருடம் பிரதான சுடர் ஏற்றுவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக துயிலுமில்ல நிர்வகிப்பு தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பு மாவீரர் துயிலும் இல்லங்கள் பொதுமயப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இன்றைய நாள் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் நிர்வாகத் தெரிவை நடத்த அழைப்பு விடுத்திருந்தனர்.



இந்நிலையில், அப்பகுதிக்கு சென்றவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், தற்போது உள்ள நிர்வாகத் தரப்பே தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என வலியுறுத்தினர். இதனையடுத்து, அப்பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அமைப்பினது அழைப்பின் பேரில் சென்ற மக்களுக்கு அவ்வேளை எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் அமைதியின்மை தொடர்ந்த நிலையில் கிளிநொச்சி சிறீலங்கா பொலிசார் அங்கு சென்றனர். அப்பகுதியில் கூட்டமாக நிற்க வேண்டாம் எனவும், பிரச் சினைகள் இருப்பின் பொலிஸில் முறைப்பாடு செய்யுங்கள் எனவும் தெரிவித்து அங்கிருந்த மக்களை வெளியேற்றினர்.

இதேவேளை, குறித்த மாவீரர் துயிலுமில்ல வளாகத்துக்குள் அத்துமீறி செல்ல வேண்டாம் என்ற அறிவித்தல் போஸ்டரை கரைச்சி பிரதேச சபையினர் ஒட்டியிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சுப்பையா கூறுகையில், மக்களின் நினைவேந்தலை தடுக்கும் வகையிலும் நிகழ்ச்சி நிரல் ஒன்றின் அடிப்படையிலும் மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பு செயற்படுவதாக தெரிவித்தார்.

அதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதுவரை நடந்த நடைமுறைகளே பின்பற்றப்பட்டு நினைவேந்தல்கள் நடைபெறும். மக்கள் தெளிவாக செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பின் தலைவர் பார்த்தீபன் தெரிவிக்கையில், மக்கள் மயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை அமைக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

.....???

# திருகோணமலை வீரநகர் பகுதியில் கடலரிப்பு: அச்சத்தின் விளிம்பில் மக்கள்!

12.01.2025

ிருகோணமலை - வீரநகர் கரையோரப் பகுதியில் உள்ள மக்களின் குடியிருப்புப் பகுதி திடீரென கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.





கடந்த சில நாட்களாக கடலரிப்பின் காரணமாக அப்பகுதி கடலுக்குள் உள்வாங்கப்பட்டு வருவதாகவும் இவ்வாறான காட்சியை தம் வாழ்வில் முதல் முறை காண்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கடலரிப்பினால் கடற்கரையை அண்டி காணப்படும் சில வீடுகளின் மதில்கள், அத்திவாரம், சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

இக்கடற்பகுதியில் பாரிய இரும்புப் பின்னல் தொகுதியொன்று கரையின் நீளமான பகுதிக்கு வெளிவருவதாகவும் இது என்ன என்பது தொடர்பில் அறிய முடியாதுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடலரிப்பில் இருந்து தம்மை பாதுகாப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





**தன்னிறைவான பொருளாதாரம் எமது தேசிய வாழ்வுக்கு மூலாதாரமானது; தனியரசு நிர்வாகத்திற்கு அத்திவாரமானது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.ca

# மூதூரில் மக்களின் காணிகள் சிறீலங்கா கடற்படை முகாமிற்காக சுவீகரிக்க நடவடிக்கை

12.01.2025

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கடற்கரைச்சேனை கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள மயானத்திற்குரிய காணி உட்பட 60 ஏக்கருக்கும் மேற்பட்ட மக்களுடைய காணிகளை அபகரித்து அப்பகுதியில் கடற்படை முகாமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடற்கரைச்சேனை உள்ளிட்ட பல கிராம மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். பின்னர் மீண்டும் மீள குடியமர்த்தப்பட்டபோது குறித்த காணிகள் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததாகவும் அதன்பின்னர் இது தொடர்பாக மூதூர் பிரதேச செலகத்தில் கூட்டம் நடைபெற்று வந்ததாகவும் அதில் குறித்த காணிகளை குறித்த கடற்படை முகாமிற்கு வழங்குமாறும் அதற்காக இழப்பீடு தருவதாகவும் தெரிவித்ததோடு இழப்பீடு வேண்டாம் காணிதான் வேண்டும் என கூறியபோது பாட்டாளிபுரம் பால் பண்ணைக்கு அண்மித்த பகுதியில் காணி தருவதாக கூறியதாகவும் பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் கடற்கரைச்சேனை மண் மிகவும் வளமான மண் என்பதால் தமது பகுதியில் எங்கேயாவது மாற்றுக் காணி வழங்குமாறு காணி இழந்த மக்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் அப்பகுதியில் அரச காணி இல்லையென அரச தரப்பில் இருந்து பதில் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் 11 பேருக்கு சொந்தமான தனியார் காணிகளை பரகும்பா கடற்படை முகாமிற்கு சுவீகரிக்கப்படவுள்ளதாக மூதூர் பிரதேச செயலாளரினால் 23.10.2024 அன்று எழுத்து மூலமாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டோர் தமது எதிர்ப்பினை எழுத்து மூலமாக அறிவித்துள்ளதாகவும், எதிர்வரும் மூதூர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தமது பிரச்சினை ஆராயப்பட்டு சரியான தீர்வு பெற்றுத்தர வேண்டும் கோரிக்கை




விடுக்கின்றனர்.

# நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி திருமலையில் கையெழுத்துப் போராட்டம்

13.01.2025

பலவருடங்களாக விசாரணை என்னும் பெயரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரிய கையெழுத்துப் போராட்டம் திருகோணமலை சிவன் கோயிலடிக்கு முன்னால் இன்று திங்கட்கிழமை (13) இடம் பெற்றது.



குறித்த கையெழுத்து வேட்டையானது போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

இதில் பலர் கலந்துகொண்டு கையெழுத்துக்களை இட்டதுடன் குறித்த கையெழுத்து போராட்டமானது வடகிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டு குழுவினர் தெரிவித்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த இராவண சேனா அமைப்பின் தலைவர் கு.செந்தூரன்,

அரசியல் கைதிகள் பல வருட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் இவர்கள் விசாரனைகள் ஊடாக பலரும் விடுவிக்கப்பட்டு மீண்டும் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இவர்களை புதிய அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் குரலை கேட்டு அரசாங்கம் செவிசாய்த்து உடனடியாக விடுதலை செய்யகோரியே இந்த கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம் என்றார்.

ஐந்து ஆண்டுகள் தொடக்கம் முப்பது ஆண்டுகள் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை மற்றும் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை இந்த அரசாங்கம் சுதந்திர தினத்தன்றாவது விடுதலை செய்ய



வேண்டும். ஜனாதிபதி யாழ் மண்ணில் வைத்து தேர்தலின் போது வாக்குறுதி அளித்ததை போன்று பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர் ஆகியோரிடத்தில் கேட்டு கொள்கின்றோம்.

இந்த கோரிக்கையை சட்டமா அதிபர்,நீதியமைச்சர், ஜனாதிபதியிடமும் கையளிக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தனர்.

# ஊடக படுகொலைகள்: விசாரணைக்கு சர்வதேச அழைப்பு!

13.01.2025

ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குறித்த விசாரணைகளை அநுர அரசாங்கம் மீள ஆரம்பிக்க வேண்டும் என பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு 24 சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளது.




“ஜனாதிபதியாக, இலங்கையின் அரசியல் அமைப்பினாலும் ஐசிசிபிஆரினாலும்) பாதுகாக்கப்பட்டுள்ள ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான உரிமைகளை உறுதி செய்யுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊடக சுதந்திரத்தை உறுதி செய்வது மற்றும் பத்திரிகையாளர்களிற்கு எதிரான கடந்த கால குற்றங்களிற்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்வது ஆகியவை குறித்த தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதிகளை நாங்கள் வரவேற்கினறோம்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்




பட்டிருந்தது.

அதனடிப்படையில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஊடகவியலாளர்களிற்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குறித்த விசாரணைகளை மீள ஆரம்பிக்கவேண்டும், அல்லது சம்பவம் குறித்து பொறுப்புக்கூறலிற்காக உடனடி பக்கச்சார்பற்ற வெளிப்படையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.” என பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு 24 சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து கோரியுள்ளது.

www.sangathamil.ca

# யாழ். தையிட்டி விகாரைக்கு எதிராக மீண்டும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம்

14.01.2025



யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும், அதனைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை (12.01.2025) மாலை-05 மணியளவில் குறித்த விகாரைக்கு அருகில் மீண்டும் ஆரம்பமான தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் பௌர்ணமி தினமான இன்று திங்கட்கிழமை (13.01.2025) மாலை-06 மணி வரை முன்னெடுக்கப்பட்டது.



குறித்த போராட்டத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் சட்டத்தரணி ந.காண்டீபன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண டிருந்தனர்.

# அமெரிக்கா அழைத்தால் எமது பிரச்சனைகளை எடுத்துக் கூறுவோம்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார்

14.01.2025




அமெரிக்க நிர்வாகம் எங்களை அழைத்தால், வொஷிங் டனுக்குச் சென்று, காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராக உள்ளோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரி வித்தனர்.



வவுனியாவில் பிரதான தபாலகத்திற்கருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பொங்கல் நாளான இன்று செவ்வாய்க்கிழமை (14) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இப் போராட்டத்தின் பின் தொடரந்தும் கருத்து தெரிவித்த சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார்,

இந்த நாள் தை பொங்கல் 2025, நாங்கள் நம்பிக்கையை கொண்டாடுகிறோம், டிரம்பை வாழ்த்துகிறோம், நீதி மற்றும் இறையாண்மைக்கான தமிழர் போராட்டங்களை பெருக்கு கிறோம்.

இன்று தைப் பொங்கல், இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் நாள். விவசாயத்திற்கு இன்றியமையாத சூரிய ஒளியை வழங்கிய சூரியனுக்கு (சூரியக் கடவுள்) நமது நன்றியைத் தெரிவிக்கும் விதமாக இந்த நாள் தை பொங்கல் 2025, நாங்கள் நம்பிக் கையை கொண்டாடுகிறோம், டிரம்பை வாழ்த்துகிறோம், நீதி மற்றும் இறையாண்மைக்கான தமிழர் போராட்டங்களை பெருக்குகிறோம்

அறுவடையில் முக்கியப் பங்காற்றிய மழை, கால்நடைகள் மற்றும் பூமிக்கு விவசாயிகள் நன்றி தெரிவிக்கின்றனர்.

இந்த இனிய தருணத்தில் அனைவருக்கும் தைப் பொங்கல் நல்வாழ்த்துக்களை தாய்மார்கள் தெரிவித்துக் கொள்கிறார்கள். தமிழர்களுக்கு இந்த மகத்தான நாளில், 2025 ஆங்கில புத் தாண்டையும் வரவேற்கிறோம்.

எவ்வாறாயினும், இந்த நாள் ஒரு சோகமான மைல்கல்லையும் குறிக்கிறது: தமிழ் தாய்மார்கள் தங்கள் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகள் மீண்டும் பெறும்வரை இடைவிடாத போராட்டத் தின் 2886 ஆம் நாள் இன்று.

வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக ஏ-9 வீதியில் நிற்கும் இந்த தைரியமான தாய்மார்கள் சத்தியம் மற்றும் நீதிக்கான கோரிக் கையை தொடர்ந்தும் முன்வைக்கின்றனர்.

தங்களின் அன்புக்குரியவர்களை வெளிக்கொணர்வதும், எதிர் கால இனப்படுகொலைகளைத் தடுப்பதும், தமிழர் இறையாண் மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வ தேச ஆதரவைப் பெறுவதும் தாய்மாரின் நோக்கம்.

நவம்பர் தேர்தலில் வெற்றி பெற்ற அமெரிக்க அதிபராக தேர்ந் தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்ப்பை வாழ்த்ததுகிறோம். “அவன் இல்லாமல் ஒரு அணுவும் அசையாது” என்பது பழைய தமிழ் பழமொழி.

அதேபோல், அமெரிக்கா மற்றும் அதன் ஜனாதிபதியின் தலைமை இல்லாமல், உலகம் அரசியல் ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ நகர முடியாது.

மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், சுதந்திர உலகின் தலைவர் டொனால்ட் டிரம்ப். அவரது வரவிருக்கும் காலத்தில், அமெரிக்காவின் தீர்க்கமான நடவடிக்கைகளால் உந்தப்பட்ட வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

உதாரணமாக, பனாமா கால்வாய், கிரீன்லாந்து மற்றும் கனடா தொடர்பான திரு. டிரம்பின் கடந்தமாத அறிக்கைகள், அவரது கவனம் இலங்கை உட்பட தெற்காசியாவை நோக்கி விரைவில் திரும்பக்கூடும் என்று நம்மை சிந்திக்க வைக்கிறது.

உலகில் வளர்ந்து வரும் சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிரான தனது நிலைப்பாட்டில் அமெரிக்கா தெளிவாக உள்ளது. சீனா வுக்கான ஆதரவு வெளிப்படையாகத் தெரிந்த இடங்களில், அரசியல் அல்லது கட்டமைப்பு மாற்றங்கள் பின்பற்றப்படலாம்.

அமெரிக்காவின் 47வது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை தமிழர் களாகிய நாம் வரவேற்கின்றோம். அவரது நிர்வாகம் எங்களை அழைத்தால், வொஷிங்டனுக்குச் சென்று, காணாமல் ஆக்கப் பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலை யான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராக உள்ளோம் என்றார்.



www.sangathamil.ca




# தமிழ் மரபு திங்கள் மாதத்தினை முன்னிட்டு கனேடிய எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி

01.01.2025

கனடாவில் இம்மாதம் தமிழர் மரபுரிமை மாதமாகக் கொண்டாடப்படுகின்ற போதிலும், அதற்குரிய முழுமையான கௌரவம் இன்னமும் அடையப்படவில்லை. ஏனெனில் மிகமோசமான தமிழினப்படுகொலையினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் நீதிக்காகக் காத்திருக்கிறார்கள்.

எனவே அக்குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை நாம் தொடர்ந்து உறுதியாக வலியுறுத்துவோம் என கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியெர் பொய்லிவ்ர் தெரிவித்துள்ளார்.



தமிழர் மரபுரிமை மாதத்தை முன்னிறுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் அவர், இதுபற்றி மேலும் கூறியிருப்பதாவது:

நாம் ஜனவரி மாதம் முழுவதும் கடும் உழைப்பாளிகளைக் கொண்டாடுகின்றோம். கனடாவில் வாழும் தமிழர்கள் அவர்களது வரலாற்றுப் பாரம்பரியத்துடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை, பல தசாப்தகாலமாக எமது சமூகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

தமிழர்களின் இப்பாரம்பரிய வரலாறு பல ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். அவர்களது பாரம்பரிய கலாசாரமானது மொழி, இசை, கலை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் என்பவற்றின் ஊடாக வெளிப்படுகின்றது.

பாரம்பரிய நம்பிக்கைகள், குடும்பம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஊடாக வழிநடத்தப்படும் கனேடியத் தமிழர்களால் இங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வணிக நிலையங்கள், கலாசார அமைப்புக்கள் மற்றும் சமூக ஊடக நிலையங்கள் என்பன கனேடிய சமூகத்தையும், பொருளாதாரத்தையும் சீரமைப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளன.

இருப்பினும் நாம் கொண்டாடும் இந்த தமிழ் மரபுரிமை மாதம் துரதிஷ்டவசமாக அதற்குரிய முழுமையான கௌரவத்தை இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை. அதேவேளை மிகமோசமான தமிழினப்படுகொலையினால் பாதிக்கப்பட்ட பலர் இன்னமும் நீதிக்காகக் காத்திருக்கிறார்கள்.

எனவே கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சியினரான நாம் இந்த தமிழர் மரபுரிமை மாதத்திலும், இவ்வாண்டு முழுவதும் மேற்குறிப்பிட்டவாறான மிகமோசமான குற்றங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை உறுதியாக வலியுறுத்துவோம்.

அதேவேளை கனடாவில் வாழும் தமிழ்ச்சமூகத்தினரைக் கொண்டாடுவதில் நாம் பெருமையடைகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்


LEADER OF THE OPPOSITION — CHEF DE L'OPPOSITION

**Statement from Conservative Leader Pierre Poilievre on Tamil Heritage Month**

January 1, 2025
FOR IMMEDIATE RELEASE

**Ottawa, ON –** The Hon. Pierre Poilievre, Leader of the Conservative Party of Canada and the Official Opposition, released the following statement on Tamil Heritage Month:

"Throughout January, we celebrate an exceptional and industrious people. Canadians of Tamil heritage have enriched our communities for decades while remaining close to their historic roots.

"For Tamils, these roots go back thousands of years. Their ancient culture – so vibrantly expressed in language, music, arts and cuisine – has found a home in the true north, strong and free.

"Guided by the values of faith, family and freedom, Canadians of Tamil heritage have established businesses, cultural organizations and community media, all of which helped shape Canada's society and economy.

"Sadly, the incredible culture we celebrate this month has not always been afforded the respect it deserves. This was sadly all too apparent in the horrific events of the Tamil Genocide – a tragedy whose victims are still awaiting justice.

"In Tamil Heritage Month and throughout the year, Canada's Common Sense Conservatives stand by our conviction that the perpetrators of such crimes must be brought to account. And we will always be proud to celebrate our incredible Tamil community here at home."

-30-

**For more information:**

olobcocom@parl.gc.ca

# கனடாவிற்கு குடியேறிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானம்

02.01.2025

இந்த 2025 ஆம் ஆண்டில் கனடாவிற்குள் பிரவேசிக்கும் குடியேறிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் சில ஆண்டுகளுக்கு இவ்வாறு நிரந்தர வதிவிட உரிமையாளர்கள் எண்ணிக்கை வரையறுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இந்த ஆண்டில் ஒட்டுமொத்தமாக ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் குடியேறிகளுக்கு மட்டும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கனடாவில் வாசித்து வருபவர்கள் நிரந்தர வதிவிட உரிமை கோரும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

முதல் தடவையாக இந்த ஆண்டு தற்காலிகமாக வதிவோருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளது.

எவ்வாறு எனினும் வழமையாக நாட்டுக்குள் உள்வாங்கப்படும் குடியேறிகளின் எண்ணிக்கையில் இருந்து கணிசமான அளவு தொகை குறைவடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் சர்வதேச மாணவர்களுக்கான அனுமதியும் 10 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# கனேடியப் பிரதமர் பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளார்

06.01.2025

கனடா பிரதமர் பதவியிலிருந்து விலகவுள்ளதாக ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

53 வயதான ட்ரூடோ இன்று திங்கட்கிழமை ஒட்டாவில் இல்லத்திற்கு வெளியே நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

நான் பணியாற்றும் நாடாளுமன்றம் தனது தலையின் கீழ் முடங்கிவிட்டதாகக் கூறினார்.

எனது விடுமுறை நாட்கள் சிந்திப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்து. அத்துடன் எனது குடும்பத்துடன் நீண்ட நேரம் பேசினேன் எனத் தெரிவித்தார்.

நாடு தழுவிய வலுவான போட்டி மூலம் தனது கட்சி ஒரு வலுவான தலைவரைத் தேர்ந்தெடுத்த பின்னர் கட்சித் தலைவர் பதவிலிருந்தும் பிரதமர் பதவிலிருந்து பதவி விலக விரும்புகிறேன் என்று தெளிவுபடுத்தினார்.

இன்று திங்கட்கிழமை காலை கனடாவின் கவர்னர் ஜெனரல் மேரி சைமனுடன் பேசியதாகவும், நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்குமாறும் கேட்டுக் கொண்டதாக வெளியான செய்திகளையும் அவர் உறுதிப்படுத்தினார்.





"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

**www.sangathamil.ca**

# ஒன்ராரியோவில் மருத்துவர்களுக்கு தீவிர பற்றாக்குறை!

07.01.2025

ஒன்ராரியோ மாகாணத்தில் குடும்ப நல மருத்துவர் பற்றாக் குறை நிலைமை தீவிரம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கடந்த ஆண்டில் குடும்ப நல மருத்துவர்கள் இன்றி பாதிக்கப்பட்ட கனடிழ்களின் மொத்த எண்ணிக்கை 2.5 மில்லியன் என தெரிவிக்கப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு அளவில் 4.4 வீதமான ஒன்ராரியோ மக்கள் குடும்ப மருத்துவர் வசதி இல்லாமல் அசௌ கரியங்களை எதிர் நோக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் சில ஆண்டுகளில் பெரும் எண்ணிக்கையிலான மருத்துவர்கள் ஓய்வு பெற்றுக் கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

இதனால் குடும்ப நல மருத்துவர்களின் எண்ணிக்கையில் பற்றாக்குறை ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே குடும்ப நல மருத்துவர் எண்ணிக் கையில் பற்றாக்குறை நிலை நீடித்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது.



# ஒன்ராரியோவின் மின்சக்தி திறன் திட்டம்: பணத்தைச் சேமிப்பதும் எதிர்காலத்தை மேம்படுத்துதலும்

08.01.2025

2050 ஆம் ஆண்டளவில் 75% மின் தேவை அதிகரிப்பை எதிர்கொள்ள ஒன்ராரியோ அரசு மின்சக்தி திறன் திட்டங்களில் $10.9 பில்லியன் முதலீடு செய்கிறது. ஜனவரி 28, 2025 இல் தொடங்கப்படும், வீடு புதுப்பித்தல் சேமிப்புத் திட்டம் மின்சக்தி-திறனுள்ள புதுப்பிப்புகளுக்கு 30% வரை தள்ளுபடியை வழங் கும். "எங்கள் அரசாங்கம் நிலையான எரிசக்தி எதிர்காலத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் மக்கள் பணத்தை சேமித்து மீண்டும் அவர்களுக்கு கொடுப்பதில் உறுதியாக உள்ளது" என்று அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார். மேற்கூரை சோலார் (Rooftop Solar) ஆதரவு மற்றும் சிறு வணிக ஊக்கு விப்பு போன்ற நடவடிக்கைகள் கட்டணம் செலுத்துவோரை $12.2 பில்லியன் சேமிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதோடு 2036 ஆம் ஆண்டளவில் உச்ச மின் தேவையை 3,000 மெகாவாட்சாக குறைக்கின்றன. இந்த முயற்சிகள் எதிர் கால சந்ததியினருக்கு மலிவு மற்றும் நம்பகமான மின்சக்தியை உறுதி செய்கின்றன.




# கனடாவில் அஞ்சல் முத்திரைகளின் விலை 25 சதவீதத்தால் அதிகரிப்பு

13.01.2025

கனடாவில் கடிதம் அனுப்புவதற்கான செலவு சுமார் 25 சதவீதம் அதிகரித்து வருகிறது. இது இன்று (13.01.2025) முதல் நடை முறைக்கு வருகிறது.

உள்நாட்டு அஞ்சல்களுக்கான முத்திரைகளின் விலை 25 சென்ட்கள் அதிகரித்து. இது $1.24 ஆக உள்ளது என்று கனடா போஸ்ட் கூறுகிறது.

ஒரு உள்நாட்டு முத்திரையின் விலை இப்போது $1.15ல் இருந்து $1.44 ஆக உள்ளது.

கனடா போஸ்ட் கடந்த ஆண்டு செப்டம்பரில் இந்த அதிகரிப்பை முன்மொழிந்தது. அனைத்து கனேடியர்களுக்கும் கடித அஞ்சல் சேவையை வழங்குவதற்கான உயரும் விலையுடன் முத்திரை விலைகளை சிறப்பாக சீரமைக்க அதிக விலை தேவை என்று அது கூறுகிறது.

அமெரிக்க மற்றும் சர்வதேச கடிதங்கள் மற்றும் உள்நாட்டில் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் ஆகியவையும் கட்டண உயர் வுகளில் அடங்கும். வர்த்தக கடித அஞ்சல் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கனடா தபால் ஊழியர்களின் வேலைநிறுத்தம் கடந்த ஆண்டு அஞ்சல் விநியோகத்தை நிறுத்தியதை அடுத்து, மத்திய அரசாங்கம் வேலை சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவரும் வரை விலை உயர்வுகள் வந்துள்ளன.



# கனடாவின் கியூபக் மாகாணத்தில் தட்டம்மை நோய் குறித்து எச்சரிக்கை

13.01.2025



கனடாவின் கியூபக் மாகாணத் தில் தட்டம்மை நோய் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மாகாண சுகாதார அலுவலகம் இது தொடர்பான அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

தட்டம்மை நோயாளர்கள் பதிவாகி வருவதாகவும் இதுவரை யில் இந்த ஆண்டில் 11 பேர் இந்த நோயினால் பாதிக்கப் பட்டிருந்தனர் எனவும் தெரியப்படுகிறது.

கியூபெக் மாகாணத்தின் நொவெல், மொன்றியால் மற்றும் மொன்றிஜி போன்ற பகுதிகளில் அதிக அளவில் தட்டமை நோயாளர்கள் பதிவாவதாக தெரிவிக்கப்படுகிறது.

நோய் பரவுகை தொடர்பில் கடந்த டிசம்பர் மாதம் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நோய்த் தொற் றிற்கு பலர் இலக்காகி இருக்கலாம் என அச்சம் வெளியிடப் பட்டுள்ளது.

ஒரே அறையில் நோய் தொற்று உள்ளவர்களுடன் இருப்பதன் மூலம் இந்த நோய் பரவக்கூடிய இது என தெரிவிக்கப்படுகிறது.

நோய் தொற்று பரவுகை தொடர்பில் கியூபெக் மாகாண இணையத் தளத்தில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நோய் தொற்று பரவி இருக்கலாம் என சந்தேகப்படுபவர்கள் தனித்திருப்பதன் மூலம் நோய் பரவுகையை வரையறுக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

சளி, இருமல், சிவந்த கண்கள் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் அவர்கள் சற்று அவதானமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துகளை பயன்படுத்துவதனை தவிர்க்கு மாறும் முக கவசம் அணிவது பொருத்தமானது எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.





# தமிழக செய்திகள்



# பா.ம.க. இளைஞரணி தலைவராக திரு. முகுந்தன் நியமனம்

## பாமக தலைவர் நிறுவனர் இராமதாஸ்

02.01.2025

விழுப்புரம் மாவட்டம் பட்டானூரில் கடந்த வாரம் நடைபெற்ற பா.ம.க.வின் புத்தாண்டு சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் இராமதாஸ், காலியாக உள்ள இளைஞர் சங்கத் தலைவர் பதவிக்கு, பரசுராமன் முகுந்தன் என்பவரை அறிவித்தார். இளைஞர் அணி தலைவராக முகுந்தனை முன்மொழிந்து பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணிக்கு உறு துணையாக இருப்பார் என்று இராமதாஸ் பேசிக் கொண்டிருந்த போது மேடையில் இருந்த அன்புமணி இடைமறித்து அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

உடனே குறுக்கிட்ட டாக்டர் இராமதாஸ், “இது நான் ஆரம்பித்த கட்சி. நான் சொல்வதைத்தான் கேட்கணும், கேட்காவிட்டால் யாரும் இந்த கட்சியில் இருக்க முடியாது இல்லாவிட்டால் போங்கள் என்றார். இதனால் ஆத்திரமடைந்த டாக்டர் அன்பு மணி, மேடையில் ஜி.கே.மணியிடம் இருந்து மைக்கை வாங்கி, ‘நான் பனையூரில் கட்சி அலுவலகம் அமைத்துள்ளேன். விருப்பம் உள்ளவர்கள் அங்கு வந்து என்னை சந்திக் கலாம்’ என்று ஆவேசமாக கூறினார்.

தொடர்ந்து அந்த மைக்கை தூக்கி வீசிவிட்டு கோபத்துடன் மண்டபத்தை விட்டு வெளியேறிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பா.ம.க. உட்கட்சி மோதல் தொடர்பாக திண்டிவனம் தைலா புரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் இராமதாசை பா.ம.க. தலைவர் அன்புமணி கடந்த 29-ந்தேதி சந்தித்து பேசினார். பின்னர் அன்புமணி கூறுகையில், எங்கள் கட்சி ஜனநாயக கட்சி, பொதுக்குழுவில் காரசாரமான விவாதங்கள் எல்லா கட்சி யிலும் நடப்பதுதான், எங்களுக்கு ஐயா, ஐயா தான், எங்கள் உட் கட்சி பிரச்சனையைப் பற்றி நீங்கள் பேச எதுவும் தேவை இல்லை, அது எங்கள் பிரச்சனை, நாங்கள் பேசிக்கிறோம் என்று தெரிவித்தார். இந்நிலையில் பா.ம.க. இளைஞரணி தலைவராக முகுந்தன் நியமிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் நிறுவனர் இராமதாஸ் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.



பா.ம.க. பொதுக்குழுவில் அறிவித்தபடி முகுந்தனிடம் நியமன கடிதத்தை வழங்கிவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் நாட்டில் 6.36 கோடி வாக்காளர்கள்: 8.82 இலட்சம் வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர்

## மாநில தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்

06.01.2025

தமிழகம் முழுவதும் கடந்த ஆண்டு அக். 29 முதல் நவ. 28 வரை வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது வாக்காளர் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.



மாநில தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று வாக்காளர் இறுதிப் பட்டியலை வெளியிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாது:

வாக்காளர் இறுதிப் பட்டியலில் 6 கோடியே 36 இலட்சத்து 12 ஆயிரத்து 950 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர். அதிகபட்ச மாக செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதியில் 6 இலட்சத்து 90 ஆயிரத்து 958 வாக்காளர்கள், கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம் தொகுதியில் 4 இலட்சத்து 91 ஆயிரத்து 143 வாக்காளர்கள் உள்ளனர்.

குறைந்தபட்சமாக நாகை மாவட்டம் கீழ்வேளூர் தொகுதியில் 1 இலட்சத்து 76 ஆயிரத்து 505 வாக்காளர்கள், சென்னை துறைமுகம் தொகுதியில் 1 இலட்சத்து 78 ஆயிரத்து 980 வாக் காளர்கள் உள்ளனர். வாக்காளர் பட்டியலில் 3,740 வெளிநாடு வாழ் வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர். 4 இலட்சத்து 78 ஆயிரத்து 7 பேர் மாற்றுத் திறனாளி வாக்காளர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர்.

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின்போது பெயர் சேர்த்தலுக் காக 14 இலட்சத்து 2 ஆயிரத்து 132 விண்ணப்பங்கள் பெறப் பட்டன. இதில் 13 இலட்சத்து 80 ஆயிரத்து 163 விண்ணப் பங்கள் ஏற்கப்பட்டன. 18 முதல் 19 வயதுக்கு உட்பட்ட 4 இலட் சத்து 10 ஆயிரத்து 69 வாக்காளர்கள் புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளனர்.

பெயர் நீக்கலுக்காக 5 இலட்சத்து 16 ஆயிரத்து 940 விண்ணப் பங்கள் பெறப்பட்டு, அவற்றில் 4 இலட்சத்து 97 ஆயிரத்து 801 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இடப்பெயர்ச்சி காரணமாக 3 இலட்சத்து 72 ஆயிரத்து 827 பேர், இறப்பு காரணமாக 1 இலட்சத்து 9 ஆயிரத்து 131 பேர், இரட்டைப் பதிவு காரணமாக 15 ஆயிரத்து 797 பேர் நீக்கப்பட்டுள்ளனர். மேலும், 2 இலட்சத்து 15 ஆயிரத்து 244 வாக்காளர்களின் பதிவுகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாக்காளர் இறுதிப் பட் டியலை https://elections.tn.gov.in/ என்ற இணையதளத்தில் காணலாம். இவ்வாறு அவர் கூறினார்.

வாக்காளர் இறுதிப் பட்டியலில் 18 முதல் 19 வயதுக்கு உட்பட்ட 10 இலட்சத்து 61 ஆயிரத்து 556 வாக்காளர்கள் உள்ளனர். வயது வாரியாகப் பார்க்கும்போது, அதிகபட்சமாக 40 முதல் 49 வயதுக்கு உட்பட்ட 1 கோடியே 37 இலட்சத்து 4 ஆயிரத்து 815 வாக்காளர்கள் உள்ளனர்.

கடந்த அக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலுடன், வாக்காளர் இறுதிப் பட்டியலை ஒப்பிடும்போது 3 இலட்சத்து 83 ஆயிரத்து 236 ஆண், 4 இலட்சத்து 98 ஆயிரத்து 970 பெண், 156 மூன்றாம் பாலின வாக்காளர்கள் என மொத்தம் 8 இலட்சத்து 82 ஆயிரத்து 362 வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர்.

வழக்கம்போல ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர் களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. வாக்காளர் இறுதிப் பட்டியலில் 3 கோடியே 11 இலட்சத்து 74 ஆயிரத்து 27 ஆண் வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர். பெண் வாக்காளர்கள் 3 கோடியே 24 இலட்சத்து 29 ஆயிரத்து 803 பேர் இடம் பெற்றுள்ளனர். ஆண்களைவிட பெண் வாக்காளர்கள் 12 இலட்சத்து 55 ஆயிரத்து 776 பேர் அதிகமாக உள்ளனர்.

# தமிழகம் வந்த 13 குடும்பங்கள் தம்மை மீண்டும் இலங்கைக்கு அனுப்புமாறு கோரி மனு கையளிப்பு

06.01.2025

இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரண மாக இலங்கையில் இருந்து கடல் வழியாக தமிழகத்தில் தஞ்ச மடைந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த இலங்கையர்கள் தம்மை மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்க வேண்டும் எனக் கோரி ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் மனு கையளித் துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை தமிழர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் இலங்கையிலிருந்து படகு வழியாக சட்ட விரோதமான முறையில் தனுஷ்கோடியில் தஞ்சம் அடைய தொடங்கினர்.

இது வரை 309 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடியில் கடல் வழியாக அகதிகளாக தஞ்சமடைந்து மண்டபம் ஈழத்தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் பொருளாதார நெருக்கடி காரணமாக தஞ்சமடைந்த இலங்கை தமிழர்களை அகதிகளாக இந்திய அரசு இதுவரை பதிவு செய்யாத காரணத்தினால் அவர்களுக்கு இந்திய அரசால் வழங்கப்படும் எந்த விதமான நிவாரணமும் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வருவாய் இன்றி தவித்த இலங்கை தமிழர்கள் அடங்கிய ஐந்து குடும்பத்தினர் மீண்டும் சட்டவிரோதமாக கடல் வழியாக அண்மையில் இலங்கைக்கு திரும்பிச் சென்றுள்ள தாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், அகதிகளாக பதிவு செய்யாமல் உள்ள இலங்கை தமிழர்களான 13 குடும்பத்தினர் தங்களை படகு மூலம் அல்லது விமானம் மூலம் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறு நேற்று திங்கட்கிழமை (6) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரை சந்தித்து பாதிக்கப்பட்ட மனு கையளித் துள்ளனர்.



www.sangathamil.ca

# ‘பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே…’ என்ற தாயகப் பாடலைப் பாடியகுரல் ஓய்ந்தது!

09.01.2025

பிரபல பின்னணி பாடகர் ஜெயச்சந்திரன் உடல்நலக் குறைவால் இன்று (ஜன. 9 வியாழக்கிழமை) காலமானார். அவருக்கு வயது 80.

களத்தில் கேட்கும் கானங்கள்… ஒலி வட்டில் இடம்பெற்ற “பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே…” என்ற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பாடலைப் பாடி தமிழர்களின் மனங்களில் இடம்பிடித்த பாடகர் என்பது குறிப்பிடத்தக்கது.

கேரள மாநிலம் திருச்சூர் மருத்துவமனையில் உடல்நலக் குறைவு காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று சிகிச்சைப் பலனின்றி ஜெயச்சந்திரன் அவர்கள் உயிரிழந்தார். அவரின் மறைவுக்கு திரையுலகப் பிரபலங்கள் பலர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

கேரள மாநிலத்தின் எர்ணாகுளத்தில் பிறந்த ஜெயச்சந்திரன், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் 16,000க்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார்.

தமிழில், வசந்தகால நதியினிலே, கவிதை அரங்கேறும் நேரம், ராசாத்தி உன்ன காணாத நெஞ்சு, அந்தி நேர தென்றல் காற்று… உள்ளிட்ட பலர் சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார்.

இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையில், கன்னத்தில் முத்த மிட்டால் படத்தில், ஒரு தெய்வம் தந்த பூவே… கிழக்குச் சீமையிலே படத்தில் கத்தாழும் காட்டுவழி… ஆகிய பாடலை பாடியிருந்தார்.

சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருது, ஐந்து முறை கேரள மாநில திரைப்பட விருதுகள், கேரள அரசின் ஜே.சி. டேனியல் விருது மற்றும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது உள்ளிட்டவற்றைப் பெற்றுள்ளார். நான்குமுறை தமிழ்



நாடு மாநில விருதுகளை வென்றுள்ளார்.

# திருச்செந்தூர் – குலசேகரன்பட்டினத்தில் கடல் அரிப்பு

11.01.2025

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் பகுதியில் கடந்த சில நாட்களாக கடல் அரிப்பு அதிகரித்து வருகிறது. கோவிலில் இருந்து கடற்கரைக்கு செல்லும் வழியில் சுமார் 200 அடி தூரத்துக்கு 8 அடி ஆழத்துக்கும் அதிகமாக அரித்து சென்றது.

அங்கு பாறைகள் தென்படுவதால் அவற்றில் நின்று புனித நீராடும் பக்தர்கள் அவதிப்படுகின்றனர். இந்த நிலையில் திருச்செந்தூர் - குலசேகரன்பட்டினம் இடையிலும் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. குலசேகரன்பட்டினம் வடக்கூரை அடுத்த காட்டு பகுதியில் கடற்கரையில் இருந்த 10-க்கும் மேற்பட்ட பனை மரங்களை கடல் அலைகள் வாரி சுருட்டின. சரிந்த சில பனை மரங்களை கடல் அலைகள் இழுத்து சென்றன.

மேலும் சில பனை மரங்கள் சரிந்து விழும் நிலையில் உள்ளன. குலசேகரன்பட்டினத்தில் கடல் அரிப்பு ஏற்பட்ட பகுதியில் கடற்கரையோரத்தில் நூற்றுக்கணக்கான பனை மரங்கள் உள்ளன. இவைகளும் கடல் அரிப்பால் சரிந்து விழும் அபாய நிலையில் உள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மேலும் கடல் அரிப்பை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



# தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நல்வாழ்த்துகள் தெரிவித்த நாம் தமிழர் கட்சி

14.01.2025

முன்னந் தோன்றிய நிலத்தில் முகிழ்த்தவர்!
மூத்த தமிழ்மொழிக் குணர்வின் மூத்தவர்!
தென்னன் பாண்டியன் குமரிக் குடிமையர் :
திசையெ லாம்பரந் துலகை அளந்தவர்!
இன்னரும் இயலிசை நாடகம் யாத்தவர்:
இந்திய - நாவலந்தேயத்து இறைமையர் !
வான்முகில் மலையிடை வாழ்க்கை தொடங்கியர் !
வளந்தரு குறிஞ்சியில் காதலை உணர்ந்தவர்!
தேனுமிழ் முல்லையை மருதம் நெய்தலைத்
தீர ஆய்ந்துநல் இல்லறம் வகுத்தவர்!
கான்தரு பொருளையும் கழனியும் கண்டவர்!
கடலின் பரப்பையும் கடந்தயல் சென்றவர்!
ஏன், தம்பி தெரியுமா? - இவர்கள் தமிழர்கள்!

என்று “பாவலரேறு” பெருஞ்சித்திரனார் பாடிய பாடலுக்கேற்ப முன்னைக்கும் முன்னந்தோன்றி மூத்த தமிழ்த்தேசியப்



பேரினத்தின் பண்பாட்டுத்திருவிழாவான பொங்கல் பெருவிழா உலகெலாம் பரவி வாழும் தமிழர்த் திருநாளாக, தைத்திங்கள் முதல் நாள் மகத்தான இலட்சிய கனவுகளுடன் தொடங்குகிறது.

நாகரிகத்தின் தொட்டில்களாய் நதிக்கரைகள் விளங்கின என்று வரலாறு எழுதியோர் வியப்புடன் சுட்டிக்காட்டும் காலத்தில், நாடுகட்டி படை பெருக்கி பல்லுயிர் வாழ உயிர் நேயத்துடன் அறத்தின் வழி நின்று ஆட்சி செய்தவர்கள் தமிழர்கள்!

பேரறிவோடும், அளப்பரிய ஆற்றலோடும் விண்வெளி விந்தைகளைப் புரிந்து கொண்ட திறத்தோடு காலக்கணக்கை வகுத்து, இயற்கை வழி நின்று, மரபார்ந்த வாழ்க்கை ஒன்றை இம் மண்ணில் நிறுவினர் நம் முன்னோர்கள்!

பார்வியக்க ஏர் செலுத்தி பைந்தமிழ்த் தேனீயாய் உழவு பாட்டு இசைத்து உலகோர் பசி தீர்க்க… நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி, தன் உதிரத்தால் உலகை செழிக்க வைத்த இனம் தமிழினம்!

“ஏர் பின்னே நெடு வயல் நெடுக வளைய வரும் மாடு ஐந்தறிவு உயிரி தானே என்று எண்ணாமல் தன் குடும்பத்தில் ஒருவனாய், தன் மண்ணின் பெருமையாய்.. கால் நடைகளைப் போற்ற மாட்டு பொங்கல் கண்டு தன் உயிர் நேயத்தை உலகிற்கு அறிவித்தவன் தமிழன்!
வீரத்திலும், அறத்திலும், கொடையிலும், மாறாப் பற்றுறுதி கொண்டு தாய் மொழியாம் தமிழைத் தனது உயிராய் நினைத்து உலகு சிறக்க வாழ்ந்த இனம் தமிழினம்!

ஆனால் வரலாற்றின் போக்கில் இடையில் வந்தோர் சாதி, மதத் தடைகளைத் தமிழர் மண்ணில் நிறுவியதால், உயிரெனப் போற்ற வேண்டிய இனமான ஓர்மை உணர்வை இழந்து நிற்கிறது. “இட்டார் பெரியோர், இடாதோர் இழிகுலத்தோர்” என அறம் பாடி நின்ற இனம் பிறப்பின் வழி உயர்வு தாழ்வு கற்பித்துத் தனக்குள்ளே பூசலிட்டு வேரை மறந்து விவேகத்தைத் தொலைத்து திக்கற்று நிற்கின்றது..!

வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவிற்குத் தமிழர் நிலம் ஒரு பக்கம் எதிரிகளால் இனப்படுகொலைக்கு உள்ளாகி நீதியற்று நிற்கிறது. இன்னொரு பக்கம் இயற்கை வளங்களைக் கொள்ளை கொடுக்கிற நிலமாய், பெரும் செல்வமெனப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய ஆற்று மணலை அள்ளி, மலையை மணலாய் நொறுக்கி அயலானுக்கு விற்கிற கூட்டமாய் மாறி, அறியாமையால் பணத்திற்காக இனத்தின் வளங்களை விற்கிற அதிகாரத்தை நிறுவி அல்லற்பட்டு நிற்கிறது. அதனால், தரணி சிறக்க செழித்த நிலம் இன்று தரிசு காடாய் மாறியிருக்கிறது. தன் இலக்கண இலக்கியச் செழுமையால் உலகில் மானுட குலத்திற்கே ஆகச்சிறந்த வாழ்வியல் நன்னெறியை கூறும் திருக்குறளை தந்த தாய்த்தமிழை இன்று நாம் சிதைய கொடுத்து நிற்கிறோம்..!

முப்படை கட்டி எட்டு திசையும் படையெடுத்து மனிதன் காலடி பட்ட மண்ணெல்லாம் புலிக் கொடி நட்டு உலகை ஆண்ட உன்னதத் தமிழினம்தான் இன்று ஆற்றலை இழந்து, அதிகாரத்தை இழந்து, மானத்தை இழந்து இந்த இழிநிலையை மாற்ற மாற்றான் எவனாவது வருவானா என்று மண்டியிட்டு கிடக்கிற இழிநிலை கண்டு, உணர்வும் அழிவும் ஒருங்கே பெற்ற தமிழின இளையோர் விழி சிவந்து முளைக்கிற பெரும் கோபத்தைத் தன் இதயத்திலே தேக்கி தனக்கென அரசியல் அதிகாரம் நிறுவ நாம்தமிழர் என்கிற பெரும் படை கட்டி இனம் வாழ தன்னைக் கொடுத்து நிற்கின்றனர்.

அரசியல் அதிகாரத்தை மட்டும் இல்லாமல்.. கலை, பண்பாடு, வேளாண்மை, தமிழரின் அறிவு சார்ந்த இறை நம்பிக்கைகள் ஆகியவற்றை மீளெழுப்பிக் கட்டமைக்கிற பெரும் வரலாற்று பணியையும் இணைத்தே இந்த மண்ணில் மகத்தான புரட்சி எழுந்திட.. நாம் தமிழராய்த் திரளத் தொடங்கியிருக்கும் காலத்தில்தான் தைத்திருமகள் வளம் திரண்ட நம்பிக்கைகளோடு களம் பற்றிய கனவுகளோடு தைத்திருமகள் கம்பீரமாக வருகிறாள்.

புதிதாய் மலர்ந்திருக்கும் தமிழர்ப் புத்தாண்டில் நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மைகள் விளையட்டும்!

கடந்த அரை நூற்றாண்டிற்கும் மேலாக நம்மை ஆண்டு வரும் ஆட்சியாளர்களால் அன்னை தமிழ் நிலம் பாழ்படுத்தப்பட்டு, தாழ்ந்து வீழ்ந்து கிடக்கும் தமிழினம் இப்புத்தாண்டில் மீட்சிப் பெற்று எழுச்சியுறட்டும். அதற்கான சிந்தனை மாற்றம் ஒவ்வொரு தமிழர் உள்ளத்திலும் உருவாகட்டும்!

வையம்போற்றும் ‘தை“ திருநாளில் தமிழர் வாழ்வு சிறக்கட்டும்!

கொலை, கொள்ளை, சாதிய இழிவு, தீண்டாமை, அடக்குமுறை, ஒடுக்குமுறை, மது - மத போதை, நிலவளச் சுரண்டல், கனிமவள கொள்ளை, பாலியல் வன்கொடுமை, பெண்ணடிமைத்தனம் இவைகளுக்கு எதிரான மாபெரும் அரசியல் புரட்சி இம்மண்ணில் பூக்கட்டும்!

தமிழ்மொழி மீட்க,
தமிழர் நலன் காக்க,
தமிழ்நாட்டின் வளங்கள் காத்திட,
தமிழ் முன்னோர்களின் ஈகம் போற்றிட,
தமிழர்தம் கலை, இலக்கிய பண்பாடு, வரலாறு காத்திட,
தமிழர் உள்ளங்களிலும் இல்லங்களிலும் பொங்கட்டும் தமிழ்த் தேசியப் புரட்சிப் பொங்கல்!

உலகெங்கும் பரவி வாழும் எம்முயிர்ச்சொந்தங்கள் அனைவருக்கும், நெஞ்சம் நிறைந்த தமிழ்ப்புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துகள்!

அன்பின்
வாழ்த்துகளுடன்…
- செந்தமிழன் சீமான், தலைமை ஒருங்கிணைப்பாளர்



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.“

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்

# உலக செய்திகள்

## அமெரிக்காவின் நியுஓர்லியன்ஸின் புது வருட நாளில் பொதுமக்கள் மீது மேதிய டிரக்: 15 பேர் பலி, பலர் காயம்

01.01.2025

அமெரிக்காவின் நியுஓர்லியன்ஸில் பொதுமக்கள் மீது டிரக்வாகனமொன்று மோதியதில் 15 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

டிரக்கொன்று பொதுமக்கள் மீது மோதியது அதன் பின்னர் அந்த டிரக்கிலிருந்து இறங்கிய நபர் துப்பாக்கி பிரயோகத்தில் ஈடு பட்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதுவருடதினத்தன்று பொதுமக்கள் அதிகமாக காணப்பட்ட சுற்றுலாப்பயணிகள் அதிகம் காணப்படும் போர்பென் வீதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

டிரக் வண்டியொன்று வேகமாக வந்து பொதுமக்கள் மீது மோதியது அதன் பின்னர் அதிலிருந்த நபர் ஒருவர் இறங்கி பொதுமக்கள் மீது துப்பாக்கி பிரயோகத்தில் ஈடுபட்டார், பொலிசார் பதில் தாக்குதலை மேற்கொண்டனர் என சம் பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதில் பாதிக்கப்பட்ட 30க்கும் அதிகமானவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



## நியு ஓர்லியன்ஸ் தாக்குதலை மேற்கொண்டவர் அமெரிக்க இராணுவத்தில் 13 வருடங்கள் பணியாற்றினார்!

102.01.2025

நியு ஓர்லியன்சில் டிரக்கை வேகமாக செலுத்தி பொதுமக்கள் மீது மோதி 15 பேரை கொலை செய்த சம்சுட் டின் ஜபார் அமெரிக்க இராணுவத்தில் 13 வருடங்கள் பணிபுரிந்தவர் ஆப் கானிலும் பணிபுரிந்தவர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்துகார்டியன் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்க இராணுவம் புதன்கிழமை வெளியிட்டுள்ள தகவல்கள் நியு ஓர்லியன்ஸ் தாக்குதலை மேற்கொண்ட நபர் யார் என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

அமெரிக்க அதிகாரிகளும் நியு ஓர்லன்ஸ் அதிகாரிகளும் ஜபார் தனியாக செயற்படவில்லை என கருதுவதாகவும் அவரின் சகாக்களை தேடுவதாகவும் தெரிவித்துள்ளனர்.ஜபாரின் டிரக் கில் ஐஎஸ் அமைப்பின் கொடி காணப்பட்டது இது பயங்கரவாத தாக்குதல் என்ற அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள் கின்றோம் என எவ்பிஐ தெரிவித்துள்ளது.

ஜபார் 2007 முதல் 2015 சம்சுட் - தின் - ஜபார் அமெரிக்க இராணுவத்தின் மனிதவள பிரிவில் தகவல் தொழில்நுட்ப பிரிவில் பணிபுரிந்தவர்.

இதன் பின்னர் அவர் அமெரிக்க இராணுவத்தின் பிரிவில் இணைந்து 2020வரை தகவல்தொழில்நுட்ப நிபுணராக பணி யாற்றியிருந்தார். சேவைகால இறுதியில் சார்ஜன்டாக பதவி வகித்தார் என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஜபார் 2004 இல் இணைந்துகொண்டார் எனினும் ஒருமாதத் தின் பின்னர் அதிலிருந்து விலக்கப்பட்டார் என அந்த அதிகாரி ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளார்.



ஜோர்ஜியா மாநில பல்கலைகழகத்தில் 2015 முதல் 2017 வரை கல்விகற்ற ஜபார் தகவல் தொழில்நுட்ப பட்டதாரி.

## இசுரவேல் – ஹமாஸ் போரில் 46 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளார்கள்

09.01.2025

இசுரவேல் - ஹமாஸ் போர் கடந்த மாதங்களாக நடைபெற்று வரும் நிலையில் பாலஸ்தீனத்தில் பலி எண்ணிக்கை 46 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக வெளிநாட்டு ஊடங்கள் தெரிவித் துள்ளன.

இசுரவேலுக்கும் பாலஸ்தீனத்தின் காசா அமைப்பினருக்கும் நீண்ட காலமாக சண்டை நீடித்து வரும் நிலையில்,

கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் திகதி ஹமாஸ் அமைப்பினர் தெற்கு இசுரவேலுக்குள் நுழைந்து 1,200 பேரைக் கொன்றனர். மேலும் 250 பேரை பணயக் கைதிகளாக கடத்திச் சென்றனர்.

அவர்களில், 100 பேர் இன்னும் காசாவிற்குள் இருப்பதாகவும், மூன்றில் ஒரு பகுதியினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் கூறப் படுகிறது.

இதனால், இசுரவேல், காசா மீது போர் தொடுத்தது. கடந்த 15 மாதங்களாக நடந்து வரும் போரில், ஹமாஸ் உட்பட இதுவரை 46 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் கொல்லப் பட்டுள்ளதுடன் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந் துள்ளதாக காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காசாவில் இசுரவேல் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் ஆயிரக்கணக்கானோர் உடல்கள் இடிபாடுகளிலும், மண் ணுக்கு அடியில் சிக்கியிருப்பதால், பலி எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கலாம் எனவும் சொல்லப்படுகிறது.



## அமெரிக்கா லொஸ் ஏஞ்சல்ஸ்ஸில் 12 ஆயிரத்துக்கு மேல் வீடுகள் எரிந்து நாசமாகின!

11.01.2025

லொஸ் ஏஞ்சல்ஸ்ஸில் ஏற்பட்ட தீ காரணமாக உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.



பாலிசேட்ஸ் உட்பட இன்னும் மூன்று இடங்களில் தீ கட்டுப்பாட் டுக்குள் வரவில்லை. ஹர்ஸ்ட் ஃபயர் மற்றும் லிடியா ஃபயர் மட்டுமே இதுவரை பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதே நேரத்தில் கென்னத் தீ இப்போது 50 சதவீதம் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

12,000க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் ஏற்கனவே தீயினால் நாசமாகிவிட்டன அல்லது சேத மடைந்துள்ளன. மேலும் 58,000 பேர் ஆபத்தில் உள்ளனர். கடந்த செவ்வாய்கிழமை முதல் சுமார் 15,000 ஹெக்டேர் நிலங்கள் தீயில் கருகிவிட்டன. 100,000 க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்களுக்கு வெளியேற றப்பட்டனர். மேலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் எச்சரிக் கப்பட்டுள்ளனர்.




காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீட்டை வழங்குவதில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன.

# நாங்கள் கிரீன்லாண்டர்களாக இருக்க விரும்புகிறோம்

## கிறீன்லாண்டுப் பிரதமர்

11.01.2025

ஆர்க்டிக் பிரதேச மக்கள் அமெரிக்கர்களாக இருக்க விரும்பவில்லை என்றும், அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்ப் தீவின் மூலோபாய இருப்பிடத்தைக் கருத்தில் கொண்டு அதன் மீதான ஆர்வத்தை அவர் புரிந்து கொண்டதாகவும் கிரீன்லாந்தின் பிரதமர் Múte B. Egede கூறியுள்ளார்.



Múte B. Egede இன் கருத்துக்கள் இந்த வார தொடக்கத்தில் ட்ரம்ப், டென்மார்க்கின் அரை தன்னாட்சிப் பகுதியான கிரீன்லாந்தை அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாற்றுவதற்கு பலம் அல்லது பொருளாதார அழுத்தத்தைப் பயன்படுத்துவதை போவதில்லை என்று கூறியதை அடுத்து இக்கருத்து வந்துள்ளது.

கிரீன்லாந்து வட அமெரிக்கக் கண்டத்தின் ஒரு பகுதி என்றும், அமெரிக்கர்கள் தங்கள் உலகின் ஒரு பகுதியாகப் பார்க்கும் இடம் என்றும் Egede ஒப்புக்கொண்டார். பிரதமர் கருத்து தெரிவித்ததிலிருந்து டிரம்புடன் பேசவில்லை என்றார்.

Egede கிரீன்லாந்திற்கான சுதந்திரத்திற்கு அழைப்பு விடுத்தார். டென்மார்க்கை ஒரு காலனித்துவ சக்தியாக காட்டுகிறார். அது எப்போதும் பழங்குடி இனயூட் மக்களை நன்றாக நடத்தவில்லை குறிப்பிட்டார்.

கிரீன்லாந்து கிரீன்லாண்டிக் மக்களுக்கானது. நாங்கள் டென்களாக இருக்க விரும்பவில்லை. நாங்கள் அமெரிக்கர்களாக இருக்க விரும்பவில்லை. நாங்கள் கிரீன்லாண்டர்களாக இருக்க விரும்புகிறோம் என்று கோபன்ஹேகனில் டேனிஷ் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சனுடன் செய்தியாளர் கூட்டத்தில் அவர் கூறினார்.

டிரம்பின் கிரீன்லாந்தின் ஆசை டென்மார்க்கிலும் ஐரோப்பா முழுவதிலும் கவலையைத் தூண்டியுள்ளது.

அமெரிக்கா 27 நாடுகளின் ஐரோப்பிய ஒன்றியத்தின் வலுவான கூட்டாளியாகும். மேலும் நேட்டோ கூட்டணியின் முன்னணி உறுப்பினர் மற்றும் ஐரோப்பாவில் உள்ள பலர் அமெரிக்கத் தலைவர் ஒரு கூட்டாளிக்கு எதிராக பலத்தைப் பயன்படுத்துவதைக் கூட பரிசீலிக்கலாம் என்ற ஆலோசனையால் அதிர்ச்சியடைந்தனர்.

கிரீன்லாந்தில் 57,000 மக்கள் உள்ளனர். ஆனால் இது எண்ணெய், எரிவாயு மற்றும் அரிய பூமி கூறுகளை உள்ளடக்கிய இயற்கை வளங்களைக் கொண்ட ஒரு பரந்த பிரதேசமாகும், இது காலநிலை மாற்றத்தின் காரணமாக பனி உருகும் போது அணுகக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஆர்க்டிக்கில் ஒரு முக்கிய மூலோபாய இடத்தைக் கொண்டுள்ளது, அங்கு ரஷ்யா, சீனா மற்றும் பிற நாடுகள் தங்கள் தடத்தை விரிவுபடுத்த முயல்கின்றன.

உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்து, டென்மார்க்கை விட வட அமெரிக்க நிலப்பரப்புக்கு அருகில் உள்ளது.

கோபன்ஹேகன் அதன் வெளியுறவு மற்றும் பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருக்கும் அதே வேளையில், கிரீன்லாந்தின் பாதுகாப்பிற்கான பொறுப்பை அமெரிக்காவும் பகிர்ந்து கொள்கிறது மற்றும் 1951 உடன்படிக்கையின் அடிப்படையில் அங்கு ஒரு விமானப்படை தளத்தை இயக்குகிறது.

# நைஜீரியாவில் 40 விவசாயிகள் படுகொலை!

13.01.2025

நைஜீரியாவின் வடகிழக்கு மாநிலமான போர்னோவில் ஒரு வார இறுதியில் நடந்த தாக்குதலில் குறைந்தது 40 விவசாயிகள் கொல்லப்பட்டதாக அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



வடகிழக்கு போர்னோ மாநிலத்தில் இஸ்லாமிய போராளிகள் என சந்தேகிக்கப்படும் தீவிரவாதிகளின் தாக்குதலில் குறைந் தது 40 விவசாயிகள் கொல்லப்பட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் போகோ ஹராம் தீவிரவாதிகளாலோ அல்லது இஸ்லாமிய அரசு மேற்கு ஆப்பிரிக்கா மாகாணம் (ISWAP) என்று அழைக்கப்படும் அதன் பிரிந்து சென்ற பிரிவின் உறுப்பினர்களாலோ நடத்தப்பட்டிக்கலாம் என போர்னோவின் ஆளுநர் பாபங்கா உமாரா ஜுலும் கூறினார்.



# அவுஸ்திரேலிய அபரோஜின பூர்வகுடி மக்களுடன் சிட்னியில் தைப்பொங்கல் விழா

14.01.2025

அவுஸ்திரேலிய நியு சவுத் வேல்ஸ் மாநில தமிழ் மக்கள் சார்பாக, அனைத்து தமிழ் வணிக நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், பன்னாட்டு தமிழ் மக்களின் ஆதரவோடு "பொங்கல் திருவிழா" நிகழ்வு சிறப்புற இன்று Holroyd Gardens, Merrylands, எனும் பூந்தோட்டத்தில் இன்று செவ்வாய், ஜனவரி 14 மாலை நடைபெற்றது.

தமிழர் திருநாளான தைப்பொங்கல் விழா அவுஸ்திரேலிய பழங்குடி அபரோஜின மக்களுடன் இணைந்து கடந்த ஆண்டு காலமாக கொண்டாடப்பட்டது போல இவ்வருடமும் சிறப்புற இன்று சிட்னியில் நடைபெற்றது.

இப்பொங்கல் நிகழ்வானது, உலகெங்கும் பரவி வாழும் புலம்பெயர்த் தமிழர்கள் தமிழ் மொழியால், தமிழ் இன உணர்வால், தமிழ்ப் பண்பாட்டால் தன்னார்வமாக ஒன்றுகூடும் நிகழ்வாக மிகச்சிறப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

இன்றைய கூட்டுப் பொங்கல் நிகழ்வில் கோலப் போட்டி, வீட்டு விலங்குகள் காட்சிப்படுத்தல் மற்றும் சிறுவர் பொழுதுபோக்கு நிகழ்வு தமிழ்க் கலை நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

அத்துடன் தமிழர் விளையாட்டுகள், பழம் பொறுக்குதல், இசை நாற்காலி, தடை ஓட்டம், உரி அடித்தல் (முட்டி உடைத்தல்), சாக்கு ஓட்டம், தேசிக்காய் ஓட்டம் , கிளித்தட்டு, கயிறு இழுத்தல், கபடி போன்றவை, சிறிய அளவிலான மத்தாப்புக் காட்சி போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந் நிகழ்வில் இளையோர்கள் மற்றும் பெரியவர்கள் பங்கு கொண்ட பொங்கல் நடனங்கள் உட்பட விசேட கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

அத்முடன் இந்நிகழ்ச்சியில் நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தில் 2024 இல், தமிழ் மொழியில் சித்தியடைந்த உயர்தர (HSC) மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



www.sangathamil.ca

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# மலேசியாவின் பினாங்கு மாநில அரச அதரவில்
# '11-வது உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு'

06.01.2025




பினாங்கு மாநிலத்தில் முதல் முறையாக 11-வது உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு ஜனவரி 4, 5 தேதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம்மாநாட்டில் பினாங்கு மாநில முதலமைச்சர் செள கோன் ய்யூ தொடங்கி வைத்து பினாங்கு மாநிலத்தில் தமிழர்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அதற்கு சாட்சிகள் இங்கிருக்கும் கட்டிடங்களும் கோயில்களும் என்றும் இது போன்ற மாநாடுகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றும் அவர் சிறப்புரை ஆற்றினார்.

துணை முதலமைச்சர் டத்தோ ஸ்ரீ திரு ஜக்தீப் சிங் கலந்து கொண்டு இந்தியாவிற்கும் மலேசியாவிற்கும் இருக்கும் தொடர்பு இன்னும் அதிகரிக்கும் என்று உரையாற்றினார்.

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு தலைவர் திரு செல்வகுமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார் உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் இந்த மாநாட்டில் உலகின் பல்வேறு நாடுகளில் வந்திருக்கக்கூடிய தமிழர்களை இணைப்பது பொருளாதாரம், வர்த்தகத்தில் முன்னேற்றுவது பெண்களுக்கு தலைமைத்துவத்தில் சிறந்து விளங்க அவர்களுக்கு வழிகாட்டுவதே மாநாட்டின் குறிக்கோள் என்று அவர் உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய பினாங்கு மாநில ஆட்சி குழு உறுப்பினர் டத்தோ ஸ்ரீ திரு சுந்தர்ராஜீ சோமு அவர்கள் மலேசியாவிற்கும் தமிழகத்திற்கும் உள்ள வரலாற்றுத் தொடர்பையும் வர்த்தக தொடர்பையும் வரலாற்று ஆதாரத்துடன் எடுத்துக்காட்டி இந்த மாநாடு அடுத்த ஆண்டும் பினாங்கு மாநிலத்தில் நடைபெற வேண்டும் என்று கோரிக்கை வைத்தார் மேலும் தமிழர்கள் மலேசியாவிற்கு வாழ வந்தவர்கள் அல்ல ஆள வந்தவர்கள் என்று சொன்னதும் மாநாட்டிற்கு வந்தவர்கள் தங்கள் கரங்களை தட்டி வரவேற்றனர்.

இந்த மாநாட்டில் ஆட்சி குழு உறுப்பினர் வாங் ஹான் வை பேசும்போது தமிழகத்திற்கும் பினாங்கிற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நேரடி விமான சேவை வர்த்தகத்தை மேலும் விரிவாக்கம் என்றும் இன்னும் பல புதுமைகளுக்கு இந்த மாநாடு வழிவகுக்கும் என்றும் பேசினார்.

பினாங்கு மாநிலத்தின் மேயர் டத்தோ ஸ்ரீ திரு ராஜேந்திரன் அவர்கள் தமிழ் வம்சாவளி அமைப்பை வாழ்த்தி தான் தமிழ் வம்சாவளி என்றும் கொஞ்சும் தமிழில் பேசி அனைவரது பாராட்டையும் பெற்றார்.

மாநாட்டில் தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு பால்வளத்துறை மற்றும் கதர் கிராம தொழில் துறை அமைச்சர் திரு ஆர் எஸ் ராஜ கண்ணப்பன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார் கிராம தொழில் சார்பாக அமைக்கப்பட்டிருந்த அரங்கையும் அதில் தமிழக கிராமத்தில் செய்யப்பட்ட பொருட்கள் விற்பனைக்கு இருக்கிறது வாங்கி பயனடையுங்கள் என்று சொன்னார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவர் திருமாவளவன் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றினார். தமிழர் வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் திரு வேல்முருகன் அவர்கள் தான் பேசுகின்ற போது உலகத் தமிழர்கள் அனைவரையும் ஒன்றாக பார்ப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது என்றும் புலம் பெயர்ந்த தமிழர்கள் இன்னும் சிறந்து வாழ வேண்டும் என்று வாழ்த்தினார்.

கட்சி தலைவர் திரு.ஈஸ்வரன் அவர்கள் தான் ஒரு பொறியியல் பட்டதாரி என்றும் உலகத்தில் இருக்கக்கூடிய தமிழர்கள் முக்கியமாக கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் விவசாயத்தின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறினார்.

இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு நவாஸ் கனி அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

வி ஐ டி பல்கலைக்கழகத்தினுடைய வேந்தர் திரு விஸ்வநாதன் அவர்கள் 50 ஆண்டுகளுக்குப் பிறகு தான் பினாங்கிறுக்கு வந்திருப்பதாகவும் அசுர வளர்ச்சியை பார்ப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது என்றும் தன் பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.

இரண்டாம் நாள் வர்த்தக நிகழ்வில் நூற்றாண்டு பழமை மிக்க மலேசிய பினாங்கு வர்த்தக சங்கத்தின் தலைவர்டத்தோஸ்ரீ பார்த்திபன் அவர்கள் தலைமை உரை ஆற்றினார். மலேசிய இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவர் டத்தோ ஸ்ரீ கோபால கிருஷ்ணன் நாராயண சாமி அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

வி ஐ டி பல்கலைக்கழக துணைவேந்தர் திரு செல்வம் அவர்கள் பேசுகின்ற போது ரத்தன் டாடா அவர்களின் மகத்தான சேவைகளை நினைவு கூற வேண்டும் என்று பேசினார்.

இரண்டு நாள் நடைபெற்ற இந்த மாநாட்டில் இரண்டாவது நாள் மலேசிய வர்த்தக சங்கமும் இந்திய வர்த்தக சங்கமும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து கொண்டார்கள் இது தொழில் மிகப் பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்றும்

இந்த ஒப்பந்தத்தை மலேசியா வர்த்தக சங்கத்தின் தலைவர் திரு பார்த்திபன் அவர்களும் திரு செல்வகுமார் அவர்களும் கையொப்பம் இடும்போது தமிழக பால்வளத்துறை அமைச்சர் திரு ராஜ கண்ணப்பன் ஸ்ரீ சுந்தரராஜு மற்றும் சிறப்பு விருந்தினர்கள் அனைவரின் முன்னிலையிலும் ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்டது.

உணவு இடைவேளைக்கு பிறகு சென்னையில் இருந்து வந்திருந்த தொழில் நிறுவனங்கள் தங்களது தொழில் நிறுவனங்களை பற்றிய காணொளியை ஒளிபரப்பி விளக்கினார்கள்.

பிற்பகல் 3 மணிக்கு மேல் நடைபெற்ற மகளிர் தலைமைத்துவம் மாநாட்டில் ஆஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்த டாக்டர் சந்திரிகா சுப்பிரமணியம் அவர்கள் மற்றும் மலேசிய வர்த்தக மகளிர் பிரிவு தலைவி ஹேமலா அவர்கள் சென்னையைச் சேர்ந்த மனநல ஆலோசகர் சுஜிதா மற்றும் விழாவில் தமிழகத்தின் ஐஏஎஸ் அதிகாரியான திருமதி மகேஸ்வரி ஐஏஎஸ் கலந்துகொண்டு பெண்கள் தலைமைத்துவத்தை அடைந்தாலும் குடும்பம் ஒழுக்கம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தருவது குறித்து சிறப்புரை சிறப்புரை ஆற்றினார். முன்னாள் பிரதமத்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ தேவமணி அவர்கள் மகளிர் மேம்பாட்டு தலைமைத்துவ மாநாட்டை துவக்கிவைத்து சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கு நன்றியுரை கவிஞர் ரவி பாரதி வழங்கினார் மேலும் இந்த இரண்டு நாள் நிகழ்ச்சிகளை ஜான் தன்ராஜ் அவர்கள் தொகுத்து வழங்கினார். இம்மாநாட்டில் வர்த்தக கண்காட்சியை அநேகர் பார்த்து மகிழ்ந்தனர் மேலும் இரண்டு நாட்கள் நடைபெற்ற விழா நாங்கள் நாட்களில் மறக்க முடியாத நிகழ்வு என்று பினாங்கு வா தமிழர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்





















AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used & new Walk in Cooler Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643




AR GROUP
ARASAN RAJADURAI
Real Estate & Developments Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd Pickering, ON L1V 1B4 CA




Build Your Dream Home
SABESAN
உங்கள் அனைத்து வீட்டு வேலைகளிற்கும் அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum) warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour Wind resistance
Termite Proof
Compare Traditional Building Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்தபடி மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா? அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# எனது சுமைகளைத் தாங்கிய இலட்சியத் தோழன்

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



மனதின் ஆழத்து உணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்க முடியாது. எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அனவது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்து ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரு இலட்சியப் பற்றுணர்வில் ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்துகொண்ட அனுபவத்தில் ஒருவரை ஒருவர் ஆழமாக இனம்கண்ட புரிந்துணர்வில் வேரூன்றி வளர்ந்த நேயம் அது. அவனுள் ஓர் அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன். அது அவனது ஆழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால் அவன் ஓர் அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும் எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது. கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அனவது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையாய் எமது தேசமே விழித்துக்கொண்டது.

கிட்டு, நீ சாகவில்லை;

ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்.


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24 EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ
25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu




# தமிழீழ நினைவோடு...

தளராத துணிவோடு களமாடினாய் - இன்று
தமிழீழ நினைவோடு படகேறினாய்
அழகான திருமேனி தணலானதோ? இந்தி
அதிகாரம் உனக்கிங்கு எமனானதோ

நீநடந்த பாதையெங்கும் பூ மலர்ந்தது - தமிழ்
ஈழமெங்கும் உந்தனது பேர்கலந்தது
தாயகத்து போர்க்களத்தில் நீ முழங்கினாய் - தம்பி
தானையிலே தளபதியாய் நீ விளங்கினாய்.

அமைதிதேடி வந்தபுறா சிறகிழந்தது - கொடும்
அரக்கர்களின் அம்புபட்டுத் துடிதுடித்தது
இமயநாடு உந்தனுக்குக் குழிபறித்தது ... உன்னை
இழந்ததினால் எங்கள் நெஞ்சு பதைபதைக்குது

பாசத்தோடு ஈழமக்கள் நெஞ்சை ஆளுவாய் - பிர
பாகரனின் தம்பியாகி என்றும் வாழுவாய்
ஆசையோடு தேசம்காண வந்தவீரனே! - கிட்டு
அண்ணன் என்ற பேரெடுத்த எங்கள் தேவனே!

-புதுவை இரத்தினதுரை
14.01.1994




# விடுதலைப் போராட்ட வரலாற்றில் தளபதி கிட்டு ஓர் அத்தியாயம்





கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு' இது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தளபதி கிட்டுவைப் பற்றி கூறியதாகும்.

உலகின் சரித்திரம் காலத்திற்கு காலம் உருவாகும் சாதனையாளர்களின் சரித்திரமாகவே அமைகின்றது. அவ்வாறே ஒரு நாட்டின் வரலாறாக இருந்தாலென்ன, ஓர் இனத்தின் வரலாறாக இருந்தாலென்ன, ஓர் போராட்டத்தின் வரலாறாக இருந்தாலென்ன, அதில் சாதனையாளர்கள் சரித்திரத்தில் இடம் பெருபவர்களாக இருக்கின்றார்கள்.

இந்தவகையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில், தமிழீழத்தின் வரலாற்றில் ஏன் தமிழினத்தின் வரலாற்றிலேயே இடம்பெறக்கூடிய அளவிற்கு சாதனைகள் பல புரிந்தவர் கேணல் கிட்டு.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அவர் முத்திரை பதிக்காத துறையே இல்லையென்பது மட்டுமல்ல போராட்டம் ஈட்டியுள்ள, ஈட்டிவரும் வெற்றிகள், சாதனைகள் என்ப்பவர்றை ஆரம்பித்து வைத்தவர் கேணல் கிட்டு என்றே கூறமுடியும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தால் சீறிலங்கா இராணுவத்தினர் வீதி வீதியாகத் திரிந்த காலத்தில் அவர்கள் மீது நடத்தப்பட்ட பல தாக்குதல்களில் பங்கேற்ற கேணல் கிட்டு, 1985ல் யாழ். மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின் வடமாகாணத்திலேயே பெரிய பொலிஸ் நிலையமாகிய யாழ். பொலிஸ் நிலையம் மீது தாக்கியழித்து, அங்கிருந்து நூற்றுக்கணக்கான ஆயுதங்களையும், ரவைகளையும் கைப்பற்றி போராட்டத்தில் ஒரு திருப்புமுனையை ற்ப்படுத்தியவர்.

அதன் பின் தளபதி கேணல் கிட்டு யாழ். குடாநாட்டிலிருந்த படை முகாம்களில் நிலைகொண்டிருந்த படையினரை முற்றுகையிட்டுத் தாக்கி, சிங்களப் படைகளை முற்றாக முகாம்களுக்குள் முடக்கி யாழ்ப்பாணக் குடாநாட்டை விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தவர்.

இம்முற்றுகையை உடைக்க பலமுனைகளில் பலமுறை முயன்ற சிறீலங்கா இராணுவத்திற்கு தகுந்த பதிலடி கொடுத்து இம் முயற்சிகளை முறியடித்தவர் தளபதி கிட்டு.

இவ்வாறான முற்றுகையால் ஆத்திரமடைந்த சிங்கள அரசாங்கம் யாழ். குடாநாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்து மக்களை அடிபணிய வைக்க முயன்றபோது, அதற்கு எதிரான போராட்டத்தை தளபதி கிட்டு ஆரம்பித்தார். கிராமிய உற்பத்திக் குழுக்களை ஆரம்பித்து சொந்தக் காலில் தமிழ் மக்கள் நிற்கமுடியும் என நிருபித்தவர் தளபதி கிட்டு.

அவ்வேளையில் சிங்கள இராணுவத்திடமிருந்து மட்டுமல்ல இனத்துரோகிகளிடமிருந்து, சமூக விரோதிகளிடமிருந்தும் தமிழீழ தேசத்தைப் பாதுகாக்க கேணல் கிட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் அவர்களின் செயற்பாடுகளை முறியடித்தன.

யாழ். குடாநாட்டில் சிறீலங்காப் பொலிசாரினது நடவடிக்கைகளை முழுமையாக முடக்கிய தளபதி கிட்டு, அங்கு இடம் பெற்ற சட்டவிரோதச் செயல்கள், சமூக ஒழுக்கமீறல்கள், சிறு பிணக்குகள் என்பவற்றை கடுப்பாட்டுக்குள் கொண்டுவர கிராமிய நீதிமன்றங்களை அமைத்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கொச்சைபடுத்தும் வகையில் மேற்கொண்ட பிரச்சாரத்தை முறியடிக்கவும் மக்கள் மத்தியில் விடுதலை உணர்வை வளர்க்கவும், வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, நாடகம் போன்ற கலைவடிவங்களை ஊக்குவித்ததுடன் களமுனைகளை ஆவணப்படுத்தி கலமுனைக்காட்சிகளை 'நிதர்சனம்' மூலம் மக்கள் மத்தியில் கொண்டு சென்றவர் கேணல் கிட்டு. அத்துடன் அவர் சிறந்த எழுத்தாற்றல் மிக்கவருமாவார். பல கள நிகழ்வுகளை எழுத்தில் அவர் கொண்டுவந்திருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை சிங்கள மக்களுக் கும், உலக மக்களுக்கும் புரியவைக்க கிடைத்த ஒவ்வொரு சர்ந்தப்பத்தையும் கேணல் கிட்டு பயன்படுத்தினார்.

யாழ். குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வேளை அங்கு வருகைதந்த அரசியல் தலைவர்கள், பௌத்த பிக்குகள் அனைவரோடும் உரையாடியும் 1986ம் ஆண்டு கார்த்திகை 10ம் நாள் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டிருந்த சிறீலங்கா



இராணுவத்தினரை விடுவிக்க எடுத்த நடவடிக்கையின்போது தனது அரசியல் ஆற்றலை கேணல் கிட்டு வெளிப்படுத்தினார்.

ஆயுதப் போராட்டத்தைச் சிறப்பாக நடத்திக்கொண்டிருந்த அதேவேளை மக்களை அணிதிரட்டி, போராட்டங்களை நடத்துவதிலும் கேணல் கேட்டு சிறந்தவராகவே விளங்கினார். 1986 கார்த்திகை தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ்நாட்டில் இந்திய அரசுக்கு எதிராகச் சாகுவரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தபோது தமிழீழ மக்களை அணிதிரட்டி மிகப்பெரிய கண்டன ஊர்வலத்தையும் பொதுக்கூட்டத்தையும் நடத்திக் காட்டியவர் கேணல் கிட்டு.

கேணல் கிட்டு 1987ல் தேசவிரோதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இடதுகாலை இழந்தபோது மக்கள் அடைந்த துன்பத்துக்கு அளவேயில்லை. சிங்கள இராணுவத்தை தெருவழியே திரிய விடாது முகாம்களுக்குள் முடக்கி வைத்திருந்த தளபதி கிட்டு மீது மக்கள் அளவிடமுடியாத அன்பு வைத்திருந்தார்கள். இந்தச் சம்பவத்தின் பின் 1987 வைகாசி (மே) தினத்தன்று விடுதலைப் புலிகள் நல்லூரில் நடத்திய மேதின நிகழ்வின்போது கிட்



டண்ணா உரையாற்ற வருகிறார் என அறிவிக்கப்பட்டபோது மக்கள் கொண்ட மகிழ்ட்சிக்கு அளவேயில்லை. அங்கு திரண்டிருந்த இலட்சக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் கிட்டண்ணா வந்த வாகனம் கடலில் ஒரு படகுபோல மிதந்து வந்தமையே மகளின் மகிழ்ச்சிக்குச் சான்றாக அமைந்தது.

பின்னர் 1989ல் விடுதலைப் புலிகளின் வெளிநாடுப் பிரிவிற்குப் பொறுப்பாளராக பதவியேற்று வெளிநாடுகளில் அவர் புரிந்த பணிகள் அளப்பெரியவை. அவர் வெளிநாட்டுப் பிரிவுப் பொருபாளராகிய பின் அங்கு போராட்டத்திற்கு ஆதரவான செயற்பாடுகள் துரிதமடையத் தொடங்கின. இன்று தமிழீழப் போராட்டத்தில் வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்களும், தமிழ் மக்களும் பிற நாட்டுமக்களும் காட்டும் ஈடுபாட்டுக்கும், பங்களிப்புக்கும் கிட்டண்ணா ஆரம்பித்து வாய்ந்த செயற்பாடுகளே காரணம் எனலாம்.

இவ்வாறு சகல துறைகளிலும் சாதனை படைத்த தளபதி கேணல் கிட்டுவின் வீரச்சாவும் முற்றிலும் வேறுபாடான சரித்திர நிகழ்வாகவே அமைந்துவிட்டது.

மேற்குலக நாடுகள் சிலவற்றின் முன்முனைப்புடன் தமிழீழ மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத்திட்டம் குறித்த ஆலோசனைகளுடன் சர்வதேச கடல் வழ்யூடக தமிழீழம் நோக்கி வந்துகொண்டிருந்த தளபதி கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் இந்தியாவின் நாடகாறிக் கப்பல்கள் 1993 தை 13ம் திகதி சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து வழிமறித்தன. பின்னர் இந்தியக் கரைநோக்கிக் கபளைச் செலுத்தும்படி நிர்ப்பந்தித்தன.

கேணல் கிட்டு தமிழீழம் நோக்கி வங்கக்கடல் வழியாகப் பயணம் செய்கிறார் என்ற செய்தியும், மேற்குலக சமாதான முயற்சியின் தூதுவனாக அவர் பயணம் செய்கிறார் என்றும் இந்திய அரசுக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் அக் கப்பலை வழிமறிக்கும்படி அன்றைய இந்திய அரசு கட்டளையிட்டது.

தை 15ம் திகதி இந்தச் செய்தி உலகமெங்கும் பரவிவிட்டது. கிட்டுவை உயிருடன் பிடிக்கவேண்டும் அல்லது அவரை அழிக்கவேண்டும், மேற்குலகின் சமாதான முயற்சியைக் குழப்ப வேண்டும் என அன்றைய இந்திய அரசாங்கம் முடிவெடுத்தது.

சர்வதேசக் கடற்பரப்பிலிருந்து இரண்டு நாள் கடற்பயணத்தின் பின் கேணல் கிட்டுவும் தோழர்களும் பிரயாணம் செய்த கப்பல் சென்னைத் துறைமுகத்துக்கு நேரே இந்தியக் கடல் எல்லை வரை கொண்டுவந்து, சரணடையும் படியும் மறுத்தால் கப்பல் முழ்கடிகக்ப்படும் எனவும் இந்தியக் கடற்படை எச்சரித்தது. சரணடைந்தால் தம்மீது பொய் வழக்குகள் சுமத்தப்பட்டு தமது இயக்கம் மீதும், போராட்டம் மீதும் களங்கம் சுமத்த அன்றைய இந்திய அரசு முயற்சிக்கும் என்பதை உணர்ந்துகொண்ட கேணல் கிட்டு கப்பல் சிப்பந்திகள் அனைவரையும் கப்பலை விட்டு இறக்கியபின் கப்பலை வெடிக்கவைத்துத் தகர்த்து தன் தோழர்களுடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் ஒரு சாதனை



வீரராகியவர் தளபதி கேணல் கிட்டு, போராட்டத்தின் ஒவ்வொரு துறையிலும் அவர் நாட்டிய விதைகளே இன்று விருசமாக வளர்ந்து போராட்டச் சோலையை நிறைத்து நிழல் தருகின்றன. அவர் போராட்ட வரலாற்றில் ஓர் அத்தியாயம்.

எரிமலை (தை 2001) இதழிலிருந்து .

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.






# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வ

# முல்லைத்தீவு முள்ளியவளைப் படுகொலை 16.01.1985



முள்ளியவளைக் கிராமம் முல்லை, மருத நிலங்கள் சூழ்ந்த வளங்கொழிக்கும் பிரதேசமாகவும் பாரம்பரிய கலை, பண்பாடு என்பன சிறப்பாகவுள்ள பிரதேசமாகவும் வவுனியா — முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த அரச படைகள் 16.01.1985 அன்று தைத்திருநாளின் மறுதினமான கால்நடைகளுக்கு மக்கள் நன்றி செலுத்துகின்ற (மாட்டுப் பொங்கல்) தினத்தன்று அதிகாலை 4.00 மணியளவில் முள்ளியவளைக் கிராமத்தைச் சுற்றிவளைத்தன.

முள்ளியவளைப் பிரதேச மக்கள் வழமை போலவே அதிகாலைப் பொழுதில் தமது காலைக்கடன்களில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தான் தமது பிரதேசம் இராணுவத்தின் சுற்றிவளைப்பிற்கு உட்பட்டிருப்பதை உணர்ந்தார்கள். சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் முள்ளியவளைப் பிரதேசத்தில் ஊடுருவி அங்கிருந்து ஏழு மாதக் கர்ப்பிணிப் பெண் மூன்று பிள்ளைகளின் தாயார் ஆகிய இரண்டு பெண்கள் உட்பட பதினேழு பேரைக் கைது செய்ததுடன, இவர்களின் வாழ்விடங்கள் பலவற்றையும் தீக்கிரையாக்கிச் சென்றனர். சிறிது நேரத்தில் (அரை மணி) சரமாரியான சூட்டுச் சத்தங்கள் கேட்டதை உறவினர்கள் அவதானித்தனர். சிறிது நேரத்தில் (அரை மணி) சரமாரியான சூட்டுச் சத்தங்கள் கேட்டதை உறவினர்கள் அவதானித்தனர். பிடித்துச் செல்லப்பட்டவர்களின் உறாவினர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு பதினேழு பேரும் உயிரிழந்து விட்டார்கள் எனும் செய்தி பரவத்தொடங்கியது.

சிறிது நேரத்தில் இராணுவ வாகனங்கள் முல்லைத்தீவை நோக்கி நகர்ந்தன. உறவினர்கள் தமது உறவுகளை ஒவ்வொரு வாகனங்களாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். ஒரு வாகனத்தில் மட்டும் சைக்கிள்கள், பொருட்கள் ஏற்றப்பட்டு இராணுவத்தினர் சென்றதைக் கண்ட உறவினரால் அதற்குள் உயிரிழந்தவர்கள் உடலங்கள் இருப்பதை அறியமுடியாமற் போனது.

அன்றையபொழுது மறைந்து மறுநாளும் தமது உறவினர்கள் வீடு திரும்பாத நிலையில் ஊரிலிருநத் சமாதான நீதவான் திரு.தியாகராசா என்பவருடன் முல்லைத்தீவு இராணுவ முகாமிற்குச் சென்றிருந்த போது அங்கு இறந்தவர்களின் உடல்கள் வீசப்பட்டிருந்தன. அங்கே வீசப்பட்டிருந்த உடல்கள், உடைகள் அற்றும், கைகள், கால்கள், தலைகள் என்பன துண்டிக்கப்பட்டும், உடல்களில் காயங்கள் பல ஏற்படுத்திக் கொலை செய்யப்பட்டும் இருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. அவற்றுள் கொலை செய்யப்பட்டிருந்த கர்ப்பணிப் பெண்ணின் இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் குழந்தை சுமந்த வயிற்றுப் பகுதி எரிக்கப்பட்டு சிசு பரிதாபமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்ததையும் காண முடிந்தது.

மற்றைய பெண்ணின் உடல் சிகரட் சூட்டுக் காயங்களுடன், அடையாளம் தெரியாத வகையில் துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்ததையும் கண்ணுற்று அனைவரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். உறவினர்கள் அவ் உடல்களை இராணுவத்தினரிடமிருந்து தமக்கு தருமாறு கேட்ட வேளை கொல்லப்பட்டவர்கள் பயங்கரவாதிகளென கையொப்பமிட்டுத் தந்தால் மட்டுமே உடல்களை தருவோம் எனக்கூறி இராணுவம் மிரட்டியபோது மக்கள் அதனை ஏற்க மறுத்தனர். இதனால் இராணுவத்தினர் உடல்களை மக்களிடம் ஒப்படைக்காது தாமே அவ் உடல்களுக்குத் தீயிட்டனர்.

***இச்சம்பவத்தில் தனது கணவரையிழந்த தவரத்தினம் திலகவதி சம்பவம் பற்றிக் கூறியதாவது:***

“அதிகாலை 4.30 மணியளவில் வீடுகளுக்கு வந்த இராணுவத்தினர் சில பெண்களோடு எனது கணவர், மகன் உட்பட பதினேழு பேரைக் கைது செய்ததுடன், சிலரது வீடுகளை எரித்து சொத்துக்களையும் சூறையாடினர். பின் கைது செய்தவர்களை அருகிலிருந்த காடு நோக்கிக் கொண்டு சென்றனர். பின் பல சூட்டுச் சத்தங்கள் கேட்டது. அதன்பின் இராணுவத்தினரின் வாகனங்கள் முல்லைத்தீவு நோக்கிச் சென்றன. அதில் கொல்லப்பட்டவர்களின் உடல்களையும் படுகாயமடைந்தவர்களின் உடல்களையும் அதன்மேல் சைக்கிள்கள் மற்றும் பொருட்களையும் ஏற்றி எடுத்துச் சென்றனர்.

அடுத்தநாள் சமாதான நீதவானுடன் முல்லைத்தீவு சென்று பார்த்தபோது எல்லோரும் படுகொலை செய்யப்பட்டு உடலில் ஒரு துணி இல்லாத சடலங்களாகக் கிடந்தது. அவர்களது உடலை எடுத்துச் செல்லக்கேட்டபோது அவர்களைக் கொட்டி (புலிகள்) என்று கையெழுத்திட்டாலே கொண்டு போகமுடியும் என்றனர். அவர்கள் எல்லோரும் பொதுமக்கள் தவறாக கையெழுத்திட்டு உடல்களை பெற விரும்பாததால், அங்கு விட்டுவிட்டு வந்தோம்.”

***16.01.1985 அன்று முள்ளியவளைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. நாகரெட்ணம் ஸ்ரீஸ்கந்தராசா
02. குமாரசாமி விஜயகுமாரி (வீட்டுப் பணி)
03. பிலிப்பையா அன்ரன்யோகராசா (வயது 17 — கடற்தொழில்)
04. தம்பையா விவேகானந்தம் (மாணவன்)
05. மார்க்கண்டு தெட்சணாமூர்த்தி (வயது 19 — கடற்தொழில்)
06. செல்லத்துரை நவரட்ணம் (விவசாயம்)
07. செல்லத்துரை குமாரசாமி (விவசாயம்)
08. சுப்பன் சின்னன்
09. சின்னன் அன்னலட்சுமி (வீட்டுப் பணி)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெற முடியவில்லை.

# வவுனியா காத்தார் சின்னக்குளப் படுகொலை 17.01.1989

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேசசெயலர் பிரிவில் எல்லைப்புறக் கிராமமாகக் காத்தார் சின்னக்குளம் அமைந்துள்ளது. இங்கு வாழுகின்ற மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். இக்கிராமத்திற்கு அருகிற் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்களால் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் நாள்தேறும் பல இன்னல்களை அனுபவித்து வந்தார்கள்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்த பின்னர் 17.01.1989 அன்று காலை 9:00 மணியளவில் இந்திய இராணுவத்தினர் கிராமத்துக்குள் திடீரென நுழைந்ததை உணராத மக்கள் தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவ் இந்திய இராணுவத்தினர் மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் காலை உணவு எண்டுகொண்டிருந்தவர்கள், விவசாய அறுவடையில் ஈடுபட்டிருந்தவர்கள், கார்ப்பிணித்தாய், சிறுவர்கள் என இச்சம்பவத்தில் பதின்நான்கிற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் காயமடைந்தனர். பல வீடுகள் எரியூட்டப்பட்டன.

***17.01.1989 அன்று வவுனியா காத்தார் சின்னக்குளப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. இராசைய மேகவா்ணன் (44)
02. இராமசாமி மருதமுத்து (-)
03. இராசலிங்கம் முத்தையா (75)
04. குப்பன் சின்னையா (75)
05. கறுப்பழகு சரஸ்வதி (32)
06. தர்மலிங்கம் சுந்தரலிங்கம் (14)
07. மாணிக்கம் செல்லம்மா (60)
08. மீனா சுப்பையா
09. அனுமந்து சுப்பிரமணியம்
10. அழகன் வீரையா
11. பொன்னுச்சாமி கறுப்பையா (36)
12. பெருமாள் மீனா (67)
13. பெருமாள் சின்னதம்பி (22)
14. சுப்பிரமணியம் (54)
15. சுப்பையா சின்னத்தம்பி (-)

காயமடைந்தவா்களின் விபரம்:

1. பஞ்சலிங்கம் நந்தினி
2. பஞ்சலிங்கம் தவமணி
3. சின்னமுத்து ஆறுமுகம்

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



காத்தார் சின்னக்குளப் படுகொலை 17 சனவரி 1989



# கிளிநொச்சி தொடருந்து நிலையப் படுகொலை - 25.01.1986




கிளிநொச்சி மாவட்டத்தின் மையமாக விளங்குவது கிளிநொச்சி நகரமாகும். இம்மாவட்ட மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், பொருட்களைக் கொள்வனவு செய்வதற் காகவும் நகருக்கு வருவதனால், கிளிநொச்சி நகரம் ஒரு முதன்மையான இடமாக இருந்தது. பாடசாலை, சந்தை, தொட ருந்து நிலையம், வைத்தியசாலை மற்றும் கச்சேரி என்பன நகரத்திலே அமைந்திருந்தன.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள விடு தியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் நகருக்கு வரும் பொதுமக்களை விசாரித்தல், கைது செய்தல், அச்சுறுத்துதல் எனப் பல வழி களிலும் பொதுமக்களைத் துன்பப்படுத்திக் கொண்டிருந் தார்கள்.

1986 ஜனவரி இருபத்தைந்தாம் நாள் நண்பகல் 12.00 மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத் தினர் கிளிநொச்சி தொடருந்து நிலையத்திற்கு அருகில் தெற்குப் புறமாக நின்ற பாலை மரங்களுள் ஒளிந்திருந் தார்கள்.

அதேநேரம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகளை ஏற்றிவந்த தொடருந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் வந்து தரித்து நின்றது. பயணிகள் தொடருந்தில் ஏறிக்கொண்டிருந்த சமயம் மறைந்திருந்த படையினர் திடீரென பட பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடி னார்கள். ஏனையோர் தொடருந்து நிலையத் திற்குள்ளும், தொடருந்தின் இரு புறமும் படுத்துக் கொண்டார்கள். இச் சம் பவத்தில் நான்கு பெண்கள், இரண்டு சிறுவர்கள் உட்பட மொத்தம் பன்னிரண்டு பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார்கள்.

இச்சம்பவத்தில் காயமடைந்ததுடன், மனைவி யையும் மகனையும் இழந்த சின்னையன் நல்லையா என்பவர் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில்:



நான் விவசாயம் செய்து வருகின்றேன். எனக்கு நான்கு பிள்ளைகள். இராணுவத்தின் பிரச்சினையால் இடம்பெயர்ந்து அக்கராயன் எட்டாம் கட்டையில் ஒரு தேவாலயத்திற் போய் இருந்தோம். அதன்பின்னர் கிடைத்த ஒரு வீட்டில் வசித்து வந்தோம். எனது மனைவி ஆசிரியையாக இருந்ததால் கல்வித் திணைக்களத்திலிருந்து அநுராதபுரம் வேலைமாற்றல் கடிதம் வந்தது தைப்பொங்கல் முடிந்த பின்னர், 1986 ஆம் ஆண்டு தை மாதம் இருபத்தைந்தாம் திகதி திங்கட்கிழமை பேருந்து ஒன்றும் கிடைக்காததால், தொடருந்தில் செல்ல அங்கு வந் தோம்.

அதேநேரம் அங்கு பல இடங்களிலிருந்தும் வந்த மக்களும் நின்றிருந்தார்கள். சரியாக பகல் 12.00 மணியிருக்கும் வாங் குகளில் நாங்கள் இருக்கும்போது சந்தைக்குப் பக்கத்தில் வந்த ஒன்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் திருவேல் என்பவரை யும் அவரின் தகப்பனான கோழி வியாபாரியையும் சுட்டுவிட்டு தொடருந்துநிலைய வீதியால் வந்தார்கள். அந்த நேரம் நாங்கள் தொடருந்து நிலையத்தில் பயணிகள் ஏறும் இடத்தில் நின்றிருந்தோம். இராணுவத்தினர் அனைவரும் தோள்களில் துப்பாக்கியைக் கொழுவியிருந்தார்கள். நாங்கள் அனைவரும் பிரயாணம் செய்வதற்காக வந்தவர்கள் என்று பெரிதாகச் சொன் னோம். அப்போது அவர்கள் விரலைக் காட்டி உங்கள் எல்லோரையும் கொல்வோம் என்று சொல்லி முடிக்கு முன் னரே எம்மை நோக்கிப் திடீரென சரமாரியாகச் சுட்டார்கள். அந்த இடம் ஒரே வெளியாக இருந்ததால், நாங்கள் எங்கே செல் வதென்று தெரியாமல் தொடருந்து நிலையத்தில் பொருட்கள் வைக்கும் அறைக்குள் ஓடி ஒளிந்துகொண்டோம். எல்லோரும் அதிலேயே காயப்பட்டார்கள்.

அதன் பின்னர் என்ன நடந்ததென்று எதுவும் தெரியாது. ஒரு மணித்தியாலத்தில் பின்னர் 1.30 மணியிருக்கும் சரியான தாகமாக இருந்தது. தண்ணீர் தண்ணீர் என்று கத்தினேன். அந்த நேரம் எனக்கு மேல் இரண்டு பேர் இறந்து கிடந்தார்கள். அதனால் கை மற்றும் கால்களை எடுக்க இயலாது இருந்தது. எல்லா இரத்தமும் ஓடியதால் காதுகள் எல்லாம் அடைத்திருந் தது. திரும்பவும் தண்ணீர் தண்ணீர் எனக் கத்தியபோது எனது ஐந்து வயது மகன் சுவர்க்கரையாக இருந்து எழும்பினார். அவருக்குக் கையில் துப்பாக்கிச் சன்னம் பட்டு கை சிதைந்து போயிருந்தது. மற்றைய பக்கம் திரும்பிப் பார்த்தபோது அந்த மூலைக்குள் என்னுடைய மூன்றாவது மகன் இறந்த ஒரு பெண்ணின் மேல் தொங்கிக்கொண்டிருந்தார். எனது மனைவி எனக்கு நேராக விழுந்து கிடந்தார். ஏனைய மக்கள் ஆங் காங்கே விழுந்து கிடந்தார்கள். ஆனால் எத்தனை பேர் இறந்தார்கள் என்று தெரியாது. இன்னொரு பக்கத்தில் சாந்தபுரத்தைச் சேர்ந்த ஒருவர் காலிற் காயம் பட்டுக் கத்திக் கொண்டிருந்தார். அப்போது என்னுடைய மகன்தான் பானைக் குள்ளிருந்த தண்ணீரை எடுத்துத் தர அதைக் குடித்தேன். அதன் பின்னர் அப்படியே மயங்கிவிட்டேன். அதற்குப் பின்னர் என்ன நடந்ததென்று தெரியாது.

பின்னர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் முழித்துப் பார்த் தேன். அதன் பின்பு தான் என்னிடம் வந்த தாதிமார் நடந்தவற் றைச் சொல்லித்தான் எனது மனைவியும் பிள்ளையும் இறந்தது பற்றிக் கேள்விப்பட்டேன். இறந்த எனது மனைவி மற்றும் ஒரு மகனையும் என்னுடனேயே கொண்டு வந்திருந்தார்கள். ஆனால், இருவரும் இறந்ததால் உடனடியாக கிளிநொச்சிக்குக் கொண்டு போய் விட்டார்கள். எனது உடம்பெல்லாம் காயம்பட் டதனால் நான் தப்பமாட்டேன் எனப் பலரும் சொன்னார்கள். ஏதோ தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டேன். என்னால் அவர் களின் மரணச் சடங்கிற்கூடக் கலந்துகொள்ள முடியாத நிலை யில் அவாக்ளின் உடலை எனது மைத்துனர் தான் முறைபப்டி அடக்கம் செய்தார்.

இயங்க முடியாத நிலையில் இருந்தேன். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அனுப் பினார்கள். அங்கும் கையும் காலும் கழற்ற வேண்டும் என்றே சொன்னார்கள். பின்பு அதற்குச் சம்மதிக்காததால், நீண்ட நாட் களிற்குப் பின்பு உடல் தேறினேன். இப்பவும் என்னால் ஒரு தண்ணீர் வாளியைக் கூடத் தூக்கமுடியாத நிலையில் கஸ்ரப் படுகின்றேன். அந்தச் சம்பவத்திற்குப் பின்பு என் மகன்மார் தான் என்னைப் பார்க்கிறார்கள். முன்புபோல் வயல் வேலை கள் மற்றும் தோட்ட வேலைகளைச் செய்யவோ முடி யாத நிலையில் இருக்கிறேன். ஒவ்வொரு முறையும் வேதனைப படும் போதும் எமதினத்தின் விதியை நினைத்தே கவலைப் படுவேன்.

இச்சம்பவத்தில் காயமடைந்த சாந்தபுரத்தைச் சேர்ந்த அரு ணாச்சலம் ஆறுமுகம் சம்பவம் பற்றிக் கூறுகையில்:

என்னுடைய சொந்த ஊரான கண்டிக்குப் போய் 25.01.1986 ம் திகதி திரும்பி வந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் இறங்கி நின்றேன். அந்த நேரம் இராணுவத்தினர் தொடருந் தில் போவதற்கு நின்ற பொதுமக்கள் மீது திடீரெனச் சுட்டார்கள். தொடருந்து நிலையத்திற்குப் பின்புறமுள்ள கிணற்றடியில் நின்ற இரு இராணுவத்தினரே சுட்டார்கள். அப்போது எனக்கு சன்னங்கள் கையிலும் காலிலும் பட்டவுடன் நான் கீழே விழுந்து விட்டேன். எழும்ப முயற்சி செய்தபோது என்னால் முடியவில்லை. அப்போது தான் உணர்ந்தேன் எனது இரண்டு கையும் காலும் முறிந்து விட்டதென்று . கண்விழித்துப் பார்த்த போது வைத்தியசாலையிலிருப்பதைப் புரிந்துகொண்டேன். எனது காயத்திற்குச் சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. அடுத்த நாள் விடியற்காலை தான் பூரணமாக நினைவு திரும்பியது. அதன் பின் ஏன் இராணுவத்தினர் எம்மீது சுட்டார்கள் என வினாவிய போது துப்பாக்கிச் சூடு நடத்திய படைச் சிப்பாய்க்கு மூளை சுகமில்லை என்று அப்போது கிளிநொச்சியில் இராணுவத் தளபதியாக இருந்த கொப்பெக்கடுவ கூறியிருந்ததாகக் கூறினார் கள். ஆனால் இரண்டிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் எம்மீது தாக்குதல் நடத்திவிட்டு இவ்வாறு கூறியது தமிழர்களை அழிக்க வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுவதை உறுதிப்படுத்துகின்றது.

அரசாங்கம் இச்சம்பவம் தொடர்பாகப் பின்வருமாறு தெரி வித்தது.

“மனநோயாளியான படைச்சிப்பாய் சுட்டதில் கிளிநொச்சி தொட ருந்து நிலையத்தில் பொதுமக்கள் பலியானார்கள். இதற்காக அரசாங்கம் மன்னிப்புக் கோருகின்றது.” என்று கூறியதைத் தவிர அரசாங்கம் மேற்கொண்டு எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

25.01.1986 அன்று கிளிநொச்சி தொடருந்து நிலையப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. சோமசேகரம் ஜெயசீலன் (வயது 16 – மாணவன்)
02. தவராசா சின்னமணி (வயது 40 – வீட்டுப்பணி)
03. தவராசா சுகந்தினி (வயது 11 – சிறுமி)
04. துரைசாமி கதிர்காமு (வயது 18 – நீர்பாசனத் தொழிலாளி)
05. பாண்டியன் சிவகுரு (வயது 26 – வியாபாரம்)
06. குலசேகரம் தங்கம்மா (வயது 64)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மன்னார் வட்டக்கண்டல் படுகொலை – 30.01.1985

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கட்டுக்கரைக்குளக் கரையோரமாக விவசாய நிலப்பரப் புடன் வட்டக்கண்டல் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத் தவர்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள் ளனர்.

1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதி வட்டக்கண்டல் கிராமத்தில் வசித்து வந்த அப்பாவித்தமிழ் மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தின் தரைப்படையும், விமானப்படை யினரும் இணைந்து தாக்கினார்கள். 1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதி அதிகாலை 5.00 மணியளவில் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இருநூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மதவாச்சி வீதி வழியாக வந்து கட்டுக் கரைக் குளக்கரை வழியாக வட்டக்கண்டல் கிராமத்தில் நிலைகொண்டனர்.

பின்னர் காலை 6.30 மணிக்கு துப்பாக்கி பிரயோகம் செய்த வண்ணம் வட்டக்கண்டல் கிராமத்திலுள்ள வீடுகளுக்குள் புகுந்து எதிர்ப்பட்டவர்களையெல்லாம் சுட்டும் கூரிய ஆயதங் களாலும் தாக்கினர். அவ்வேளையில் விமானப்படையின் உலங்குவானூர்த்தி மக்கள் குடியிருப்புக்களைத் தாக்கியது. பின்னர் வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலைக்குள் பல இராணுவத்தினர் புகுந்து அங்கு கல்விச்செயற்பாட்டில் ஈடுபட்




டுக்கொண்டிருந்த அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர் கள் உட்பட பதினெட்டுப் பேரைச் சுட்டுக்கொன்றனர்.

இச்சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஏனைய இராணுவத்தினர் வயல்களில் வேலை செய்து கொண்டிருந் தவர்களையும், வீதிகளில் நடமாடியவர்களையும், ஆண்கள் பெண்கள் என்ற பேதமின்றிச் சித்திரவதைக்கு உள்ளாக்கிச் சுட்டார்கள். பின்னர் வீடுகளினுள் புகுந்து தனித்திருந்த பெண் களைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினார்கள் இரா ணுவத்தினர் ஆறு மணித்தியாலத்திற்கு மேலாக மக்கள் மீது நடாத்திய தாக்குதல் பிற்பகல் 2மணிவரை தொடர்ந்தது பின் சடலங்களில் சிலவற்றை பொதுமக்களைக் கொண்டு பொது மக்களின் வாகனங்களில் ஏற்றிக்கொண்டு தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர். இராணுவம் கிராமத்தினை விட்டுச் சென்றதன் பின்னர் அயற்கிராமத்தவர்கள் இறந்தவர்களின் உடல்களை தேடியெடுத்து அடக்கம் செய்ததுடன், காயப்பட் டவர்களை வைத்தியசாலைக்கும் எடுத்துச்சென்றனர். இராணுவத்தின் திட்டமிட்ட பொதுமக்கள் மீதான தாக் குதலினால் ஐம்பத்திரண்டு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். நாற்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

***சம்பவத்தை நேரில் கண்ட மன்னார் வட்டக்கண்டலைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை தெரிவிக் கையில்:***



"1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதியன்று காலை 6.00 மணிதொடங்கி இராணுவத்தினரின் துப்பாக்கிச் சத்தம் கேட்டபடியிருந்தது. எங்களுடைய வீடு பிரதான வீதியிலிருந்து சற்றுத் தொலைவிலிருந்தது ஓடிவந்த மக்கள் என்ன காரண மெனத் தெரியாது இராணுவத்தினர் சுட்டுக்கொண்டு வருகிறார் கள் எனக் கூறியவாறு எங்கள் வீதி வழியாக ஓடினார்கள். பின்னர் அவர்களுடன் சேர்ந்து நாங்களும் ஓடினோம். இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் பாடசாலை அதிபரும் இரண்டு ஆசிரியர்கள் மற்றும் வீதியாற் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் சிலரும் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்திற் பங்குகொண்ட இராணுவத்தினர் அனைவரும் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து யு – 14 என்று சொல்லப்படும் மன்னார் – மதவாச்சி வீதியால் கட்டுக்கரைக்கு வந்து பெரிய உடைப்பு அணைக்கட்டைக் கடந்து வண்டக்கண்டற் கிராமத் திற்கு வந்து இந்த அட்டூழியங்களைப் புரிந்தனர். இச்சம்பவத்தின் போது மொத்தமாக நாற்பத்தெட்டு அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள். இவர்கள் அனைவரினதும் மரணப் புத்தகங்களில் மரணத்திற்கான காரணம் இராணுவத்தால் சுடப்பட்டு இறப்பு என்றே பதியப்பட்டு வழங்கப்பட்டுள்ளது."

***30.01.1985 அன்று வட்டக்கண்டல் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. பொன்னர் பொன்னப்பன - ராசா (வயது 30 – மீன்பிடி)
02. சந்தான் தொம்மைமியேஸ் (வயது 28 – விவசாயம்)
03. சவிரியான் அல்போன்ஸ்பறுலா (வயது 25 – விவசாயம்)
04. மடையப்பன் பாண்டியப்பன் (வயது 24 – கமம்)
05. முத்தண்ணதேவர் நடராசா (வயது 39)
06. முருகேசு தம்பிப்பிள்ளை (வயது 55)
07. இராசு செல்வராசா (வயது 30 – சாரதி)
08. கன்னிக்கவுண்டர் சுந்தரலிங்கம் (வயது 23 – விவசாயம்)
09. கறுப்பையா ஜெயரத்தினம் (வயது 25)
10. பிறஞ்சி கைத்தான் (வயது 27 – கமம்)
11. பிறஞ்சி சாமிநாதன (வயது 37 – கமம்)
12. திருமால் ராமச்சந்திரன் (வயது 26)
13. மனுவல் பீற்றர் சாள்ஸ் (வயது 45)
14. அலெக்சாண்டர் பர்ணாந்து (வயது 72)
15. அருணாசலம் சுந்தரமூர்த்தி (வயது 45)
16. செபமாலை பெனான்டோ (வயது 21 – வியாபாரம்)
17. செல்லையா இராமசாமி (வயது 35 – விவசாயம்)
18. வெள்ளைச்சாமி முத்துராசா (வயது 20 – விவசாயம்)
19. செல்லையா இராமசாமி (வயது 30)
20. வெங்கடாச்சலம் தேவராஜ் (வயது 34 – கமம்)
21. வெள்ளைச்சாமி முத்துராசா (வயது 35)
22. ஞானப்பிரகாசம் செபமாலை (வயது 22 – கமம்)
23. சந்தியோகு அந்தோனி (வயது 40 – கமம்)
24. சுப்பன் பழனி (வயது 42)
25. சுப்பிரமணியம் சண்முகநாதன் (வயது 33 – தொழிலாளி)
26. சின்னையா சேருவராஜன் (வயது 33 – தொழிலாளி)
27. சிறிகோரி ரெட்ணதுரை (வயது 32)
28. ராமன் தங்கராசா (வயது 56)
29. ராமசாமி அற்புதராசா (வயது 19)
30. இராமன் தங்கராசா (வயது 35 – விவசாயம்)
31. இராமச்சந்திரன் தெய்வேந்திரன் (வயது 18 – விவசாயம்)
32. இராமசாமி செல்வராசா (வயது 27 – விவசாயம்)
33. முத்துச்சாமி சத்தியசீலன் (வயது 42 – விவசாயம்)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# கொக்கட்டிச்சோலைப் படுகொலை 28.01.1987







இலங்கையின் கிழக்குப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. இங்கு இயற்கைவளம் நிறைந்த பகுதியாக கொக்கட்டிச்சோலை அமைந்துள்ளது. அத்துடன் பெயர் பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயம், மீன்பிடி அத்துடன், இறால் வளர்ப்பு என பனவாகும்.

இக்கிராமத்தின் மீது 28.01.1987 இல் சிறீலங்கா இராணுவத்தின் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. கொண்ட வெட்டுவான், களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, கல்லடி ஆகிய இடங்களிலிருந்து கவசவாகனங்களுடன் முன்னேறிய இராணுவத்திற் குண்டுவீச்சு விமானங்களும் உலங்குவானூர்திகளும் மேலதிக உதவித் தாக்குதல்களை வழங்க கொக்கட்டிச்சோலை கிராமத்தினுள் நுழைந்த படையினர் அம்மக்களை மிகமோசமாகத் தாக்கிச் சித்திரவதை செய்ததுடன், படுகொலைகளையும் செய்தனர். இதில் குறிப்பாக அமெரிகக் நிதி உதவி, கண்காணிப்புடன் மகிழடித்தீவு இறால் பண்ணை இயங்கி வந்தது. இங்கு பெருமளவு ஏழை மக்கள் வேலை செய்து வந்தனர். அங்கு வேலை செய்த நூற்றுமுப்பத்தைந்து பொது மக்களை வெட்டியும் சுட்டும் படுகொலை செய்து இறால் பண்ணைக்குள்ளேயே போட்டதால் இறால் பண்ணை மனித உடல்களை கொண்ட இரத்தப் பண்ணைகளாக காட்சியழித்தது. அத்துடன் கொக்கட்டிச்சோலை அரிசியாலையில் தஞ்சமடைந்திருந்த இருபத்துநான்கு பேரும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

இதில் 12 வயது நிரம்பிய 7 சிறுவர்களும் உள்ளடங்குவார்கள். இதில் குறிப்பாக பன்னிரண்டு வயது தொடக்கம் நாற்பது வயதிற்குட்பட்ட இருநூறிற்கு மேற்பட்டவர்கள் அடையாளங் காணப்பட்டு சித்திரவதைகளின் பின் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் பலர் காயப்படுத்தப்பட்டனர்.

மேலும் அம்பிலாந்துறை என்ற கிராமத்தில் நாற்பத்தைந்து பொதுமக்களை கொன்ற இராணுவத்தினர் அவர்களின் உடல்களை தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் உட்பட பல தொடர் படுகொலைச் சம்பவங்கள் 28,29,30 .01.1987 ஆகிய மூன்று நாட்களிற்குள்ளும் கொக்கட்டிச்சோலையிலும் அதன் அயல் கிராமங்களிலும் நடந்தேறியது.

***28.01.1987 அன்று கொக்கட்டிச்சோலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. இ. உதயகுமார்
02. இ.கமலாதேவி
03. இ.கணேசமூர்த்தி
04. இ.தங்கம்மா
05. இ.தங்கவேல்
06. இ.மேகலிங்கம்
07. இ.வேலாப்பொடி
08. இ.சிவபாதம்
09. இராசரெத்தினம் தம்பிராசா
10. டி.ராஜினி
11. ந.இன்பராசா
12. ந.குழந்தைவேல்
13. ந.யோகேஸ்வரி
14. ந.கோபாலப்பிள்ளை
15. ந.சுப்பிரமணியம்
16. ந.சுவாஜினி
17. நா.விநோதகுமாரி
18. கு.ரூபவதனி
19. க.யுகாமினி
20. க.உலகநாதன்
21. க.நாகராசா
22. கு.நிசாந்தன்
23. கு.நறுமலாதேவி
24. க.நல்லம்மா
25. க.கந்தையா
26. அ.சத்தியானந்தம்
27. க.கந்தப்பெருமாள்
28. க.கஜேந்திரன்
29. க.கிருஸ்ணபிள்ளை
30. க.பாலச்சந்திரன்
31. க.புவனேஸ்வரி
32. க.பரமேஸ்வரி
33. க.மலர்விழி
34. க.கோபாலப்பிள்ளை
35. க.தெய்வநாயகம்
36. க.சோமசுந்தரம்
37. க.சௌந்தரராசா
38. க.சௌந்தரராஜன்
39. க.ஞானமுத்து
40. கு.சந்திரசேகரம்
41. கு.சுகந்தன்
42. க.சுப்பிரமணியம்
43. கு.சாந்தலிங்கம்
44. கு.சுதாகரன்
45. க.சுவேஜினி
46. க.சின்னத்தம்பி
47. கு.சிவமணி
48. கு.விகாந்தன்
49. க.ரவீந்திரன்
50. கதிர்காமத்தம்பி தயானந்தம்
51. கி.கந்தசாமி
52. கி.கந்தவனம்
53. கி.குமாரதாசன்
54. கி.பாலிப்பொடி
55. கி.பாலசுந்தரம்
56. கி.பவான்
57. கி.பொன்னுத்துரை
58. கி.றோமிகரன்
59. கி.சின்னமுத்து
60. கி.சிவஞானசிவம்
61. ப.கங்கா
62. பு.வேணுகரன்
63. ப.சண்முகம்
64. ப.சண்முகராசா
65. பா.நடராசா
66. பா.அம்பிகைபாலன்
67. பா.சுதாகரன்
68. த.இளங்கோ
69. த.இராசேந்திரன்
70. த.கனகசிங்கம்
71. த.முருகேசு
72. த.சந்திரசேகரம்
73. த.சசிகரன்
74. மு.நடேசன்
75. ம.பாலசுப்பிரமணியம்
76. மு.சத்தியசீலன்
77. ம.சிதம்பரநாதன்
78. மு.வசந்தராசா
79. மா.நல்லரத்தினம்
80. மா.கணபதிப்பிள்ளை
81. மா.பரஞ்சோதி
82. மா.மகேஸ்வரி
83. மா.ஜெயந்திமலர்
84. மா.செல்லத்தம்பி
85. அ.குணமணி
86. அ.பாக்கியராசா
87. அ.பிரேமசசிகலா
88. அ.பிரேமலதா
89. அ.தர்சனா
90. அ.கோமணதாஸ்
91. அ.ரேவதி
92. அ.சந்திரப்பிள்ளை
93. யோ.சீதேவிப்பிள்ளை
94. கே.நடராசா
95. கே.அமிர்தலிங்கம்
96. கே.சௌந்தரராசா
97. கோ.நாராயணப்பிள்ளை
98. கோ.அமிர்தராசா
99. செ.பவானி
100. சோ.இளந்திரையன்
101. சோ.கபிலன்
102. சோ.மாணிக்கப்பொடி
103. சோ.விஜயலிங்கம்
104. வே.இராசையா
105. வே.நல்லதம்பி
106. வே.அரியநாயகம்
107. வே.விசுமாப்பொடி
108. வே.வள்ளியம்மை
109. வேலாச்சி இராசையா
110. ஞ.நடேசம்
111. ஞா.குருகுலசிங்கம்
112. சு.இராஜேஸ்வரி
113. சு.குணதுங்கா
114. ச.தியாகராசா
115. ச.மகேஸ்வரன்
116. ச.சந்தோசம்
117. ச.சுதாகரன்
118. சு.சிவனேசராசா
119. சு.ஏகாம்பரம்
120. சி.புவனேஸ்வரி
121. சீ.புவனேசசிங்கம்
122. சி.தில்லைநாயகம்
123. சி.மயில்வாகனம்
124. சி.மயிலுப்பொடி
125. சி.மகேந்திரமூர்த்தி
126. சி.யோகநாதன்
127. சி.வேலாப்பொடி
128. சி.லவன்
129. வ.ஜீவரத்தினம்
130. வ.குழந்தைவேல்
131. வ.முத்துத்தம்பி
132. வ.யோகேஸ்வரன்
133. வ.விஜயசிங்கம்

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# புதுக்குடியிருப்புச் சந்தி படுகொலை – 30.01.1991




முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவிலிருந்து ஏறக்குறைய இருபது கி.மீ. தூரத்தில் புதுக்குடியிருப்புச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியில் ஒட்டுசுட்டான் முள்ளியவளை, முல்லைத்தீவு, பரந்தன் சந்திகள் சந்திக்கின்றன. புதுக்குடியிருப்பு ஒரு நகரப்பகுதியாகும்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 1980களின் பின்னர் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் முல்லைநகர், மணலாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி, தென்னமரவடி போன்ற கிராமங்களிலிருந்து சிங்கள இராணுவ நடவடிக்கைகள் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள். 1991 ஆம் ஆண்டில் ஆயிரத்து ஐந்நூறிற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் புதுக்குடியிருப்புக்கு அருகிலுள்ள சுப்பிரமணிய வித்தியாசாலையில் இருந்தனர்.

1991.01.30 அன்று மாலை 5:30 மணியளவில் சிறீலங்கா சிங்கள விமானப்படையின் இரண்டு "மொம்பர்" குண்டுவீச்சு விமானங்கள் மூன்று தடவைகள் புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதியில் குண்டு வீசித்தாக்கின. குண்டுகளில் பெரும்பாலானவை சந்திப் பகுதியிலும், அதன் அண்டிய பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

குண்டுவீச்சினால் சந்தியெங்கும் ஒரே புகைமண்டலம். குண்டு வீச்சு நடந்துமுடிந்த அதேசமயம் அப்பகுதிக்கு விரைந்த, மக்களும், மனிதநேய அமைப்புக்களும் இணைந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட காயப்பட்ட பொதுமக்களை புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பினர். இறந்து இருபது பேரினது உடல்கள் மீட்கப்பட்டன. எங்கும் ஒரே அழுகுரல்கள் இரவாகிக் கொண்டிருந்தமையால் இறந்தவர்களை உடனடியாக மீட்கமுடியவில்லை. காயமடைந்தவர்களில் ஆபத்தான நிலையிலிருந்தவர்கள் அன்றிரவே யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூவர் கொண்டு செல்லும் வழியிலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்கள்.

அடுத்தநாள் காலை மீண்டு மக்களும், மனிதநேய அமைப்புக்களும் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் தேடுதல் மேற்கொண்ட போது, மேலும் ஐந்து பேரினது இறந்த உடல்கள் மீட்கப்பட்டன. இந்த தாக்குதலால் மொத்தம் இருபத்தெட்டுப் பொதுமக்கள் உயிரிழந்தும், ஐம்பதிற்கும் மேலானோர் காயமடைந்தும் இருந்தனர். சிங்கள விமானப் படையினரது பொதுமக்கள் மீதான தாக்குதலால் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி ஒரு மாதத்திற்கும் மேலாக சோகமயமாகவே காணப்பட்டது.

இறந்தவர்களில் இடம்பெயர்ந்து அடைக்கலம் தேவடிவந்த எட்டுப் பொதுமக்களும் அடங்குவர். இத்தாக்குதலில் உயிர்காக்கப் காப்பகழிக்குள் பாய்ந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணின் பிள்ளை பிறந்ததிலிருந்து நரம்பு பாதிக்கப்பட்டவராக நடக்க முடியாதவராகத் தற்போதும் இருக்கின்றார்.

திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து வசித்து வந்த வி. சித்திரா தேவி தெரிவிக்கையில்...

"திருமலை சொந்த இடம். இடம்பெயர்வு காரணமாக புதுக்குடியிருப்பு கிராமக்கோடு முகாமில் வசித்து வந்தோம். 1991.01.30 அன்று மாலை 5:30 மணியளவில் வந்த விமானப்படை பொம்பர் விமானங்கள் பல குண்டுகளைப் போட்டன. இதன் போது நகர்ப்பகுதியும் சந்தையும் சில கடைகளும் நாசமாகின. எங்கும் ஒரே புகை மண்டலம். நான் எமது ஊரைச் சேர்ந்த அசோக் என்பரைத் தேடிச் சென்றபோது அவர் நடத்தி வந்த சைக்கிள் கடையில் அவர் பிணமாகக் கிடக்கக் கண்டேன். இதில் அதிகமானோர் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டவர்களாவார். இச்சம்பவத்தினால் அதிர்ச்சி அடைந்த எனது மகள் இன்றுவரையும் வாய் பேசமுடியாதுள்ளார்."

30.01.1991 அன்று புதுக்குடியிருப்புச் சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. இராசையா பத்மராசா (அரச ஊழியர் - 37)
2. கந்தையா ஜெகதீஸ்வரன் (மாணவர் - 14)
3. கந்தசாமி கவிதா (மாணவி - 14)
4. கதிர்காமச்சந்திரன் (கடற்றொழில் - 26)
5. கிருஸ்ணசாமி மகேந்திரராசா (மாணவர் - 20)
6. பாலசுப்பிரமணியம் கண்ணதாசன் (தனியார் தொழில் - 21)
7. பசுபதி அரிகரன் (மாணவர் - 14)
8. மயில்வாகனம் சிறீகந்தன் (தனியார்தொழில் -25)
9. முருகேசு சித்திரவேலு (கடற்றொழில் - 65)
10. ஜெயநாதன் சிவபாக்கியம் (தனியார்தொழில் - 36)
11. செல்லையா நாகமணி (60)
12. சுப்பிரமணியம் சிவானந்தம் (விவசாயம் - 59)
13. சின்னசாமி கந்தசாமி (தனியார்தொழில் - 46)
14. சின்னவன் கிருஸ்ணபிள்ளை (விவசாயம் -52)
15. சிவராஜசேகரன் கலைச்செல்வி (மாணவி – 19)
16. சிவராஜசேகரன் கலைச்செல்வன் (மாணவன் - 19)
17. வீரகசத்தி கிட்டினப்பிள்ளை (விவசாயம் - 70)
18. வீரசிங்கம் திலீப்குமார் (மாணவன் - 19)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மானிப்பாய் படுகொலை 16.01.2006

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதிக்கு வெள்ளை வானில் வந்த ஆயுதக்கும்பல் ஒன்றினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் மூவர் சுட்டு கொல்லப்பட்டனர். மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு முன்பாக உள்ள செல்லமுத்து கனகசபாபதி வீதியில் அமைந்துள்ள நாகேந்திரம் போஜன் என்பவரின் இல்லத்தில் இந்தப் பயங்கரம் நிகழ்ந்திருக்கின்றது. நள்ளிரவு தாண்டி சற்று நேரத்தில் வெள்ளை வான் ஒன்றில் சிவில் உடையில் வந்த ஒன்பது பேர் அடங்கிய குழுஒன்று வீட்டில் உறக்கத்தில் இருந்தவர்களை குரல்கொடுத்து எழுப்பியிருக்கின்றது. தங்களை இராணுவத்தினர் என்று தெரிவித்து வீட்டை சோதனையிடப் போவதாகக் கூறிய அக்குழுவினர் வீட்டிலிருந்த அனைவரையும் வெளியே வருமாறு அழைத்தனர். பீதியடைந்த குடும்பத்தினர் வெளியே வந்தபோது அவர்கள் மீது சராமரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தந்தை, தாய், மகன், மகள்கள் இருவர், மருமகன் என ஏழு பேர் அவ்வீட்டில் இருந்தனர். ஆயுதபாணிகள் முதலில் மகள் ஒருவரையும் பின்னர் தாய் மற்றும் ஏனையோரையும் நோக்கிச் சுட்டுள்ளனர். இந்த வெறியாட்டம் முடிந்த சிறிது நேரத்தில் இனந்தெரியாத அக்குழுவினர் வானில் ஏறித் தப்பிச்சென்றுவிட்டனர். உயிரிழந்த முத்தமகள் ரேணுகாவின் கணவரான தியாகேஸ்வரன் காயம் ஏதுமின்றி தப்பினர். சம்பவம் நடந்த வீட்டு உரிமையாளரான நாகேந்திரம் போஜன் இலங்கை காங்கேசன்துறை சாரண ஆணையாளராக நீண்ட காலம் வேசையாற்றியவர். அத்துடன் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி படைப்பிரிவு வடபிராந்திய ஆணையாளராகவும் பணியாற்றியவர் என்று குறிப்பிடத்தக்கதாகும்.

16.01.2006 அன்று இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. போஜன் அர்த்தநாரீஸ்வரி (51)
02. தியாகேஸ்வரன் ரேணுகா (30)
03. போஜன் சண்முகா (24)

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விபரம்

01. நாகேந்திரம் போஜன் (55)
02. நாகேந்திரம் உல்லாசனன் (26)







# தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்திப் படுகொலை – 16.01.2006

2006 ஜனவரி 29 ஆம், 30ஆம் நாட்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 பணியாளர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பொலநறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தப் பிரதேசத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டனர். அவ்வேளையில் அவர்கள் மட்டக்களப்பு அலுவலகத்திலிருந்து கிளிநொச்சியிலுள்ள அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு சில நாட்களின் பின்னர் இரு பெண்கள் விடுதலை செய்யப்பட்டனர். இன்னொரு பெண்ணான எஸ் டோசினி என்பவரும் கடத்தல் காரர்களால் விடுதலை செய்யப்பட்டார். ஏனைய ஏழு பணியாளர் களும் இற்றைவரை காணாமலே போயுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் சர்வதேச மன்னிப்புச் சபை ஓர் அவசர வேண்டுகோளை விடுவித்திருந்தது. இந்தப் படுகொலையானது இந்தியாவினுடைய நீதிபதி ஒருவர் தலைமை தாங்கிய சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்த விசாரணைக் குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டுமென சிறீலங்கா அரசாங்கத்தால் செய்யப்பட்ட பல படுகொலைச் சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த நிபுணத்துவக் குழுவானது 2008 ஆம் ஆண்டு இந்த படுகொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளில் அதிருப்தி அடைந்தவர்களாக இக்குழுவை விட்டு முற்றாகவே வெளியேறியுள்ளனர்.

***தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்திக் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. காசிநாதர் கணேசலிங்கம் (53)
02. தங்கராசா கதிர்காமர் (43)
03. தனுஸ்கோடி பிறேமினி (25)
04. தர்மராஜ் வசந்தராஜன் (24)
05. சண்முகாநதன் கஜேந்திரன் (24)
06. கைலாசபிள்ளை ரவீந்திரன் (26)
07. அருள்நேசராசா சதீஸ்கரன் (23)




# மன்னார் மடுப் படுகொலை – 29.01.2008



மன்னார் மாவட்டத்தில் மடுப் பிரதேச செயலர் பிரிவில் மடு என்னும் கிரமாம் அமைந்துள்ளது இங்கு இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் புனித யாத்திரையித் தளமாகவும் விளங்குகிற மடுத்தேவாலயம் அமைந்துள்ளது.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இனமத வேறுபாடின்றி மக்கள் வந்து தரிசிக்கின்ற ஒரு புனித தலமாகவே மடுத்திருப்பதி விளங்குகிறது .இப்பகுதியில் வசிப்பவர்கள் அனைவருமே கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதுடன் இவர்கள் மடுத்திருப்பதிக்கு தொண்டு செய்வதிலே பெரிதும் அக்கறை கொண்டவர்களாக, மிகவும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர் .

இங்கு வசிக்கின்றவர்களில் அதிகமானோர், 1990 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம் எனக் கருதி மடுத்திருப்பதியில் தஞ்சம் புகுந்தவர்கள்.

2007 நவம்பர் 13 ஆம் நாள் மடுத்தேவாலய வளாகம் மீது சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைவீச்சில் 05 வயதுச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதுடன் வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இதன் காரணமாக மக்கள், அச்சமடைந்து பெரியமடு கூராய் கள்ளியடி, இலுப்பக்கடவை, ஜெயபுரம் போன்ற இடங்களுக்கு சென்ற பின்னர் அங்கு 50குடும்பங்கள் அளவிலேயே வசித்துவந்தனர்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் தவீரமாக்கப்பட்டுள்ள யுத்தம் காரணமாக திருப்பதி வளாகத்திலுள்ள சிறார்கள். 5 கிலோ மிற்றர் தொலைவிலுள்ள தட்சணாமருதமடுவில் இயங்கிவந்த மன்சின்னப்பாண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலே கல்விகற்று வந்தனர். இவர்கள் மடுவிலிருந்து புறப்படுகின்ற பயணிகள் பேருந்திலேயே சென்று வருவார்கள். இங்கு பாடாசலை மாணவர்களுக்கு தனியாக பொதுமக்களுக்குத் தனியாக என பேருந்து இல்லாமையால் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகின்ற பேருந்திலேயே பயணிப்



பார்கள்.

அவ்வாறே 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் நாளும் வழமை போல் பேரூந்தில் சென்ற சிறுவர்கள் பிற்பகல் பாடசாலை முடிந்ததும் இலுப்பைக் கடவையிலிருந்து மடு நோக்கிச் சென்று கொண்டிருந்த அதே பேரூந்தில் ஆனந்தமாக வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். பேரூந்து மடுவை அண்மித்ததும் சரியாக 2.30 மணியளவில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினரால் இப் பேரூந்தின் மீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 09 பாடசாலைச் சிறார்கள், 01 ஆசிரியர், 01 பாடசாலைச் சிற்றூழியர், 01 மருத்துவ உதவியாளர், 01 பேரூந்தின் ஓட்டுனர், 01 பேரூந்தின் நடத்துனர், 01 மடுத்தேவாலய உழவூர்தி ஓட்டுனர் என 15 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். 13 மாணவர்கள் உள்ளடங்கலாக 21 பேர் படுகாயமடைந்தனர்.

இத் தாக்குதல் நடைபெற்ற சில நிமிடங்களில் தள்ளாடி முகாமிலுள்ள இராணுவத்தினர் அப் பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே அப் பகுதி மக்கள் படுகாயமடைந்தவர்களை பள்ளமடு வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின் அங் கிருந்து உடனடியாக முழங்காவில் வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டனர். அங்கு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தவர் களை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைத் தனர். இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந் தனர்.

பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டவர்களில் ஜெனிஸ்ரன் பீரிஸ் என்ற சிறுவன் பெப்ரவரி 03ம் நாள் உயிரிழந்தார். மேலும் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட பாடசாலை அதிபர் பெப்ரவரி 05ம் நாள் மரணமானார். இதனைத் தொடர்ந்து இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

29.01.2008 அன்று இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின்

பெயர் விபரம்

01. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் புறுனோ கொண்ஸ்ரன்ரயின் - 13 (மாணவன்)
02. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் பிறிற்ரோ கொண்ஸ்ரன்ரயின் - 15 (மாணவன்)
03. செல்வசிங்கம் யூட்கொஸ்ரன் - 15 (மாணவன்)
04. செல்வசிங்கம் யூட்கொலிண்டன் - 12 (மாணவன்)
05. ரஞ்சன் ராஜசூரியர் தர்சிக்கா சாமினி 15 மாணவி
06. சூசையப்பு சாம்சன் சொய்சா - 13 (மாணவன்)
07. சூாந்தன் பெனாட் றோஜ் - 16 (மாணவன்)
08. ஆந்தோனி பீரிஸ் ஜெனிஸ்ரன் பீரிஸ் - 12 (மாணவன்)
09. பிரான்சிஸ் சேவியர் ஆன்ஸ் பசிலியோ - 11 (மாணவன்)
10. பத்பராசா பேனாட் ஜெனார்த்தனன் - 12 (மாணவன்)
11. இமானுவேல் குணசிங்கம் அன்ரன் டெஸ்மன் - 16 (மாணவன்)

# மன்னார் மடுப் படுகொலை – 29.01.2008



12. ஞானப் பிரகாசம் ஜோன் மில்டன் - 16 (மாணவன்)
13. அன்ரனி சதீசன் - 11 (மாணவன்)
14. செபமாலை மேரியோசப்பின் - 31 (ஆசிரியர்)
15. ரஞ்சன் ராஜசூரியர் பிரான்சிஸ்கா மங்களேஸ்வரி - 37 (பாடசாலை ஊழியர்)
16. கிருபைராசா ஜெராட் ஞானகரன் - 29 (பேரூந்து ஓட்டுனர்)
17. சூசையப்பு லெம்பேட் ஸ்ரான்லி சுரேஸ் லெம்பேட் - 23 (நடத்துனர்)
18. க.சண்முகசுந்தரம் - 61 (ஓட்டுனர்)
19. திருமதி. லேம்பேட் - 51 (அதிபர்)
20. விமலநாதன் றீத்தம்மா - 33 (தாதி)

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களின் பெயர் விபரம்:

1. கிருசாந்த் - 08 (மாணவன்)
2. ற.பியுலின் - 09 (மாணவன்)
3. ஜெனோஸ்டிகா — 12 (மாணவி)
4. தர்சனா - 13 (மாணவி)
5. டியுலஸ் - 15 (மாணவன்)
6. ரஞ்சன் ராஜசூரியர் யுடக்சியா றூப்ளின் - 11 (மாணவி)
7. பிரான்சிஸ் சேவியர் மதுசாலினி - 16 (மாணவி)
8. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் மேரிகொண்சீற்றா - 16 (மாணவி)
9. அனித்தா - 16 (மாணவி)
10. ற. தனுசிகா - 16 (மாணவி)
11. ரெசிற்றா - 38 (ஆசிரியர்)
12. துசிதா - 35 (ஆசிரியர்)
13. நிர்மலா றஞ்சினி - 36(ஆசிரியர்)
14. குணசீலி - 45 (ஆசிரியர்)
15. ஞானசூரியா் - 35 (அஞ்சல் ஊழியர்)
16. ஞானசூரியா் ஜசிந்தா - 34 (வீட்டுப்பணி)
17. அந்தோனி பீரிஸ் போனா பீரிஸ் - 22 (வீட்டுப்பணி)
18. பாக்கியநாதன் - 60
19. இன்னுமொருவர் (?)







**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**




JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★Carpet★Flooring
★Hardware★Kitchen Cabinets
★Painting★Tiles★ Stairs
★Moulding★Window★Garage Door
★Spotlight★ Plumping★Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# நாக இனக்குழுவும் இலங்கைத் தமிழரும்

## பகுதி – 2

கட்டுக்கரையைத் தொடர்ந்து வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இன்னொரு முக்கிய பெருங்கற்கால பண்பாட்டு மையமாக நாகபடுவான் என்ற இடம் காணப்படுகின்றது. இவ்விடம் பூநகரிப் பிராந்தியத்தில் முழங்காவிலுக்கு அண்மையில் காட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்கள் இலங்கையில் நாக வழிபாட்டு மரபு தோன்றி வளர்ந்த வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்குப் புதிய செய்திகளைக் கூறுவதாக இருக்கின்றன. எமது அறிவுக்கு எட்டியவரை இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சில வகையான சான்றுகள் தென்னாசியாவின் ஏனைய வட்டாரங்களில் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இதுவே இந்திய இலங்கைத் தொல்லியல் அறிஞர்களிள் பலரின் கருத்தாகவும் உள்ளது.

இங்கே நாகபடுவான் என்ற இடப்பெயரின் பழமை, அதன் பொருள் ஆய்வுக்கு உரியது. நாகபடுவான் என்ற பெயர் ஐரொப்பியர் ஆட்சியில் பூநகரியில் ஒரு பரந்த பிரதேசத்திற்குரிய பெயராக இருந்தது. காலப்போக்கில் இப்பிரதேசத்தின் ஒருபகுதி பயிர்ச்செய்கைக்கு பயன்படாது போனதால் அந் நிலப்பகுதி கரியலை நாகபடுவான் என தனியொரு கிராமத்தின் இடப்பெயராக அழைக்கப்படுகின்றது. பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய பண்பாட்டு அம்சங்களில் ஒன்று குளத்தை மையப்படுத்திய கிராமக் குடியிருப்புகளின் தோற்றமாகும். பிராமிக் கல்வெட்டுகளிலும், சமகாலப் பாளி இலக்கியங்களிலும், பெருங்கற்கால மையங்களை அண்டிய இடப்பெயர்கள் குளத்தைக் குறிக்கும் ஆவி, வாவி, மடு, குளம், பழை, வேலி முதலான பின்னொட்டுச் சொற்களுடன் முடிவதற்கு இதுவே காரணமாகும். வடஇலங்கையில் அதிலும் குறிப்பாக வன்னியில் 2000 இற்கும் மேற்பட்ட இடப்பெயர்கள் குளம் என்ற பின்னொட்டுச் சொல்லைக் கொண்டுள்ளன. இதற்கு இவ்விடங்களில் பல, ஆதியில் பெருங்கற்காலக் குளக் குடியிருப்புகளைக் கொண்டிருந்ததே காரணமாகும். இங்கே நாகபடுவான் என்ற இடப்பெயர் நாககுளம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. படுவம், படுவான் என்பது பழமையான தமிழ்ச் சொல். இது சங்க இலக்கியத்தில் ஆழமான குளம், பெரிய குளம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாககுளம் என்ற பொருளைக் கொண்ட இடப்பெயரே இன்றும் மாற்றம் அடையாது நாகபடுவான் என்ற பண்டைய தமிழ்ச் சொல்லில் அழைக்கப்படுகிறது எனலாம். கலாநிதி இரகுபதி, நாகபடுவான் என்ற இடப்பெயர் ஆதியில் இங்கு நாகத்தைக் குல மரபாகக்க கொண்ட மக்கள் வாழ்ந்ததன் காரணமாகத் தோன்றியது எனக் கூறுகிறார். நாகபடுவானில் அகழ்வாய்வுக்கு உட்பட்ட காட்டுப் பகுதியில் கானமோட்டை என்ற பழைய குளத்தின் அழிபாடுகள் காணப்படுகின்றது. கானமோட்டை என்பதற்கு காட்டில் இருந்த குளம் அல்லது நீர்நிலை எனப் பொருள் கொள்ளலாம். பழந்தமிழ் இலக்கியத்தில் மோட்டை என்பதற்கு வயற் பரப்பிற்கு நீர் செல்லும் பாதை என்பது பொருள். இப்பழமையான பெயர்கள் இப்பிரதேசத்தில் புராதன குளக் குடியிருப்புகள் தோன்றியிருந்ததை மேலும் உறுதிசெய்கின்றன.



நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்

நாகபடுவானில் '4X3' மீற்றர் நீள அகலத்தில் ஆறு குழிகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் இயற்கை மண் அடையாளம் காணும் வரை அகழ்வு செய்யப்பட்டது. இவற்றின் கலாசார மண் அடுக்குகளின் எண்ணிக்கைகள் அகழ்வுக் குழிகளுக்கு இடையே வேறுபட்டுக் காணப்பட்டாலும் மூன்றாவது கலாசார மண் அடுக்குகளிலேயே அதிக அளவிலான தொல்லியற் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்குழிகளில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள் (Iron Slakes), பெருங்கற்காலத் தாழிகளின் பாகங்கள் (4ஆம், 5ஆம் ஆய்வுக் குழியில் கண்டுபிடிக்கப்பட்டவை) நாகபடுவானின் தொடக்க கால மக்கள், பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரியவர்கள் என்பதை உறுதிசெய்கின்றன. ஆயினும் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டது போன்ற செறிவான ஆதாரங்கள் நாகபடுவானில் இதுவரை கிடைக்கவில்லை. தொடர்ந்து இவ்விடத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் அதிக சான்றுகள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

நாகபடுவானில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது 1 ஆம், 2 ஆம், 3 ஆம் ஆய்வுக்குழிகளில் இருந்து பெருமளவு சமயச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச்சின்னங்கள் இந்து மதத்திற்கு முன்னோடியாக (Proto Hinduism) பெருங்கற்கால மக்களிடையே இருந்த சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. இச்சமயச் சின்னங்கள் பெரும்பாலும் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட சின்னங்களைப் போல் களிமண், குருமணல், உமி அல்லது வைக்கோல் என்பன கலந்து செய்யப்பட்டு பின்னர் நெருப்பினால் சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவற்றின் வெளித்தோற்றம் முழுமையாகக் காணப்பட்டாலும் அவற்றின் உட்பகுதி வெறுமையாகவே காணப்படுகின்றது. இவ்வாறான கலைமரபு, தொழில்நுட்பம் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றியதற்கு தமிழகத்திலும், இலங்கையிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

நாகபடுவான் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட 99 வீதமான சமயச் சின்னங்கள் இங்கு வாழ்ந்த மக்கள் நாக வழிபாட்டுடன் ஒன்றிணைந்திருந்ததைப் பட்டவர்த்தனமாக உறுதிப்படுத்துகின்றன. அச்சான்றுகள் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் அகழ்வாய்வுக் குழிகளில் மிகச் செறிவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்குழிகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான ஆண் – பெண் தெய்வச் சிலைகள், சிற்பங்கள், அவற்றுடன் இணைந்திருந்த பீடங்கள், நாகக் கற்கள், பயன்படுத்தப்பட்ட அடுப்புகள், தீபச்சட்டிகள், மண் தட்டுக்கள், பல அளவுகளில் செய்யப்பட்ட நாகச் சிற்பங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள், இவ்விடத்தில் நாக வழிபாட்டு ஆலயம் ஒன்று இருந்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகின்றது. பெருங்கற்கால மக்கள் வைரமான கற்களில் துவாரங்களை இட்டு அவற்றில் மரங்களை நாட்டி மண், மரம், இலைகள் என்பன பயன்படுத்தித் தமக்குரிய இருப்பிடங்களை அமைத்து வாழ்ந்தவர்கள். 2011 ஆம் ஆண்டு இலங்கைத் தொல்லியற் திணைக்களத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவினர் இணைந்து கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வில் சமையல் அறையுடன் கூடிய பெருங்கற்கால மக்களது இருப்பிடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

பண்டைய இலக்கியங்கள் சங்க காலத்தில் இருந்த ஆலயங்கள், அவற்றில் வைத்து வழிபடப்பட்ட சிலைகள், சிற்பங்கள் பற்றிக் கூறுகின்றன. அதே இலக்கியங்கள் அக்கலை வடிவங்கள் அழியக் கூடிய மரம், மண், சுதை என்பன கொண்டு அமைக்கப்பட்டதாகக் கூறுகின்றன. தமிழகத்திலும் இலங்கையிலும் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் பெரும்பாலும் இக்கலை மரபே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனது மண்டகப்பட்டு கோவில் கல்வெட்டு, அவனது ஆட்சியில் இருந்தே அழியாத கற்களைக் கொண்டு ஆலயங்கள் கட்டப்பட்டதாகக் கூறுவதில் இருந்து, இது மேலும் உறுதியாகின்றது. இதே போல் நாகபடுவானில் இருந்த நாக வழிபாட்டு ஆலயமும் அழியக் கூடிய மண், மரம், சுதை கொண்டு கட்டப்பட்டதால் அவை காலப்போக்கில் அழிவடைந்து குறிப்பிட்ட இடத்தில் குவியலாகக் காணப்படக் காரணம் எனலாம். இச்சான்றுகளுடன் அரிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கம், கருடன், ஆமை முதலான சிற்பங்கள் என்பன நாக ஆலயத்தோடு இணைந்திருந்த பிற தெய்வங்களைக் குறிப்பதாக இருக்கலாம்.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நாக வழிபாட்டுச் சின்னங்களுள் ஆண், பெண் தெய்வச் சிலைகள் சிறப்பாக நோக்கத்தக்கது. இவை சுடுமண் சிலைகளாக இருப்பதால் அவை பெரிதும் சிதைவடைந்த நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் சிதைவடைந்த சிலைகளின் தலைப்பாகங்கள், உடம்புப் பகுதிகள், கை – கால் உறுப்புகள், அவற்றில் அணியப்பட்ட கை வளையல்கள், கழுத்து மாலைகள், காற்சலங்கைகள், தலை முடிகள், காது அணிகலங்கள், ஆடை அமைப்புக்கள் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு ஆண், பெண் சிலைகளை வேறுபடுத்தி அடையாளம் காண முடிகிறது. இச்சிலைகள் பெரும்பாலும் பீடத்தில் அமர்ந்திருக்கும் வகையில் வடிவமைக்



நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்



கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமத்தாழி

கப்பட்டதை சிலைகளுடன் காணப்பட்ட பீடங்கள் உறுதி செய்கின்றன. இப்பீடங்கள் பல அளவுகளில் சதுரமாகவும், வட்டமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. பீடத்தில் அமர்ந்துள்ள தெய்வங்கள் வலது காலை மடித்து, இடது காலைத் தொங்கவிட்ட நிலையில் ஏதோ வரம் அளிப்பது போல் காணப்படுகின்றன. இதனால் இச்சிலைகளை நாக வழிபாட்டு ஆலயங்களில் காணப்படும் நாக, நாகினி தெய்வங்களாகக் கொள்ளலாம்.

பிற்காலத்தில் இலங்கைத் தமிழரிடையே மரநிழலின் கீழ் அல்லது சிறிய ஆலயங்களில் நாகக் கற்களை வைத்து வழிபடும் மரபு காணப்படுகின்றது. அக்கற்கள் பெரும்பாலும் கருங்கற்களை சதுரமாக அல்லது வட்டமாக வெட்டி கல்லின் மேற்பகுதியில் நாகபாம்பு படமெடுத்த நிலையிலும், கல்லின் கீழ் பகுதியில் அதன் உடற்பகுதி கல்லைச்சுற்றி வளையங்களாகவும் செதுக்கப்பட்டிருக்கும். இம்மரபு பெருங்கற்கால பண்பாட்டிலேயே தோன்றியிருக்கலாம் என்பதை நாகபடுவான் அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இங்கு அதிக எண்ணிக்கையில் நாகக் கற்கள் கிடைத்துள்ளன. இவை கற்களுக்குப் பதிலாக மண்ணால் வட்டவடிவில் செய்யப்பட்டு பின்னர் நெருப்பில் சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இச்சுடுமண் நாகக் கற்களில் நாகத்தின் உடற்பாகங்கள் வளையங்களாகச் செய்யப்பட்டு அதன் மேற்பாகம் வட்டவடிவில் அழகாக வடிமைக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இதன் மேற்பகுதியில் நாக பாம்பு இணைந்திருக்கும் நிலையில் இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை. ஆயினும் இந்நாகக் கற்களுக்கிடையே தனியாகப் படமெடுத்த நாகச் சிற்பங்கள் கிடைத்துள்ளன. அவை நாகக் கற்களின் மேற்பகுதியில் வைக்கப்பட்ட நாகச் சிற்பங்களாக இருக்கலாம்.

பிற்கால நாக வழிபாட்டில் செப்புத்தட்டத்தில் அல்லது செப்புப் பாத்திரத்தில் நாகபாம்பை வைத்து வழிபடுதல் அல்லது நாக தோசம் நீங்குவதற்காக அதனை ஆலயங்களுக்கு கொடுக்கும் மரபு காணப்படுகிறது. சில ஆலயங்களில் நாகதோசம் நீங்குவதற்கு நாகபாம்பை மண் சட்டியில் வைத்துக் கொடுக்கும் மரபு இன்றும் காணப்படுகின்றது. இம்மரபு பெருங்கற்காலப் பண்







கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆலய அத்திவாரம்

# கட்டுக்கரையில் பொருங்கற்கால மக்களால் மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள்

பாட்டுடன் தோன்றியதை நாகபடுவான் அகழ்வாய்வு உறுதிப்படுத்துகின்றது. இங்கு அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மூன்றாவது ஆய்வுக்குழியில் மண் சட்டிகளின் விளிம்புப் பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நாகபாம்பு படமெடுத்த நிலையில் இருக்க, அவற்றின் வால் பகுதிகள் சட்டிக்குள் இணைந்து சட்டியின் நடுமையத்தில் ஒரு வளையமாகக் காணப்படுகின்றது. இக்குழியின் இன்னொரு இடத்தில் சிறிய வாய்ப்பகுதி கொண்ட பானையும், பானையின் மேற்பகுதியில் வாய்பபகுதியைச் சுற்றி மூடிய நிலையில் நான்கு சிறு கலசங்களும் காணப்படுகின்றன. பானையின் மூன்று திசைகளிலும் தெய்வங்கள் அமர்ந்திருக்கும் பீடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் அமர்ந்துள்ள தெய்வத்தின் இடது கால் பானையை முட்டியவாறு உள்ளது. நான்காவது திசையில் சட்டியின் விளிம்பில் படமெடுத்த நாக பாம்பு காணப்படுகிறது. இவ்வாறு வேறுபட்ட சின்னங்கள் ஒரேயிடத்தில் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட வகையில் வைக்கப்பட்டதற்கான பொருள் விளக்கத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நாக வழிபாடு பற்றிய ஆய்வில் புலமையுடைய தமிழக அறிஞர்களுக்கும் இது புதிய சான்றாகக் காணப்படுவதால் அவர்களும் மாறுபட்ட கருத்துக்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு

437.345.4203

களையே தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் இச்சின்னங்கள் நாகபாம்பை முதன்மைத் தெய்வமாகக் காட்டுவதற்காக செய்யப்பட்ட ஒரு அமைப்பாக இருக்கலாம் எனக் கூறலாம். இதை இங்குள்ள பானையில் இருந்து எடுக்கப்பட்ட நாக உருவமும் உறுதிப்படுத்துகிறது.

தமிழரிடையே பாம்புப் புற்றை வழிபடும் மரபு மிகத் தொன்மையானது. இவ்வழிபாட்டு மரபு சமகாலத்திலும் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கு வடஇலங்கை, கிழக்கிலங்கையிலுள்ள நாக வழிபாட்டு ஆலயங்களைச் சான்றாகக் காட்டலாம். மரநிழலின் கீழுள்ள பாம்புப் புற்றிற்குப் படையல் செய்து வழிபட்ட மக்கள் காலப்போக்கில் பாம்புப் புற்றை கர்ப்பக்கிருகத்தில் வைத்து அதற்கு ஆலயம் அமைத்து வழிபடுகின்றனர். இதற்கு யாழ்ப்பாணத்தில் எருவன், கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு ஆகிய இடங்களிலுள்ள நாக வழிபாட்டு ஆலயங்களைக் குறிப்பிடலாம். இப்பாம்புப் புற்று வழிபாட்டை பெருங்கற்கால மக்கள் மண் பானையில் செய்து வழிபட்டதை நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட பானை உறுதிசெய்கிறது. இப்பானையில் செய்யப்பட்ட சிறிய துவாரமும், அதைச் சுற்றி கவிழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கும் சிறிய கலசங்களும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததால், முழுமையாக மண்ணுடன் அகழ்ந்து எமது அருங்காட்சியகத்திற்கு எடுத்து வந்தோம். இப்பானைக்குள் இருக்கக் கூடிய சின்னங்களை கண்டறியும் நோக்கில் தமிழகத் தொல்லியல் அறிஞர் வை. சுப்பராயலு அவர்களின் ஆலோசனையுடன் ஆராய்ந்த போது அதற்குள் அழகான நாகபாம்புச் சிலையைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதிலிருந்து, நிலத்தில் நாட்டப்பட்ட நாகபாம்புச் சிலையை அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட பானையால் மூடி, அக்கால மக்கள் வழிபட்டனர் என்பது தெரியவந்துள்ளது. இம்மரபே பிற்காலத்தில் புற்று வழிபாடு தோன்றக் காரணமாக இருந்துள்ளது. இதன் முக்கியத்துவம் தொடர்பாக கலாநிதி பொ. இரகுபதி கூறும்போது “பானையின் விளிம்பைச் சுற்றி கவிழ்ந்த வடிவில் உள்ள சிறிய கலசங்கள் பாம்புப் புற்றில் வரும் சிறிய துவாரங்களாகவும், பானையின் சிறிய வாய்ப்பகுதி பாம்புப் புற்றிலிருந்து பாம்பு வெளியேறும் வழியாகவும் உள்ளன. பிற்காலத்தில் பாம்புப் புற்றை நாக தெய்வத்தின் ஆலயமாக கொண்டு படையல் செய்து வழிபடும் மரபு தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்த பூர்வீக வழிபாட்டு மரபையே நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட வழிபாட்டு மையம் உறுதிப்படுத்துவதாகக் கொள்ள முடிகிறது.”

தென்னாசியா நாடுகளிடையே மத வழிபாட்டில் நாகபாம்பைக் குல தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த மக்களிடையே, அது காலப்போக்கில் இனம், தனிநபர், அம்மக்கள் வாழ்ந்த இடம், பிராந்தியம் என்பவற்றை அடையாளப்படுத்தும் பெயராக மாறியது வரலாறாகும். இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து நாகவழிபாட்டு மரபு தோன்றியதற்கு கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகள் சான்றாகக் காணப்பட்டாலும் அம்மரபு காலப்போக்கில் தமிழரையும், தமிழர்கள் வாழ்ந்து வரும் பிராந்தியத்தையும் குறித்ததென்பதை இங்கே எடுத்துக் காட்டுவது இவ்வாய்வின் முக்கிய கருப்பொருளாகும். நீண்ட காலமாக “நாக” என்ற பெயரின் மூலமொழி பற்றி அறிஞர்கள் பலரும் ஆராய்ந்து வருகின்றனர். மொழியியல் அறிஞர்களில் ஒரு சாரார் இதன் மூல மொழி வடமொழி சார்ந்ததெனவும், குமார் சட்டர்ஜி, பரோ போன்ற மொழியியல் அறிஞர்கள் இது திராவிட மொழி சார்ந்ததெனவும் கூறுகின்றனர். ஆயினும் இலங்கையில் இப்பெயரை மொழி வேறுபாடின்றி பலதரப்பட்ட மக்களும் தனிநபர் பெயராகப் பயன்படுத்தியதற்கு பிராமிக் கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியங்களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் இருந்தே நாக என்ற பெயரில் தமிழ் மொழியின் செல்வாக்கு ஆரம்பமாகியுள்ளது.

தென்னாசியாவின் பல வட்டாரங்களில் சுதேச மொழிகள் இருந்தும், கி.பி. 3 ஆம் நூற்றாண்டுவரை (இற்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முன்னர்) பௌத்த, சமண மதங்களின் மொழியான பிராகிருதமே கல்வெட்டு மொழியாக இருந்தது. சமகாலத்தில் தமிழகத்தில் கல்வெட்டு மொழியாக தமிழ் இருந்தாலும் அக் கல்வெட்டுகளில் 25 விழுக்காடுச் சொற்கள் பிராகிருதமாக உள்ளன. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் பௌத்த மதம் சார்ந்த செய்திகளைக் கூறுகின்றன. ஆயினும் இக் கல்வெட்டுகளில் தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளில் வரும் தமிழ் மொழிக்கே உரிய சிறப்பான எழுத்துக்களும், தமிழ்பிராமி எழுத்தை ஒத்த வடிவங்களும், தமிழ்ப் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் பிராகிருத மொழியை எழுதுவதற்கு 40 எழுத்துக்கள் இருந்தும் கல்வெட்டுகளில் தமிழ்ப் பிராமி பயன்படுத்தப்பட்ட இருபது வகையான எழுத்துகளும், எழுத்து வடிவங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பாக நோக்கத்தக்கது. ஒரு எழுத்து தோன்றி பல ஆண்டுகள் கடந்த பின்னரே அவ்வெழுத்தின் வடிவம் மாற்றம் பெறுகின்றது. ஆனால் இலங்கையில் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட தொடக்ககாலக் கல்வெட்டுகளிலேயே தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டுள்ளமையால், பிராகிருத மொழி வருவதற்கு முன்னரே இங்கு தமிழ் மொழியின் பயன்பாடு இருந்துள்ளமை தெரிகிறது. இவற்றைக் கருத்திற் கொண்டே சிங்கள எழுத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்ன, ஆரிய அபயசிங்கா, பெர்ணூந்தோ போன்ற அறிஞர்கள் பௌத்த மதத்துடன் வட இந்தியப் பிராமி எழுத்து இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்னர் தென்னகப் பிராமி எழுத்து புழக்கத்தில் இருந்துள்ளது எனக் கூறுகின்றனர் (Ariyasinghe 1965, Karunaratne 1984).

பௌத்த மதம் பற்றிக் கூறும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் நாக என்ற பெயர் பிராகிருத மொழியில் ‘நஹ’, ‘நஹஸ’, ‘நஹய’, ‘நஹலி’ என்றே எழுதப்பட்டுள்ளன. (Paranavitana 1970 : nos 1120, 1998. 1982 : nos : 126, 138, 180, 267). ஆயினும் சில கல்வெட்டுகளில் தமிழகத்தைப் போல் இப்பெயர் ‘ந(ா)க’, ‘நாக’, ‘ணாக’ எனத் தமிழ் மயப்படுத்தியும் எழுதப்பட்டுள்ளன (Mahadevan 1966 : no 33). இவ்வாதாரங்கள் நாக என்ற பெயரில் தமிழர்கள் இங்கு வாழ்ந்ததையும், அவர்கள் பௌத்தர்களாக அல்லது பௌத்த மதத்தை ஆதரித்தவர்களாக இருந்துள்ளனர் என்பதையும் உறுதிப்படுத்துகின்றன. அநுராதபுரத்திற்கு வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட கி.மு.1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டு இங்கிருந்த ‘நாகநகர்’ பற்றிக் கூறுகிறது (Karunaratne 1984 : 82). இது நாகர்கள் வாழ்ந்த நகரம் என்ற பொருளில் அமைந்துள்ளது. பிராகிருத மொழியில் ‘நஹநஹர’ (Naganagara) என எழுதப்படும் இப்பெயர், இச்











**கட்டுக்கரையில் ஐயனார் வழிபாட்டுச் சின்னங்கள்**

சாசனத்தில் தமிழில் 'ந(ா)கநகர்' (Nakanakar) என எழுதப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கலாநிதி இரகுபதி, கல்வெட்டில் வரும் இந்த 'நாகநகர்' அக்காலத்தில் கந்தரோடையின் தலைநகராக இருந்திருக்கலாம் அல்லது கந்தரோடையைக் குறித்திருக்கலாம் எனக் கருதுகிறார் (Ragupathy 1991). ஆனால் நிக்லஷ் என்ற அறிஞர் கி.பி. 9 ஆம் நூற்றாண்டுக்குரிய சாசனமொன்றில் வரும் நாகநகரை ஆதாரம் காட்டி மேற்கூறப்பட்ட கல்வெட்டில் வரும் நாகநகரை வவுனியாவுக்கு வடக்கில் இருந்த ஒரு நகரம் என அடையாளப்படுத்துகிறார் (Nicholas 1963 : 81). இந்நகரம் எங்கு அமைந்திருந்தாலும் இந்த நகரில் வாழ்ந்த நாகர்கள் தமிழர்களாக இருந்தனர் என்பதை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது என்பதில் ஐயமில்லை.

அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்நாணயங்கள் இலங்கைத் தமிழரின் தொன்மையையும், நாக மன்னர்களின் ஆட்சியையும் உறுதிப்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இங்கு கிடைத்த நாணயங்கள் சில தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு நாணயங்களில் 'நாக' மற்றும் 'ணாக' என்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன (Bopearachchi 1999 : 51-60> Pushparatnam 2003 : 67-78). ஒரு நாணயத்தில் அதை வெளியிட்ட மன்னன் பெயர் 'திஷபுர சடணாகராசன்' என எழுதப்பட்டுள்ளது (Pushparatnam 2002 : 5-6). இதன் பொருள் 'திஷபுரத்தில் ஆட்சி புரிந்த சடணாகராசன் என்ற மன்னன் வெளியிட்ட நாணயம்' என்பதாகும். இதன் மூலம் இச் சிற்றரசனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தென்னிலங்கை மக்களில் ஒரு பிரிவினராவது தமிழ் மொழி பேசிய நாக இன மக்களாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. மேலும் இக்காலகட்ட அரசியல் வரலாற்றைக் கூறும் மகாவம்சம், துட்டகாமினி என்ற மன்னன் எல்லாளன் என்ற தமிழ் மன்னனை அநுராதபுரத்தில் வெற்றி கொள்வதற்கு முன்னர் தென்னிலங்கையில் அதிகாரம் செலுத்தி வந்த 32 தமிழ்ச் சிற்றரசர்களை ஆரம்பத்தில் வெற்றி கொள்ள வேண்டியிருந்ததாகக் கூறுகிறது. மகாவம்சத்தின் இக்கூற்று கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே தென்னிலங்கையில் தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்ததற்கு மேலும் சான்றாகும்.

1990 களில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உடுத்துறை என்ற கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயம் வடஇலங்கையிலும் தமிழ் மொழி பேசிய நாகரின் ஆட்சியிருந்ததற்கு முக்கிய சான்றாகக் காணப்படுகிறது. இந்நாணயத்தின் முன்பக்கத்தில் பொறிக்கப்பட்ட சாசனத்தை இந்திய அறிஞர் பேராசிரியர் சுப்பராயலு நாகனனின் பட்டத்தரசியாக இருந்த தமிழாதேவி (தமிழ் அரசி) பற்றியும் இந்நூல் மேலும் கூறுகின்றது. இப்பெயரில் இருந்து இளநாகன் ஒரு தமிழ் மன்னனாக இருந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கூறுகின்றனர். மேற்கூறப்பட்ட ஆதாரங்களில் இருந்து தமிழ்மொழி பேசிய நாக மக்கள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இலங்கையின் பல வட்டாரங்களில் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது. ஆயினும் தற்காலத்தில் நாகர் பற்றிய வரலாற்று நினைவுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களிடையே பெரிதும் காணப்படுகின்றன.

பேராசிரியர் இந்திரபாலா, தென்னிந்தியாவிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுக்கள், அநுராதபுரத்திலும் தென்னிலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலும் பிராகிருத மொழி தழுவிய பேரினக் குழுவாக உருவாகிய போது, ஏனையோர் வடக்கில் தமிழ் இனக்குழுவுடன் கலந்து கொண்டனர் எனக் குறிப்பிடுகிறார் (Indrapala 2005 : 172-73). இந்த இனக்குழு வடக்கில் மட்டுமன்றி சமகாலத்தில் கிழக்கிலும் தோன்றியது எனக் கூறலாம். இலங்கையில் கி.மு. 3 ஆம், 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐந்து பிராமிக் கல்வெட்டுகள், தமிழர்கள் மொழியால் ஒரு இனக்குழுவாக வாழ்ந்ததை உறுதி செய்கின்றன. அவற்றுள் நான்கு கல்வெட்டுகளில் இரண்டு வடஇலங்கையில் வவுனியாவிலும், ஏனைய இரண்டு கல்வெட்டுகள் கிழக்கிலங்கையில் அம்பாறை (குடுவில்), திருகோணமலையில் சேருவில் ஆகிய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் சிலவற்றில் நாகர் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றிருப்பது வரலாற்றுத் தொடக்கத்திலேயே நாக இனக்குழுவின் மொழியாகத் தமிழ் இருந்ததற்குச் சான்றாகும். இதை இப் பிராந்தியங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

அண்மைக்காலங்களில் தமிழகத்திலும், இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்பாண்ட சாசனங்கள் (Brahmi Potsherds) தொடர்பான ஆய்வுகளும், நவீன காலக்கணிப்புகளும் இலங்கையில் தமிழ் மொழியின் தொன்மையை உறுதிப்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட சாசனங்கள் பெரும்பாலும் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன் மங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டவையாக உள்ளன. இவற்றில் மட்பாண்டத்தை வனைந்தவர்களின் பெயர்கள் அல்லது அதைப் பயன்படுத்தியவர்களின் பெயர்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவ்வாறான பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் தமிழகத்திலும் இலங்கையிலும் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அநுராதபுர பெருங்கற்காலப் பண்பாட்டு பௌத்த மதத்துடன் பாளி, பிராகிருத மொழி இலங்கைக்கு அறிமுகமாவதற்கு ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் எழுத்தும், தமிழ் மொழியின் பயன்பாடும் புழக்கத்தில் இருந்துள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றன. இவ்வகையான பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் வடஇலங்கையில் கந்தரோடை, பூநகரி, இரணைமடு ஆகிய இடங்களிலும், மட்டக்களப்பில் வவுணதீவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பூநகரி (ஈழவூர்), இரணைமடு ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் நாக என்ற பெயரும், வவுணதீவில் கிடைத்த மட்பாண்டங்களில் தம்பன், வண்ணக்கன் ஆகிய பெயர்களும், இருபது மட்பாண்டங்களில் 'ணாகன்' என்ற பெயரும் காணப்படுகின்றன. இப்பெயர், தமிழ் மொழிக்குரிய 'அன்' என்ற விகுதியுடன் முடிவது சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்வாதாரங்கள் மூலம், வடக்கு – கிழக்கின் பூர்வீக மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழு எனவும், அவர்களில் பெரும்பான்மையோர் தமிழ் மொழிபேசும் மக்களாக வாழ்ந்து வந்துள்ளனர் எனவும் கூறலாம். இதற்கு மேலும் சில ஆதாரங்களைக் காட்டலாம்.

பாளி வரலாற்று ஏடுகளில் இலங்கையின் புராதன துறைமுகங்களின் பெயர்கள் தொட்ட, தொட என்ற விகுதியுடன் முடிகின்றன. ஆனால் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இருந்த துறைமுக நகரங்கள் 'பட்டன' என்ற விகுதியோடு அழைக்கப்படுகிறது. இதற்கு ஜம்புக்கோலபட்டன (யாழ்ப்பாணம்) (Mahavamsa: XI.23,38, XVIII:7, XIX 23, 25, 60 XX:25), கோணகாமக பட்டன (திருகோணமலை மாவட்டம்) (Ibid:III.24, Culavamsa XLI: 79, XLVIII.5. LXXI.18), மஹபட்டன (மன் னார் மாவட்டம்) (இந்திரபாலா 2006:180) ஆகிய துறைமுக நகரங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். இதில் பின்னொட்டு விகுதியாக வரும் 'பட்டினம்' என்பதை ஒரு திராவிடச் சொல்லாகக் குறிப்பிடும் மொழியியல் அறிஞர் பரோ இது பட், பட்டி என்ற சொல்லின் அடியாகப் பிறந்ததாகக் குறிப்பிடுகிறார் (Burrow 1968:211). இப்பெயர் மலையாள, கன்னட மொழிகளில் பட்டி எனவும், தெலுங்கில் பட்டு எனவும், சமஸ்கிருதத்தில் பட்டன எனவும் அழைக்கப்படுகிறது. இவை கடற்கரைசார்ந்த நகர், சிறுநகர், கிராமம், ஊர் போன்ற இடங்களைக் குறிக்கின்றன (Burrow & Emeneau 1961 : no.3199). சங்க நூல்களில் பட்டினம் என்பது பொதுவாக கடற்கரை சார்ந்த இடங்களுக்குரிய பெயராகக் குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில், ஆந்திராவில் இருந்து கன்னியாகுமரி வரையுள்ள கடற்கரை சார்ந்த சமூகங்களை 'பட்டினத்தார்' என அழைக்கும் மரபு காணப்படுகின்றது (Veluppillai 2002:149). ஈழத் தமிழரிடம் நகரங்களில் வசிப்போரை 'பட்டணத்தார்' என அழைக்கும் மரபு இன்றும் காணப்படுகின்றது. பேராசிரியர் இந்திரபாலா, இலங்கையில் ஏனைய துறைமுகங்களுக்கு பட்டினம் என்ற விகுதி பயன்



# 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வட இலங்கையில் இருந்த நாக நகர் பற்றிக் கூறும் பிராமிக் கல்வெட்டு

வம்சம் எனவும், சாசனவியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் 'நாகபூமி' (Nākapūmi) எனவும் வாசித்துள்ளனர். இருவரின் வாசிப்புக்களிலும் சிறிய வேறுபாடு காணப்பட்டாலும் இந்நாணயம் நாகரின் ஆட்சியில் வெளியிடப்பட்டதென்பதை உறுதிப்படுத்தியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ சமகாலத்தில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த நாக மன்னர்களைப் பற்றியும் மகாவம்சம் கூறுகிறது. அவர்களுள் இளநாக மன்

அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துப் பொறித்த சாசனங்கள், நவீன காலக்கணிப்பில் கி.மு. 650 முதல் கி.மு. 700 வரை பயன்பாட்டிலிருந்தவை எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சாசனங்களின் காலம் ஏறத்தாழ கி.மு. 550 இற்கு முற்பட்டவை எனக் கணிப்பிடப்பட்டுள்ளன (Conigham, Robin 2002 : 99-107). இக்காலக்கணிப்புகள்

படுத்தப்படாது, வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இருந்த துறைமுகங்களுக்கு மட்டும் அப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளமை, ஆதியிலும் இங்கு தமிழ்மொழி பேசுவோர் அல்லது திராவிட மொழிபேசுவோர் வாழ்ந்த இடங்கள் என்பதற்கான மறைமுக ஆதாரங்கள் எனக் குறிப்பிடுகிறார் (இந்திரபாலா 2006: 180).

நன்றி: போராசிரியர் பரமு புஷ்பரட்ணம்



# பிடரிமயிரை வேரோடு பிடுங்குவேன்

வட ஆபிரிக்காவில் 1941 பிற்பகுதியில் தோபுறூக் முற்றுகையைக் கைவிட்டு மேர்சா எல் பிறீகாவரை ஜேர்மனியத் தளபதி றொமெல் பின்வாங்கினார். றொமெல் தோற்று பின்வாங்கி விட்டார் என பிரித்தானியா மகிழ்ச்சியடைந்தது. மிகக்குறுகிய காலத்தில் றொமெல் பிரித்தானியப் படையணி மீது தொடுத்த வலிந்ததாக்குதலின் சுருக்கிமிது. 1941 பிற்பகுதியில் எகிப்து வரை முன்னேறிச்சென்ற ஜேர்மனியத் தளபதி றொமெல் போதிய உதவிகிட்டாததால் தோல்விகண்டு பின்வாங்கி மேர்சா எல்பிறீகாவில் (Mersa El Brega) நிலை கொண்டிருந்தார். பிரித்தானியர்கள் அவரையும் ஜேர்மன் இத்தாலியப் படையினரையும் விரைவில் வட ஆபிரிக்காவில் இருந்து திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.



மத்திய கிழக்கிற்கான பிரித்தானியப் படைத்தளபதி பீல்ட் மார்சல் ஒச்சின் லேக்கும் (Achin Leck) 8ஆம் படையின் தளபதி ஜெனரல் ரிச்சியும் (Ritchie) உடனடியாக றொமெல்லால் எதிர்த் தாக்குதலைத் தொடுக்கமுடியாது என எண்ணினர். சனவரி மாத முற்பகுதியில் றொமெல்லுக்கு 55 புதிய மன்சர் ராங்கிகளும் எரிபொருள்களும் படைக்கலங்களும் வந்துசேர்ந்தன. சனவரி 25 இற்குப் பின்பு 8 ஆவது பிரித்தானியப் படை மேலும் படைக்கலங்களைப்பெற்று பலமடைந்துவிடும் என் றொமெல் கருதினார். முக்கிய ஜேர்மன் தளபதிகளை அவர் அழைத்து சனவரி 21ஆம் நாள் தாக்குதலைத் தொடங்கப் போவதாக அறிவித்தார். அவர்களுக்கு அச்செய்தி ஆச்சரியமாக இருந்தது. பெப்ரவரி வரை பிரித்தானியருக்கு நேரம் தந்தோமோ எம்மை அவ்விடத்தைவிட்டே கலைப்பார்கள் அதற்கு முதல் அவர்களின் திட்டத்தை அழித்துவிடுகிறேன் என றொமெல் கூறினார்.

இத்தாலியப் படையணியில் பிரித்தானியர் ஊடுருவி இருந்ததால் தாக்குதலுக்குச் சற்று முன்புவரை அவர்களுக்கு விடயம் சொல்லப்படவில்லை. அத்துடன் தமது தலைமைச் செயலகத்திற்கும் (OKW-Oberkomm Andoder Wehramcht) அவர் தாக்குதல் குறித்து அறிவிக்கவுமில்லை. மேர்சா எல் பிறீகாவை விட்டுப் பின்வாங்கப்போவதாக இத்தாலியத் தளபதிகளுக்கு அவர் பாசாங்கு செய்தார். அவர்களூடாக செய்தி இத்தாலியத் தலைநகரான ரோமுக்குத் தெரிவிக்கப்பட அங்கிருந்து பிரித்தானிய ஒற்றர்கள் மூலம் செய்தி ஒச்லேக்கிற்குக் கிடைத்தது.

இரவோடு இரவாகத் தான் ராங்கிகளை றொமெல் முன்னோக்கி நகர்த்தினார். பகலில் அவை நன்கு உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தன. சனவரி 19 பாலைவனத்தில் மண்புயல் வீசியதனால் பிரித்தானிய வேவு வானூர்திகளால் வேவு பார்க்க முடியவில்லை. 20ஆம் திகதி வேவுபார்த்த வானூர்திகள் மேர்சா எல் பிறீகாவின் துறையில் தகர்க்கப்பட்ட கப்பல்களையும் பல இடங்களில் பொருள்கள் எரிக்கப்படுவதையும் கண்டன. அவர்கள் றொமெல் திரிபொலிக்குப் பின்வாங்கப் போவதாக அறிவித்தன. றொமெல்லால் தகர்க்கப்பட்டவை பழைய கப்பல்கள் என்பதையும் அங்குள்ள கட்டடங்கள் ஒன்றிற்குள்ளும் ஜேர்மன் படையினர் இல்லை என்பதையும் பிரித்தானியர் கவனிக்கத்தவறிவிட்டனர்.

வட ஆபிரிக்காவின் இத்தாலியத் தளபதியான ஜெனரல் கம்பராவிற்கு (Gambarra) றொமெல் தான் சிறிய ஓர் எதிர்த் தாக்குதலை மட்டும் நடத்துவதாக அறிவித்தார். அவர் அதைப் பெரிதுபடுத்தி ரோமுக்கு அறிவிக்கமாட்டார் என றொமெல் கணிப்பிட்டார். கம்பரா இச்செய்தியை முக்கியமாகக் கருதாததால் ரோமுக்கு இது குறித்து அறிவிக்கவில்லை. அதனால் தாக்குதல் குறித்து முழுமையான தகவல்களை பிரித்தானியரால் முன்கூட்டியே அறியமுடியவில்லை. 21ஆம் திகதி காலை முன்னணியில் நின்ற பிரித்தானியப் படைகள் றொமெல்லின் தாக்குதலால் திகைப்படைந்தன. 22ஆம் திகதி ஏய்ச்டேபியா (Agedabia) ஜேர்மனியரிடம் வீழ்ச்சியடைந்தது. நடந்த மூன்று நாள் சமரில் பிரித்தானியரின் 01ஆம் கவச ஊர்தி டிவிசன் அழிக்கப்பட்டது. றொமெல்லின் தாக்குதல் ஓர் அதிரடித் தாக்குதல் அல்ல. அது பெருமெடுப்பிலான வலிந்ததாக்குதல் என்பதை இத்தாலியரும் பிரித்தானியரும் அப்போதுதான் புரிந்துகொண்டார்கள்.

இத்தாலியின் தலைவர் முசோலினியும் படைத்தளபதி ஜெனரல் கவலெரோவும் (Cavallero) றொமெல்லின் வலிந்ததாக்குதலை நிறுத்தும்படி கேட்டனர். றொமெல் அவர்கள் வேண்டுகோளை ஏற்கவில்லை. றொமெல்லுடன் இணைந்து இத்தாலியப் படையினர் போரிட ஒப்புதல் தரமுடியாது என கவலெரோ தெரிவித்தார். றொமெல் அவர்கள் துணையின்றியே போரைத் தொடரத் தீர்மானித்தார். தனது மகன் மான்பிரட்டுக்கு "பழிக்குப்பழி வாங்கும் காலம் வந்துவிட்டது. பிரித்தானியரின் பிடரிமயிரை நாங்கள் பிடித்திருக்கிறோம். அவற்றை நான் வேரோடு பிடுங்கி எறியப்போகிறேன்" என எழுதினார். 30ஆம் திகதி றொமெல் பென்காசியைக் கைப்பற்றினார். கிட்லர் இவ்வெற்றியைத் தொடர்ந்து றொமெல்லை கேணல் ஜெனரலாகப் பதவி உயர்த்தினார். வட ஆபிரிக்காவிலிருந்து ஜேர்மன் படையை விரட்டியடிக்க இருந்த பிரித்தானியரின் இரண்டு டிவிசன்கள் பெருமிழப்பைச் சந்தித்தனர். பிரித்தானியர் பலநூறு மைல்களுக் கப்பால் காப்பு நிலைகளை அமைக்கும் பணியிலீடுபட வேண்டியதாயிற்று.

## கசாலாச் சமர்

வட ஆபிரிக்காவில் 1942ஆம் ஆண்டு ஜேர்மனியத் தளபதி றொமெல் இரண்டாம் முறையாக கசலாமீது நடத்திய தாக்குதல் அவருக்குப் பெரும் புகழையும் ஜேர்மனிய, இத்தாலியப் படையணிகளுக்குப் பெரும் கௌரவத்தையும் பெற்றுத்தந்த தாக்குதல்களில் ஒன்றாகும். அதன் சுருக்கமிது. 1941இல் வட ஆபிரிக்காவில் திரிபொலியிலிருந்து தோபுறூக் வரை முன்னேறிய ஜேர்மனியத் தளபதி றொமெல் 41இன் பிற்பகுதியில் பிரித்தானியப் படையின் கடும் எதிர்ப்பினாலும் படைக்கலப் பற்றாக்குறையினாலும் மேர்சா எல்பிறீகா வரை பின்வாங்கினார்.





றொமெல் தோல்விகண்டுவிட்டார். இனி அவரையும் அவரது படையினரையும் ஆபிரிக்காவைவிட்டு விரட்டிவிடலாம் எனப் பிரித்தானியா எண்ணியது. யாரும் எதிர்பாராத வகையில் றொமெல் சனவரி 21 1942இல் பிரித்தானியப் படையினர் மீது வலிந்ததாக்குதலைத் தொடுத்தார். அயித்தாபல, பென்காசி ஆகியவற்றை விரைந்து கைப்பற்றிய றொமெல் பெப்ரவரி 06 ஆம் நாள் கசலா வந்தடைந்தார்.

உருசியப் போர்முனையில் பல இடர்களைச் சந்தித்த கிட்லர் உடனடியாகக் கசலா மீது தாக்குதலைத் தொடர றொமெல்லுக்கு ஒப்புதல் தரவில்லை. ஏப்ரல் 42இல் றொமெல் தாக்குதலைத் தொடர கிட்லர் ஒப்புதல் தந்தார்.

கசலாவில் காப்பகழிகளில் நின்று சமர்புரியும் வகையில் அப்பகுதியில் காவல் நிலைகளைப் பிரித்தானியர் அமைத்திருந்தனர். கசலாக் கரையில் தென்னாபிரிக்க டிவிசன் நிலைகொண்டிருந்தது. 40மைலுக்கு அப்பாலிருந்து பேர்கச்சம்மில் 01ஆம் பிறீ பிரெஞ்சு பிரிகேட் நிலை கொண்டிருந்தது. முன்னணி நிலைகளின் பல பகுதிகள் சிறுசிறு பாசறைகளாக அமைக்கப்பட்டிருந்தன. இந்தப் பாசறைகள் 02மைல் நீளமுடையவை. இவற்றில் ஒரு பிரிகேட் படையினர் நிலை கொண்டிருந்தனர். கசலாவிலிருந்து பேர்கச்சம் வரை பத்து இலக்கம் (1,000,000) கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டன. இவற்றிற்குப் பின்னால் கவச ஊர்திப் படையணிகள் நிலை கொண்டிருந்தன. கண்ணி வயல்களுக்குக் காவலாக இருக்கவும் அதேவேளையில் அதனூடாக ஊடுருவுவோரைத் தடுக்கவும் சிறு பாசறைகள் அமைக்கப்பட்டிருந்தன. அச்சு நாட்டுப் படைகள் ஜேர்மனியக் கூட்டணி இக்காப்பை ஊடுருவினாலும் அதனைத் தடுக்கப் பலமாக அரண் செய்யப்பட்ட தோபுறூக், நைற்பிரிட்சு, அல் ஏடெம் ஆகிய பாசறைகள் அமைக்கப்பட்டிருந்தன.

சிறந்த இந்தக் காப்புத்திட்டத்தில் இருந்த ஒரு குறைபாடு







அதனை அதனது இடப்புறமாக வளைத்துத் தாக்கலாம் என்பது தான். முதலாம் உலகப்போரில் நிலையாக நின்று சமர்புரிந்த பிரித்தானியப் படையினருக்கு நகர்திறன் கொண்ட ஊர்திப் போர்முறை குறித்த பட்டறிவு போதாமல் இருந்தது.

ராங்கியை முதன்முதலில் பிரித்தானியாவே தயாரித்தது. ராங்கி, கவச ஊர்திகள், குண்டுவீச்சு வானூர்திகள் துணையுடன் நகர்திறன் கொண்ட போர்முறை குறித்த கருத்துக்களை முதன்முதலாக முன்வைத்த லிடல் காட், புலர் போன்றோர் பிரித்தானியரே ஆனால், ஜேர்மனியர்களே முதன் முதலில் இப்போர் முறையை நடைமுறையில் செயற்படுத்தினர். இதில் கெயின்சு குடேரியன் என்ற (Heinz Gudarian) ஜேர்மனியப் படைத்தளபதிக்குப் பெரும்பங்குண்டு.

கசலாப் பகுதி குறித்த றொமெலிடமிருந்த வேவுத்தகவல்களில் பல குறைபாடுகள் இருந்தன. கசலா எல்லையில் நின்ற 32ஆம் பிரிகேட் 22ஆம் கவச ஊர்திப் பிரிகேட் குறித்தும் நைட்பிரிட்சு பாசறையையும் அதில் இருந்த காவலர் பிரிகேட் குறித்தும், பெர்ல் கியூபியில் இருந்த 29ஆவது இந்தியப் பிரிகேட் குறித்தும் பேர்கச்சமிற்குத் தென் கிழக்கே இருந்த 3 ஆம் இந்திய ஊர்திப் பிரிகேட் குறித்தும் றொமெல் அறிந்திருக்கவில்லை. அத்துடன் புதிதாக வந்திருந்த அமெரிக்க கிராண்ட் (Grant) ராங்கி குறித்தும் 57மி.மீ. ராங்கி எதிர்ப்புப் பீரங்கி குறித்தும் அவர் அறிந்திருக்கவில்லை.

பிரித்தானியரை அவர்களது இடதுபுறமாகச் சுற்றிவளைக்கும் போது பேர்கச்சம் உடனடியாக கைப்பற்றப்படாது போனால் வழங்கல்களில் மிகப்பெரிய சிக்கல்கள் ஏற்படும் ன றொமெல்லுக்கு அவருடைய தளபதிகள் கூறினார்கள். அதை ஏற்றுக் கொண்ட றொமெல் "இடர் என்ற போதும் திட்டத்தை செயற்படுத்துவோம்" என்றார்.

26 மே 1942 பிற்பகல் 2 மணிக்கு தாக்குதல் தொடங்கப்பட்டது. குறூவெல்லின் (Gruewell) தலைமையின் கீழ் திசைதிருப்பும் தாக்குதலை நாலு இத்தாலிய டிவிசன்கள் தொடுத்தன. அடுத்ததாகப் பெரும் தாக்குதல் ரிக்கப்சூ பகுதியை நோக்கியே நடக்கப் போகின்றது என்பதுபோல அப்பகுதியில் ஆட்டிலறி, வானூர்திகள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அத்துடன் வான்கல இயந்திரங்கள் பூட்டப்பட்ட தூசி கிளப்பும் பாரவூர்திகள் மூலம் பெருமளவில் புழுதியும் அப்பகுதியில் கிளப்பப்பட்டது.

இது பன்சர் ராங்கியோடு ஊர்திமயப்படுத்தப்பட்ட காலாட் படையினர் பெருமெடுப்பில் அப்பகுதியை நோக்கி நகருகின்றனர் என்பது போன்ற போலித் தோற்றதைக் கொடுத்தது. பிரித்தானியர் அடுத்த நாட்காலை ரிக்கப்சூ பகுதியில் பெரும் தாக்குதலை எதிர்பார்த்தனர். 22.30 மணிக்கு றொமெல் "வெனிசியா" (Venizia) என்ற குறி சொல்லைக் கூறியதும் படையணி தெற்கு நோக்கித் திரும்பியது. றொமெல்லின் படை மூன்று அணிகளாகப் பிரிந்து தாக்குதலை நடத்தியது. எறிக் கவசப்படையணி 21ஆவது பன்சர் அணியுடன் சேர்ந்து விடிவதற்குள் பேர்கச்சிம்மிற்கு தெற்கேயிருந்த 3ஆம் இந்திய ஊர்திப் பிரிகேட்டைத் தோற்கடித்தது. 90ஆவது இலகு டிவிசன் ரெட்மா சூரத்தைத் தாக்கி அழித்து அல் ஏடெம் நோக்கி நகர்ந்ததன் மூலம் 7ஆம் கவச டிவிசனின் பின்னணிக்கு வந்து சேர்ந்தன. நடுப்பகுதிக்கு ஊடாக ஊடறுத்த 15ஆவது பன்சர் டிவிசனின் பெரும் பகுதி 4ஆவது கவச பிரிகேட்டைத் தாக்கி தோற்கடித்தது. இங்கு தான் முதல் முதலில் றொமெல் கிராண்ட் ராங்கியைக் கண்டார். ஆபிரிக்க கேச்ன் வேகமான முன்னேற்றத்தால் நிலைகுலைந்த 7ஆம் கவச டிவிசனின் தலைமையகத்தோடு. அதன் தளபதி ஜெனரல் மெசாலி கைதுசெய்யப்பட்டார். இரவுக்குள் அக்ரோமாவை அடைய றொமெல் விரைந்து சென்றார். ஆபிரிக்க கோச்ஜ நைற் பிரிட்ச்சு:கு மேற்காகச் செல்லவிட்டு அதன் வழங்கல் அணிகள் மீது பிரித்தானியர் தாக்குதல் தொடுத்தனர். றொமலின் அணிதன் தொடர்புவழி வழங்கல் அணி துண்டிக்கப்பட்டு சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் பொறிக்குள் மாட்டிக்கொண்டது. பேர்கச்சமை எதிர்பார்த்தபடியே உடனடியாக வெற்றிகொள்ள முடியாததால் றொமெல்லுக்கு படைக் கலன்கள் வரும் பாதை நீண்டதாக இருந்தது. இதனால் வழங்கல் பாதையைச் சுருக்க எண்ணிய றொமெல் 150ஆவது டிவிசனால் காக்கப்பட்டிருக்கும் கண்ணி வயல்களுக்கு ஊடாக வழி ஒன்றை அமைக்க முயன்றார். அவரது பொறியியலாளர்கள் இரண்டு வழிகளை கண்ணிகள் அற்றதாக ஆக்கிக் கொடுத்தனர். போதிய எரிபொருள் படைக்கலன்கள் அற்றிருந்த றொமெல் இந்தக்கண்ணி வழிக்குள் மே 31இல் தன்படையணியைப் பின்வாங்கச் செய்தார். தன்னைச் சூழ இருந்த எதிரியின் கண்ணி வயல்களைத் தனக்குக் காப்பாக மாற்றிக் கொண்டு 150ஆவது பிரிகேட்டையும் சுற்றி வளைத்து அடுத்த தாக்குதலுக்கான தளம் ஒன்றை அமைத்துக்கொண்டார்.

இதற்கிடையில் முன்னணி படைநிலைக்குப் பறந்து கொண்டிருந்த குறூவெல்லின் வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது. குறூவெலை பிரித்தானியர் கைதுசெய்தனர். றொமெல் இக்கட்டில் இருக்கும் போது குறூவெலை காணாத கேணல் வெசுற்பால் இத்தாலியப் படையணிக்குத் தளபதியாக இத்தாலியர் யாரும் பொறுப்பேற்றால் அவர்கள் சமரைச் சரியாக நடத்தமாட்டார்கள் எனப் பயந்தார். எனவே அங்கு அப்போது வருகை தந்த வான்படைத் தளபதி பீல்ட் மார்சல் கேசலிங்கை குறூவெல்லின் இடத்தில் பணியாற்றும்படி கேட்டார். முதலில் தயங்கினாலும் பின்பு பொது நன்மை கருதி பீல்ட் மார்சல் கேசலிங் கேணல் ஜெனரலின் தரத்திலுள்ள பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

150ஆவது பிரிகேட்டில் 3000 படையினர், 124 பீரங்கிள், 80 பாரிய மேற்றிடா ராங்கிகள் (Matida Tanks) போதியளவு ரவைகள் இருந்தபோதும் மே 30 இல் றொமெல் தொடங்கிய தாக்குதலால் அது நிலைகுலைந்தது. இதற்கு வெளி உதவி கிடைக்கவில்லை. அதன் பின்னணியிலும் பெருமளவில் ஜேர்மன் படையனிர் நின்றனர். யூன் 01 ஆம் நாள் சமர் கைகலப்புச் சண்டையாக மாறியது. முன்னணியில் நின்ற றொமெல் "எதிரி களைத்துவிட்டான். வெள்ளைக்கொடியைக் காட்டுங்கள். சரணடையச் சொல்லுங்கள்" எனக் கட்டளையிட்டார். தாக்குதல் அணித் தளபதி கப்ரன் ரெயிசுமான் நம்ப முடியாது இருந்த இக்கட்டளையை கட்டளைக்குப் பணிந்து செயற்படுத்தினார். அவர் ஆச்சரியப்படும் வகையில் பிரித்தானியர் கைகளை உயர்த்திய வண்ணம் தம் நிலையிலிருந்து வெளியே வரத்தொடங்கினார். பின்பு றொமெல்லின் சரிதையை எழுதி டென்மன்ட்யங்கிடம் ஜெனரல் யேயர்லீன் யூன் 01ஆம் நாள் நாம் 150 ஆவது பிரிகேட்டை கைப்பற்றாது போயிருந்தால் பிரித்தானியரால் முழு ஆபிரிக்க கோர்ஜயும் பிடித்திருக்க முடியும். 03ஆம் நாள் மாலை நாம் பகைவரால் சூழப்பட்ட நிலையிலும் எரிபொருளும் இல்லாத நிலையிலும் இருந்தோம் எனக்கூறினார்.

150ஆவது பிரிகேட்டைத் தோற்கடித்ததன் மூலம் கிழக்கு, மேற்காகச்செல்லும் பாலைவனப் பாதையான ரிக் கப்சூ, ரிக் அல் அப்டுக்கான வழி திறக்கப்பட்டதுடன் கசலா பகுதியின் முக்கியமான நடுப்பகுதி றொமெல்லின் கட்டுப்பாட்டுக்குள் வந்துத. யூன் 05இல் நேசநாட்டுப் படையணிகள் றொமெல்லைப் பலமாகத் தாக்கியபோது றொமெல் அவர்களை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தார். இரண்டு நாள் நடந்த சமரில் ரிச்சியின் தலைமையின் கீழ் செயற்பட்ட பிரித்தானியாவின் 08ஆம் படை அணி பெரும் இழப்புக்களைச் சந்தித்தது. 150 ராங்கிள், 100 களப் பீரங்கிகள், 36 ராங்கி எதிர்ப்புப் பீரங்கிகள் என்பனவற்றையும் 10ஆவது இந்தியன் பிரிகேட்டையும் அந்தப் படை இழந்தது. 3000 பேர் கைதிகளாயினர்.




பிரிட்டிஷ் கைதிகள் டோப்ருக்கைவிட்டு வெளியேறுகிறார்கள்

றொமெல் தோபுறூக்கை நோக்கி நகர்வதை பேர்கச்சம் மட்டும் தடுத்து நின்றது. யூலை 10, 11 இல் பேர்கச்சமும் வீழ்ச்சியடைந்தது. ரிச்சி தன் படையணிகளுடன் ரிக் கப்சூ நிலைக்குப் பின்வாங்கினார். அந்த நிலை யூன் 11 இல் றொமெல்லால் தாக்கப்பட்டது. அன்றிரவு 123 ராங்கிகள் அல் ஏடெமுக்கு கிழக்கே ரிக்கப் சூவை ஊடறுத்துச் சென்றன. கசலா எல்லையின் நின்ற, தென் ஆபிரிக்க படையணிகளும் மற்றைய படையணிகளும் சுற்றி வளைக்கப்படலாம் என்ற நிலையில் அந்த அணிகள் தோபுறூக் நோக்கி பின்வாங்கின கசலா சமரை தொர்ந்து யூன் 21இல் தோபுறூக்கும் றொமெல்லிடம் சரணடைந்தது. ஜேர்மனியில் பீல்ட் மார்சல்களாக இருந்தோர் எல்லோரும் அந்த நிலையை அடைந்த அகவைகளிலும் குறைந்த அகவையில் - 50 றொமெல்லுக்கு கிட்லர் பீல்ட் மார்சல் நிலை தந்து அவரைக் கௌரவித்தார்.

-யோ. செ. யோகி

# நீந்திக் கடந்த நெருப்பாறான நா. யோகேந்திரநாதன்: ஈழத்து எழுத்துலகின் ஒரு சரித்திரம் சாய்ந்தது!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

29.12.2024

ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர், நடிகர், சிந்தனையாளர், பின்னணி குரல் கலைஞர், பல புத்தகங்களை எழுதியவர் என பன்முக ஆற்றலைக் கொண்ட நா.யோகேந்திரநாதன் இவ்வுலகை விட்டு ஞாயிறு 29-12-24இல் பிரிந்தார்.

இறுதிப் போரின் வலிகளைச் சுமந்த வரலாற்றைப் படைத்த மூத்த படைப்பாளர் நா.யோகேந்திரநாதனின் 'நீந்திக்கடந்த நெருப்பாறு' நாவல் அண்மையில் சிறீலங்கா அரசின் அச்சுறுத்தலுக்கும் உள்ளானது.

போர்க்காலத்தில் எழுத்தாளராகவும் ஊடகவியலாளராகவும் பணியாற்றிய நா. யோகேந்திரநாதன், புலிகளின் குரல் நாடகங்கள் வழியாகவும் பிரபலமாக அறியப்பட்டார். இவர் இறுதி யுத்த அனுபவத்தை பல பாகங்களாக நீந்திக்கடந்த நெருப்பாறு என்ற நாவலாக எழுதியமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் எழுதிய '34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு' நாவல் வெளியீட்டு விழா கிளிநொச்சியில் இவ்வருட ஆரம்பத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், அவ்



அமைப்பின் தலைவரும் ஈழத்து எழுத்தாளருமான தீபச்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதனின் நாவலுக்கு கிளிநொச்சியில் மகத்தான வரவேற்பு கிடைத்தது.

விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போரான குடாரப்பு தரை




யிறக்கம் குறித்த இந்த நாவல் வெளியீட்டில் அரங்கம் நிறைந்த மக்கள் வருகை தந்தனர். மக்களின் மகத்தான வரவேற்புடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாவலின் அனைத்துப் பிரதிகளும் விற்றுத் தீர்ந்தன என்பது உண்மையான படைப்பாளிக்கு கிடைக்கும் கௌரவச் சான்றாகும்.

## மூத்த எழுத்தாளருக்கு மதிப்பளிப்பு:



இதேவேளை இந்நிகழ்வில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் மதிப்பளிப்பு செய்யப்பட்டது.

இறுதி யுத்தம் குறித்த இந்த நாவல் மன்னாரில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையான துயரப் பயணத்தை பதிவு செய்துள்ளது. இதுவரையில் நீந்திக் கடந்த நெருப்பாறு நாவலானது இரண்டு பாகங்கள் வெளிவந்துள்ளன.

இறுதிப் பாகமான மரண மழையில் நீந்திக் கடந்த நெருப்பாறு வெளியிடப்பட்டது. போர் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இந்த நூல் ஈழத் தமிழ் மக்களின் சோக வரலாற்றை மீண்டும் நினைவுபடுத்துகின்றது.

இந்த நிகழ்வில் படைப்பாளிகள், அரச ஊழியர்கள், இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் எனப் பலரும் திரண்டு கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

ஓர் எழுத்தாளன் இறந்துபோயினும் அவர்தம் எழுத்துக்கள் என்றும் உயிர்ப்புடன் வைத்திருப்பது அவரின் படைப்புக்களாகும். மகாதேவா ஆச்சிரமம் சைவச் சிறுவர் இல்லம் 2012, 34 நாட்களில் நீந்திக்கடந்த நெருப்பாறு, இடிபடும் கோட்டைகள், இமயம்: விருதுபெற்ற நாயகனை நெஞ்சாரப் பாராட்டி விரியும் வாழ்த்து மலர், காட்டு நிலா (வானொலி நாடகங்கள்), நீந்திக் கடந்த நெருப்பாறு, பூநகரியிலிருந்து புதுமாத்தளன் வரை நீந்திக் கடந்த நெருப்பாறு, மரண மழையில் நீந்திக்கடந்த நெருப்பாறு ஆகிய படைப்புகளை மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் வெளியிட்டுள்ளார்.



கிளிநொச்சியின் மைந்தனும், முன்னர் திருவையாறு உபதபாலதிபருமாக இருந்தார். போராட்ட காலத்தின் பதிவுகளை சிறப்பாக வெளிக் காட்டிய நா யோகேந்திரநாதன் அவர்களின் பங்களிப்பு ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பைத் தந்துள்ளது.












# REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.

EVERYDAY SHOPPING



## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamle transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

## Member Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.





e Wallet




Reward Points

WWW.MYEVERYDAYSHOPPING.COM



# மூதாதையரின் எலும்புகள்

கெர்பன் அடிவாரத்திலிருந்த பெரும்பாலான கிராமங்கள் முறியடிக்கப்பட்டுவிட்டன. அவற்றில் வசித்தவர்கள் அகதிகளாய் பார்டான் கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். மற்ற சில கிராமங்கள் இன்னமும் தாக்குப் பிடித்துக் கொண்டிருந்தன.

மக்கள் உணவைப் பகிர்ந்து உண்டார்கள், உறைவிடங்களைப் பகிர்ந்து தங்கினார்கள், பார்டானில் காப்பரண்களை அமைத்து நூற்றுக்கணக்கானோர் ஆயுதமேந்தி காவல் வேலையில் இருந்தார்கள். அவர்கள் சாவுக்கு அஞ்சாமல் போராடினார்கள். தீவிர எதிர்த் தாக்குதல் போரை நடத்தினார்கள். என்றாலும் “பறிக்கப்பட்ட” கிராமங்களில் திரும்பவும் கால் கொள்ள அவர்களால் முடியவில்லை.

காற்று அதிர்ந்து நடுங்கியது. வானத்தில் வெறி கொண்ட சுழன்று பறந்து வந்த பகை விமானங்களில் இருந்து குண்டுகள் சீறி விழுந்தன. வீடுகளைத் தூள் தூளாகச் சிதறடித்தன. மரங்களைப் பிய்த்துப் போட்டன. எல்லாவற்றையும் குண்டுச் சிதறல்கள் பாய்ந்து தகர்த்தன. மூண்டெரியும் நெருப்பொளியில் மரணத்தையும், சர்வ நாசத்தையும் கண்டு களிப்படைந்த பின்னரே விமானங்கள் அந்தக் கிராமத்தின் வானத்தைப் பிரிந்து சென்றன.

ஆயினும் பார்டான், எதிர்த்தாக்குதலை விடாது தொடர்ந்தது. காவல் போராளிகள் காப்பகழ்களைத் தோண்டி அந்தப் பள்ளங்களோடு இணைந்து பதுங்கியிருந்தார்கள். அவ்வப்போது கிராமத்தின் மீது பாயவரும் கவச வாகனங்களை, திடீரெனத் துள்ளியெழுந்த தாக்கி, எதிரிகளை நிலைகுலையச் செய்தார்கள்.

தாக்குதல் முயற்சி பின்னடைந்து எதிரிகளின் கவச வாகனங்கள் நீங்கிய பின், கிராமத்தில் அன்றைய இரவு முழுவதும் சாவு பயம் விரவிய பயங்கர மௌனம் நிலவியது.

அரண் மேடுகளுக்கு அப்பாலிருந்த எதிரிப் படைகளின் சினம்




மேலும் பொங்கியது. அவர்கள் அடுத்த நாளின் காலைப் புலரலோடு பார்டானுக்கு வந்தார்கள். கிராமக் காப்பரண்களைப் பிளந்து ஊடுருவி ரத்தவெறி கொண்டு தாக்கினார்கள். பதுங்கு குழிகளே பலருக்குச் சவக் குழிகளானது. சுட்டும், கோடரியால் வெட்டியும் ஏராளமானோரைச் சாகடித்தார்கள். அவர்களது டாங்கிகளின் பூதங்கால்கள் பிணங்களையும் நசுக்கித் தடம் பதித்துச் சென்றன.

ரத்த பயங்கரமிக்க ஆக்கிரமிப்புக் கும்பல் மசூதியையும், கிராமச் சதுக்கத்தையும் பெரும்பாலும் கைப்பற்றி விட்டது. என்றாலும் இந்த ஜீவ மரணப் போராட்டத்தில் காவல் போராளிகள் தொடர்ந்து போராடினார்கள்.

அப்போது, கிழவர் மர்சித் அலயான் தன் கனத்த சரீரத்தோடும், மயிர் அடர்ந்த தாடியோடும் வெளிவந்தார். தாளாத துக்கத்தால் அழுந்தி அவர் தலை தாழ்ந்திருந்தது. முகம் திண்மை பெற்று இறுகியிருந்தது. உறங்கும் நேரத்தில் கொசுக்களை விரட்டுவதைப் போல் அவர் தன் கைத்தடியை அங்குமிங்கும் சுழற்றி காற்றைக் கோதியவாறே வந்து நின்று கர்ஜித்தார்.

“இளைஞர்களே, இன்று நமக்குச் சாவுதான் உன்னதமானது. வதைபடுவதைக் காட்டிலும் சாவோம். நாம் மூதாதையரின் எலும்புக் கூடுகளுக்கப்பால் புதிய வாழ்விற்காகப் போராடிச் சாவோம்.”

மக்கள் போராளிகளின் வீரஞ்செறிந்த எதிர்த் தாக்குதலுக்கு ஈடுதந்து நிற்கத் திணறி நில ஆக்கிரமிப்புக் காதகர்கள் மலையடிவாரங்களை நோக்கிச் சிதறியோடினர். மக்கள் அவரவர்க்குரிய சடலங்களை அடையாளம் கண்டு. அவற்றைப் பெரிதாய் வாய் பிளந்து கிடந்த இடுகாட்டில் தம் மூதாதையரின் எலும்புகளுடன் சேர்த்துப் புதைத்தனர்.
பிறகு அவர்கள் “சூழ்நிலை”யின் எல்லாப் பக்கங்களிலும் நெஞ்சம் செலுத்தி விவாதித்தார்கள், நிலைமையின் பாதக அம்சங்களை ஆராய்ந்தார்கள். முடிவில், பெண்களும், குழந்தைகளும் கிராமத்தை விட்டு வெளியேறுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

சோகம் தொற்றிய முகங்களுடன் பெண்கள் குழந்தைகளையும், சிறிய துணி மூட்டைகளையும், சுமந்தவாறு இருள் அடர்ந்த அந்த இரவில் பார்டான் கிராமத்திலிருந்து புகலிடம் தேடி நகர்ந்தனர். அவர்கள் புழுதியும் புதர்களும் நிறைந்த சாலை வழியே “பெய்ட் ஜிப்ரான்” கிராமத்தை நோக்கிச் சென்றார்கள். தத்தம் கணவர்களையும், போர் அரங்கில் அவர்களோடு இடம் பெறும் மரணத்தையும், விட்டுச் செல்லும் வீடுகளையும், எண்ணிக் கலங்கி, “சொந்த மண்ணில் குடும்பமாய் ஒன்றிணையும்” நினைவு நெஞ்சில் ஊடாட, அந்தப் பெண்கள் மௌனமாய் நடந்தார்கள். பெய்ட் ஜிப்ரானை அடைவதற்குள் எதிரிகள் குறுக்கிடுவார்களோ என்ற அச்சத்தால் திகில் நிறைந்து தயங்கித் தயங்கிச் சென்றார்கள்.

மறுநாள் காலை காது செவிடுபடும் வெடி முழக்கங்களோடு விடிந்தது. எங்கும் ஒலிக் குழப்பம், சண்டை விமானங்களின் குண்டு மாரி வீடுகளின் கூரையைச் சிதறடித்துக் கொண்டு சுவர்களை ஊடுருவின. தோட்டங்கள் தீயில் கருகின. கிராமத்தைச் சுற்றிலுமிருந்த மரங்கள் வேரடி மண்ணோடு வீழ்த்தப்பட்டு அழிக்கப்பட்டன. குண்டுகள் விழுந்து புகைத் தூண்களும், நெருப்பு சுவாலைகளும் எழும்பின. தரை அதிர்ந்தது.

கிழவர் மர்சித் அலயான் தனது வழக்கமான பிரார்த்




தனைகளை முடித்த பின்னும் கைகளை அகல விரித்து வேறு சில வேண்டுதல்களை முணுமுணுத்தவாறே வந்தார். சுற்றிலும் பார்வையைச் செலுத்திய பிறகு,

“ஓ கடவுளே! இது நரகம், இது சாவின் ஸ்தலம், நெருப்பின் உலகம், பிரிவின் பூமி” என்று இரைந்தார். தொடர்ந்து செவிப் பறை கிழியும்படி கேட்கும் போர் ஓசைகளும், சாவுக் கூச்சல் களும் அவர் மனத்தைக் குதறிப் புண்படுத்தின. ஆத்திரம் முகத்தில் பொங்கி வழிந்தது. குரல் வறண்டது. “கடவுளே, நீ இறந்து விட்டாய்” என்று முனகினார்.
பிறகு பெருமூச்செறிந்து குண்டு மாரியால் அழிந்த மரங் களையும், தாக்குதலுக்குத் தப்பித்த மரங்களையும், அவற்றின் அடியில் கறுத்துக் கிடக்கும் நிழற் கிளைகளையும் கவலை நிலவும் கண்களால் பார்த்தவாறே உலவிக் கொண்டிருந்தார்.

அப்போது யாரோ தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டதும் நின்றார்.

மரக் கிளைகளினூடாக அவரது மகன் “முகமத்” தலை தெறிக்கத் தன் துப்பாக்கியை ஏந்தியவாறே ஓடி வந்தான். அருகில் வந்தடைந்ததும், தனது தந்தையின் கண்களை நோக்கி உடல் பதறப் பறதச் சொன்னான்.

“இனி அவ்வளவுதான். நம்பிக்கைகு இடமே இல்லை அப்பா. எவ்வளவு சீக்கிரமோ அவ்வளவு சீக்கிரம் அந்த இடத்தை விட்டு வெளியேறவேண்டும். கிளம்புங்க்ள்”

இதைக் கேட்டதும் கிழவரின் முகம் ஆச்சரியத்தால் களித்தது. பிறகு கோபமும் ஏளனமும் தீப்பொறிகளாய் தெறிக்க, “வெளி யேற வேண்டுமா? எங்கே? தாய் நிலத்தை விட்டு எங்கே போவதாம்! நமது மூதாதையரின் எலும்புகளைப் பிரிந்து எங்கே செல்வதாம்! சொல் முகமத், இந்தக் கிழவயதில் நான் வதை பட்டுச் சாவதையோ நீ விரும்புகிறாய்?” என்று எரிந்து விழுந்தார்.

ஆனால் மனதில் எந்த அசைவுமின்றி முகமத் தன் தந்தையோடு வாதத்திலிறங்கினான். “முடிந்த வரை நாங்கள் போராடினோம். அப்பா, கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். அவர் களிடம் போர் விமானங்களும் நவீன டாங்கிகளும் இருக் கின்றன. எங்களிடம் இருப்பவை துப்பாக்கி மட்டுமே. ஆனால் தேவையான துப்பாக்கிகள் கூட சேமிப்பில் இல்லை. இந்த நிலையில் அவர்களை விரட்டியடிப்பது நடக்கிற காரியமா?”

மகனின் கோழை ஆத்மாவை அறிந்து கிழவர் மனங் கசந்தார். “நீ என்ன, எல்லாம் முடிந்து விட்டதாகவா சொல்கிறாய்? இல் லையப்பா இல்லை, ஒரு சமயம் “ஷேக் இஸ்ஜெத்தின்” அவரது சீடர்களுக்கு “மனிதனாய் இற” என்று அறிவுறுத்தினார். நான் “மனிதனாய்” சாவேனே ஒழிய உன்னோடு வரப்போவ தில்லை, நீ போகலாம்” எனச் சொல்லி முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

பிறகு சட்டென்று சுழன்று திரும்பி, “உன் துப்பாக்கியைக் கொடுத்து விட்டுச் செல். இனி அது உனக்குத் தேவைப்படாது” என்று ஆத்திரம் ஆத்திரமாய்க் கட்டளையிட்டார்.

தந்தையின் முகத்தில் வீசிய கோபக் கனலின் சூடு தாளாமல், முகமத் “ஆனால்... ஆனால் அப்பா...” என ஏதோ சொல்ல முயன்று நாவெழாமல் மௌனமாய் நின்றான்.

கிழவர் மறுபடியும் கத்தினார், “கொடு என்றால் அதை என் னிடம் கொடுத்துவிட்டுச் செல் என்று அர்த்தம்”. முகமத் அவனது வாழ்நாளில் என்றுமே பார்த்திராத புதிய தோற்றத்தில் தன் தந்தையைக் கண்டான். அவரது கோபரூபம் அவனை அச் சுறுத்தியது. துப்பாக்கியைத் தந்து விட்டு தலை குனிந்து நின்றான். செல்லும் முன் அன்பை வெளிப்படுத்தும் பொருட்டு தந்தையின் கன்னத்தில் முத்தமிட்டுப் பிரிய விரும்பினான்.

ஆனால் அவரோ, “போ, போய்த் தொலை. கோழைப் பதரே, என் கண் முன் நிற்காதே” என்று தனது முழுப் பலத்தையும் செலுத்தி அவனது நெஞ்சை நெக்கித் தள்ளினார்.

அடுத்து வந்த சில நாட்களில் ஏராளமான கிராமங்கள் எதிர்ப்பில் பின்வாங்கி வீழ்ந்தன. உணவுப் பொருட்களைச் சேகரிக்கவும், படுக்கை விரிப்புக்களை எடுத்துவரவும் மக்களில் பலர்.

அவரவர் கிராமங்களுக்குச் சென்றார்கள். முகமத்தும் தனது பார்டான் கிராமம் நோக்கி புதர்கள் சிலிர்த்திருக்கும் சரிவுப் பாதை வழியே சென்றான். முட்களில் பதிந்து சென்ற அவன் பாதங்களில் ரணம் வழிந்தோடி வலியெடுத்தது. ஆனாலும் “தந்தையைக் காணும் ஆவல் மிக்க உறுதியொடு அவனது நடை முன்னேறியது. அவன் மனக்குரலின் ஒவ்வொரு ஒலித்துளியும் “அப்பா... அப்பா...” என்று முணுமுணுத்தது.

பார்டானை அடைந்ததும், மரங்களில் சரிந்து, சுவர்களைத் தாண்டி, வேலிகளை மீறி அவன் ஓடினான். தந்தை வசித்த தோட்டத்தில் ஆவல் வெறி ததும்பும் கண்களால் அவரைத் தேடினான். வானமும், சுற்றியிருந்த மரங்களும் கதி கலங்கி அதிருமளவுக்கு “அப்பா... அப்பா...” எனக் கூக்குரலிட்டான். பதிலாக அவன் குரலின் எதிரொலிப்பே எழுந்தது.

தாழ்ந்து படர்ந்திருக்கும் மரக்கிளைகளுக்கிடையில் எச்சரிக் கையுடன் தலையை முன் தள்ளிப் பாய்ந்து சென்று தேடினான். கிளைகளடர்ந்த ஒரு ஒலிவ் மரத்தருகே வந்த போது அவன் அதிர்ந்து போனான்.

அந்த மரத்தின் நிழலில் கிழவர் மர்சித் அலயான் கிடந்தார். அவரருகில் துப்பாக்கி கிடந்தது. உடைந்த வெடிமருந்துப் பெட்டிகளின் சிதிலங்கள் அவரைச் சுற்றிலுமிருந்தன.

முகமத் அவரது உடலை மெல்ல நகர்த்தினான். மண்ணுக் குள்ளிலிருந்து வெளியிழுப்பதைப் போன்ற உணர்வைத் தரும் படிக் உடல் கனத்துப் போயிருந்தது. தாடி மயிர் மண்ணோடு இணைந்து வேர் விட்டிருந்ததைப் போல தோற்ற மளித்தது.

உறைந்த குருதியின் தடங்கள் அவர் கன்னங்களிலும், நெற்றி யிலும், தாடியோரங்களிலும், மண்ணிலும் கருஞ்சிவப்பாய் கிளை பிரிந்து கோரக் காட்சி தந்தது. விழித்திருந்த அவரது வலக் கண்ணில் ரத்தம் நிரம்பி உறைந்திருந்தது.

துப்பாக்கி ரவை பாய்ந்து சென்ற துளையை அவர் நெற்றியில் கண்டதும் முகமத் துக்கத்தால் நொய்ந்து போனான். அவரது சவக் கன்னங்களில் முத்தம் பதித்து கதறி அழ ஆரம்பித்தான். பிரபஞ்சத்தின் அனைத்து நெஞ்சையும் பிசையும் வண்ணம் கனத்த நிசப்தச் சூழலில் அவனின் அழுகுரல் எழுந்தொலித்தது.

அழுகை நின்றபோது அவன் கண்கள் புதியதொரு உறுதி பூண்ட ஜொலித்தன. தனது மேலங்கியால் தந்தையின் உட லைப் போர்த்தி முதுகில் சுமந்து சென்றான். சுமை தாளாமல் அவன் கால்கள் வழிமுழுதும் மண்ணில் இழுபட்டுச் சென்றன. சுடு காட்டின் வாசலருகே வந்ததும் உடலைக் கீழே கிடத் தினான். அகன்று கிடந்த இடுகாட்டின் வாயை மூடியிருந்த பெரும் பாறையை நகர்த்திய பின் மறுபடியும் தன் முதிய தந்தையைச் சுமந்து சென்றான். அவரை அவரது மூதாதை யரின் எலும்புகள் நிறைந்த அந்த இடுகாட்டின் தணியாப் பசி கொண்ட பெருத்த வயிற்றில் திணித்தான். வெளிவந்து பழைய படியே பாறையால் இடுகாட்டின் வாயை அடைத்து விட்டு, கைகளை அகல விரித்து பாராயணம் செய்திருந்த புனிதக் குரானின் முதல் அத்தியாயத்தை உரத்து ஓதினான்.

பிறகு தோட்டத்திற்குச் சென்றான், அங்கே ஒலிவ் மரத்தடியில் ஒரு வீரனின் கைவசப்படுவதற்காய் தவமிருந்த துப்பாக்கியை, இறக்கும் வேளையில் கிழவர் மார்சித் ஏந்தியிருந்த அந்தத் துப்பாக்கியை நோக்கி முகமத் தலை பணிந்தான்.

துப்பாக்கியைக் கைக்கொண்டான். எழுந்து மரங்களடர்ந்த பாதை வழியே மாலைச் சூரியனைப் போல் விரைவாய் சென்று மறைந்தான்.

- களத்தில் 01.01.1997

**நாம் அரசியல்வாதிகள் அல்லர். நாம் புரட்சிவாதிகள். நாம் பழைய அரசியல்வாதிகள்போல மக்களை அணுகக்கூடாது. மாலைகள் அணிந்து, மேடைகள் மீது முழங்கி, மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு, மக்களுக்குப்பொய் சொல்லி, மக்களை ஏமாற்றி அந்தக்காலத்து அரசியல்வாதிகள் நாடக மாடினார்கள். நாம் மக்களை வித்தியாசமாக அணுக வேண்டும். மக்களுக்கு உண்மைநிலையை விளக்கவேண்டும். பொய்யான, நடை முறைச்சாத்தியமற்ற வாக்குறுதிகளை நம்மக்களுக்கு வழங்கக்கூடாது. நாம் எதற்காகப் போராடுகிறோம், எந்தக் கொள்கையில் அடிப்படையில் போராடுகிறோம், நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன? என்பதையெல்லாம் நாம் மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும். உண்மைநிலையை எடுத்துவிளக்கும் பொழுதான் மக்கள் எம்மீது நம்பிக்கைகொள்வார்கள்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# என் தோழர்களுக்கு...

– கிட்டு

23.06.1991



நீண்ட காலமாக சிங்கள இனவாதப் பிடிக்குள் சிக்கி அல்லல் உற்றுக் கொண்டிருக்கும் எனது மக்களுக்கு, என்னால் முடிந்தவரை சேவை செய்ய விரும்புகின்றேன். ஆதரவற்று தினம் தினம் மடிந்து கொண்டிருக்கும் எனது மக்களுக்கு ஒரு தோழனாக, தந்தையாக, சகோதரனாக, நண்பனாக இருக்க விரும்புகின்றேன்.

இயக்கம் என்பது அவர்களைப் பாதுகாக்கும் வெறும் இராணுவ அமைப்பு மட்டுமல்ல; அவர்களுக்கு நல்வழி காட்டி; வாழ்வை வளப்படுத்தும் அமைப்பும் கூட.

இயக்கம் என்பது மக்களுக்கு அமைதியையும், வாழ்வையும், வாழ்க்கையில் நம்பிக்கையையும் கொடுக்கின்ற ஒரு அமைப்பாக விளங்கவேண்டும். எந்தக் கட்டத்திலும் மக்களுடைய சுதந்திரத்திற்கோ, வாழ்வுக்கோ இடையூறாக அமைந்துவிடக் கூடாது.

நாம் ஆயுதங்களை ஏந்தியிருப்பது மக்களுக்கு ஓர் சுதந்திரமான, சுபீட்சமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே. அதே ஆயுதங்கள் எமது மக்களுக்கே அச்சுறுத்தலாக ஒரு போதும் மாறிவிடக்கூடாது.

விடுதலைக்காக ஆயுதம் ஏந்தும் ஒவ்வொரு இளைஞனும் தான் யாருக்காக போராடுகின்றேன் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆயுதம் ஏந்திகின்ற ஒவ்வொரு இளைஞனும் இதைச் சரியாகப் புரிந்து கொண்டு உள்ளானா என்பதை இயக்கம் அடிக்கடி பரிசோதித்துக் கொள்ள வேண்டும். சில சமூக விரோத சக்திகள் ஊடுருவச் செய்வார்கள். இவ்விடயத்தில் இயக்கம் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

மக்களுடைய சுதந்திரத்திற்காகப் போராடும் இயக்கம் இயல்பாகவே மக்களை வழிநடத்திச் செல்லும் தலைமையையும், அதிகாரத்தையும் பெற்றுக் கொள்கின்றது.

அவ்வதிகாரமானது ஒரு குடும்பத் தலைவனுக்குரிய பொறுப்பையும், கடமையையும், தலைமையையும் கொண்டிருக்க வேண்டுமே ஒழிய, மக்களுக்கு எஜமானர்களாக மாறிவிடக் கூடாது.

பொதுவாக அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தைக் கையிலெடுத்துப் பழகும்போது அது ஒரு வகையில் சர்வாதிகாரத் தன்மைக்கும் இட்டுச் செல்லும். ஆனால் மக்களை நேசித்து, மக்களுடனேயே வாழும், மக்களின் அடிப்படைத் தேவையைப் புரிந்து கொள்ளும் ஒரு இயக்கம் சர்வாதிகாரத் தன்மைக்கு செல்ல முடியாது.

இயக்கத்தில் தலைவர்களாக உள்ளவர்கள் மக்களில் சகல தரப்பினருடனும் தொடர்புடையவர்களாகவும், சகலருடைய கருத்துக்கும் மதிப்பளிப்பவர்களாகவும் இருந்தல் வேண்டும்.

எல்லோரையும் எமது மக்களாகக் கருதுபவர்களாகவும், எல்லோருடைய நல்வாழ்வுக்காகவும்தான் போராடுகின்றோம் என்பதை உணர்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

- கிட்டு - 23.06.1991




**" எங்கே எங்கே வேங்கைகள் எங்கே**
**இந்திய அரசே பதில் சொல்லு – அவர்**
**சந்தன மேனி செந்தணல் ஆன**
**சங்கதி தெரியும் பதில் செல்லு"**

# கிளீன் சிறீலங்கா: வலி நிவாரணி அரசியல்

10.01.2025




சிறீலங்காவை கிளீன் பண்ணத்தான் வேண்டும். ஆனால் அதை எங்கிருந்து தொடங்குவது? சிறீலங்காவின் கறை எது? அல்லது அசுத்தம் எது? என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அங்கிருந்துதான் சுத்தப்படுத்தலைத் தொடங்கலாம். சிறீலங்காவின் அசுத்தம் எது?

இனப்பிரச்சினைதான். இன மோதல்கள்தான் சிறீலங்காவை உலக அரங்கில் அவமானப்படுத்தின. இனப்பிரச்சினைதான் சிறீலங்காவை ஜெனிவாவில் கொண்டு போய் நிறுத்தியிருக்கிறது. இனப்பிரச்சினைதான் தமிழ் மக்களை கூடு கலைந்த பறவைகள் ஆக்கியது. இனப்பிரச்சினைதான் சிறீலங்காவுக்குள் வெளிச் சக்திகள் தலையிடும் வாய்ப்பை வழங்கியது. இனப்பிரச்சினைதான் நாட்டைப் பொருளாதார ரீதியாக நாசமாக்கியது. கடன் வாங்கிச் சண்டை செய்தார்கள். கடனுக்கு வெடிமருந்து வாங்கி தமது சக இனத்தவர்களைக் கொன்றார்கள். காசைக் கரியாக்கினார்கள். விளைவாக நாடு அதன் முதலீட்டுக் கவர்ச்சியை இழந்தது. எந்த நாட்டை சிங்கள மக்களுக்கு வென்று கொடுத்தார்களோ, அந்த நாட்டிலிருந்து இப்பொழுது சிங்கள மக்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் மட்டும் மொத்தம் மூன்று இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் வெளியேறியிருக்கிறார்கள்.

முன்பு யுத்த காலங்களில் தமிழர்கள் வெளியேறினார்கள். காரணம் உயிர்ப் பயம். இப்பொழுது சிங்கள மக்களும் வெளியேறுகிறார்கள். இப்பொழுது வெளியேறும் அதிகமானவர்கள் படித்தவர்கள், துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்கள். பெரிய பொறுப்புகளில் இருந்தவர்கள். நடுத்தர வயதுக்காரர்கள்...ஏன் வெளியேறுகிறார்கள்? யாருக்காக நாட்டை வென்று கொடுத்தார்களோ, அவர்களே வெளியேறுகிறார்கள். என்றால் அந்த வெற்றியின் பொருள் என்ன? வென்றெடுத்த நாடு யாருக்குச் சொந்தம்?

அது இப்பொழுது பேரரசுகளுக்குச் சொந்தமாகி வருகிறது. எல்லாப் பேரரசுகளின் இழு விசைகளுக்குள்ளும் நாடு சிக்கி விட்டது. பொருளாதார நெருக்கடியின் விளைவாக அது கடன் வாங்கிய நாடுகள் மற்றும் உலகப் பொது நிதி நிறுவனங்களின் பிடிக்குள்ளும் வந்து கொண்டிருக்கிறது.

அண்மையில் அரசாங்கம் நிலையான வைப்புக்களுக்கான வட்டிக்கு விதிக்கப்படும் வரியை உயர்த்தியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க அந்த வரியை ஐந்து விகிதமாக உயர்த்தினார். அனுர அதனை பத்து விகிதமாக உயர்த்தியிருக்கிறார். அரசாங்கம் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு கீழ்படிவதாக விமர்சிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் இருபது இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வந்தார்கள். அதேசமயம் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

போர் காரணமாக தமிழர்கள் அப்பொழுதோ புலம்பெயரத் தொடங்கி விட்டார்கள். பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், மீண்டும் தமிழ்ப் புலம்பெயர்ச்சி அதிகரித்திருக்கிறது. இது மூன்றாவது தமிழ்ப் புலப்பெயர்ச்சி அலை. இந்த அலை முன்னைய இரண்டு புலப் பெயர்ச்சி அலைகளில் இருந்தும் துலக்கமான விதங்களில் வேறுபடுகிறது. முதலாவது புலப்பெயர்ச்சி அலையானது 1983 யூலைக்கு முந்தியது. அதில் ஆங்கிலம் பேசும், படித்த, பெருமளவுக்கு உயர் குழாத்துத் தமிழர்கள் புலம் பெயர்ந்தார்கள். அவர்கள் சட்ட விரோதமாக புலம்பெயர்ந்தது குறைவு. இரண்டாவது அலை 1983 இற்குப் பின்னரானது. அதில் இலட்சக்கணக்கானவர்கள் புலம் பெயர்ந்தார்கள். அவர்களில் அதிகமானவர்கள் சட்ட விரோதமாகப் புலம் பெயர்ந்தார்கள். சட்டவிரோத வழிகளின் ஊடாகப் புகலிடந் தேடிச் சென்றவர்கள்.

இப்பொழுது நிகழும் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையும் ஒப்பீட்டளவில் சட்ட ரீதியானது. ஏனென்றால் ஏற்கனவே புலம்பெயர்ந்தவர்கள் அந்தந்த நாடுகளில் செற்றில்ட் ஆகிவிட்டார்கள். அவர்கள் ஊரில் உள்ள தங்கள் உறவுகளுக்கு ஹஸ்பொன்சர்ஹ செய்யக்கூடிய அல்லது விசா வாங்கிக் கொடுக்கக் கூடிய தகைமையை அடைந்து விட்டார்கள். இது மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் ஒரு பிரதான வேறுபாடு. அடுத்தது, இப்பொழுது புலம்பெயரும் தமிழர்களில் அநேகர் படித்தவர்கள். நடுத்தர வயதினரும் உண்டு. இங்கு பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள், அரசு ஊழியர்கள், சமூகத்தின் துறைசார் தலைமைத்துவம் என்று வர்ணிக்கத்தக்கவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் ஒரு பகுதியினர் திரும்பி வருகிறார்கள். தாயகத்தில் தமது பதவி நிலை காரணமாக அனுபவித்த அதேயளவு மரியாதை புலம் பெயர்ந்த நாட்டிலும் கிடைக்காதபோது விரக்தியடைகிறார்கள். குறிப்பாக நடுத்தர வயது கடந்தவர்கள் புலம் பெயர்ந்த நாட்டின் நிலைமைகளோடு தங்களைச் சுதாகரிக்க முடியாதபோது திரும்பி வருகிறார்கள். இதுவும் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் பிரதான வேறுபாடுகளில் ஒன்று.

அண்மையில், ஐரோப்பாவில் வசிக்கும் ஒரு பிரபல எழுத்தாளர் என்னைக் காண்பதற்கு வந்திருந்தார். அவரோடு ஓர் இளம் அரச ஊழியரும் வந்திருந்தார். அந்த அரச ஊழியர் சொன்னார், தான் புலம் பெயரப் போவதாக. ஏனென்று கேட்டேன். “ஒரு அரசு ஊழியனாக என்னால் தாக்குப் பிடிக்க முடியாதுள்ளது. ஒரு புதிய வீட்டைக் கட்டினேன். மூன்று மில்லியன்களுக்கும் மேல் கடன். அந்த கடனை அடைப்பதற்காக என்னுடைய சம்பளத்திலிருந்து பெரும் தொகுதி போகிறது. ஜீவனோபாயத்துக்காக அப்பாவும் அம்மாவும் வீட்டில் ஒரு கடை திறந்து வைத்திருக்கிறார்கள். அந்த கடையைத் திறப்பதற்கான முதலீட்டில் ஒரு பகுதியையும் புலம் பெயர்ந்த நண்பர்கள்தான் தந்தார்கள். புலம்பெயர்ந்த தமிழர்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் என்னுடைய கடன் ஒரு சிறிய தொகை. ஆனால் அரச ஊழியனாகிய எனக்கோ அது பெரிய தொகை. எனவே கடனாளியாக இருப்பதை விடவும் புலம்பெயரலாம் என்று முடிவெடுத்தேன்” என்று சொன்னார்.

அவரோடு வந்த எழுத்தாளர் சொன்னார் “அவர் சொல்வது உண்மை. ஏனென்றால் என்னுடைய கிராமத்துக்கு அண்மையில் ஒரு சா வீட்டுக்குப் போயிருந்தேன். என்னுடைய வயதில் உள்ளவர்கள் அங்கே வந்திருந்தார்கள். பெரும்பாலானவர்கள் தோற்றத்தில் கிழண்டிப்போய்க் காணப்பட்டார்கள். அவர்களுடைய வயதைவிட அதிகம் முதுமையான தோற்றம்.







ஏனென்றால் வாழ்க்கை அந்தளவுக்குக் கஷ்டமாக இருக்கிறது; சுமையாக இருக்கிறது” என்று.

இவ்வாறு மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் கீழ் எத்தனை தமிழர்கள் புலம் பெயர்ந்து விட்டார்கள் என்பது தொடர்பாக சரியான புள்ளி விபரம் யாரிடமாவது உண்டா? இப்படியாக போரில் வென்றவர்களும் புலம் பெயர்கிறார்கள்; தோற்றவர்களும் புலம் பெயர்கிறார்கள். இப்பொழுது வெற்றிக்கும் பொருள் இல்லை. தோல்விக்கும் பொருள் இல்லை. இந்த இலட்சணத்தில் நாட்டைச் சுத்தப்படுத்துகிறேன் என்று புறப்பட்டு வேண்டுமானால், வீதிகளைச் சுத்தப்படுத்தலாம். சுற்றுச் சூழலைச் சுத்தப்படுத்தலாம். அதற்கும் வரையறைகள் உண்டு. ஏனென்றால் சுற்றுச் சூழலும் அரசியல்தான்.

ஒப்பீட்டளவில் ஓரளவுக்காவது சுத்தப்படுத்தக்கூடிய துறை அதுதான். அதுதவிர ஏனைய எந்தத் துறையிலும் நாட்டைச் சுத்தப்படுத்த முடியுமா? முடியாது. ஏனென்றால் ஊழல், முறைகேடு, அதிகார துஷ்பிரயோகம் போன்றன ஒரு பண்பாடாக வளர்ந்து விட்டன. எங்கிருந்து அவை பண்பாடாக மாறின? எல்லாப் பிரச்சினைகளையும் இனப்பிரச்சினைமூலம் திசை திருப்பலாம் என்ற அரசியல் சூழல்தான் காரணம். எல்லாத் தவறுகளையும் இனமுரண்பாட்டைத் தூண்டுவதன் மூலம் கடந்துவிடலாம் என்ற ஒரு அரசியல் சூழல்தான் காரணம்.

தமிழ்ப் பகுதிகளில் அரச திணைக்களங்களில் காணப்படும் விமர்சனத்துக்குரிய பெரும்பாலான அம்சங்கள் தொடர்பாக அதிகாரிகளைக் கேட்டால், “அரசாங்கம் விடுவதில்லை அல்லது மேலதிகாரிகள் இனரீதியாக விவகாரத்தை அணுகுவார்கள்” என்றெல்லாம் சாட்டுச் சொல்லுவார்கள். “நாங்கள் எதையாவது செய்தால் அதனை இனரீதியாக வியாக்கியானப்படுத்தி எங்களைப் பதவி இறக்கி விடுவார்கள். அல்லது நமது பதவி உயர்வுகளை நிறுத்தி விடுவார்கள்” என்று கூறுவார்கள்.

இப்படியே இரண்டு இனங்கள் மத்தியிலும் காணப்படுகின்ற எல்லா முறைகேடுகளுக்கு இன முரண்பாட்டை ஒரு சாட்டாகச் சொல்லும் பண்பாடு வளர்ந்து விட்டது.ஏன் அதிகம் போவான்?

ராஜபக்ச குடும்பத்தில் பசில் ஒரு புரோக்கராக, ஒரு டீல் மேக்கராக எப்படி எழுச்சி பெற்றார்? யுத்த வெற்றிதான் காரணம். யுத்தத்தில் வென்றவர்கள் நாட்டைத் தனிப்பட்ட சொத்தாக மாற்றினார்கள். நாட்டின் கருவூலத்தைத் திருடினார்கள். வெற்றி மயக்கத்தில் குருடாக இருந்த சிங்கள மக்களுக்கு அது முதலில் தெரியவில்லை. அது தெரிந்த பொழுது, நாடு மீள முடியாதபடி பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கி விட்டது.

இப்பொழுது அனுர வந்திருக்கிறார். இன முரண்பாடுகள் இல்லை என்று சொல்லுகிறார். அது தவறு. இன முரண்பாடுகள் எப்படி இல்லாமல் போயின? தமிழ்ப் பகுதிகளில் அவருடைய வேட்பாளர்களுக்குக் கிடைத்த வெற்றியை வைத்து அவ்வாறு கூறமுடியாது. இனமுரண்பாடு எங்கிருந்து தோன்றியது ? தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக, தேசமாக ஏற்றுக்கொண்டு பல்லினத்தன்மை மிக்க ஒரு நாட்டைக் கட்டியெழுப்பத் தயாரில்லை என்பதுதான் இன முரண்பாட்டின் வேர். எனவே இனமுரண்பாட்டைத் தீர்ப்பது என்பது நாட்டின் பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்ளும் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களைச் செய்வதுதான். ஆனால் அதைச் செய்வதற்கு அனுர தயார் இல்லை.

அனுரவின் இடத்தில் யார் இருந்தாலும் அதைச் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் இனப்பிரச்சினைதான் நாட்டைக் கடனாளியாக்கியது என்ற விடயத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு காரணம், ஊழலும் முறைகேடும் என்றுதான் அவர்களிற் பலர் கூறி வருகிறார்கள். சிங்களப் புத்திஜீவிகளில் பெரும் பகுதியினரும் அப்படித்தான் கூறி வருகிறார்கள். பொருளாதார நெருக்கடியின் மூல காரணத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பதும் ஒரு வகையில் இனவாதம் தான்.

ஆனால் இப்பொழுது இனப்பிரச்சினையில் கை வைத்தால், அதாவது ஒரு புதிய யாப்பை உருவாக்கும் விடயத்தில் கை வைத்தால், அது இளம் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடும் என்று ஒரு விளக்கம் கூறப்படுகிறது. எனவே பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்குத் தணித்தபின், ஜனாதிபதியின் பதவிக்காலத்தின் இறுதிக் கட்டத்தில் இனப்பிரச்சினையில் கை வைக்கலாம் என்றும் ஒரு விளக்கம் கூறப்படுகிறது. இது வண்டிலுக்குப் பின் மாட்டைக் கட்டும் வேலை. நோய்க்கு உரிய உள்மருந்தை வழங்காமல், வலி நிவாரணிகளை மட்டும் வழங்கும் ஓர் அரசியல்.

எனவே இந்த இடத்தில் மாற்றத்தைச் செய்ய அனுரவால் முடியாது. அவருக்குக் கிடைத்த வெற்றியின் கைதி அவர். அந்த வெற்றியை மீறி அவர் சிந்திக்க முடியாது. அதனால்தான் கவர்ச்சியான சுலோகங்களை முன்வைக்கின்றார். நாட்டைச் சுத்தப்படுத்தப் போவதாகக் கூறுகிறார். ஆனால் நாட்டின் உண்மையான கறை அப்படியே இருக்கத்தக்கதாக அதன் விளைவாக வந்த கறைகளை அகற்றுவது என்பது வலி நிவாரணி அரசியல்தான். எனவே நாட்டைச் சுத்தப்படுத்துவது என்றால் இனப்பிரச்சினை என்ற கறையை அகற்ற வேண்டும். அங்கிருந்துதான் சிறீலங்காவைக் கிளீன் பண்ணத் தொடங்க வேண்டும்.




நன்றி: நிலாந்தன்



# கிட்டு எங்கள் காலக்குழந்தை

– தாயகப் பாடல் –

*கிட்டு எங்கள் காலக்குழந்தை நாளெல்லாம் அவன் பாதங்கள்*
*கிட்டு எங்கள் போரின் கலைஞன் சன்னங்கள் அவன் எண்ணங்கள்*
*கிட்டு அவன் பேரைச் சொன்னால் நெஞ்சுக்குள்ளே வீரம் வரும்*
*சொல்லுங்கள் தினம் வெல்லுங்கள் சொல்லுங்கள் தினம் வெல்லுங்கள்*

*கிட்டு எங்கள் காலக்குழந்தை நாளெல்லாம் அவன் பாதங்கள்*
*கிட்டு எங்கள் போரின் கலைஞன் சன்னங்கள் அவன் எண்ணங்கள்*

*எங்கெங்கே அவன் கைதொட்டாலும் அங்கங்கே தனி அழகென்றாகும்*
*எங்கெங்கே அவன் பணியென்றாலும் தாயகத்தில் தானே மனசிருக்கும்*
*மண்ணில் வீசும் மண்வாசமாக மனங்கள் எங்கும் கலந்திருப்பான்*
*இதயமதின் சுவாசத்தைப்போல தேசமெங்கும் நிறைந்திருப்பான்*
*காதல் கொண்ட மக்களைக்காக்க காவல் செய்த வீரனென்றாவான்*
*சொல்லுங்கள் தினம் வெல்லுங்கள் சொல்லுங்கள் தினம் வெல்லுங்கள்*

*கிட்டு எங்கள் காலக்குழந்தை நாளெல்லாம் அவன் பாதங்கள்*
*கிட்டு எங்கள் போரின் கலைஞன் சன்னங்கள் அவன் எண்ணங்கள்*

*ஒற்றைச் சொல்லில் காவியமானான் ஒற்றைக் கல்லில் கோபுரமானான்*
*காலச்சருகில் கடலும் மறையும் இவனின் பெயரோ அழிவதில்லை*
*நாளை எங்கள் பள்ளிகள் எல்லாம் இவனின் நாமம் பாடங்களாகும்*
*காவல் தெய்வம் இவனின் முன்னே கைகள் எடுத்தே நாம் தொழுவோம்*
*ஈழும் உள்ள காலம் வரையும் நெஞ்சில் இவன் நினைவிருக்கும்*
*சொல்லுங்கள் தினம் வெல்லுங்கள் சொல்லுங்கள் தினம் வெல்லுங்கள்*

*கிட்டு எங்கள் காலக்குழந்தை நாளெல்லாம் அவன் பாதங்கள்*
*கிட்டு எங்கள் போரின் கலைஞன் சன்னங்கள் அவன் எண்ணங்கள்*
*கிட்டு அவன் பேரைச் சொன்னால் நெஞ்சுக்குள்ளே வீரம் வரும்*
*சொல்லுங்கள் தினம் வெல்லுங்கள் சொல்லுங்கள் தினம் வெல்லுங்கள்*

# உண்மையை உரக்கக் கூறி தமிழர்க்காக ஓங்கி குரல் தரும் 'சிங்கள கொட்டி' மருத்துவர் பிரைன் செனவிரத்தின!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

10.01.2025

***ஆட்சி மாற்றங்களினூடாகத் தமிழர்கள் தம் சிக்கல்கள் தீரும் என்ற உளவியலில் தமிழ்மக்கள் ஒருபோதும் இருக்கக் கூடாது என்பதில் தமிழர்கள் முதலில் தெளிவுற வேண்டும் என்பதையும் ஈழ விடுதலையே தமிழர்கட்கான தீர்வு என்பதில் தமிழர்கள் உறுதியாக இருக்க வேண்டுமெனவும் எல்லா தமிழர்கட்கும் மருத்துவர் பிரைன் அவர்கள் அறிவுறுத்தி வந்தார்.***

***உண்மையை எப்போதும் உரக்கக் கூறும் மருத்துவர் பிரைன் செனவிரத்தின, தமிழ் மக்களுக்கு ஆதரவான தார்மீக நிலைப்பாட்டை என்றும் கொண்டிருப்பவர் . சிறிலங்காவின் அநீதிகளை உலகறிய செய்தவரும் ஈழத் தமிழர்களுக்காக என்றும் ஓங்கி குரல் கொடுக்கும், 'சிங்களக் கொட்டி' பிரைன் செனவிரத்னவின் பிறந்த நாளையோட்டி (16-01-1932 ) இக்கட்டுரை பிரசுரமாகிறது.***

பிரைன் செனவிரத்னவின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் சமூக நீதியை நிலைநாட்டுவதிலும் உள்ள உறுதியான அர்ப்பணிப்பு மானிடப் பிறவியாக பிறந்ததில் அவர் காட்டிடும் ஒரு உயர்வான பண்பாகும்.

## சிங்களக் கொட்டி [சிங்களப் புலி]

அத்துடன் அவரது நடத்தையிலும் பேச்சிலும் மிகவும் புலப்படும் ஒரு பேரார்வம், அவருடன் பழகும் நிமிடம் எல்லோரது இதயத்தைக் கவரும். இனம், மதம், மொழி மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட மற்றும் துன்புறுத்தப்பட்ட மக்களுக்காக அவரது வாழ்நாள் முழுவதும், உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியாக ஈடுபட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட சமூகங்கள், இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் அகதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் கலாநிதி செனவிரத்ன தீவிரமான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இது சம்பந்தமாக, கல்வி, சர்வதேச வாதங்கள், பரப்புரை மற்றும் ஈடுபாடு ஆகியவற்றின் மூலம் இந்த பாதிக்கப்பட்ட மக்களின் அவலநிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அவர் தனது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்துள்ளார்.

தமிழர் தேசத்தை ஒடுக்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரசானது உண்மையில் சிங்கள உழைக்கும் மக்கட்கும் எதிரானது. அரசியற் புரிதல் கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சிங்களத் தோழர்கள் தாம் ஒரு அமைப்பாகத் திரண்டு ஒடுக்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரச எந்திரத்தைத் தகர்ப்பதன் மூலம் சிங்கள உழைக்கும் மக்களினையும் தேச ஒடுக்குமுறைக்குட்பட்டிருக்கும் தமிழர் தேசத்தையும் விடுதலையடையச் செய்ய வேண்டும் என்ற உறுதியுடன் மறவழியில் போராடுவது என்று ஆரம்ப காலத்தில் முனைப்புக் கொண்டு செயல்பட்டனர்.

தமிழர் விடுதலைப் போராட்டத்தினை உலகறியச் செய்ததுடன், தாம் சார்ந்த உலகளாவிய வலைப் பின்னல்களைக் கொண்டு மனித உரிமை அமைப்புகளினூடக ஒடுக்கப்படும் தமிழர்களின் உரிமைக்குரலை வெளிப்பட வைத்த பெருமையும் உண்டு.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் நேர்மையை வெளிப்படுத்தி, தமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி சர்வதேச அரங்கில் பேசி வருபவர் பிரைன் செனவிரத்ன.



## தனித்து நின்று குரல் கொடுப்பவர்:

மருத்துவர் பிரைன் செனவிரத்தின ஈழ தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பதுடன், சிங்கள பேரினவாத தலைமைகளுக்கு மத்தியில், ஒட்டுமொத்த தமிழினத்துக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இன பிரச்சினைக்களுக்கும் அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கும் துணிந்து நின்று போராடி குரல் கொடுப்பவர் ஆவார்.

சிறீலங்காவின் பண்டாரநாயக்க குடும்பத்தைச் சேர்ந்தவரே மருத்துவர் பிரைன் செனவிரத்தின. இவர் பண்டாரநாயக்க குடும் பத்துடன் நெருங்கிய உறவு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. தனது இளமைப் பருவத்திலேயே இடதுசாரிக் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட இவர் மலையகத் தமிழர்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்ட போது அதை எதிர்த்துப் போராட்டக் களங்களில் குதித்தார்.

1956 இல் இவரது தந்தை வழி நெருங்கிய உறவினரான அப்போதைய சிறீலங்காவின் முதன்மை அமைச்சர் பண்டாரநாயக்கவினால் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது இலண்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்றுகொண்டிருந்த இவர் தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்துக் கடுமையாகப் போராடி வந்ததுடன், இலண்டன் வந்த பண்டாரநாயக்க உறவின் நிமித்தம் இவரைச் சந்திக்கக் கேட்டபோது, தமிழர்கட்கு எதிராக இனவெறியாட்டம் ஆடும் பண்டாரநாயக்கவை உறவின் நிமித்தமும் தான் சந்திக்க மாட்டேன் என்று உறுதியாகத் தெரிவித்தார்.

1972 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறைப் பேராசிரியராகப் பதவியேற்ற இவர் தமிழர்கட்கெதிரான சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இனவழிப்பு நடவடிக்கைகளைக் கருத்தியற் தளத்திலும் மக்கள் போராட்டக் களத்திலும் நின்று எதிர்த்து வந்தமையால் தொடர்ச்சியாக ஒடுக்கும் அரசுடன் ஒத்தோடுபவர்களால் வஞ்சிக்கப்பட்டு வந்தார்.

மேலும் சிறீலங்காவில் வாழ்வது அவரிற்கு உயிரச்சுறுத்தலை ஏற்படுத்திவிடும் என்பதால் 1976 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்து அங்கு குயின்லாந்துப் பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் பொதுமருத்துவ நிபுணராகவும் கடமையாற்றி வந்தார்.

## நாடற்றவர்களின் குரல் :

1948 இல் பிரித்தானிய ஆட்சியில் இருந்து தீவு சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழ் சமூகத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு எதிராக தைரியமான பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகிறார்.

மேலும் இந்தியத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த இலங்கையைச் சேர்ந்த சுமார் ஒரு மில்லியன் நீண்ட கால குடிமக்களின் குடியுரிமையை 1948இல் ரத்து செய்து, பெரும்பான்மை சிங்களவர்களால் உரிமை பறிக்கப்பட்டது.

தன்னிச்சையாக நாடற்றவர்களாக ஆக்கப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு ஆதரவாக அவர் பகிரங்கமாகப் பேசினார். 1840 களில் இருந்து தீவில் வாழ்ந்த மக்கள் மற்றும் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக உலகப் புகழ்பெற்ற “சிலோன் டீ” ஐ உருவாக்க உழைத்தவர்கள் தீவின் பொருளாதாரத்தின் முக்கிய அம்சமாக மாறியுள்ளனர்.

சிங்களவர்களைப் பெரும்பான்மையாக ஆக்குவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைக் கைப்பற்றும் நோக்கத்துடன் மட்டுமே அரசாங்கம் தீவின் பூர்வீகத் தமிழர்களின் நலன்களுக்குப் பங்கம் விளைவிக்கும் சட்டத்தை இயற்றின.

## அவுஸ்திரேலியாக்கு புலம்பெயர்வு:

1976 இல் அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்த பின்னர் அவர் நாடு திரும்பக் கூடிய சூழல் அவரிற்கு ஏற்படவேயில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்சி மாற்றங்களினூடாகத் தமிழர்கள் தம் சிக்கல்கள் தீரும் என்ற உளவியலில் தமிழ்மக்கள் ஒருபோதும் இருக்கக் கூடாது என்பதில் தமிழர்கள் முதலில் தெளிவுற வேண்டும் என்பதையும் தமிழீழ விடுதலையே தமிழர்கட்கான தீர்வு என்பதில் தமிழர்கள் உறுதியாக இருக்க வேண்டுமெனவும் எல்லாத் தரப்புத் தமிழர்கட்கும் மருத்துவர் பிரைன் அவர்கள் அறிவுறுத்தி வந்தார்.

பிறப்பால் சிங்கள இனத்தவராக இருந்தாலும் ஈழத் தமிழரின் விடுதலையையும், உரிமைகளையும் சிங்கள மக்கள் அறியும்படி செய்து வருகின்றார். பெரும் கவலைகளுடன் சிறீலங்காவானது சிங்கள பௌத்த நாடு என்று சிங்களவர்கள் நம்புவதே, தமிழர்கள் மீதான இனவழிப்பிற்குக் காரணம் என்றும் ஈற்றில் அது சிங்களவர்கள் தமக்குத்தாமே தோண்டும் சவக்குழியாக அமைந்துவிடும் என்றும் சிங்கள மக்கட்கு இவர் இடித்துரைத்தும் வந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பற்றி ஏற்றியோ போற்றியோ எந்தவொரு கருத்துகளையும் குறிப்பிடத்தக்க அளவில் பகிராத மருத்துவர் பிரைன் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்ல, மாறாக ஒடுக்கும் அரசிற்கெதிராகப் போராடும் போராளிகள் என்று உலகெங்கும் பரப்புரை செய்து வந்தார்.



## அனைத்துலக மட்டத்தில் பரப்புரை:

இறுதிக்கட்ட தமிழினவழிப்பு இடம்பெற்ற வேளையில் தனது முதுமையையும் கணக்கெடுக்காமல் உலகெங்கும் அலைந்து திரிந்து மாநாடுகள், கூட்டத்தொடர்கள், பல்கலைக்கழக நிகழ்வுகள் என அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி ஒடுக்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரசினால் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் இனவழிப்பைப் பற்றியும் அதிலிருந்து தமிழர்களைக் காப்பாற்றுவது உலகின் கடமை என்றும் அனைத்துலக மட்டத்தில் பரப்புரை செய்தும் வருகின்றார்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் தமிழீழ தேசமானது சிங்கள அரசால் முற்றிலுமாக வன்கவரப்பட்ட பின்பான சூழலில், தனது முதிர்வையும் பொருட்படுத்தாது முன்னையதிலும் விரைவுடன் செயலாற்றி வந்தார். அதாவது, இலங்கைத்தீவில் தமிழர்கட்கு நடந்தது இனவழிப்பே என்றும் அதற்குத் தீர்வாக தமிழர்களிடத்தில் தமிழீழம் கோரிப் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்றும் தனது உரைகள் மூலமும் எழுத்துகள் மூலமும் கோரி வந்தார்.

தமிழர் விடுதலைப் போராட்டத்தின் விளைவுகள், தமிழர் மீதான சிங்களத்தின் இனவழிப்பு என்பவை தொடர்பில் 60 இற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளதோடு உலகரங்கில் இதுதொடர்பில் பல கருத்துரைகளையும் நிகழ்த்தியுள்ளார்.

இறுதிநேரத்தில் எப்படியாவது தமிழர்கள் மீதான போரை நிறுத்திவிட வேண்டுமென்பதில் அவர் மேற்கொண்ட முயற்சிகளைத் தமிழினம் ஒருபோதும் மறக்கக்கூடாது. இவர் அவுஸ்திரேலிய தமிழ்க்காங்கிரசின் (ATC) பணிப்பாளராக இருந்தவர் என்பதோடு பின்னர் நாடுகடந்த தமிழீழ அரசில் அதிகாரமிக்க பதவியிலுமிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டு நாடுகடத்தப்படவிருக்கும் தமிழ் ஏதிலிகளை நாடுகடத்தவிடாது அவுஸ்திரேலிய மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும் ஒருங்கிணைத்துப் போராடுவதில் இவர் முன்னின்று உழைத்தார்.

## தமிழர் இனப்படுகொலையை வெளிப்படுத்தியவர்:

அதேவேளை தமிழர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை வெளிப்படுத்தும் “சனல் 4” ஆவணப்படத்தை உலகெங்கிலும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் மருத்துவர் பிரைன் செனவிரத்தின முன்னின்று உழைத்தார்.

இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு அனைத்து இன மக்களின் உரிமை மற்றும் கலாசாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் பூர்வீகம் வடக்கு மற்றும் கிழக்கு என மருத்துவர் பிரைன் செனவிரத்தின தெரிவித்திருந்தார்.

நீண்டகாலமாக சிங்கள பேரினவாத அரசாங்கத்தின் பல தவறான செயற்பாடுகளை பகிரங்கமாக சுட்டிக்காட்டியதுடன் அவற்றிற்கு எதிராகவும் போராடினார். அத்துடன் சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளை உலகறிய செய்ததில் இவருக்கும் ஒரு பாரிய பங்குண்டு.

“The 1983 Massacre - Unanswered Questions”, “Human Rights Violations in Sri Lanka” (இது சிறீலங்காவால் தடைசெய்யப்பட்ட நூல்), “Rape of Tamil Women, Men And Children By Sri Lankan Armed Forces and Their Collaborators”, “UN Human Rights Council Fails to Address the Humanitarian Disaster in the Tamil North and East of Sri Lanka” ஆகிய நூற்கள் இவரால் எழுதப்பட்டவற்றுள் முதன்மையானவை.

# கிட்டு எனும் ஓவியர்

– திலகர்

கிட்டு ஓர் ஓவியக் கலைஞனாகவும் வளர்ந்து வந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரைத் தனது நாட்டிலிருந்து வெளியேற்றிய போது, அவர் மறைவாகப் பல நாடுகளில் இருந்த காலம், அவரது கலை உணர்வுகளுக்கு உரம் ஊட்டும் சந்தர்ப்பத்தை அளித்தது எனலாம். கலைச் செயற்பாடுகளில் ஈடுபட அக்காலம் அவருக்கு ஓரளவு ஓய்வு கொடுத்திருக்கலாம்.



இயற்கையாக மிக நுணுக்கமான உணர்வுத்தன்மை உடையவர் என்பதை அருடன் நெருங்குவோர் உடனே புரிந்து கொள்வர். இயற்கையின் அழகை ரசிப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இசையில் ஆழமான ரசனை உடையவர். புகைப்



படக் கலையில், ஒரு விற்பன்னனைப் போல் செயல்படும் திறனும், அது குறித்த அறிவும் பெற்றிருந்தார். மேலும், நூல்கள், பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை வடி வமைப்பதில் அவருக்கிருந்த கலாரசனை, வாசகர்களின் மனோவியல் பற்றிய அறிவு, நிறத்தெரிவு ஆகியவை அவரின் தனித்தன்மையான அம்சங்கள். இத்தகைய மனத்தளத் திலேயே அவரது ஓவியக் கோபுரம் கட்டி வளர்கப்பட்டு வந்தது.

மெக்சிக்க நாட்டு ஓவியர் ஒருரிடம் சிறிது காலம் முறையாக ஓவியக் கலையைப் பயின்றார். அவ்வோவியனின் பாதிப்பு இவரது ஓவியங்களில் இருந்ததாக எண்ணுகின்றேன். கிட்டு இந்தியாவில் இருந்தபோது, சாளி என்ற இளம் ஓவியனுக்கு ஓர் ஓவிய அறையை ஒதுக்கி ஊக்கப்படுத்தி வந்தார். நான் சென்னை சென்ற போது, சாளியை ஓவியர் சந்தானத்திடம் அறிமுகம் செய்து, பயிலுமாறு செய்தேன். அக்காலத்தில் கிட்டு நவீன ஓவியம் குறித்து கருத்து முரண்பட்டவராக இருந்தார். ஆனால், ஐரோப்பாவில் இருந்த காலத்தில், பிக்காசோவின் ஓவியங்கள் மீது காதலே கொள்ள ஆரம்பித்தார். “சவ அறை” என்ற பிக்காசோவின் ஓவியத்தின் சாயல் அவரது ஓவியம் ஒன்றில் படிவதாக உணர்ந்தேன். தனது ஓவியங்களில் ஆழந்த உணர்வுகளையும், தத்துவங்களையும் வெளிப்படுத்துவதிலும், அவ்வெளிப்பாட்டிற்கு குறியீடுகளைக் கையாள்வதிலும், தனது கற்பனைகளை உயர உயரப் பறக்கவிட்டுள்ளார் என்றே கூறுதல் வேணடும்.

ஒரு சித்திரம், ஒரு விடுதலை வீரனின் மரணம், ஏராளம் வித்



துக்களைப் பிரசவிப்பதாக அமைந்துள்ளது. வித்துக்களிலும் அவற்றிலிருந்து உயிர்ப்பெடுக்கும் பல்வேறு வகை மரஞ்செடி, கொடிகளிலும் அவர் ஆறாத அன்பு கொண்டிருந்தார். அவை அங்கு தனது நாட்டில் பரப்பப்பட வேண்டும் என்பதிலும் ஆர்வ மாய் இருந்தார். சில ஓவியங்கள் மரபு ரீதியாகவும், யதார்த் தமாகவும் அமைந்துள்ளன. ஆயினும், அவற்றிலும் சில அம்சங்களில் பண்புத் தன்மையைக் (Abstract), கலந்துள்ளார்.



வான்கோவின் தாக்கத்தை, ஒரு சில ஓவியங்களில் காணலாம். தனது கருத்தை ஓவியத்தின் மூலம் தீவிரமாக வெளிப்படுத் துதல் என்பதோடு, அதற்கு மேலதிக அழுத்தம் கொடுப்பதாக, தீவிர நிறச்சேர்க்கையையும், தூரிகை வீச்சையும் கையாள முயன்றுள்ளார். நிறப்பொருத்தம் என்ற விடயத்தில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார். ஆனால் நிறங்களைக் கையாளும் விட யத்தில் அனுபவக் குறைவு காரணமாக, நிற அழுக்கு ஏற்படுவ தாக விமர்சனத்துக்கும் உட்பட்டுள்ளார். நிறக் கலவைகளைப் பயன்படுத்துவதில், நீர், எண்ணை நிறங்களைவிட அக்கிறிலிக் என்ற நறக்கலவையையே பெரிதும் பயன்படுத்தி வந்தார். அதன் மீது மினுக்க எண்ணையை தடவிவிடுவார்.

உடல் உறுப்புக்களை (Anatomy), அதன் அசைவுகளை நுணுக்கமாக வரைதல் என்ற விடயத்தில், இன்னும் ஏராளம் படிக்க வேண்டியிரந்தது. ஆயினும், ஒரு முறை என்னுடைய தொலைபேசியில் பேசும்போது வேடிக்கையாக அவர் கேட்டார், “இனி மேல் என்னை ஓவியர் கிட்டு என்று அழைக்கலாமோ?” என்று. “நிச்சயமாக” என்று தெரிவித்தேன்.

- திலகர், மாசி 1993, எரிமலை

**உலகத்தில் எந்த நாடும்**
**எமது தாயகத்திற்கு இணையாக மாட்டாது,**
**இன்னும் எத்தனை பிறவி எடுத்தாலும்**
**எமது மக்களுக்கும், மண்ணுக்கும் சேவை செய்யும்**
**பேறு எனக்குக் கிடைக்க வேண்டும்**

-கேணல் கிட்டு அவர்கள்-

# இன்பத் ‘தை’யே வருக!
# இன்பத்தையே தருக!



எங்கும் துன்பம் நீங்க
எதிலும் இன்பம் நீள
பொங்கும் தையே வருக
புதுமை தன்னைத் தருக!

உழவரவர் வாழ்வில்
உலவும் துன்பம் நீங்க
அழகுத் தையே வருக
அமுதை அள்ளித் தருக!

அடிமை வாழ்வகன்று
அகதியின்றித் தாய்மண் சேர
தங்கத் தையே வருக
தமிழில் இன்பம் தருக!

புலம்பெயர்ந்த வாழ்வின்
பெருஞ்சுமைகள் குறைய
மலரும் தையே வருக!
மகிழ்ச்சி தன்னைத் தருக!

ஈழத் தீவில் எங்கள்
தமிழீழக்கொடி ஆட
இன்பத் ‘தையே’ வருக!
இன்பத்தையே தருக!



**தமிழரின் திருநாள்!**
**உழவரின் பெருநாள்!**
**எமது தைப்பொங்கல் நல் வாழ்த்துகள்**

# இந்தியா துணை நிற்குமானால் நூறு வீதம் இந்தியாவுக்கு ஆதரவு வழங்குவோம்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வினை வழங்குவதற்கு இந்தியா துணைநிற்குமானால் வடகிழக்கு தமிழர்கள் இந்தியாவுக்கான ஆதரவினை நூறு வீதம் வழங்குவார்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மாமனிதர் குமார் பொன்னபலத்தின் 25 ஆம் ஆண்டு நினைவு வணக்கம் மட்டக்களப்பு பட்டிப்பளை முனைக்காடுப் பகுதியில் நினைவேந்தப்பட்டது. இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் சட்டத்தில் தேர்ச்சி பெற்ற ஒருவர் இலங்கையை பொறுத்த அளவில் இலங்கை தீவை மையப்படுத்தி ஒரு பூகோள அரசியல் ஆதிக்க போட்டி நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றது. அந்த பூகோள அரசியல் போட்டியில் எங்களுடைய தமிழ் மக்கள் சிக்குண்டு இந்த சிங்கள தேசத்தினால் இன அழிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்த காலகட்டத்தில் எமது மக்களுக்காக இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடிக் கொண்டிருந்த வேளையில் எங்களுடைய அந்த போராட்டம் என்பது ஒரு பயங்கரவாத போராட்டம் என உலகத்திற்கு இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்ற ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் அந்த ஆட்சியாளர்களும் ஒரு பிழையான பிம்பத்தை இந்த சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறி வந்திருந்தனர்.

அந்த நிலையில் எங்களுடைய மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் இலங்கையினுடைய தலைநகர் கொழும்பில் இருந்து கொண்டு தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் என்பது ஒரு நியாயமான ஒரு போராட்டம் எங்களுடைய தமிழ் மக்களை பாதுகாப்பாதற்காகத்தான் இந்த இளைஞர்கள் அனைவரும் ஆயுதம் ஏந்தி இருக்கின்றார்கள் என்கின்ற நியாயப்பாட்டை உலகத்திற்கு எடுத்துக் கூறினார்.

அந்தக் காலப்பகுதியில் 2000 ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாரின் காலம் அவருடன் தான் இவர் படித்தார் அவ்வாறு படித்த ஒரு பெரிய மாமனிதர். மிகவும் தமிழ் மக்களுக்காகவோ அல்லது வேறு தரப்புக்காக இல்லாது நீதிக்காக குரல் கொடுக்கின்ற ஒருவர்.

அந்த அடிப்படையில் தான் அவர்கள் எங்களுடைய விடுதலைப் போராட்டம் என்பது ஒரு நியாயமான போராட்டம் என்பதனை சர்வதேசத்திற்கு சொல்லிக் கொண்டிருக்கின்ற காலகட்டத்திலேயே அந்த சந்திரிக்காவின் ஆட்சி காலத்தில் சந்திரிகாவினால் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனுக்கு முன்னால் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தமையினால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இது உலகத்தில் இருக்கின்ற அனைத்து விதமான மனித நேய அமைப்புகளுக்கும் மிக முக்கியமான நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் தூதுவர்களுக்கும் நாட்டினுடைய மிக முக்கியமான தலைவர்களுக்கும் தெரியும்.

இன்று இந்த நாட்டை மையப்படுத்தி இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் என்பது தணியவில்லை. ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டாலும் எங்களுக்கான இனத்துக்கான விடுதலை போராட்டம் இன்னமும் மௌனிக்கவில்லை. இதனை எமது மக்கள் அனைவரும் நன்கு அறிய வேண்டும்.

புலம்பெயர்ந்த மக்கள் எமது மக்களின் விடுதலைக்காக மிக கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். சிங்கள தேசம் ஒரு கனவு கண்டிருக்கின்றது 2009 உடன் எல்லாம் முடிந்து விட்டது என்று. ஆனால் அவ்வாறு இல்லை எங்களுடைய போராட்டம் எழுச்சி பெற்று இருக்கின்றது. புலம்பெயர் தேசத்தில் இருக்கின்ற இளையவர்கள் இன்றும் எமது விடுதலைக்காக தாயகத்தில் இருக்கின்ற எமது தமிழ் மக்களது விடுதலைக்காக அவர்கள் எங்கெல்லாம் செல்ல முடியுமோ அங்கு சென்று குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எமது மக்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். இன்று இந்த நாட்டில் ஒரு பாரிய ஆட்சி மாற்றம் வந்திருக்கின்றது. இந்த ஆட்சி மாற்றம் என்பது அவர்கள் ஊழல் ஒழிப்போம் என்பதன் அடிப்படையில் அவர்கள் வந்திருக்கின்றார்கள் இவர்கள் ஏற்கனவே தமிழ் மக்கள் மீது மிக மோசமாக தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக செயற்பட்டவர்கள். இங்கு வந்திருக்கின்ற அநுர அரசு என்பது அவர்கள் ஜே.வி.பியின் முகம்.

இவர்கள் அரசியல் ரீதியாக வந்து ஜே.வி.பி ஆனால் நடைமுறையில் என்.பி.பி யாக இருக்கின்றார்கள்.

ஆகவே அரசியல் ரீதியான ஆதிக்கம் தான் இங்கு அதிகமாக காணப்படுகின்றது. அவர்களது அரசியல் என்பது ஒட்டுமொத்த நாடும் ஒரு சிங்கள தேச நாடு பௌத்த நாடு இதனை நாங்கள் கட்டாயம் சிங்கள மக்களுக்காக தொடர்ந்து போராடுவோம். தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என்பதன் அடிப்படையில் தான் அவர்கள் தென்பகுதியில் வேலை செய்திருக்கின்றார்கள். இவர்கள் இன்றும் தென்பகுதி மக்களுடன் கதைக்கும் போது தாங்கள் சொல்வதை தமிழ் மக்கள் கேட்காவிட்டால் ஆயுத ரீதியாக ஆயுதம் தூக்கி அவர்களை அடக்குவோம் என்று பல கூட்டங்களில் தென் பகுதியில் கூறியிருக்கின்றார்கள்.




இன்று தலைவராக இருக்கின்ற அனுமார திசாநாயக்க அவர் தான் முள்ளிவாய்க்காலில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக சர்வதேச சமூகங்கள் முன்வந்த நிலையில் இலங்கையில் இருந்த இந்த இராணுவத்தினர் எமது விடுதலை இயக்கத் தினால் அடி வாங்கி தளர்வு நிலையில் இருந்த போது தென் பகுதியில் இளைஞர்களை சேர்த்து 50,000 இராணுவ வீரர்களை கொடுத்து மக்களை இனப்படுகொலை செய்ததில் மிக முக்கியமான நபர் இவர்.

நாங்கள் மறுபடியும் கூறுகின்றோம் எங்களுடைய மாமனிதர்கள் செய்த தியாகங்கள் நீங்கள் சாதாரணமாக யோசித்து விடக்கூடாது. இந்த இனம் வாழுவதற்காக எத்தனையோ மகான்களை நாங்கள் கொடுத்திருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தளவில் மக்கள் இந்த அரசியல் நிலைப்பாட்டில் மிகவும் தெளிவடைய வேண்டும். எங்களுடைய மக்கள் தமிழ் தேசியத்திலிருந்து ஒரு நாளும் விடுபடவில்லை. யாழ்ப்பாணத்தில் மூன்று ஆசனங்கள் என்.பி.பி க்கு கிடைக்கப் பெற்று இருக்கிறது என்றால் அது ஏற்கனவே டக்லஸ் தேவானந்தா மற்றும் அங்கஜனுக்கும் அரசாங்கத்துடன் இருந்தவர்கள். அந்த வாக்குகள் ஒரு கட்சிக்கு சென்றதனால் தான் மூன்று ஆசனங்கள் அங்கு கிடைக்கப்பெற்று இருக்கிறது.

ஆகவே தமிழ் தேசியத்துடன் தான் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் இருக்கின்றார்கள். அதில் எந்த தயக்கமும் கிடையாது. அதே போன்று மட்டக்களப்பிலும் தமிழ் தேசியத்திற்கு அதாவது சைக்கிளுக்கும் அல்லது வீட்டிற்கும் வாக்களிக்கும் நிலைப்பாட்டில் தான் மக்கள் இருந்தார்கள். வாக்குகள் பிரிந்திடும் என்கின்ற அடிப்படையில் சிலர் குழப்பினாலும் இன்று தமிழ் தேசியம் வென்று இருக்கின்றது.

ஆனால் இந்த இடத்தில் மக்கள் மிக நிதானமாக இருக்க வேண்டும். நாங்கள் ஆசாபாசங்களுக்கு முகம் கொடுக்கக் கூடாது. நாங்கள் அந்த சலுகைகள் மாட்டி விடக்கூடாது. இந்த மண்ணில் அனேக படுகொலைகள் இடம்பெற்று இருக்கின்றது. எமது முதலாவது மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஐயா. அதனைத் தொடர்ந்து விடுதலைப் போராட்டத்தின் மீதும் மக்கள் மீதும் நமது மண்ணின் மீதும் தமிழ் மக்கள் மீதும் அக்கறை கொண்ட எத்தனையோ எழுத்தாளர்கள் இங்கு படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். கடத்தப்பட்டிருக்கின்றார்கள், காணாமல் செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

அண்மையில் கூட எக்னெலியகொட எனப்படுகின்ற தென்பகுதி ஊடகவியலாளர் ஒருவரை கடத்திக்கொண்டு மட்டக்களப்பில் வைத்து அவரை படுகொலை செய்து பெரிய களம் எனப்படுகின்ற எருமை தீவு பகுதியில் உள்ள ஒரு மரத்தின் கீழ் புதைத்து வைத்திருப்பதாக வெளிநாட்டில் இருக்கின்ற ஒரு முன்னாள் கடற்படை பிரதானி கூறி இருக்கின்றார்.

இவ்வாறு பல படுகொலைகள் இடம்பெற்று இருக்கின்றது. இந்த மாவட்டத்தில் முன்னர் பிரதி அமைச்சர்களாக இருந்தவர்கள் எமது மக்களை கடத்திக் கொண்றிருக்கின்றார்கள். இந்த உண்மைகள் கட்டாயமாக வெளியே வரும்.

நேற்றைய முன்தினம் முன்னாள் ராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் சாரதியாக இருந்தவர் கைது செய்யப்பட்டு இருக்கின்றார். ஏன் கைது செய்யப்பட்டிருக்கின்றார் அவரின் வீட்டின் முன்னால் ஒரு சூட்டு சம்பவம் இடம்பெற்றது.

உண்மைகள் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும் ஊழல்கள் ஒழிக்கப்பட வேண்டும் அதில் மாற்று கருத்து கிடையாது. அதற்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்போம். ஆனால் தமிழ் மக்களின் மீது ஏறிக்கொண்டு தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை நசுக்கிக் கொண்டு முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி எந்த விதத்திலும் அனுமதிக்காது. எங்கிருந்தாலும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே ஆகுவோம்.

எமது மக்கள் எங்களை தோற்கடித்தாலும் இன்று வீதியில் இருந்து போராடுகின்றோம் என்றால் எங்களுக்கு பதவிகள் அதில் இருக்கின்ற சலுகைகள் முக்கியமில்லை. இந்த மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு இருக்கின்றது. அந்த அரசியல் நிலைப்பாடு எங்களுக்கு இருக்கின்றது.

நீங்கள் பார்த்திருப்பீர்கள் ஊடகங்களில் எமது தலைவர் அழைப்பு விடுத்திருக்கின்றார். நாங்கள் தமிழ் தேசியத்துடன் நிற்கின்ற கட்சிகளை அழைத்து இருக்கின்றோம். நாங்கள் எமது மக்களுக்கு ஒரு ஆபத்து நிகழப் போகின்றது. வரலாற்றிலே தமிழர்கள் நிராகரிக்கப்பட்டு வந்த ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பு அதனை நிறைவேற்றுவதற்கான சதிகள் இடம் பெறுகின்றது.

அந்த சதி திட்டத்தை முறியடிப்பதற்காக குறைந்தபட்சம் நீங்கள் அத்தனை கட்சிகளும் அது வீட்டு கட்சியாக இருக்கலாம், செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்களாய் இருக்கலாம் யாராக இருந்தாலும் அனைவரும் ஒன்றாக வந்து அதனை முறியடிக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றோம்.

இந்த அழைப்பினை நாங்கள் விட்டிருக்கின்றோம். அத்தோடு பல தலைவர்களை எமது தலைவர் சந்தித்திருக்கின்றார். நேற்றைக்கு முன் தினம் கூட இந்த விடயங்களை கூறி இருக்கின்றோம் வாருங்கள் ஒன்றாக கூடி எமது மக்களின் நலன்களுக்காக தயவுசெய்து ஒன்றாகக்கூடி நாங்கள் முறியடிப்போம் என்று.

இந்தியா உட்பட ஒவ்வொரு நாட்டிற்கும் வெளியுறவு கொள்கைகள் இருக்கின்றது. அந்த வெளியுறவு கொள்கையில் இந்தியாவுக்கு இலங்கையினை தன்னுடைய கைவசம் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்காக பல ஒப்பந்தங்களை செய்வதற்கு எத்தனை இருக்கின்றது. இருந்த போதிலும் இந்த நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் இந்தியா சில முன்மொழிவுகளை வைத்திருக்கின்றது.

இந்த இரு நாட்டிற்கு இடையில் ஒரு பாலம் போட வேண்டும் மின்சார இணைப்புகளை செய்ய வேண்டும் அதேபோன்று எரிபொருளினை குழாய் ரீதியாக இணைத்து அவற்றை செய்ய வேண்டும். ஆனால் இந்த ஒப்பந்தங்கள் செய்யப்படவில்லை என்றால் இலங்கையை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு. இவற்றைப் பொறுத்தளவில் தமிழர்களுக்கு எது வித தயக்கமும் இல்லை இலங்கை இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதற்கு எந்த பிரச்சனையும் இல்லை.

ஆனால் தமிழ் மக்களது இன பிரச்சினைக்கான தீர்வினை இந்தியா செய்யுமாக இருந்தால் 100வீதம் நாங்கள் இந்தியாவுடன் இணைந்து கொள்வோம்.

இந்தியாவை விட்டு வேறு ஒரு இடத்திற்கும் நாங்கள் செல்ல மாட்டோம். வடகிழக்கில் சீனா உட்பட எந்த நாட்டிற்கும் இடமில்லை. இந்தியாவுக்கு மாத்திரம்தான் தமிழர்கள் அனுமதிப்பார்கள். ஏனென்றால் அவர்கள் தான் இந்த நாட்டை பாதுகாக்க கூடிய அத்தனை வல்லமையும் கொண்டிருக்கக் கூடிய ஒரு சக்தி. அவர்கள் எமது தொப்புள் கொடி உறவுகள்.

ஆகவே இந்தியா இந்த விடயங்களை கவனமாக கையாண்டு எமது மக்களின் நீண்ட கால பிரச்சனைக்கான தீர்வை காண வேண்டும். ஒரு நீண்ட காலம் புரையோடிப் போய் இருக்கின்ற பிரச்சினை இந்தியாவின் கையில் இந்த நாடு சிக்கி 4.5 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெற்று இருக்கின்றது. இந்த நாடு இந்தியாவிற்கு கடமைப்பட்டிருக்கின்றது.

ஆகவே இந்தியாவின் கைக்குள் தான் இலங்கை இருக்கின்றது இந்தியா மிக இலகுவாக இந்த நாட்டை இந்த நாட்டினுடைய தலைவரை இலகுவாக கொண்டு வரலாம் இலகுவாக வெளியில் தூக்கி மறியலாம். அந்த அடிப்படையில் தமிழ் மக்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இந்தியா முன் நின்று செயல்பட வேண்டும். அதற்காக இங்கு இருக்கின்ற அனைத்து தமிழ் தலைவர்களும் இந்த விடயத்தை ஆணித்தரமாக வலியுறுத்த வேண்டும் என்பதனை நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன் என தெரிவித்தார்.


32ஆம் ஆண்டு
வீரவணக்கம்
மேஜர் வேலன் [மலரவன்]
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை
கடற்புலி கப்டன் நாயகன்
(சிவலிங்கம் கேசவன்)
பொலிகண்டி, வல்வெட்டித்துறை
கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் ஜீவா
(நடராசா மார்க்ஜெயராஜ்)
கொய்யாத்தோட்ட ஒழுங்கை,
பாசையூர், யாழ்ப்பாணம்
கடற்புலி லெப். தூயவன்
(மகாலிங்கம் ஜெயலிங்கம்)
கண்டிவீதி, யாழ்ப்பாணம்
கடற்புலி குணசீலன்
(சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா)
2ம் குறுக்குத்தொரு,
உதயபுரம், மணியம்தோட்டம்
கடற்புலி லெப். நல்லவன்
(சிவஞானசுந்தரம் ரமேஸ்)
மணியந்தோட்டம், கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதமலை வடக்கு, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் றொசான்
(அரத்தினசிங்கம் அருணராசா)
அரசடி வீதி,
நலலூர், யாழ்ப்பாணம்
இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி
தமிழர் கடலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
வேங்கைகளின் முப்பத்தி இரண்டாம் ஆண்டு
வீரணக்க நினைவு நாள் – 16.01.2025
கடற்புலி லெப். அமுதன்
(அலோசியஸ் ஜான்சன்)
2ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை
வடக்கு, யாழ்ப்பாணம்
சங்கத்தமிழ்

# தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் முதல் பெரும் தளபதி கேணல் கிட்டு

கேணல் கிட்டு (சதாசிவம் கிருஸ்ணகுமார்) தனது பதினெட்டாவது வயதில் 1979 இல் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இணைந்தார். வெங்கிட்டு எனப் பெயர் மாற்றம் பெற்று, பின் கிட்டு என தோழர்களால் செல்லமாக அழைக்கப்பட்டார்.

### போராட்ட வரலாறு

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் இராணுவப் பயிற்சி பெற்றார். 1983 ஏப்ரல் 7 இல் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியில் கிட்டு இரண்டாவது பொறுப்பாளராக நிலையுயர்த்தப்பட்டார். இதன்பின் உள்ளுராட்சித் தேர்தலை பகிஸ்கரிக்கும் பொருட்டு யாழ்ப்பாணம், கந்தர்மடம் வாக்குச்சாவடியில் இராணுவம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல், ஜூலை 23 இல் இராணுவ வாகனங்கள் மீது நடாத்தப்பட்ட திருநெல்வேலிக் கண்ணி வெடித்தாக்குதல் என்பனவற்றிலும் கலந்து கொண்டார்.

1983இன் இறுதிக் காலத்தில் இந்தியாவுக்குப் பயிற்சிக்கெனச் சென்ற இயக்கத்தின் முதற்குழுவில் கிட்டு இடம்பெற்றார். பயிற்சியை முடித்து தமிழீழம் வந்த கிட்டு 1984 மார்ச் 2 இல் நடைபெற்ற குருநகர் இராணுவமுகாம் தாக்குதல் உட்பட்ட பல்வேறு தாக்குதல்களில் முக்கிய பங்கு வகித்து நெறிப்படுத்தினார். இதே நேரம் யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த கப்டன் பண்டிதர் 1985 ஜனவரி 9 இல் வீரச்சாவடைய அவரின் இடத்திற்கு கிட்டு நியமிக்கப்பட்டார். யாழ். மாவட்டத் தளபதி ஆனவுடன் யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று நடாத்தி, அங்கிருந்த பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றினார். 1987 மார்ச் இறுதியில் கைக்குண்டுத் தாக்குதலினால் தனது இடதுகாலை இழந்தார். இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்தில் தனது சிகிச்சைக்காக இந்தியா சென்றார் கிட்டு. கிட்டுவை இந்திய அரசு வீட்டுக்காவலிலும், சென்னை மத்திய சிறையிலும் கைதியாக அடைத்து வைத்திருந்தது. இந்திய அரசு அவரை தமிழீழத்தில் விடுதலை செய்தது.

1989 இல் இலங்கை அரசுடன் பேசுவதற்கு கொழும்பு சென்ற குழுவில் அங்கம் வகித்த கிட்டு விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளராக அங்கிருந்தபடியே லண்டன் சென்றார். பின்னர் லெப். கேணல் குட்டிசிறி உட்பட 10 பேருடன் 'குவேக்கர்ஸ்' இன் சமாதானச் செய்தியுடன் சர்வதேச கடற்பரப்பினூடாக எம்.வி அகத் என்ற கப்பலில் தமிழீழம் திரும்புகையில் இந்தியக் கடற்படையால் சுற்றி வளைக்கப்பட்ட போது கப்பலை வெடிக்க வைத்து வீரச்சாவடைந்தார்.

***





வங்கக் கடலின் நடுவே அந்த தியாக வேள்வித் தீ எரிந்து அணைந்து இன்றுடன் 32 ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. ஆனால், தமிழ் மக்களின் மனங்களில் அதை நினைத்து நினைத்து இன்னும் எரிந்துகொண்டேயிருக்கின்றன. கேணல் கிட்டுவும், அவருடன் வந்த ஒன்பது தோழர்களும் தீயோடு தீயாகி, வங்கக் கடலில் சங்கமித்த அந்தச் சம்பவம் சரித்திரம் மறக்காத ஒரு சாவு மட்டுமல்ல, அது எங்கள் நெஞ்சங்களை நீங்க மறுக்கும் நெடும் அலையாகி, நினைவெங்கும் நிலை பெற்று விட்டதொன்று.

கேணல் கிட்டு தேசியத் தலைவரால் அதிகம் நேசிக்கப்பட்டவர். அவரின் அன்பை அனுபவித்தவர். தலைவரின் இலட்சியத்திற்கு தோள் கொடுத்து அவரின் மனதோடு ஒன்றித்து வாழ்ந்தவர்.

அதனால்தான், தமிழீழத் தேசியத் தலைவர் "கிட்டுவை ஆழமாக நேசித்தேன், தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் உற்ற தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப்பற்றுணர்வில் ஒன்றித்து, போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்துகொண்ட அனுபவத்தில் ஒருவரை யொருவர் ஆழமாக இனங்கண்ட புரிந்துணர்வில் வளர்த்த நேயம் அது" என கேணல் கிட்டுவிற்கும் தமக்கும் இடையே இருந்த பாசப் பிணைப்பினை வெளிப்படுத்துகிறார்.

கிட்டு எந்தளவிற்கு தலைவரின் மனதில் இடம்பிடித்தாரோ அதே யளவு தமிழீழ மக்களின் மனங்களிலும் நிறைந்திருக்கின்றார். எந்தக் காலத்திலும் மறக்கமுடியாத அவரின் நினைவுகளோடு இன்று தமிழீழம் நிமிர்ந்து நிற்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து ஆழப்பதிக்கப்பட்ட கிட்டுவின் வரலாற்றுத் தடங்கள் அழிக்க முடியாத பெரும் பதிவாக பரிணமித்து, தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

1979ல் ஆரம்ப காலப் பகுதி விடுதலைப் போராட்டத்திற்கு அடித்தளமிடப்பட்ட காலம், சதாசிவம் கிருஸ்ணகுமார் என்னும் பதினெட்டு வயது நிறைந்த இளைஞன் தன்னை விடுதலைப் போராளியாக மாற்றியதன் மூலம் வெங்கிட்டு எனப் பெயர் மாற்றம் பெற்று, பின் கிட்டு என தோழர்களால் செல்லமாக அழைக்கப்பட்டார். கிட்டுவும், இன்னும் சில தோழர்களும் தலைவரிடமே போரியலை நேரில் கற்றார்கள். கிட்டுவின் துடிப்பும், வேகமும் அங்கிருந்தவர்களிடையே அவரை வேறுபடுத்திக் காட்டியது.

எதையும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற வேகமும் எந்த விடயத்தையும் அறிந்துகொள்ளும் ஆற்றலும் கிட்டுவிற்கு இயல்பாகவே இருந்ததால் தலைவரின் எண்ணங்களை, சிந்தனைகளை, மக்கள் மீது அவர் கொண்டிருந்த எல்லை கடந்த பாசத்தை, தலைவரின் அருகில் இருந்த கிட்டு அறிந்து கொள்கிறார். அளவு கடந்த திறமையுடன் வேகமும் விவேகமும் நிறைந்த அவரது செயற்பாடுகள் அவர் மீதான தனி நம்பிக்கை வளரக் காரணமாகின்றன. தன் மீது தலைவர் வைத்திருக்கும் நம்பிக்கையை நிரூபிக்கும் காலம் கனிந்துவரும் வரை கிட்டு காத்திருக்கிறார்.

1983 மார்ச் 04 இல் அற்புதன் தலைமையில் உமையாள்புரம் தாக்குதலுக்காக விடுதலைப் புலிகளின் அணி ஒன்று செல்கிறது. அதில் கிட்டுவும் ஒருவர், தாக்குதலுக்கான களம் தீர்மானிக்கப் படுகிறது. வீதியில் நிலக் கண்ணிவெடிகளை பொருத்திவிட்டு எதிரியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கண்ணிவெடிகளை கையாளும் போதியளவு செயற்திறன் போராளிகளுக்கு இல்லாத காலம் அது. இராணுவ வாகனங்கள் இலக்காக அண்மிக்கும் நேரத்தில், துரதிஸ்ட வச மாக வாகனங்களைக் கண்டு மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் கால்கள் பட்டு கண்ணிவெடிகள் வெடிக்க போராளிகள் நிலை குலைந்து போகிறார்கள்.

துப்பாக்கி ரவைகளைக் கக்கியவாறு இரு இராணுவ கவச வாகனங்கள் போராளிகளை நெருங்கிவர, பின்வாங்கிச் செல்வதைத்தவிர வேறு வழி அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால், கிட்டு மட்டும் எதிரியை எதிர்கொள்ளும் சாதகமற்ற களநிலையைக் கருத்திற்கொள்ளாது துணிந்து நின்று தான் வைத்திருந்த ஜீ்த்திரி (ஃபு-3) துப்பாக்கியால் இராணுவ கவச வாகனத்தை நோக்கிச் சுடுகிறார். இலக்குத் தவறவில்லை. சாரதி காயப்பட வாகனம் செயலற்றுப் போகிறது. தலைவரின் நம்பிக்கையை மெய்ப்பித்த மகிழ்ச்சியோடு கிட்டு களம் விட்டு அகன்றார். அவரின் முதல்களமே தனி மனித சாதனையாக ஆரம்பமாகிறது.

1983 ஏப்ரல் 07இல் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியில் கிட்டு இரண்டாவது பொறுப்பாளராக நிலையுயர்த்தப்பட்டார். இதன்பின் சிறீலங்கா அரசால் திணிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலை பகிஸ்கரிக்கும் பொருட்டு கந்தர்மடம் வாக்குச்சாவடியில் இராணுவம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல , ஜூலை 23ல் இராணுவ வாகனங்கள் மீது நடாத்தப்பட்ட திருநெல்வேலிக் கண்ணி வெடித்தாக்குதல் என்பனவற்றிலும் கலந்து கொள்கின்றார். இவ்வாண்டின் இறுதிக் காலத்தில் இந்திய மண்ணில் பயிற்சிக்கெனச் சென்ற இயக்கத்தின் முதற்குழுவின் இரண்டாவது பொறுப்பாளராக கிட்டு நியமிக்கப் படுகின்றார்.

பயிற்சியை முடித்து தமிழீழம் வந்த கிட்டு 1984 மார்ச் 02இல் நடைபெற்ற குருநகர் இராணுவ முகாம் தாக்குதல் உட்பட்ட பல்வேறு தாக்குதல்களில் முக்கிய பங்கு வகித்து நெறிப்படுத்துகின்றார். இதேநேரம் யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த கப்டன் பண்டிதர் 1985 ஜனவரி 09இல் எதிரியுடனான மோதலில் வீரச்சாவடைய அவரின் இடத்திற்கு கிட்டு தலைவரால் நியமிக்கப்படுகின்றார். யாழ். மாவட்டத் தளபதி ஆனவுடன் யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று நடாத்தி, அங்கிருந்த பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றினார்.

யாழ். மாவட்டத்தில் கிட்டுவின் வெற்றிகரத் தாக்குதல்கள் தொடர்ந்தன. எதிர்ப்படை யாழ். மண்ணில் அவனுடைய முகாமுக்குள்ளேயே முடக்கப்படுகிறது. யாழ். கோட்டையை ஆக்கிரமித்திருந்த சிறீலங்கா இராணுவம் கிட்டு என்ற பெயரைக் கேட்டாலே கதிகலங்கிப் போகும் நிலை உருவானது. மக்கள் மத்தியில் கிட்டு என்ற மூன்றெழுத்துப் பெயர் மந்திரமாக உச்சரிக்கப்படுகிறது. யாழ். மண்ணில் எதிர்ப்படையை மட்டும் அவர் வெற்றிகொள்ளவில்லை. மாறாக, மக்களின் மனங்களையும் அவர் வெற்றிகொண்டார். மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர் அதிக அக்கறை செலுத்தினார். தொழில் நிலையங்கள், நூலகங்கள், மலிவுவிலைக் கடைகள், பூங்காக்கள் என்பவற்றை நிறுவி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தினார். இவ வாறாகக் கிட்டுவின் சமூகப்பணிகள் விரிவடைய, அவர் தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் ஒரு ஒப்பற்ற போராளியாக மக்களால் உணரப்பட்டார்.

தமிழீழ மக்கள் மனங்களில் மாத்திரமல்ல, எல்லைகடந்து வாழும் தமிழ் உறவுகள் அனைவருமே கிட்டுவின் வீர சாதனைகளை அறிந்து பெருமிதம் அடைந்தார்கள். விடுதலைப் புலிகளால் மன்னாரில் வைத்துச் சிறைப்பிடிக்கப்பட்ட இரு சிங்களச் சிப்பாய்களின் விடுவிப்பு தொடர்பாக 1986 நவம்பர் 10இல் சிங்கள இராணுவத் தளபதியான கேணல் ஆனந்த



வீரசேகரா, கப்டன் கொத்தலாவை ஆகியோரை தனது இடத்திற்கு அழைத்துச் சந்தித்ததன் மூலம் கிட்டு என்ற பெயர் சிங்கள மக்கள் மத்தியிலும் பிரபல்யம் அடைந்தது.

1987 மார்ச் இறுதியில் தேசத்துரோகி ஒருவனின் கைக்குண்டுத் தாக்குதலினால் தனது இடதுகாலை இழந்த கிட்டு தனது மன உறுதியால் முன்னைய வேகத்துடனும், திடகாத்திரத்துடனும் விடுதலைப் போருக்கு வலுச்சேர்ப்பவராக வளர்ந்து வந்தார். இந்திய இலங்கை ஒப்பந்த காலத்தில் தனது சிகிச்சைக்காக இந்தியா சென்ற கிட்டு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில், இந்திய அரசினால் திணிக்கப்பட்ட போரின் உண்மை நிலைப்பாட்டை வெளிக் கொணர பெரிதும் பாடுபட்டார். இந்திய அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்களர், கலைஞர்கள், பேராசிரியர்கள் எனப் பலரையும் சந்தித்து, எமது நிலைப்பாடு தொடர்பாக எடுத்துரைத்தார். எமது தியாக வரலாறுகளை பல வெளியீடுகள் மூலம் இந்திய மக்களின் பார்வைக்குக் கொண்டு வந்தார்.

இவவாறான நிலையில் கிட்டுவை இந்திய அரசு வீட்டுக் காவலிலும், சென்னை மத்திய சிறையிலும் கைதியாக அடைத்துவைத்திருந்தது. சிறைக்குள் இருந்தபடியே அவர் தமிழகத்திலிருந்து வெளிவரும் தேவி இதழுக்கு போராட்டம் தொடர்பான நீண்ட தொடர் கட்டுரையை எழுதினார். சிறையிலிருக்கும் தன்னை விடுவிக்கும்படி கிட்டு நடாத்திய அகிம்சைப் போருக்கு அஞ்சிய இந்திய அரசு அவரை தமிழீழத்தில் விடுதலை செய்தது. விடுதலை பெற்ற கிட்டு வன்னிக் காட்டில் தலைவரைச் சந்தித்து இந்திய இராணுவத்திற்கு எதிரான போருக்கு இறுதி வரை முகங்கொடுத்தார். இந்திய இராணுவம் மெல்ல மெல்ல தோல்விமுகம் காணும் நிலை உருவானது. அமெரிக்காவிற்கு வியட்நாமும், ரஸ்யாவிற்கு அப்கானிஸ்தானும் புகட்டிய பாடத்தை தமிழீழம் இந்தியாவிற்குப் புகட்டியது. இந்நிலையில் இலங்கை அரசு இந்தியாவை நிராகரித்து புலிகளுடன் பேச முன்வந்தது. 1989இல் சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு கொழும்பு சென்ற குழுவில் அங்கம் வகித்த கிட்டு விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளராக அங்கிருந்தபடியே லண்டனுக்குப் பயணமானார்.

கிட்டு லண்டனில் வாழ்ந்த காலத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்த தமிழரிடையே போராட்ட உணர்வையும், நம்பிக்கையையும் ஊட்டினார். 'களத்தில்', 'எரிமலை' எனப் பல்வேறு சஞ்சிகைகள் மூலம் ஈழத்தில் நடக்கும் நிகழ்வுகளை மக்களுக்கு எடுத்துச் சென்றார். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம், எனப் பல்வேறு அமைப்புக்களையும் வெளிநாட்டில் அமைத்துச் செயற்பட்டார்.

விடுதலை உணர்வையும், தாய் மண்ணின் பற்றுறுதியையும் தாயக மண்ணை விட்டு புலம்பெயர்ந்த மக்கள் மறந்து போகா வண்ணம் தனது செயற்பாட்டை விரிவுபடுத்தினார். எனினும் கிட்டு எங்குதான் வாழ்ந்தாலும் எப்பணியைச் செய்தாலும் அவர் மனம் தமிழீழ மண்ணையே சுற்றிவந்தது. அவர் தலைவரை, தாயகத்தை, தமிழீழ மக்களை ஆழமாக நேசித்தார். தமிழீழத்தில் எப்போது தனது கால் மீண்டும் பதியும் என ஏக்கத்தோடு காத்திருந்தார்.

கிட்டு எதிர்பார்த்திருந்தது போல தமிழீழத்திற்குச் செல்லும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. குவேக்கஸ் சமாதானக் குழுவின் யோசனைகளுடன் ஐரோப்பிய நாடொன்றிலிருந்து சர்வதேச கடற்பரப்பினூடாக எம்.வி அகத் என்ற கப்பலில் கிட்டுவும் அவரது தோழர்களும் பயணமானார்கள். யாரும் சென்று வரக் கூடிய சர்வதேச கடற்பரப்பில் இந்தியா தனது சதிவலையைப் பின்னியது. இந்தியக் கடற்படை சர்வதேச கடல் எல்லையில் கிட்டுவின் கப்பலை மறித்து வலுக்கட்டாயமாக தனது எல்லைக்குள் இழுத்துச் சென்றது. சமாதான முயற்சிகள் பற்றி இந்திய அரசிடம் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவை பயனற்றுப் போயின. குமரப்பா, புலேந்திரன், திலீபன், ஜொனி என எமது தளபதிகளின் தொடர் இழப்புக்குக் காரணமான இந்தியா தனது பொறிக்குள் மூத்த தளபதி கிட்டுவையும் சிக்கவைத்தது. உயிரிலும் பெரிது தன்மானம் என நினைக்கும் தலைவனின் வழியில் வளர்ந்த கிட்டுவும் ஒன்பது தோழர்களும் அன்று ஆட்சியிலிருந்த இந்திய அரசிடம் பணிந்து போகாது. தமிழீழத்தை, தலைவனை நினைத்தவாறே தீயில் கலந்து கடலில் சங்கமித்துப் போனார்கள்.

கிட்டுவின் இழப்பு தலைவனின் ஆத்மாவை மாத்திரமல்ல, தமிழினத்தின் ஆத்மாவையே பிழிந்த ஒரு சோக நிகழ்வு. மக்களால் மனதாரப் போற்றப்பட்ட அந்தப்பெரு வீரனை இனி எங்கு காண்போம் எனத் துடித்தனர் மக்கள். பல இழப்புக்களைக் கடந்து வாழக்கற் [illegible] இழப்பு ஜீரணிக்கமுடியாத தொன்றாகவே இருந்தது. எனினும் தோல்விகளையும், இழப்புக்களையும் தனக்கான வெற்றியின் பாடமாக்கிக் கொள்ளும் தலைவர், கிட்டுவின் இழப்பிற்கு புதிய பரிமாணத்தைக் கொடுக்கின்றார்.

"கிட்டு நீ சாகவில்லை, ஒரு புதிய மூச்சாக பிறந்திருக்கிறாய்" எனக்கூறி தனக்குள் ஒரு வீரசபதம் எடுத்துக்கொள்கிறார்.

இன்றைய உலகில், தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் எவராலும் நிராகரிக்க முடியாத பெரும் வடிவம் எடுத்ததில் கிட்டுவின் பங்கு இன்றியமையாதது. உலகெங்கும் சிதறிவாழ்ந்த தமிழ் மக்களை ஒருங்கிணைத்து, தமிழீழ விடுதலையை நோக்கி அவர்களை அணிதிரட்டுவதில் கிட்டு வெற்றி கண்டார் என்றே சொல்லவேண்டும். அந்தநிலை இன்று இன்னும் விரிவடைந்து மக்கள் - புலிகள் என்ற வேறுபாட்டை இல்லா தொழித்துவிட்டது. சர்வதேச சமூகம் விடுதலைப் போராட்டங்களையும், பயங்கரவாதத்துடன் இணைத்து தனது பிற்போக்குத்தனமான செயலை நியாயப்படுத்திவரும் வேளைகளில்கூட, உலகெங்கும் பரந்துநிற்கும் தமிழ் மக்கள் அந்த நெருக்கடிக்கு முகம் கொடுத்து தொடர்ந்தும் எழுச்சி கொள்கிறார்களென்றால் அது கிட்டுவால் அன்று விதைக்கப்பட்ட விடுதலை குறித்த கருத்துருவாக்கமும் விழிப்புணர்வுமே அடிப்படைக் காரணமாகின்றன.

கெரில்லா அமைப்பாக இயங்கிய அந்த நாடகளில், சிறியரக ஆயுதங்களைக்கொண்டு பெரும் சாதனைகளை நிலைநாட்டிய அந்த ஒப்பற்ற வீரனின் பெயரிலே, இன்று தமிழீழ தாயகத்தில் உருவாக்கப்பட்டுள்ள கனரக ஆயுதங்களைக் கொண்ட மிகப் பெரிய படையணி தனது சாதனைகளால் உலகத்தை வியக்கவைக்கின்றது. போரியல் நுணுக்கமும் போரிடும் திறனும் கொண்ட கேணல் கிட்டு பீரங்கிப் படையணி எண்ணிலடங்கா சமர்க்களங்களில் ஈட்டிய பெரும் வெற்றிகள் மூலம், தனது சாதனைத் தடங்களை தொடர்ந்தும் பதித்துக்கொண்டிருக் [illegible] முன்னேறிச் செல்வதற்கு கிட்டுவின் கனவும் ஒரு காரணம்.

ஊடகங்களில் தமிழரின் உண்மையான முகம் வெளியில் தெரியவேண்டும் என்பதில் கிட்டு அதிக அக்கறை காட்டினார். தமிழினத்தின் நியாயப் போராட் டங்களை பயங்கரவாதப்படுத்தி உலகெங்கும் பொய்யுரைக்கும் சிறீலங்கா அரச ஊடகங்களையும் அவற்றைச் சார்ந்துநிற்கும் சர்வதேச ஊடகங்களையும் கடந்து, உண்மையான செய்திகள் உலகெங்கும் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதே அவர் கொண்டிருந்த எண்ணமாகும். இவை இன்று நிறைவேறிக்கொண்டிருக்கின்றன.

தமிழீழத்திலும் உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்கள் தங்களுடைய விடுதலைப் போராட்டத்தின் உண்மை முகத் தோற்றத்தை உணரக்கூடிய விதத்தில் தமிழ் ஊடகத்துறை பெற்றிருக்கும் அபரிமிதமான வளர்ச்சிக்கு கிட்டுவின் எண்ணங்களின் தாக்கமும் ஒரு காரணம்.

சிறுவர் நலன்பேணும் திட்டங்கள், கல்வி, அபிவிருத்தி, பொருண்மிய மேம்பாடு, சமூக மேம்பாடு என மக்கள் நலன் பேணும் திட்டங்களில் அவர் காட்டிய அதீத அக்கறையின் பயனாக இன்னும் எம்மண்ணில் இச்செயற்பாடுகள் பெரும் வளர்ச்சி பெற்ற நிலையில் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றுக்கு மேலாக, ஒன்றுபட்ட தமிழினத்தின் எழுச்சியை இவர் கனவாகக் கொண்டிருந்தார். எதிரியின் இறுகிய பிடிக்குள்ளும் நிமிர்ந்து நின்று தமிழ் மக்கள் வெளிப்படுத்தும் உணர்வெழுச்சி கிட்டுவின் கனவிற்கு கட்டியம் கூறிநிற்கின்றது.

எங்கும் எதிலும் எல்லாவற்றிலும் கிட்டு என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தமிழினத்தின் ஆன்மாவில் அழிக்க முடியாததோர் இடம் அவருக்கு என்றுமுண்டு. எல்லையற்ற திறமைகளாலும் மக்கள் மேல் அவர் வைத்திருந்த உண்மையான பாசத்தினாலும் தமிழினத்தில் நீங்காத நினைவுகளை அவர் பதித்துச் சென்றிருக்கின்றார். இறுதிமூச்சுவரை தமிழினத்தின் தன்மானம் காத்து தமிழினத் தலைவனுக்குப் பெருமையைச் சேர்த்த அந்த ஒப்பற்ற வீரனை எந்நாளும் எவராலும் மறக்கமுடியாது.

"கிட்டு ஒரு தனிமனித சரித்திரம், நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றின் ஒரு காலத்தின் பதிவு"

எனக்கூறும் தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணங்களோடு ஒன்றிணைந்து கேணல் கிட்டுவை நெஞ்சிலேற்றுவோம். அவர் நினைவு தினத்தில் உறுதியெடுத்துக்கொள்வோம்.

நன்றி எரிமலை

# 'கிட்டு' நீ சாகவில்லை ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கின்றாய்

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-




ஒரு சகாப்தம்
தன்னைத் தானே
கறைப்படுத்திக் கொண்டது
மனித நேயத்தின்
சிகரத்தைத் தொலைத்ததால்.

சமாதான கரு சுமந்து
போர்முகம் சென்ற புறா
ஆழக்கடல் நடுவே
அஸ்தமித்துப் போனதாம்.

16.01.1993

# சிரியாவின் புதிய தலைமை: சவூதியில் பிறந்து ஈராக்கில் களமாடியவர்! 10 மில்லியனுக்கு அமெரிக்காவால் தேடப்பட்டவர்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

27.12.2024

அமெரிக்க அரசால் 2013 இல் உலகளாவிய பயங்கரவாதி என்று பட்டியலிட்டு, அவரைப் பிடிக்க 10 மில்லியன் வெகுமதியை அறிவித்தது. அவர் யாருமல்ல, தற்போதைய சிரிய நாட்டின் கிளர்ச்சிப் படைகளின் தலைவராக இருந்து, இடைக் கால அதிபராக விளங்கும் ஹுசைன் அல்-ஷரா தான்.





சிரியாவில் ஆட்சி அதிகாரத்தை அவர்கள் கைப்பற்றியதன் பின்னர் 2024 டிசம்பரில், அல்-ஷராவை அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் பார்பரா ஏ. லீஃப் தலைமையிலான குழு சந்தித்தது மற்றொரு அதிர்ச்சிமிக்க திருப்புமுனையாகும்.

## யார் இந்த ஹுசைன் அல்-ஷரா?

அஹ்மத் ஹுசைன் அல்-ஷரா (Ahmed Hussein al-Sharaa) அவரது இன்னோர் பெயரான அபு முகமது அல்-ஜுலானியாகவும் (Abu Mohammad al-Julani) அறியப்படுகிறார். சிரிய அரச எதிர்ப்பு போராளியும் தற்போதைய அரசின் தலைவரும் ஆவார்.

அசாத் எதிர்ப்பு படைகளோடு இணைந்து HTS எனப்படும் ஆயுத இயக்கத்திற்கு 2017 முதல் தலைவராக இருந்தவர். உறுதியான இறுதியான எதிர்ப்பில் முக்கிய பங்கு வகித்து அசாத் ஆட்சியை வீழ்த்தி சிரிய இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவதற்கும் அவரே வழிவகுத்தார்.

1982 ஆம் ஆண்டு சவூதி அரேபியாவின் ரியாத்தில் பிறந்த அபு முகமது அல்-ஜோலானி சாதாரண குடும்ப பின்புலத்தை கொண்டவர். அவரது தந்தை பெட்ரோலியம் பொறியாளராக பணியாற்றினார். இவர்கள் 1989 இல் சிரியாவுக்குத் சென்று டமாஸ்கஸ் அருகே குடியேறினர்.

2003 இல் ஈராக் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வந்தது. அமெரிக்காவை எதிர்க்கும் விதமாக ஈராக்கில் அல்-கொய்தாவில் அபு முகமது அல்-ஜோலானி சேர்ந்தார்.

2003 ஈராக் படையெடுப்பிற்கு பின்பு, அவர் ஈராக்கில் அல்-கொய்தாவில் சேர்ந்து ஈராக் கிளர்ச்சியில் மூன்று ஆண்டுகள் போராடினார். 2006 முதல் 2011 வரை அமெரிக்கப் படைகள் அவரைக் கைப்பற்றி சிறையில் அடைத்தனர். ஆனால் சிரிய உள்நாட்டு போரின் போது அவர் விடுதலை செய்யப்பட்டார்.

மேலும் சிரிய உள்நாட்டுப் போரில் பங்கேற்க அல்-கொய்தாவின் ஆதரவுடன் 2012 இல் அல்-நுஸ்ரா முன்னணியை உருவாக்கினார்.

அல்-நுஸ்ரா முன்னணியின் தலைவர் என்ற முறையில், அல்-ஷாரா வடமேற்கு இட்லிப் பகுதியில் ஒரு பெரிய கிளர்ச்சியாளர்கள் தளத்தை உருவாக்கினார்.

அப்போதிருந்து அல்-ஷரா சிரியாவின் எதிர் கால தலைவராக பரவலாகக் கருதப்பட்டார். ஆனாலும் அல்-நுஸ்ராவை இஸ்லாமிய அரசில் ஒருங்கிணைக்கும் அபு பக்கர் அல்-பாக்தாதியின் முயற்சிகளை எதிர்த்தார்.

2016 இல், அல்-ஷரா அல்-கொய்தாவுடனான அல்-நுஸ்ராவின் உறவுகளைத் துண்டித்து, அதை மற்ற அமைப்புகளுடன் இணைத்து அடுத்த ஆண்டு ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாமை உருவாக்கினார்.

அல்-கொய்தாவுடன் உறவை முறித்துக் கொண்டதில் இருந்து, சிரியாவின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் சர்வதேச சட்டப்பூர்வத்தை நாடினார். அத்துடன் எச்டிஎஸ் தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் ஒரு அதிகார நிர்வாகத்தை நிறுவி வரிகளை வசூலித்தல், பொது சேவைகளை வழங்குதல் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.




## ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் உருவாக்கம்:

2011 ஆம் ஆண்டு முதல் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் சிரியாவின் வடமேற்கு மாகாணமான இட்லிப் மாகாணத்தில் தங்கள் படைகளை நிறுத்தி அதிகாரம் செலுத்தும் நடவடிக்கைகளை பேணி வருகின்றனர்.



எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அங்கு பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகங்களில் 60 சத விகிதத்திற்கும் அதிகமான பெண்கள் இருப்பதாக அல்-ஷாரா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரசியலமைப்பை இயற்றுவதற்கு சிரிய சட்ட நிபு



ணர்கள் அடங்கிய குழு ஒன்று உள்ளது. இந்த குழு சட்ட ரீதியான பிரச்னைகள் குறித்து முடிவு செய்யும். எந்த ஆட்சியாளரோ அல்லது அதிபரோ, இந்தச் சட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் அமைப்பு அதன் கடந்த கால பயங்கரவாதத்திலிருந்து விலகவில்லை என நம்புபவர்களுக்கு, அது உண்மையில்லை என்று உறுதியளித்தார்.

அடுத்த சில மாதங்களில், சிரியாவின் புதிய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள், சிரியா எந்த மாதிரியான நாடாக இருக்க வேண்டும் என்பதையும், அவர்கள் எப்படி ஆட்சி செய்ய விரும்புகிறார்கள் என்பதையும் உலகிற்கு வெளிப்படுத்தும்.



## பாதுகாப்பு அமைச்சின் கீழ் கிளர்ச்சி படை:

சிரியாவின் முன்னாள் கிளர்ச்சிக் குழுக்கள் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் ஒருங்கிணைக்க ஒப்புக் கொண்டதாக கூறப்படுகிறது.

பல்வேறு குழுக்களின் தலைவர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து பிரிவுகளை கலைக்க ஒப்புக்கொண்டதாக நடைமுறை சிரிய தலைவர் அஹ்மத் அல்-ஷாரா கூறியுள்ளார்.

வடகிழக்கு சிரியாவில் உள்ள குர்திஷ் தலைமையிலான - அமெரிக்காவின் ஆதரவுடைய சிரிய ஜனநாயகப் படைகள் (SDF) குழு இப்போது அறிவிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இல்லை.

குர்திஷ் தலைமையிலான படைகளிடம் உள்ள ஆயுதங்கள் உட்பட நாட்டில் உள்ள அனைத்து ஆயுதங்களும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் என்றும் கூறப்பட்டது.

முன்னாள் கிளர்ச்சிப் பிரிவுகள் மற்றும் பஷர் அல்-அசாத்தின் இராணுவத்தில் இருந்து விலகிய அதிகாரிகளைப் பயன்படுத்தி அமைச்சகம் மறுசீரமைக்கப்படும் என்று பிரதமர் முகமது அல்-

**அமெரிக்க அரசால் 2013 இல் உலகளாவிய பயங்கரவாதி என்று பட்டியலிட்டு, அவரைப் பிடிக்க 10 மில்லியன் வெகுமதியை அறிவித்தது.**

பஷீர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

## சிறுபான்மையினர் மீதான ஒடுக்குமுறை ?

டமாஸ்கஸில் ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் அதிகாரத்திற்கு வந்த பிறகு, கிளர்ச்சியின் முக்கிய நபரான முர்ஹாஃப் அபு கஸ்ராவை இடைக்கால பாதுகாப்பு அமைச்சராக நியமித்தனர்.

அமைப்பு முன்னாள் ஆட்சிக்கு எதிராக பழிவாங்கவோ அல்லது

**சிரியாவில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதன் பின்னர் 2024 டிசம்பரில், அல்-ஷராவை அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் பார்பரா ஏ. லீ:.ப் தலைமையிலான குழு சந்தித்தது மற்றொரு அதிர்ச்சிமிக்க திருப்புமுனையாகும்**

எந்த மத சிறுபான்மையினரையும் ஒடுக்கவோ செய்யாது என்று உறுதி செய்துள்ளது. புனரமைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதில் தான் தனது முதன்மையான கவனம் செலுத்துவதாகவும், புதிய மோதல்களில் ஈடுபடுவதில் ஆர்வம் இல்லை என்றும் கூறியுள்ளது.

## நிச்சயமற்ற காலங்களில் சிரியர்கள்:

சிரியாவின் புதிய நிர்வாகத்தில் எந்த சிறுபான்மையினரையும் ஒடுக்காது என்று கூறினாலும், சிரியாவின் வடகிழக்கில் குர்திஷ் மக்கள் நிலைமை என்பது தெளிவாகத் தெரியவில்லை.

உள்நாட்டுப் போரின் பின்னர் எதிர்கால சுனி இஸ்லாமிய ஆட்சி சிறுபான்மையினர் வாழ்க்கை முறையை பாதிக்கும் என்று பலரும் பயந்துள்ளனர். அதே போல் சிரியாக், கிரேக்கம், ஆர்மேனிய ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்கள் மற்றும் ட்ரூஸ் சமூகமும் கலக்கத்தில் உள்ளது. அதேவேளை குர்திஷ் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் புதிய தலைமையின் கீழ் ஒருங்கிணைக்கப்படும் என்றும், சிரியா பிரிக்கப்படாது என்றும் கூறியுள்ளது.

சிரியாவில் ஐந்து தசாப்த கால அசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்த நிலையில், எண்ணற்ற குழுக்களிடையே மோதல்களைத் தவிர்க்க முயற்சிக்கும் கடினமான பணியாக புதிய தலைமைக்கும் இருக்கப் போகிறது.



# நா. யோகேந்திரநாதன் எழுதிய
# "முதல் மாவீரர் நாள் – சில நினைவுகள்"

29.12.2024

1989 நவம்பர் -27



அது வன்னி மண் தன்னை ஒரு மகத்தான புனிதத்தால் அலங்கரித்துக் கொண்ட நாள். கோணாவில் பாடசாலை மைதானமெங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் காற்றில் பறக் கின்றன. அலங்கார மேடை. அதன் பின் திரையில் பொறிக் கப்பட்ட புலிச்சின்னம். அதன் கீழே மாவீரர் தினம் 1989 எனப் பொறிக்கப்பட்ட பதாதை. ஒரு புனிதம் அந்த மைதானத்தில் மட்டுமல்ல அதன் சுற்றாடலிலும் கோலோச்சி வலம் வருகிறது.

ஆம். அங்கே முதல் மாவீரர் தினத்திற்கான தயாரிப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளி லுள்ள அத்தனை வாடகைக் கார்களும், வேன்களும் ஒவ் வொன்றாக வந்து சேர்கின்றன. சகல மின்பிறப்பாக்கிகளும் கொண்டு வந்து இறக்கப்படுகின்றன. எல்லா ஒலிபரப்பிகளும் வந்து குவிந்து விட்டன. அத்தனை வாகனங்களுக்கும், அத்தனை ஒலி பெருக்கிகளுக்கும், அத்தனை மின்பிறப்பாக் கிகளுக்கம் அங்கு என்ன தான் தேவை வந்து விட்டது?. உண்மையாகவே எல்லாமே பாவிக்க வேண்டிய அளவுக்கு தேவை எதுவுமே இல்லை.

சிலவே போதுமானவை. அங்கே ஒரு தந்திரோபாயம். ஒன் றிரண்டு வாகனங்கள் மின்பிறப்பாக்கிகள், ஒலிபெருக்கிகள் மட்டும் அந்த மைதானத்திற்குள் கொண்டுவரப்பட்டால் அதன் உரிமையாளர்கள் அடுத்த நாளே புலியென்று நையப்புடைக் கப்படலாம். கைது செய்யப்படலாம். சித்திரவதைக்கு உட்படுத்தப் படலாம், கழுத்து வெட்டப்பட்டு வீதியிலும் வீசப்படலாம்!

அனைவருமே மாவீரர் தின நிகழ்வுக்கு தங்கள் வாகனங் களையும் சாதனங்களையும் கொண்டு வந்து விட்டால் எவரைப் பலியாக்குவது எவரைப்பிடிப்பது? எவரை அடிப்பது? எவரைக் கழுத்தறுப்பது?

ஏறக்குறைய இரண்டு மணிக்கே வீதிகளில் நெடுந்தூரத்திற்கு வாகனங்கள் அணி வந்து நிற்கின்றன. ஒலி பெருக்கிகள் கார்களில் கட்டப்பட்டு விட்டன. மின் பிறப்பாக்கிகள் மேடையின் பின் அடுக்கப்பட்டு விட்டன.

அன்று காலையிலே இப்படி ஒரு விழா நடக்கவிருப்பதாக மக்க ளுக்கு வாய்மொழியாக அறிவிக்கப்பட்ட போதிலும் இரண்டு மூன்று மணிக்கே கால் நடையாகவும் சைக்கிள்களிலும் மக்கள் பெரும் திரளாக கூட ஆரம்பித்துவிட்டனர்.

நாலு மைல் தொலைவில் உருத்திரபுரத்தில் இந்தியப்படை முகாம். எதிர்ப்புறத்தில் ஆறுமைல் தொலைவில் அக்கராயனில் இந்தியப்படை முகாம். இன்னொரு புறத்தில் கிளிநொச்சி நகரில் ஆறு மைல் தொலைவில் இந்தியப்படை முகாம். ஈ.என்.டிஎல். எவ் தேசதத்துரோகிகளின் முகாமும். மூன்று பக்கங்களிலும் ஆபத்து நாக்கை நீட்டிக்கொண்டு நிற்க நடுவே மாவீரர் நாள் விழா மெல்ல மெல்லப் பிரமாண்டமடைகிறது. இந்தியப் படையோ, ஈ.என்.டி.எல். எவ் குழுவோ வந்தால், அவர்களை எதிர்கொண்டு விரட்டி அடிக்கத் தயாராக விடுதலைப் புலிகளின் படையணி மறைவிடங்களில் காத்திருக்கிறது என்பதை மக்கள் எவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனினும் மாவீரர்களின் மகத்துவம் அவர்களை துணிச்சலுடன் அணிதிரள வைக்கிறது.

மலையாக மைதானமெங்கும் மின்சார ஒளி வெள்ளம் பாய்ந் தது. விழா மாவீரர் வணக்கத்துடன் ஆரம்பமானது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டு விட்டனர். இன்னும் சிலர் காடுகளுக்குள் போய் விட்டனர். இன்னும் ஒரு பகுதியினர் கொழும்புக்கு தப்பியோடி விட்டனர். இப்படியான நெருக்கடியான நிலையிலும் வன்னி மண் ணிலேயே தலைமறைவாக இருந்து கொண்டு இயக்கப் பணிக ளுக்குத் தோள்கொடுத்து வந்த ஆதரவாளர்களின் ஒத்துழைப் பில் இப்பிரமாண்டமான விழா அரங்கேறுகிறது.

மைதானம் நிறைந்த மக்களின் வெள்ளம். உணர்வு பூர்வ மான ஒரு சூழல் எங்கும் பரவி ஒரு உன்னதத்தைச் சொரிய வைக்கிறது. அங்கே மாவீரர் துயிலும் இல்லம் இல்லை. ஆனால், மாவீரர்களின் தியாகத்தால் விம்மிப்புடைத்த இத யங்கள் இருந்தன. அங்கே தாயகத்திற்காக உயிர் தந்த தியாகி களின் கல்லறைகள் இல்லை. ஆனால், அவர்கள் ஒவ்வொரு வரையும் காலம் காலமாக நெஞ்சில் நிறுத்தும் நினைவுகள் இருந்தன. நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன. மாவீரர் நினை வான பாடசாலை மாணவ மாணவிகளின் ஆடல்கள் பாடல்கள் அரங்கேறுகின்றன.

அடுத்து 'வானம் பூமியானது. பூமி வானமானது...' என்ற ஆசிரியர் கணேசனின் பாடல் பாடகர் சாந்தனின் குரலில் செவிகளை நிறைக்கிறது. அடுத்து இந்தியப்படையின் கொடு மைகளை, தேசத்துரோகிகளின் நயவஞ்சகத்தை விளக்கும் சில உரையாடல்கள், தாளலயம் வில்லுப்பாட்டு என நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. இறுதி நிகழ்ச்சியாக நா.யோகேந்திரநாதனின் நாடகம் மேடையேற்றப்படுகிறது. இதில் சிங்கள அரசு எவ்வாறு இந்தியாவைத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறது என்பதையும், இந்தியப்படை தோற்கடிக்கப்பட்டு விரட்டப்படும் என்பதையும் தேசத்துரோகிகளும் துரத்தப்படுவார்கள் என் பதையும் வெளிப்படுத்திய ஒரு நவீன பாணியில் அமைந்த படைப்பாக விளங்கியது.

மாவீரர்களை நினைவு கூர்ந்து நடத்தப் பட்ட இந்த முதல் நினைவு விழா, பிர மாண்டமான முறையில் அமைந்திருந் ததோடு மக்களுக்கு உணர்வூட்டி எழுச்சி பெற வைத்த ஒரு அரங்காக அமைந்தது. மறுநாள் கிளிநொச்சி நகரில் சிலரை பிடித்து வைத்து "நீ நேற்று கோணாவில் போனனீ தானே?" என்று கேட்டு கோழைத்தனமாக அடித்து துன்புறுத் தினர். ஒரு சில வாரங்களிலே அவர்கள் இந்தியப்படையினரின் பின்னே துண் டைக்கானோம் துணியைக்காணோம் என்று ஓடியது தான் வரலாறு. மூன்று புறமும் இந்தியப் படையும் தேசத்துரோகி களும் சூழ்ந்து நிற்க, எந்தக் கொடுமை களையும் அவர்கள் எந்த நேரத் திலும் செய்யலாம் என்ற நிலை நிலவ இப்படிப் பெருந்தொகையான மக்கள் எப்படி இந்த நிகழ்வில் அணிதிரள முடிந்தது? இவ் வளவு பெரும் துணிச்சல் எப்படி வந்தது? இங்கு தான் மக்கள் சக்தி என்ற அற்புதம் முளைவிட்டு கிளைபரப்பி பெரும் விருட்ச மாகிறது.



மக்கள் உணர்வு கொண்டு எழுச்சி பெறும்போது அதை எந்தச் சக்தியாலும் அச்சுறுத்த முடியாது, எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது, எந்த சக்தியாலும் அழித்துவிடமுடியாது. இது காலாதி காலமாக உலகம் கண்ட யதார்த்தம். இந்தியப் படை யின் அச்சுறுத்தல்களோ மிரட்டல்களோ தியாகி திலீபனின் உண்ணா விரதத்தில் பல்லாயிரம் பேர் கலந்து கொள்வதைத் தடுக்க முடியவில்லை. வெஞ்சினம் கொண்டு விடுதலைக்காக உயிரையும் கொடுப்போம் என்று சபதமிட்டதை தடுத்து விட முடியவில்லை.

இவ்வாறே கோணாவில் முதல் மாவீரர் தினத்தில் பல்லாயிரம் மக்கள் கலந்து கொண்டு உணர்வெழுச்சியில் சங்கம மானதை எந்தக்கொடியவர்களாலும் தடுக்க முடியவில்லை.

இது மட்டுமல்ல, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச் செல்வனின் இறுதி நிகழ்வுகள் கிளி நொச்சியில் இடம்பெற்றபோது சிறீலங்கா வான்படையின் கிபிர் மிக் விமானங்கள் தொடர்ந்து வட்டமிட்டன. தாழப்பறந்து பயங்கர ஒலி எழுப்பி மிரட்டின. ஆனால் ஒரு குழந்தை கூட அந்த இடத்தை விட்டு அகலவில்லை எந்த ஒருவரும் அஞ்சி ஓடவில்லை. ஆம், வீரச்சாவுகள் எங்கள் மக்களை துயரத்தில் தோய வைக் கின்றன. ஆனால், துவண்டு போக வைக்கவில்லை. துணிச்சல் ஊட்டு கின்றன இதயங்களுக்கு உரமூட்டி எழுச்சி பெற வைக்கின்றன. அவை அச் சத்தைத் தூக்கியெறிந்து ஆக் கிரோசத்தை உருவாக்கின்றன. மக்கள் இதய பூர்வமாக எழுச்சி பெறும்போது அவர்கள் எந்தப் பயங்கரத்துக்கும் துணிச்சலாக முகம் கொடுப்பார்கள் என்பதற்கு வன்னியில் இடம் பெற்ற முதல் மாவீரர் தினம் ஒரு நல்ல உதாரணமாகும்.

நன்றி: நா.யோகேந்திரநாதன் ஐயா

# 2025: தமிழ் மக்களின் ஆண்டுப் பலன்?

05.01.2025



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஆதரவான தமிழ்ப் புத்திஜீவிகளில் சிலர் தமிழ்க் கிராம மட்டத்தில் விவசாய அமைப்புகளைச் சந்தித்து, விவசாயிகளின் குறைகளைக் கேட்டு வருகிறார்கள். இன்னொரு பக்கம் கடற் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் சந்திரசேகரன் தமிழ்ப் பகுதிகளில் கடல் தொழிலாளர் சங்கங்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தியின் பிடியைப் பலப்படுத்தி வருகிறார். கடந்த மாத இறுதிப்பகுதியில் யாழ்ப்பாணத்தில், தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான மற்றொரு குடிமக்கள் அமைப்பு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. “மறுமலர்ச்சிக்கான மக்கள் இயக்கம்” என்று அழைக்கப்பட்ட அந்த அமைப்பை “மாற்றத்துக்கான மக்கள் அமைப்பு” என்று சம்பந்தப்பட்டவர்கள் அழைக்கிறார்கள். அது யாழ் ஊடக அமையத்தில் ஓர் ஊடகச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டை இப்பொழுது ஆளும் தேசிய மக்கள் சக்தி என்பது ஜேவிபி யும் உட்பட 21 அமைப்புகள் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பு ஆகும். இக்கட்டமைப்புக்குள் தொழிற்சங்கங்கள், இடது சாய்வுடைய அமைப்புக்கள், துறைசார் தொழிற் சங்கங்கள், பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்புகள், மாணவ அமைப்புகள், மகளிர் அமைப்புகள், என்றிவ்வாறாக சமூகத்தின் பல்வேறு துறைகளை அல்லது பல்வேறு பிரிவினரை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கல் உண்டு. இதில் இடது மரபில் வராதவர்களையும் உள்ளீர்க்கத் தேவையான விரிவு, நெகிழ்ச்சி ஜேவிபியிடம் ஏற்பட்டிருக்கிறது. இப்போதுள்ள பிரதமர் ஹரிணி ஜேவிபி உறுப்பினர் அல்ல. வளமான குடும்ப பின்னணியை கொண்டவர். அவரைப் போன்றவர்களையும் உள்ளீர்க்கத்தக்க விரிவு ஜேவிபியிடம் ஏற்பட்டிருக்கிறது.

ஜேவிபியானது சீனச்சார்பு கொமியுனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி வந்தவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு இயக்கம். அதனால் அந்த அமைப்பிடம் இடதுசாரி இயக்கங்களிடம் காணப்படும் பெரும்பாலான ஒழுக்கங்கள் உண்டு. அது இப்பொழுது நடைமுறையில் ஒரு கொமியுனிஸ்ட் அமைப்பாக இல்லை. சீனக் கொமியூனிஸ்ற் காட்சியைப்போலவே அதுவும் பெருமளவுக்கு தேசியவாதப் பண்புமிக்க ஒரு கட்சிதான். ஆனால் கொம்யூனிஸ்டுகளிடம் காணப்படும் அமைப்பாக்க ஒழுக்கம் அவர்களிடம் உண்டு. அதைவிட முக்கியமாக தன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழுந்த அனுபவம் ஜேவிபிக்கு உண்டு. இரண்டு தடவைகள் நசுக்கப்பட்ட அமைப்பு; இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு. அத்தனை அழிவுகளில் இருந்தும் மீண்டெழுந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான அனுபவம் அந்த அமைப்புக்குண்டு. அதைவிட மேலதிகமாக இப்பொழுது கடந்த ஆண்டு பெற்ற இரண்டு தேர்தல் வெற்றிகளும் அவர்களுக்கு புதிய உத்வேகத்தைக் கொடுத்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக தமிழ்ப் பகுதிகளில் கிடைத்த வெற்றிகளால் அவர்கள் அதிகம் உற்சாகமடைந்திருக்கிறார்கள். எனவே தென்னிலங்கையில் இருப்பது போன்ற கட்டமைப்புகளை, வலைப்பின்னலை தமிழ்ப் பகுதிகளிலும் பரவலாக்க முயற்சிப்பார்கள்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் என்பிபியால் நிறுத்தப்பட்டு ஆசனங்களை வென்றவர்களில் பெரும்பாலானவர்கள் ஜேவிபியின் கொள்கை வழி வந்தவர்களோ அல்லது புரட்சிகரமான உள்ளடக்கங்களைக் கொண்டவர்களோ அல்ல. அவர்கள் தமிழ் மக்களுடைய போராட்டங்களிலும் காணப்பட்டதில்லை. கொழும்பில் ஜேவிபி நடத்திய ஆபத்துக்கள் மிகுந்த போராட்டங்களிலும் காணப்பட்டதில்லை. இந்த விடயத்தில் வடக்கு கிழக்கில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது என்பிபி, ஏனைய தென் இலங்கை மையக் கட்சிகளைப் போலத்தான் செயற்பட்டிருக்கிறது. இதில் திருக்கோணமலையிலிருந்து தெரிவு செய்யப்பட்டவரும், பதில் வெளிவிவகார அமைச்சராக இருப்பவருமாகிய அருண் ஹேமச்சந்திர ஓரளவுக்கு விதி விலக்கு எனலாம்.

எனவே நாடாளுமன்றத் தேர்தலில் தன் வேட்பாளர்களைத் தெரிவதில் இருந்த பலவீனங்களை அடுத்தடுத்த தேர்தல்களில் இல்லாமல் செய்வதற்கு என்பிபி முயற்சிக்கும். குறிப்பாக யாழ் பல்கலைக்கழகத்தில் என்பிபிக்குச் சார்பான புத்திஜீவிகளின் அணி துடிப்பாகச் செயல்படுகின்றது. ஆனால் தமிழ் மாணவர்கள் மத்தியில் என்பிபிக்கு குறிப்பிட்டுச் செல்லக்கூடிய பலமான கட்டமைப்பு கிடையாது.

2009க்குப் பின் ஒரு மூத்த ஜேவிபி உறுப்பினர் எனக்குச் சொன்னார், இலங்கைத் தீவிலேயே அதிகம் போராட வேண்டிய ஒரு பல்கலைக்கழகம் யாழ் பல்கலைக்கழகம்தான். ஆனால் போராட முடியாமல் இருப்பதும் அதே பல்கலைக்கழகந்தான் என்று. அவர் சொன்னது முழுவதும் சரியல்ல. 2009க்குப் பின் வந்த ஆண்டுகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் துணிச்சலாகப் போராடியிருக்கிறார்கள். ஆனாலும் கடந்த சில ஆண்டுகளாக ஒரு சோர்வு காணப்படுகிறது.

குறிப்பாக, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்திய தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்புக்குள் பல்கலைக்கழக மாணவ அமைப்புகள் காணப்பட்டன. ஆனால் பொது வேட்பாளருக்கு ஆதரவாக பகிரங்கமாக களமிறங்கி செயல்படுவதற்கு மாணவர் அமைப்பு தயங்கியது. ஆங்காங்கே உதிரிகளாக அல்லது சிறு குழுக்களாக அவர்கள் பங்களித்திருக்கலாம். ஆனால் “பொங்கு தமிழ்”, அல்லது “எழுக தமிழ்”களுக்காக உழைத்ததுபோல பொது வேட்பாளருக்காக பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு சமூகமாகச் உழைக்கவில்லை. நாங்கள் பொதுச் சபையை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் பொது வேட்பாளரை ஏற்கவில்லை என்ற ஒருவித நழுவலான நிலைப்பாடு அங்கே காணப்பட்டது. பொது வேட்பாளரை முன்னிறுத்திய கட்சிகளோடு இணைந்து செயல்படுவதற்கு அவர்களுக்குத் தயக்கம் இருந்திருக்கலாம். அல்லது ஒரு தேர்தல் நடவடிக்கையில் நேரடியாக ஈடுபடுவதற்கும் அவர்கள் தயங்கியிருக்கலாம். ஆனால் யாழ்.பல்கலைக்கழகமோ கிழக்கு பல்கலைக்கழகமோ பொது வேட்பாளருக்கு ஆதரவாக மக்களைத் திரட்டும் பணியில் ஒரு மாணவ சமூகமாகத் தீவிரமாக, எழுச்சிகரமாகச் செயல்படவில்லை. அப்படித்தான் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கமும் புலமைசாரா ஊழியர் சங்கமும் பொது வேட்பாளருக்காக ஒரு சமூகமாக இறங்கிச் செயற்படவில்லை.

முன்பு ஐந்தாண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் பேரவையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் ஊழியர் சங்கமும் ஒப்பீட்டளவில் உற்சாகமாக இறங்கி வேலைசெய்தன. ஆனால் பொது வேட்பாளருக்காக அவ்வாறு உழைக்கவில்லை. புலமைசாரா ஊழியர் சங்கம் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவாக நின்றது. விரிவுரையாளர்களைப் பொறுத்தவரை அரசறிவியல் துறையின் தலைவராகிய பேராசிரியர். கணேசலிங்கம் தமிழ் மக்கள் பொதுச்சபையில் ஒரு அங்கம் வகித்தார். பொதுக்கட்டமைப்புக்குள்ளும் இருந்தார். அவரைத்தவிர வேறு சில விரிவுரையாளர்கள் பொது வேட்பாளருக்கு ஆதரவாக உதிரிகளாகக் காணப்பட்டார்கள். ஆனால் ஒரு அறிவாளிகள் சமூகமாக அவர்கள் திரண்டு பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை. ஒப்பீட்டளவில் பொது வேட்பாளருக்கு ஆதரவான விரிவுரையாளர்கள் தான் அதிகம். ஆனால் அவர்கள் அமைப்பாக்கப்படவில்லை.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில புத்திஜீவிகள் என்பிபிக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து ஊடக சந்திப்பை நடத்தினார்கள். எனினும் அதில் அவர்கள் திட்டவட்டமாக தெளிவாக என்பிபியை ஆதரிக்குமாறு கூறுவதற்குத் தயங்கினார்கள். ஆனால் அந்த தயக்கம் தேர்தல் வெற்றிகள் பின் இப்பொழுது மறைந்துவிட்டது. அவர்கள் தயங்கித்தயங்கி யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று மக்களுக்கு வழிகாட்டிய போது அவர்களுக்கு எதிராக கேலிச்சித்திரங்கள் வரையப்பட்டு பல்கலைக்கழகத்தில் ஒட்டப்பட்டன. அவர்களைக் கருத்து ரீதியாக வென்றெடுப்பதற்கோ அல்லது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட பல்கலைக்கழக ஆசிரியர்களை ஒரு அமைப்பாகத் திரட்டுவதற்கோ முயற்சி எடுக்கப்படவில்லை. மாணவ அமைப்புகளும் அந்த விடயத்தில் திடகாத்திரமாகச் செயற்படவில்லை.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு தயங்கி தயங்கி தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திய என்பிபிக்கு ஆதரவான புத்திஜீவிகள் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் துணிச்சலாக முன்வந்து தமது அரசியல் சாய்வை வெளிப்படுத்தினார்கள். தமிழ்த் தேசியவாத அரசியலை “மலட்டு அரசியல்” என்றும் அழைத்தார்கள்.

இது யாழ்.பல்கலைக்கழகத்தின் இப்போதுள்ள அரசியல் சூழலைக் காட்டுகின்றது. தமிழ் பகுதிகளில் உள்ள ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் நிலைமை இதுவென்றால், ஏனைய துறைசார்ந்த கட்டமைப்புகளைக் குறித்துச் சிந்திக்கத் தேவையில்லை.

அதைவிட மோசமான ஒரு விடயம், தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் பொருத்தமான மக்கள் கட்டமைப்புகள் அநேகமாக இல்லை. ஏனென்றால் அவர்களுக்குத் தேசியவாத அரசியல் என்றால் என்னவென்று தெரியவில்லை. தேசியவாத அரசியல் என்பது மக்களை ஆகப்பெரிய திரளாகக் கூட்டிக்கட்டுவது. எப்படிக் கூட்டிக் கட்டுவது? அவர்களை அரசியல் மயப்படுத்த வேண்டும்; அல்லது குறைந்தது இனமான உணர்வின் அடிப்படையிலாவது திரட்டவேண்டும் அமைப்பாக்க வேண்டும். ஆனால் எத்தனை தமிழ்க் கட்சிகளிடம் அவ்வாறான கட்டமைப்புகள் உண்டு?

ஆனால் இந்த வெற்றிடத்தை என்பிபி விளங்கி வைத்திருக்கின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தென்னிலங்கை பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவ அமைப்புகளோடு தொடர்புடைய தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் என்பிபிக்கு ஆதரவாகத் தமிழ்க் கிராமங்கள் சிலவற்றில் வேலை செய்திருக்கிறார்கள். எனவே இப்பொழுது தேர்தல் வெற்றிகள் தந்த உற்சாகத்தோடு, அரச பலத்தோடு என்பிபி தமிழ்ப் பகுதிகளில் தனது கட்டமைப்புகளை ஆழமாகப் பலப்படுத்தி விரிவுபடுத்தி வருகிறது.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ஒரு தேர்தல் ஆண்டாக அமையக்கூடிய வாய்ப்புகள் அதிகம் தெரிகின்றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பெரும்பாலும் முதலில் நடத்தக்கூடும். காசு வேண்டும். ஆனாலும் கடந்த ஆண்டு கிடைத்த தேர்தல் வெற்றிகளை அடுத்தடுத்த கட்டத்துக்குப் பலப்படுத்துவது என்றால் தேர்தல்களை வைக்கவேண்டும். குறிப்பாக இந்தியாவைச் சமாதானப்படுத்த மாகாணசபைத் தேர்தலை வைக்க வேண்டியிருக்கும். எனவே இந்த ஆண்டும் ஒரு தேர்தல் ஆண்டாக அமையக்கூடிய வாய்ப்புகளே அதிகம். இப்படிப்பட்டதொரு பின்னணியில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்மக்கள் தங்களுக்கு வழங்கிய தீர்ப்பிலிருந்து கற்றுக் கொண்டு, என்பிபியையும் அர்ஜுனாக்களையும் எதிர்கொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் தயாரா? அல்லது, சிவப்பு மஞ்சள் கொடியைக் காட்டினால் தமிழ்த் தேசிய வாக்குகள் கொத்தாக வந்து விழும் என்று கற்பனையில் மூழ்கியிருக்கிறார்களா?

தமிழ் மக்களை அமைப்பாக்கவில்லை யென்றால் அர்ஜுனாக்கள் மேலும் பெருகுவார்கள். தமிழ் மக்களின் சின்னச் சின்ன பிரச்சனைகளை, சின்னச் சின்னக் கவலைகளை குறைகளைக் கேட்பதற்கும் அறிவதற்கும் அந்தந்தத் துறைக்குரிய மக்கள் கட்டமைப்புகள் வேண்டும். அவை இல்லாத வெற்றிடத்தில் தான் அர்ஜுனாக்கள் வெற்றி பெறுகிறார்கள். எனவே இந்த ஆண்டு நடக்கக்கூடிய தேர்தலில் தேசத்தைத் திரட்டி வெற்றி பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் ஏதாவது புதிய உபாயங்கள் உண்டா?

இருப்பதில் பெரிய கட்சி தமிழரசு கட்சி இப்பொழுதும் நீதிமன்றத்தில் நிற்கின்றது. இனிமேலும் நிற்கப் போகிறது என்றுதான் தெரிகிறது. அதன் உட்கட்சிப் பிரச்சினைகளைத் தீர்க்க அதனால் முடியவில்லை. எப்படி ஏனைய கட்சிகளை இணைப்பது?

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தோல்விகளில் இருந்து கற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த அடிப்படையில் தான் அவர்கள் அரசியல் தீர்வை நோக்கிய ஒன்றிணைப்பு முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால் தமிழரசுக் கட்சிக்குள் பலமாகக் காணப்படும் சுமந்திரன் அணி அதற்கு ஒத்துழைக்குமா?

மேலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் முன்னணியை நம்புமா? அந்தக் கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகள் மீது முன்னணி கடந்த காலங்களில் உமிழ்ந்து விட்ட கீழ்த்தரமான குற்றச்சாட்டுகளை முன்னணி கைவிட்டுவிட்டதா?

இவை தவிர தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், உள்ளிட்ட ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம் ஏதாவது உண்டா ?

முன்னணியின் ஐக்கிய முயற்சிகள் யாப்புருவாக்க நோக்கிலானவை. அவை தேர்தல் தேவைகளுக்கானவை அல்ல என்று தெரிகிறது. ஆனால் தேர்தல்கள் முதலில் வரும். யாப்பு வருமா வராதா என்பது நிச்சயமில்லை. ஏனென்றால் நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவுக்காவது நிமிர்த்தாமல் யாப்பில் கை வைப்பது ஆபத்தானது என்று என்பிபிக்கு விளங்கும். குறிப்பாக மகா சங்கத்தினர் இப்போதைக்கு ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிக்கு ஆதரவாக இல்லை என்றும் கூறப்படுகிறது.

எனவே யாப்புருவாக்கத்தை விடவும் அவசரமானது தேர்தல்கள்தான். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் என்பிபி புதிய வெற்றிகளைப் பெறுமாக இருந்தால், அது யாப்புருவாக்க முயற்சிகளில் செல்வாக்குச் செலுத்தும். அவர்கள் தமிழ்த் தரப்பில் பொருட்படுத்த வேண்டிய தேவை இப்பொழுது இருப்பதைவிட மேலும் குறையும். அதை தமிழ்த் தரப்பு எப்படித் தீர்க்கதரிசனமாக ஐக்கியமாக எதிர்கொள்ளப் போகின்றது?

நன்றி: நிலாந்தன.


16 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
முத்துக்குமார்
நினைவு நாள் 29.01.2009
கோகுலகிருஷ்ணன்
21.02.2009
சிவப்பிரகாசம்
21.02.2009
ரவி
02.02.2009
தமிழ்வேந்தன்
18.02.2009
இரவிச்சந்திரன்
07.02.2009
இராஜா
07.02.2009
அமரேசன்
08.02.2009
முருகதாஸ்
12.02.2009
அப்துல் ரவூப்
1995
சீனிவாசன்
01.03.2009
எழில்வளவன்
05.03.2009
ஆனந்த்
15.03.2009
இராசசேகர்
17.03.2009
பாலசுந்தரம்
22.03.2009
மாரிமுத்து
22.03.2009
சிவானந்தன்
17.04.2009
சுப்பிரமணி
23.04.2009
ஸ்டீபன் ஜெகதீசன்